
# அனுதினமும் தேவனுடன்



அது உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம்,
வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவுமட்டும்
எப்பொழுதும் உன் தேவனாகிய
கர்த்தரின் கண்கள் அதின் மேல்
வைக்கப்பட்டிருக்கும்.

உபாகமம் 11:12

ஜனவரி
பெப்ரவரி
மார்ச்
ஏப்ரல்
2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுத்த வேதாகமத்தை ஓராண்டிற்குள் வாசித்து முடிப்பதற்கான கால அட்டவணை

| ஜனவரி | | | | | பெப்ரவரி | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| காலை | | மாலை | | | காலை | | மாலை | |
| ஆதி. | 1,2 | மத். | 1 | 01 | யாத். | 24,25,26 | மத். | 22:23-46 |
| ஆதி. | 3,4,5 | மத். | 2 | 02 | யாத். | 27,28 | மத். | 23:01-22 |
| ஆதி. | 6,7,8 | மத். | 3 | 03 | யாத். | 29,30 | மத். | 23:23-39 |
| ஆதி. | 9,10,11 | மத். | 4 | 04 | யாத். | 31,32 | மத். | 24:01-14 |
| ஆதி. | 12,13,14 | மத். | 5:01-30 | 05 | யாத். | 33,34 | மத். | 24:15-31 |
| ஆதி. | 15,16,17 | மத். | 5:31-48 | 06 | யாத். | 35,36 | மத். | 24:32-51 |
| ஆதி. | 18,19 | மத். | 6 | 07 | யாத். | 37,38 | மத். | 25:01-30 |
| ஆதி. | 20,21,22 | மத். | 7 | 08 | யாத். | 39,40 | மத். | 25:31-46 |
| ஆதி. | 23,24 | மத். | 8 | 09 | லேவி. | 1,2,3 | மத். | 26:01-25 |
| ஆதி. | 25,26 | மத். | 9:01-17 | 10 | லேவி. | 4,5 | மத். | 26:26-46 |
| ஆதி. | 27,28 | மத். | 9:18-38 | 11 | லேவி. | 6,7 | மத். | 26:47-75 |
| ஆதி. | 29,30 | மத். | 10:01-23 | 12 | லேவி. | 8,9 | மத். | 27:01-26 |
| ஆதி. | 31,32 | மத். | 10:24-42 | 13 | லேவி. | 10,11 | மத். | 27:27-45 |
| ஆதி. | 33,34,35 | மத். | 11 | 14 | லேவி. | 12,13 | மத். | 27:46-66 |
| ஆதி. | 36,37 | மத். | 12:01-21 | 15 | லேவி. | 14 | மத். | 28 |
| ஆதி. | 38,39,40 | மத். | 12:22-50 | 16 | லேவி. | 15,16 | மாற். | 1:01-20 |
| ஆதி. | 41,42 | மத். | 13:01-23 | 17 | லேவி. | 17,18,19 | மாற். | 1:21-45 |
| ஆதி. | 43,44 | மத். | 13:24-43 | 18 | லேவி. | 20,21 | மாற். | 2 |
| ஆதி. | 45,46 | மத். | 13:44-58 | 19 | லேவி. | 22,23 | மாற். | 3 |
| ஆதி. | 47,48 | மத். | 14:01-21 | 20 | லேவி. | 24,25 | மாற். | 4:01-20 |
| ஆதி. | 49,50 | மத். | 14:22-36 | 21 | லேவி. | 26,27 | மாற். | 4:21-41 |
| யாத். | 1,2,3 | மத். | 15:01-28 | 22 | எண். | 1,2 | மாற். | 5:01-20 |
| யாத். | 4,5 | மத். | 15:29-39 | 23 | எண். | 3,4 | மாற். | 5:21-43 |
| யாத். | 6,7 | மத். | 16 | 24 | எண். | 5,6 | மாற். | 6:01-13 |
| யாத். | 8,9 | மத். | 17 | 25 | எண். | 7 | மாற். | 6:14-31 |
| யாத். | 10,11,12 | மத். | 18 | 26 | எண். | 8,9,10 | மாற். | 6:32-56 |
| யாத். | 13,14 | மத். | 19 | 27 | எண். | 11,12,13 | மாற். | 7:01-23 |
| யாத். | 15,16 | மத். | 20 | 28 | எண். | 14,15 | மாற். | 7:24-37 |
| யாத். | 17,18,19 | மத். | 21:01-27 | 29 | | | | |
| யாத். | 20,21 | மத். | 21:28-46 | 30 | | | | |
| யாத். | 22,23 | மத். | 22:01-22 | 31 | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதினமும் தேவனுடன்

## (DAILY DEVOTIONS)


## ஜனவரி - ஏப்ரல்

## 2015

*நிர்வாக இயக்குனர் : திரு. மயூக பெரேரா*

*தமிழ்பணி முகாமையாளர் : திரு. ரவி சங்கர்*

0033751596867




தபால் முகவரி:
சத்தியவசனம்
த.பெ. 1012,
கொழும்பு, இலங்கை.

நேரில்:
120A, தர்மபால மாவத்தை
கொழும்பு 7
இலங்கை.

Email: info@backtothebible.lk

TEL: 011-469500


இது ஒரு சத்தியவசன வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவுக்குள் அன்பான அனுதினமும் தேவனுடன் தியான நூல் வாசகர்கள் அனைவருக்கும், எமது சத்தியவசன ஊழியர்கள் சார்பாக புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

யுத்தம், பஞ்சம், கொள்ளைநோய்கள், இயற்கை அனர்த்தங்கள், பொருட்களின் விலையேற்றங்கள் என்று பல்வேறு காரணிகள் நமது தேசத்தை மாத்திரமல்ல, உலகம் முழுவதையும் இன்னமும் அச்சுறுத்திக் கொண்டேயிருக்கிறது.

இவை அனைத்தின் மத்தியிலும், நம்மைப் பாதுகாத்து, நமது தேவைகள் யாவையும் சந்தித்து, இன்னுமொரு வருடத்திற்குள் காலடி எடுத்துவைக்கும்படிக்கு நமக்கு ஜீவன்,சுகம், பெலன் தந்த தேவனுக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம். "கர்த்தர் நன்மையானதைத் தருவார். நம்முடைய தேசமும் தன் பலனைக் கொடுக்கும்." (சங்.85:12) இந்த விசுவாசத்துடனும், ஜெபத்துடனும் தேவனுடைய கரத்தை விசுவாசத்தில் பற்றிக்கொண்டு புதிய வருடத்துக்குள் செல்லுவோமாக.

இம்முறை ஜனவரி மாத தியானங்களை **சகோதரி சாந்தி பொன்னு** அவர்களும், பெப்ரவரி மாதம் தியானங்கள் தொகுக்கப்பட்டும், மார்ச் 1 முதல் ஏப்ரல் 5 வரை **சகோதரி சாந்தி பொன்னு** அவர்களும், எப்ரல் 6 தொடங்கி 30வரை **சகோதரி தர்ஷனி சேவியர்** அவர்களும் எழுதியிருக்கிறார்கள். இந்தத் தியானங்களை எழுதுகின்ற தேவபிள்ளைகள் ஒவ்வொருவருக்காகவும் தொடர்ந்தும் நாம் ஜெபித்துக்கொள்வோம்.

இந்தப் புதிய வருடத்திலும் இந்தத் தியானங்கள் நமது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவி செய்யவும், இன்னும் அதிகமதிகமாய் நாம் அனைவரும் தேவனோடுள்ள ஐக்கியத்தில் வளரவும் வேண்டுமென்பதே எங்கள் ஜெபமாயிருக்கிறது. கர்த்தருடைய கிருபையும் சமாதானமும் உங்களனைவரோடும் என்றும் இருப்பதாக.

சத்தியவசனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமக்கு ஒரு நம்பிக்கையுண்டு!

ஜனவரி

**1**

வியாழன்

வேதவாசிப்பு: ரோமர் 16:17-20

**'சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார்... ஆமென்.' ரோமர் 16:20**

'சத்திய வசனம்' ஸ்தாபன ஊழியர்களாக, உங்களுக்கு எங்கள் அன்பின் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்! அழிவை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் மக்களை ஆண்டவரின் அன்பிற்குள் வழிநடத்த இந்த ஆண்டில் நாம் அனைவரும் ஒன்றிணைவோமாக!

இந்தத் தியானத்தை எழுதிக்கொண்டிருக்கையில், நான்கு வயதுள்ள அழகிய ஆண் குழந்தையை, இனம் தெரியாதோர் வீடு புகுந்து பெற்றோரை அடித்துவிட்டுத் தூக்கிச்சென்ற சம்பவமென்று அறியக் கிடைத்தது. புதிய ஆண்டின் முதல் நாளில் துக்கமான செய்தியையா வாசிக்க வேண்டுமென நீங்கள் எண்ணலாம். ஆனால், இதுவே இன்றைய யாதார்த்த நிலை.

இப்படிப்பட்ட காலப்பகுதியில் நம்பிக்கையின் செய்தியை அறிவிக்கவும், மக்களை ஆண்டவரிடம் வழிநடத்தவும், நாம் ஒருமனப்பட்டுச் செயற்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். எனவே பிரிவினைகளையும் இடறல்க ளையும் உருவாக்குகிறவர்களுக்கு இடமளிக்கக்கூடாது. மட்டுமல்ல, சமாதா னம் எனக் கூறி ஏமாற்றுகிறவர்களுக்கும் இது எச்சரிக்கை! உலகம் கூறும் சமாதானம் மனிதனுக்கு மெய்சமாதானத்தைத் தராது. சமாதானம் தேவனிடத்தி லிருந்து வரவேண்டும். தேவசமாதானம் என்பது உலகிற்குக் கொடுக்கப்படுவது இல்லை. உலகை வெல்லுவதற்குப் பெறப்படுகின்றது. ஆண்டவர் சாத்தானின் வல்லமையைத் தோற்கடித்து ஜெயம் பெறுவதாலே, சமாதானம் நிலைநிறுத்தப் படுகின்றது. அந்த நம்பிக்கையைத் தேவன் நமக்குத் தந்திருக்கிறார். நமது தேவன் கிரியையின் தேவனாயிருக்க, நாம் கிரியை செய்யாமல் இருக்கலாமா?

ஒரு இராட்சதக் கழுகு தன் கால்களில் பாம்பு ஒன்றை இறுகப் பிடித்த வாறு தன் செட்டைகளை விரித்து மேலெழுந்து பறப்பதுபோன்ற ஒரு புத்தக அடையாள அட்டையில் ரோம.16:20ம் வசனம் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆம்! சூழ்நிலைகள் பாதகமாக, பயமுறுத்துவதாக இருந்தாலும், அவற்றைச் சிறைப் பிடித்துக்கொண்டு மேலெழும்பிப் பறப்போமாக. சமாதானத்தின் தேவன் நமக்கு வெற்றி தருவார். இந்த நம்பிக்கையின் செய்தியை இந்தப் புதிய ஆண்டில் நாம் ஒருமனப்பட்டு உலகிற்குள் எடுத்துச் செல்லுவோமாக.

**'....நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூட இருப்பதாக. ஆமென்.' எபேசியர் 4:2,3**

சிந்தனைக்கு:

குடும்பம், சபை, ஸ்தாபன ஊழியம் எந்த இடமானாலும், சமாதானத்தைக் குழப்பிய காரியங்கள் எவை? அவற்றை எதிர்த்து, ஒன்றிணைந்து நம்பிக்கை யின் செய்தியை மக்களுக்கு எடுத்துச்செல்ல நாம் ஆயத்தமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைரியத்தோடு ஓடுவோம்!

ஜனவரி
2
வெள்ளி

வேதவாசிப்பு: எரேமியா 12:1-7

**'நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப்பண்ணினார்களானால் குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்?' எரேமியா12:5**

"ஜெபங்களும் ஊழியங்களும் பெருகப்பெருக, அக்கிரமமும் பெருகிக்கொண்டே இருக்கிறது. நமது ஜெபம் வீணா? ஊழியங்கள் வீணா? தேவன் நல்லவராயிருக்க ஏன் இப்படி? அக்கிரமக்காரனுக்கே காலம்." இப்படிப்பட்ட மனநிலையும் கேள்விகளும், இன்று மாத்திரமல்ல காலாகாலமாக மனுஷர் மனதில் எழுந்துகொண்டுதான் இருக்கிறது.

அன்று தேவனுடைய தீர்க்கனாகிய எரேமியாவும் குழப்பமடைந்தான். "எந்த மட்டும்" என்ற கேள்வி அவனுக்குள்ளிருந்து வெடித்துச் சிதறியது. தேவன் படைத்த உலகில், தமக்கென்றே படைத்த மனிதனின் வாழ்வில் ஏன் இத்தனை நியாயக்கேடுகள்? எரேமியா, யோபு, இன்னும் பலர் இப்படிப்பட்ட கேள்வியை எழுப்பினார்கள். கர்த்தர் பதில் அளிப்பதற்குப் பதிலாக, அவர்கள் கேட்ட கேள்விகளை அவர்களிடமே திருப்பிவிட்டு, அவர்களைத் தைரியப்படுத்தினார் என்பதே உண்மை. நமது கேள்விகளுக்குப் பதில் கொடுப்பது தேவனுடைய வேலை அல்ல. அப்படி அவர் கொடுத்தாலும் அதை ஏற்கவோ புரிந்துகொள்ளவோ நம்மால் கூடுமோ? "நீ இப்போ ஓடுவது வெறும் தரைப்படையுடன்தான்; பின்னாலே, குதிரைகள் துரத்த ஓடவேண்டிய நெருக்கங்கள் வரும். அப்போது என்ன செய்வாய்?" என்று தேவன் எரேமியாவைத் தைரியப்படுத்தினார்.

இந்தப் புதிய ஆண்டிலாவது நல்லது நடக்குமா என்று நாமும் கேள்வி எழுப்பக்கூடும். இப்போதிருக்கும் வெள்ளம்போன்ற சூழ்நிலையைக் கண்டு பயந்தால், பின்னால் வரப்போகும் சுனாமி போன்ற பிரச்சனையைக் கண்டு நீ என்ன செய்வாய் எனக் கர்த்தர் நம்மிடம் கேட்கிறார். நமது கேள்விகளுக்கெல்லாம் தேவன் வெளிப்படையாகப் பதிலளிக்கின்ற காலம் வெகு தூரத்தில் இல்லை. ஆனால், இப்போதுள்ள நெருக்கடிகள் மத்தியிலும் நாம் அவரை நம்ப வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார். அன்று எரேமியா சுயபரிதாபத்துக்குள் விழுந்துவிடக்கூடிய அபாயத்தில் இருந்தான். அவனுக்குத் தேவைப்பட்டது பதில் அல்ல, சவால்! எதிர்காலத்தில் அவன் எதிர்கொள்ளவிருந்த பிரச்சனைகளுக்கு நேராகக் கர்த்தர் எரேமியாவைத் திருப்புகிறார். இப்போது அது மிகச் சிறிய பிரச்சனை. இந்த அமைதியான இருட்டிலே தேவனை நம்பமுடியாவிட்டால், சீறுகின்ற புயல் போன்ற வேளைகளில் தேவனை எப்படி நம்பமுடியும்? இதையே தேவன் நம்மிடமும் கேட்கிறார். எரேமியா தர்க்கமின்றி சவாலை ஏற்றுக்கொண்டான்; செயலில் இறங்கினான். இன்று நமது காரியம் என்ன?

**'உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்.' யோவான் 16:33**

சிந்தனைக்கு:
இன்று என் மனதைத் துளைத்தெடுக்கும் கேள்விகள் என்ன? கேள்விகளுக்குப் பதிலா? தேவனை நம்பி சவாலை முன்னெடுப்பதா? எது என் தெரிவு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருமனப்படுவோம்!

ஜனவரி
**3**
சனி

வேதவாசிப்பு: ரோமர் 15:1 -13

''பரிசுத்தாவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக.' ரோமர் 15:13

தேவஆசீர்வாதம் என்பது நமக்குக் கிடைத்திருக்கின்ற பெரிய கொடை. ஆனால், அதனைப் பெற்றுக்கொள்ள, தேவனுடைய வார்த்தையை நாம் முழுமனதுடன் நம்ப வேண்டும். அவர் நிரப்புவார் என்றால் அவர் நிரப்புவார். ஆனால், நாமும் செய்யவேண்டிய ஒரு பகுதியும் உண்டு. வேதத்தில் தரப்பட்டுள்ள வாக்குகள் ஆசிகளில் பெருவாரியானவை தனிநபர்களுக்குரியது அல்ல; அவை கூட்டாக, ஒரு ஜாதிக்கென கொடுக்கப்பட்டது. அந்த வகையில் நாமும் ஒருமனதைப் பேணித்தான் அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆம், கிறிஸ்தவ வாழ்வு என்பது தனிப்பட்டதல்ல. அது ஒரு கூட்டு வாழ்வு. நான் ஒருவன் அல்லது ஒருத்தி அல்ல; மணவாட்டி சபையே இறுதியில் கிறிஸ்துவின் கரங்களில் ஒப்புவிக்கப்படும். இந்த வகையில் பவுலடியார் அடிக்கடி ஒருமனதைக் குறித்து தனது நிருபங்களிலே எழுதியிருக்கிறார், **'நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு...'(வச.5).** இந்த ஒருமனதைக் குழப்புகின்ற சத்துரு, 'இது கடினமான காரியம்' என இன்று தேவசபையை, அதாவது நம்மைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறான். ஒருமனம் கடினமான விடயம் அல்ல. ஏனெனில், **'கிறிஸ்து இயேசுவின் மாதிரியின்படியே'(வச.6)** என பவுல் எழுதியிருக்க, கிறிஸ்துவின் மாதிரியில் பிறருடன் ஒரேமனதுடன் வாழுவது கடினமென்றால் நாம் கிறிஸ்துவின் பிள்ளைகள் எனச் சொல்லுவது எப்படி?

வீடு இரண்டுபட்டால் அது குடும்பத்தின் அழிவுக்கு வித்திட்டுவிடும். இன்று நம் மத்தியில் ஏற்படும் பல பிரச்சனைகளுக்கு இந்த இரண்டுபடுகின்ற மனதுதான் முக்கிய காரணம். பலவித பிரச்சனைகள், அக்கிரமங்கள் பெருகி விட்ட இந்தக் காலப்பகுதியில் நாம் கிறிஸ்துவின் மாதிரியில் நின்று ஒருமனப் படாவிட்டால் நமக்குள் இருக்கும் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் நாமே இழந்துவிட நேரிடும். நாம் ஒருமனப்பட்டு நிற்கும்போது சிறைச்சாலைக் கதவுகளும் நடுநடுங்கும் அல்லவோ! இந்தப் புதிய ஆண்டில் கிறிஸ்துவுடனான ஐக்கியத்தை, ஒருவரோடொருவருக்கான ஒருமனதின் ஒற்றுமையை வலுப்படுத்த பரிசுத்தாவியானவர் நமக்குக் கிருபை செய்வாராக.

**'...அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்' எபேசியர் 4:2,3.**

சிந்தனைக்கு:
கடந்த ஆண்டில் எனது குடும்பத்தில், சபையில், நாட்டில் ஏற்பட்ட பிளவுகளுக்குக் காரணம் என்ன? இவற்றைச் சீர்செய்து, இப் புதிய ஆண்டில் ஒருமனதைக் கட்டியெழுப்புவதில் எனது பங்களிப்பு என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்துவின் மாதிரியில்...

ஜனவரி

# 4

ஞாயிறு

வேதவாசிப்பு: ரோமர் 15:1-13

**'பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன், கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே, நீங்கள் ஏகசிந்தையுள்ள வர்களாயிருக்கும்படி உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வாராக'** ரோமர் 15:6.

ஒரு தகப்பன் தன் பிள்ளைக்கு நடை பயிற்றுவிப்பதைக் கவனித்திருக்கி றீர்களா! தன் கால்களின் மீது குழந்தையின் பிஞ்சுக் கால்களை வைத்து, அவனுடைய பிஞ்சுக் கைகளைப் பிடித்து, மெதுவாக அடியெடுத்து வைக்கும் போது, அப்பா அல்ல, தானே நடப்பதாக எண்ணி, குழந்தை ஒரு மழலைச் சிரிப்பை உதிர்ப்பானே, என்ன அழகு! அவன் சற்றுப் பெரியவனானதும், தன் அறைக்குள்ளே அப்பாவைப்போலவே நடந்து பார்க்கும்போது, அப்பா மாதிரியே தானும் வரவேண்டும் என்ற உள்ளுணர்வு தானாகவே உருவாகி விடுகிறது.

நமக்கு கிறிஸ்தவ நடையைக் கற்றுக்கொடுத்தது யார்? இன்று நாம் யாருடைய நடையை நடக்கிறோம்? **'நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும்' என்றும், 'நாம் ஒன்றாயிருக்கிறதுபோல' என்றும்** (யோவா.17:21,22) கூறியது போலவே, இயேசு தாம் மனுஷனாக வாழ்ந்த காலத்தில் சிலுவை பரியந்தமும் தமது பிதாவுடனே ஒன்றாகவே இருந்தார். பிதாவின் இருதய சித்தத்தைச் செய்வதில் நேர்ந்த அவமானங்களிலும் மரணத்திலும்கூட பிதாவுடனான ஒருமைப்பாட்டை இயேசு குலைத்துப் போடவில்லை. இந்த ஒருமைப்பாட்டைக் குலைத்துப்போட சாத்தான் எவ்வளவு தந்திரங்களைச் செய்தான்; முடிந்ததா? இல்லை! அப்படியானால் இந்த இயேசுவையும் அவரது ஆளுகையையும் ஏற்றுக்கொண்ட நாம், அவருடைய தகமைகளை வழிகளை ஏற்றுக்கொண்டு அவருடனேகூட நடக்கமுடியாது எனச் சொல்லுவது எப்படி? அவர் நமக்கு வாக்களித்த நித்தியவாழ்வும் உயிர்த்தெழுதலும் அவருடைய அதிகாரத்தில் உள்ளது என நாம் நம்பினால், பிறரில் அவர் காட்டிய அன்புக்கான மனநோக்க மும் நம்மிடம் காணப்பட்டேயாக வேண்டும். இல்லையெனில், இயேசு எனது ஆண்டவர் என கூறுவது பொய்யாகிவிடும். அனுதினமும் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து, வேதத்தைத் தியானித்துக் கற்றறிகிறோம் என்றால், அவருக்குள் இருந்த ஒருமனத்தின் மனநோக்கிலும் நாம் வளர வேண்டும்.

ஆனால் இன்று கற்றறிந்து, இயேசுவை அதிகமாய் அனுபவிக்க அனுபவிக்கத்தான் ஒருமனதைக் குலைத்துப்போடுகிற குணம் அநேகருக்குள் வளருகிறது. இதுவும் சாத்தானின் தந்திரமே. "கிறிஸ்துவின் மாதிரியின்படியே" நடப்பவன்தான் கிறிஸ்துவை உலகிற்கு வெளிப்படுத்துகிறவனாக இருக்கிறான்.

**'...கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடு களைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்.'** 1பேதுரு2:21

சிந்தனைக்கு:

இன்று எனக்கு யாருடன் மனக்கசப்பு மனநோவு இருக்கிறது? கிறிஸ்துவின் மாதிரியில் நின்று இன்று அதனைச் சரிப்படுத்துவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருமனமும் ஆசீர்வாதமும்

ஜனவரி

**5**

திங்கள்

வேதவாசிப்பு: சங்கீதம் 133

**'அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவ னையும் கட்டளையிடுகிறார்.' சங்கீதம் 133:3**

ஒரு இசைக்கருவியில் வித்தியாசமான ஒலிகளை எழுப்பு கின்ற பல கட்டைகள் உள்ளன. அவை யாவும் அந்தந்த இராகத் துக்கு இசைய ஒன்று சேரும்போதுதான் அந்தக் கருவியின் நோக்கம் நிறைவேறுகிறது. 'ஒருமனப்பாடு' என்பது எல்லோரும் எல்லாவற்றையும் ஏற்கவேண்டும் என்பதல்ல. கருத்துக்கள் வேறுபடலாம். ஆனால், நாம் ஒன்றிணைந்து பணி புரிவதைப்பற்றியதான தேவனுடைய நோக்கத்தை நிறை வேற்ற வேண்டும்.

எர்மோன் மலை பலஸ்தீனாவின் வடகிழக்கு எல்லையிலுள்ள மிக உயர்ந்த மலை. இது 9000அடி உயரமும் 15மைல் நீளமுமானது. சீயோன் தெற்குப் பகுதியிலுள்ளது. இவற்றில் பனி இறங்கும்போது முழுப் பலஸ்தீனத்தை யும் ஒன்றுசேர பனி மூடியிருப்பதுபோல, அழகாகக் காட்சியளிக்குமாம். அடுத்தது, **'ஆரோன் பரிசுத்த ஸ்தலத்திற்குப் பிரவேசிக்கும்போது, இஸ்ரவேல் புத்திர ரின் நாமங்களைத் தன் இருதயத்தின் மேலிருக்கும் நியாயவிதி மார்ப்பதக்கத்திலே கர்த்தருடைய சந்நிதானத்தில் ஞாபகக்குறியாக எப்பொழுதும் தரித்துக்கொள்ளக் கடவன்' (யாத்.28:29).** ஆரோனின் தலையில் அபிஷேக தைலத்தை வார்க்கும் போது (யாத்.29:5-7), அது மார்பிலே தொங்கும் மார்ப்பதக்கத்தை முழுவதுமாக மூடி நனைத்து வழியும். 'முழு இஸ்ரவேல்' இதுவே தேவ சித்தம்.

'ஒருமனப்பாடு' என்பது, திருச்சபை தேவனுக்கு சாட்சியாக நிற்பதற்கும் தேவசித்தப்படி நாம் ஒரே சரீரமாக, பரலோகத்தின் முன்ருசியை அனுபவிக்கவும் இது அவசியம். இது மன அழுத்தங்களைக் குறைக்கும்; ஊழியத்தைப் பெலப்படுத்தும்; மக்கள் தேவனை அறிவார்கள். இந்த ஒருமனப்பாடு இன்று நம் மத்தியில் இருக்கிறதா? சபைகள் பிளவுபடுகின்றன; ஸ்தாபனங்கள் போட்டி போடுகின்றன; ஊழியங்கள் ஒன்றையொன்று தாக்குகின்றன. சிறு சிறு விடயங்க ளுக்காக வீண் சண்டை சச்சரவுகள். ஒருவருக்கொருவர் குரோதங்கள்! இது தேவனைத் துக்கப்படுத்துமல்லவா! 'அனுதினமும் தேவனுடன்' வாசகர்களாகிய நாம் இந்த ஒருமனப்பாட்டை சபையில், விசுவாசிகள் மத்தியில் காத்துக்கொள்ள நம்மை ஒப்புக்கொடுப்போமாக. அப்போதுதான், கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் தருவார். தேவனுக்குப் பிரியமற்ற பிரிவினை யானது, தேவ ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் தடுத்துப் போட்டுவிடும்.

**'...அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார் உபாகமம் 28:1.**

சிந்தனைக்கு: இன்று சபையில், குடும்பத்தில் ஒருமனப்பாட்டைக் குலைத்துப்போடும் காரியங்கள் எவை? ஒருமனப்பாட்டைக் காத்துக்கொள்ள என்ன செய்யப் போகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்யான ஆசீர்வாதம்

ஜனவரி

**6**

செவ்வாய்

வேதவாசிப்பு: எபிரெயர் 13:20-25

**'...இயேசுகிறிஸ்துவைக்கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக.' எபிரெயர் 13:21**

கிறிஸ்தவ வாழ்வின் வளர்ச்சி, முதிர்ச்சி என்பது தானாக உருவாகுவதில்லை. ஆசீர்வாதம் என்பது மந்திரமாயமும் அல்ல. தேவனுக்கும் நமக்கும், நமக்கும் பிறருக்கும் இடையேயுள்ள உறவின் அடிப்படையில்தான், நாம் தேவனுக்குப் பிரியமானவர்களாக வளருகிறோமா என்பது வெளிப்படுகிறது. நமது விசுவாசத்தின் துவக்கமும் முடிவும் கிறிஸ்துவே எனும் நிச்சயத்தில் நாம் கட்டியெழுப்பப்படவேண்டும். சமய சம்பிரதாயங்களில் நம்பிக்கை வைக்காமல், மீண்டும் பாவத்துக்குள் விழுந்துவிடாமல், சுயநம்பிக்கை கொள்ளாமல், கிறிஸ்துவே நமது வாழ்வின் மையமாக வேண்டும். வாழ்வில் என்ன புயல் வீசினாலும், எல்லாமே தவறாகிப்போனாலும், கிறிஸ்துவே போதுமானவர் என்ற நம்பிக்கையில் நாம் உறுதியாய் இருப்போமானால், இந்த ஆண்டு மாத்திரமல்ல, என்றுமே நாம் கிறிஸ்துவுக்குள்ளான சகலவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளலாம்.

இன்றைய தியானத்திலே இரண்டு விடயங்களைக் காண்கிறோம். ஒன்று, தமக்குப் பிரியமான பிள்ளைகளாக்கும்படிக்கு, தேவன் நம்மில் கிரியை நடப்பிக்கிறார். அடுத்தது, தமக்குப் பிரியமானதை நடப்பிக்கும்படிக்கு தேவன் நம்மை உருவாக்குகிறார். இதைவிட நமக்கு வாழ்வில் வேறு என்ன வேண்டும். தனிப்பட்ட காரியமானாலென்ன, குடும்பம், சபை, தேசம் சம்பந்தப்பட்ட எதுவானாலும், நாம் தமக்குப் பிரியமானவர்களாக பிரியமானதைச் செய்கிறவர்களாக மாத்திரமே வாழவேண்டும் என தேவன் விரும்புகிறார். இந்த வழியில் நாம் வளருவோமானால் அதுதான் மேன்மையான ஆசீர்வாதம்.

ஆனால், ஒரு விடயத்தைக் கவனத்தில் கொள்ளவேண்டும். இதற்காக கிறிஸ்து மரித்து, மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டியதாக இருந்தது. நாம் தேவனுக்குப் பிரியமுள்ள பிள்ளைகளாவதற்கு தேவனுடைய குமாரன் இரத்தம் சிந்த வேண்டியிருந்தது! என்ன விந்தை! இதை நினைந்து, இந்தப் புதிய ஆண்டின் துவக்கத்திலேயே நமது உள்ளான வாழ்வு புதுப்பிக்கப்பட ஆசி வேண்டி நம்மை ஒப்புவிப்போமாக. அது நம்மைப் பிறருடனான வாழ்வில் திடப்படுத்தி, பிறருடன் வேற்றுமையின்றி, கசப்புணர்வின்றி, நேசித்து நற்கிரியைகளை நடப்பித்து, பயனுள்ள வாழ்வு வாழ தேவன் நமக்கு ஆசி தருவாராக.

**'... எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்.' 2கொரிந்தியர் 9:8**

சிந்தனைக்கு:

தேவனுக்குப் பிரியமுள்ளவனாக, அவருக்கே பிரியமான நற்கிரியைகளைச் செய்கிறவனாக வாழுவதற்கு எனக்கு ஏதேனும் தடைகள் உண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் ஜெபம்!

ஜனவரி
7
புதன்

வேதவாசிப்பு: யோவான் 17:6-19

**'அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.' யோவான் 17:21**

எட்டுப் பிள்ளைகள் உள்ள குடும்பம் அது. அந்தப் பிள்ளைளும், அவர்களுடைய விவாக துணைகளும்கூட, சிற்சில கருத்து வேறுபாடுகள் வந்தாலும், பிரிவினை இன்றி ஒற்றுமையாயிருந்தனர். அதன் இரகசியம் என்னவென்று கேட்டபோது, "இதன் இரகசியம் நமது பெற்றோர்தான்" என்றனர் அவர்கள்.

இயேசு காட்டிக்கொடுக்கப்படுவதற்கு முன்னர், செய்த நீண்ட ஜெபமானது கிறிஸ்தவ ஒருமனப்பாட்டிற்கும், சபை ஐக்கியத்திற்கும் வித்திட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். முதலில் தமக்காக வேண்டிக்கொண்ட இயேசு (வச.2-5), பின்னர் தமது சீஷர்களுக்காக ஜெபித்தார் (வச.6-19). பின்னர் தம்மை விசுவாசிக்கின்ற, எதிர்காலத்தில் விசுவாசிக்கப்போகின்ற சகலருக்காவும் இயேசு ஜெபித்தார். அதாவது இன்று அவருடைய நாமத்தை விசுவாசிக்கின்ற நமக்காகவும் ஜெபித்தார். தமது வேளை வந்துவிட்டதை உணர்ந்த இயேசு, இந்த முழு ஜெபத்திலும் ஒருமனப்பாட்டைக் குறித்தே ஜெபித்தார் என்பதை நாம் அவதானிக்க வேண்டியது அவசியம். ஜெபித்த அவர் தாமே பிதாவுடன் ஒருமனப்பாட்டில் வாழ்ந்து காட்டியே ஜெபித்தார். 'நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி...' என்று ஜெபித்தார். ஆக, ஒருமனப்பாட்டில் வாழுவதற்கு இன்று நமக்கு மாதிரி இயேசு ஒருவரே. நாம் பிதாவுடனும் இயேசுவுடனும் ஒருமனமாயிருந்தால்தான் ஒருவரோடொருவர் ஒருமனமாயிருக்கமுடியும்.

அடுத்தது, ஏன் நாம் ஒருமனமாயிருக்க வேண்டும்? **'பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக...'** இன்று கிறிஸ்தவத்திற்கும் கிறிஸ்துவுக்கும் பல எதிர்ப்புகளும், கிறிஸ்துவை அறிவிக்க பலத்த தடைகளும் பெருகி வருகின்றன. இதற்குக் காரணம் என்ன? இயேசு ஜெபித்தபடி நாம் ஒன்றாயிருந்தால், ஒருமனதுடன் கிரியை செய்தால் இது நடக்குமா? பிரிவினைகளுக்குக் காரணராக நாமே இருப்போமாமெனில், தேவன் அதை வெறுக்கிறார். கிறிஸ்துவின் பக்தர்கள் எனக்கூறிக்கொண்டு கிறிஸ்து வையே காட்டிக்கொடுக்கும் வாழ்வை நாம் வெறுத்து விடுவோமாக. இயேசுவே கர்த்தர் என உலகம் விசுவாசிக்கும்படி நாம் சாட்சிகளாக வாழுவோமாக.

**'பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படி, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்.' யோவா.17:11**

சிந்தனைக்கு:

கிறிஸ்தவ ஒற்றுமை குலைவதற்கு கடந்த காலங்களில் நான் காரணமாய் இருந்திருக்கிறேனா? இனிவரும் காலங்களில் இயேசுவின் ஜெபத்தைக் கனம்பண்ணி வாழ என்னை அர்ப்பணிக்க முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிதாவின் அன்பை நினைந்து...

ஜனவரி

**8**

வியாழன்

வேதவாசிப்பு: யோவான் 17:20-26

**'...நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். யோவான் 17:23**

வெளிநாடொன்றில் வசிக்கின்ற ஒரு தம்பதியினர் தமது மூன்று பிள்ளைகளுடன் நமது நாட்டுக்கு வந்திருந்தனர். அவர்களில் ஒன்று பெண்பிள்ளை; அவள் தனது தகப்பனின் அச்சாகக் காணப்பட்டாள். மற்றப் பிள்ளைகளும் அவளில் மிகவும் அன்பாயிருந்தனர். ஆனால், அந்தப் பெண்பிள்ளை சுவீகாரப் பிள்ளை என்பதை பின்னர் அறிந்து ஆச்சரியப்பட்டோம். அந்தப் பெற்றோர் தாம் பெற்ற பிள்ளைகளையும் சுவீகாரப் பிள்ளையையும் வேறுபாடின்றி நடத்திய விதம், பிள்ளைகள் மூவரும் ஒற்றுமையாக வாழ வழி வகுத்தது.

இனி அடுத்தது சிலுவை மரணம்தான் என்பதை உணர்ந்த இயேசு, தமக்காக, தாம் அடையப்போகிற அநியாய மரணத்திற்காக, சுமக்கப்போகின்ற பாவத்துக்காக மன்றாடி ஜெபிக்காது, தமது பிள்ளைகளின் ஒருமனப்பாட்டிற்காக மனதுருகி, அதிக நேரமெடுத்து ஜெபித்தார் எனில், தேவசித்தம் அறிய கூட்டங்கள் கருத்தரங்குகள் தேவையில்லை என எண்ணுகிறேன். தம்மை உலகம் விசுவாசிப்பது தமது பிள்ளைகளின் மனஒற்றுமையில்தான் இருக்கிறது என்பதை உணர்த்திய ஆண்டவர், இன்னுமொரு விலைமதிக்கமுடியாத காரியத்தையும் நமக்கு உணர்த்துகிறார். **'நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும்...'**. பிதாவாகிய தேவன் தமது சொந்தக் குமாரனில் எவ்வளவு அன்பு வைத்திருந்தாரோ அதில் சிறிதேனும் குறைவின்றி, 'அப்பா! பிதாவே!' அன்று அழைக்கின்ற உரிமையைப் பெற்ற நம்மிலும் அதே அன்பை வைத்திருக்கிறார் என்பதை நாம் முதலில் உணர வேண்டும். இந்த உணர்வு இருக்குமானால் மனஒற்றுமையைக் குறித்து அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. நாம் நமது ஆண்டவருடன் ஒரு மனப்பாட்டில் இருப்போம். அப்படியே பிதாவுடனும் ஒன்றாயிருப்போம். அப்போது தேவசித்தம் மாத்திரமே நம்மில் வெளிப்படும். தேவன் நம்மில் வைத்திருக்கும் அன்பை நமது வாழ்வினூடாக இந்த உலகம் காணும். கர்த்தரே தேவன் என்பதற்கும், இயேசுவே இரட்சகர் என்பதற்கும் அதுவே சாட்சியாகும். இந்தப் பெரிய பொறுப்பைப் பெற்றிருக்கும் நாம் சண்டை பண்ணலாமோ! கசப்புகளைத் தூர எறிந்துவிட்டு ஐக்கியத்தைப் பேணுவோமாக.

**'...தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்.' யோவான் 13:1**

சிந்தனைக்கு:

பிதாவாகிய தேவன் கிறிஸ்துவில் வைத்த அதே அன்பை, என்னிலும் வைத்திருக்கிறார் என்பதை நான் கடைசியாகச் சிந்தித்தது எப்போ? அந்த அன்பை உலகிற்கு காட்டுவேனா? அவருக்குச் சாட்சியாக இருக்கும்படி ஒருமனப்பாட்டைக் காத்துக்கொள்வேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை தரும் நம்பிக்கை

ஜனவரி
9
வெள்ளி

வேதவாசிப்பு: 1பேதுரு 1:2-9

**'பரிசுத்தாவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு....'** ரோமர் 15:13

ஒரு இக்கட்டான சூழ்நிலையில் திருச்சபை தலைவர்கள் ஒன்று கூடினர். தலைவர், “சர்வ வல்லமையும் நித்தியருமான கர்த்தாவே, எல்லா நிலைமையிலும் உமது கிருபை போதுமானது. உம்மாலே எல்லாம் ஆகும் என்று நம்புகிறோம்...” என ஆரம்ப ஜெபத்தை செய்தார். கூட்டம் ஆரம்பமாகி நிதிநிலைமையைக் குறித்துப் பேச்சு எழுந்தபோது, அதே தலைவர் எழுந்து, “நம்மால் எதுவும் செய்யமுடியாத நம்பிக்கையற்ற சூழ் நிலைக்குள் நமது திருச்சபை தள்ளப்பட்டிருக்கிறது” என்றார். தலைவர் செய்தது அர்த்தமற்ற ஜெபமா? அல்லது, அவருடைய ஜெபம் பொய்யானதா?

நம்பிக்கையற்ற சூழ்நிலைகள், நம்பிக்கையற்ற மனிதர்கள், இந்த இரண்டையும் சந்திக்காத மனுஷரே இல்லை எனலாம். இவை நம்மையும் நம்பிக்கையற்றவர்களாக்கி விடுகிறது. நாளை என்னவாகுமோ என்ற மனநிலை நம்பிக்கையின் அடித்தளத்தை அசைக்கிறது. நம்பியிருந்த மனுஷர் ஏமாற்றிவிட் டார்கள் எனும் நிலை வரும்போது வாழ்வே வெறுத்து விடுகிறது. இப்படிப்பட்ட நம்பிக்கையற்ற மனநிலையில் நம்மில் எத்தனைபேர் இந்தப் புதிய ஆண்டுக் குள்ளும் புகுந்திருக்கிறோம்? அடுத்தது என்ன என்ற நிலையில் இருந்த ஆபிராமை நோக்கி **'ஆபிராமே, நீ பயப்படாதே. நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்'** (ஆதி.15:1) என வாக்களித்த வரும், தேவபணிக்கென்று தன்னை முற்றாய் அர்ப்பணித்த எரேமியா பயந்த போது, **'...உன்னைத் தப்புவிப்பதற்காகவும், நான் உன்னுடனே இருக்கி றேன்'**(எரே.15:20) என திடப்படுத்தியவரும், **'உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்'** (யோவா.16:33) என தமது சீஷர்களை ஊக்குவித்தவருமான கர்த்தரே இன்று நமது கர்த்தராக இருக்கிறார். ஆக, கிறிஸ்தவ நம்பிக்கை என்பது மனிதரையோ சூழ்நிலைகளையோ சார்ந்தது அல்ல! நமது தேவன் உயிரோடிருப்பதால் கடினமான நேரத்திலும் அவரே நமக்கு நம்பிக்கையாயிருக்கிறார்!

இந்த வாழ்வில் மட்டுமல்ல, மறுவாழ்விலும் நமக்கு நம்பிக்கை உண்டு. **'இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே அழியாததும், மாசற்ற தும், வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக ஜீவனுள்ள நம்பிக்கை உண் டாகும்படி...'** 1பேது.1:4. இந்த நம்பிக்கை நம்மில் ஊன்றிக் கட்டப்பட பரிசுத்தா வியானவரின் பலம் நமக்குள் இருக்கிறது. ஆகவே தைரியமாக இந்த உலகை நாம் எதிர்கொள்ளலாமே!

சிந்தனைக்கு:

இதுவரை நான் தடுமாறிய சந்தர்ப்பங்கள் எவை? இனிமேல் நம்பிக்கையற்ற நிலைமைகள் என்னைத் தாக்குமானால், இன்னமும் நான் தடுமாறுவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாறிப்போகாத சந்தோஷம்

ஜனவரி

**10**

சனி

வேதவாசிப்பு: ரோமர் 12:9-17

**'...நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் .....உங்களை நிரப்புவாராக.'** ரோமர் 15:13

மிகுந்த மனக் குழப்பத்துடன் கடற்கரையில் உட்கார்ந்திருந்த ஒரு வாலிபன், குடித்துக் கும்மாளமிட்டுக்கொண்டிருந்த சில வாலிபர்களைக் கண்டு, "எந்தக் கவலையுமற்று என்ன சந்தோஷமாய் இருக்கிறார்கள்" என்று தனக்குள் ஏக்கமுற்றான். அந்த வாலிபர் குழாம் கலைந்துபோகையில், ஒருவன் மாத்திரம் கடற்கரையில் உட்கார்ந்திருந்தான். இவன் அவனிடம் போய், "ஏன் இருக்கிறாய்" என்று கேட்டபோது, "அவர்கள் போய்விட்டனர். குடியும் கும்மாளமும் முடிந்து விட்டது. ஆனால், என் பிரச்சனை தீரவில்லை. திரும்பிப் போய் எப்படி அதற்கு முகங்கொடுப்பேன்" என்று அவன் அழுதான்!

ஆங்கிலத்திலே happy, joy என இரு சொற்களைப் பாவிப்போம். இதில் முதலாவது, சந்தோஷம்! இது சூழ்நிலை சார்ந்தது எனவும், அடுத்தது, சூழ்நிலை சாராதது எனவும் அர்த்தப்படுத்துவதுண்டு. 'சந்தோஷம்' என்பது இரு பக்கமும் நெருக்குகின்ற வேதனை நோவுக்கு நடுவிலே கிடைக்கின்ற ஒரு இடைவெளி என சில தத்துவமேதைகள் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில், அதாவது உலகத்தைப் பொறுத்தவரையில் அது உண்மைதான். ஆனால், வேதனையின் மத்தியில் ஒரு சிறு இடைவெளி நேரம் சந்தோஷமாக இருப்பதில் வேதனை தீருமா? அந்த அற்ப சந்தோஷ நேரம் முடிவுக்கு வரும்போது, திரும்பவும் வேதனை தாக்குகிறது.

ஆனால், கிறிஸ்தவ சந்தோஷம், அதாவது கிறிஸ்துவுக்குள்ளான சந்தோஷம், மகிழ்ச்சி, களிகூருதல் என எப்படிக் கூறினாலும், மேலே நாம் பார்த்த சந்தோஷம் போன்றது அல்ல. **'சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்' மத்.**5:12 என, இயேசு கூறியபோது, எல்லாம் நன்றாயிருக்கும் என்பது அல்ல; மாறாக, இந்த உலகம் நம்மை நிந்தித்து வேதனைப்படுத்தும்போது அதினிமித்தம் சந்தோஷப்படும்படி மாத்திரமல்ல களிகூரும்படிக்கும் இயேசு கூறியுள்ளார். இது வித்தியாசமானது. இந்த சந்தோஷம் சூழ்நிலைகளையோ மனிதரையோ சாராதது. இந்த சந்தோஷம், நமது ஜீவனுள்ள ஆண்டவர் நமக்குள் வாசம்செய்கிறார் என்பதிலும், அவருடைய அன்பிலிருந்து நம்மை எதுவும் பிரிக்கமுடியாது என்னும் உறுதியான நம்பிக்கையிலுமிருந்து ஊற்றெடுக்கின்றது. இப்படியிருக்க, நாளை மாறிப்போகும் பிரச்சனைகளைக் கண்டு நாம் ஏன் கலங்கித்தவிக்க வேண்டும்.

**'நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள். உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள். ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள்.'** ரோமர் 12:12

சிந்தனைக்கு:

இதுவரை நான் சந்தோஷம் இழந்து தவித்த சந்தர்ப்பங்களில் நான் கிறிஸ்துவையா உலகத்தையா சார்ந்திருந்தேன்? இனி என் தெரிவு என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவே ஒரே பதில்

ஜனவரி

**11**

ஞாயிறு

வேத வாசிப்பு : யோவான் 14:18-27

**'...நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக.'** ரோமர் 15:13

"எனக்குள்ளே பெரிய உள்நாட்டு யுத்தமே நடக்கிறது. இதன் சத்தமோ, சிந்தப்படும் இரத்தமோ ஒரு மனிதக் கண்களுக்கும் தெரியாது. எந்த ஐ.நா சபையும் தீர்வு சொல்லவும் முடியாது". இப்படிக் கதறிய அந்த இளம் பெண்ணுக்கு தேவனிடத்தில் விசுவாசம் உண்டு; சந்தோஷம் என்பது என்ன என்றும் தெரியும். ஆனால், அவளோ சமாதானம் இன்றித் தவித்தாள்.

'எனக்கு டென்ஷன்' (tension) என்று வெகு சாதாரணமாக இன்று சிறு பிள்ளைகூட கூறிவிடுகிறான். இதுவும் இன்றைய நாகரீகமோ!! தான் ஒரு தனி மனிதன் என்றும், தானே பிரச்சனைகளின் மொத்த வடிவம் என்றும் ஒருவன் தன்னையே மையப்படுத்துகிறான் என்றால், அவனுக்குள் யுத்தம் ஆரம்பித்துவிட்டது என்பதுதான் உண்மை. அமைதி என்று ஒன்று இருப்பதையே அவனால் உணர முடியாது. அவன் விடுதலையடைய ஒரே வழி கிறிஸ்துதான்.

அடுத்தது, வாழ்வில் நெருக்கங்கள் ஏற்படும்போது கவலை உண்டாவது இயல்பு. அதில் தவறில்லை. இப்படி ஆகுமோ, அப்படி ஆகுமோ என்று கற்பனையிலேயே மனிதன் வேதனைப்படுவான். இதுவும் ஏதேனில் தோன்றிய பாவத்தின் விளைவோ! இல்லையானால் அந்த முதல் மனிதர் ஓடி ஒளித்து நடுங்கியிருக்கமாட்டார்கள். தமக்குள்ளே கற்பனைகளை உருவாக்கி, கற்பனையில் காட்சிகளை உருவாக்கி தம்மைத் தாமே வேதனைப்படுத்துகிறவர்களுக்கு அமைதி, சமாதானம் என்று ஒன்று இருக்கிறது என்றுகூட தெரியாமல் போய்விடுகிறது. இங்கேயும் கிறிஸ்துதான் ஒரே பதில். அவர் தமது பிள்ளைகளின் வாழ்வு அழிந்துபோக விடமாட்டார்.

கடலின் மேல்மட்டத்தில் நிற்கும்வரை அலைகளையும் ஆட்டத்தையும் தவிர்க்கமுடியாது. சமுத்திரத்தின் ஆழத்திற்குப் போனால், அங்கே அலைகளும் இல்லை; ஆட்டமும் இல்லை. அழகான அமைதியான சூழ்நிலையை அங்கே அனுபவிக்கமுடியும். கிறிஸ்துவைத் தெரிந்தால் போதாது. வார்த்தையை படித்தால் போதாது. அதன் ஆழத்தில் மூழ்கவேண்டும். மனப்போராட்டமோ பயமுறுத்தும் வெளிக்காரணிகளோ எதுவானாலும், அவை நம்மை அடிமைப்படுத்தி அழித்துப்போட முன்னதாக, ஆண்டவரிடம் வந்துவிடுவோமாக. இதுதான் நமக்குக் கடினம். ஆனால் அதை நாமேதான் செய்யவேண்டும்.

**'என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.' யோவான் 14:27**

சிந்தனைக்கு:

என் வாழ்வின் யுத்தகளத்திற்குக் காரணம் என்ன? வெளிக்காரணியோ உட்காரணியோ எதுவானாலும் இன்று அதனை ஆண்டவரிடம் விட்டுவிடுவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுத்தாவியின் பலம்

ஜனவரி

# 12

திங்கள்

வேதவாசிப்பு: யோவான் 14:16-18. 16:7-15

**'பரிசுத்தாவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக.'** ரோமர் 15:13

பயணத்திற்கான பொருட்களை ஆயத்தம்செய்து, பையில் அடுக்கிப் பூட்டிய பின்னர்தான், பயணப் பையின் நாடாவைக் காணவில்லை என்பது தெரிந்தது. அது இல்லையானால் பையை இலகுவாக தோளில் சுமக்க முடியாது. ஒரு நாடாதான், ஆனால் அது இல்லாவிட்டால் பயணம் பாரமாகிவிடாதா?

கிறிஸ்தவ ஓட்டத்திலே நமக்கு ஜீவனுள்ள நம்பிக்கை, உலகத்தால் எடுக்கமுடியாத சந்தோஷம், நிலையான சமாதானம் எல்லாமே உண்டு என்பது நமக்குத் தெரியும். என்றாலும் ஏன் நாம் நம்பிக்கையிழந்து, சந்தோஷத்தைப் பறிகொடுத்து, சமாதானமின்றித் தவிக்கிறோம்? கடந்த ஆண்டில் எத்தனை சஞ்சலங்கள், எத்தனை தவிப்புகள்! இவை ஏன்? நாம் கிறிஸ்துவின் பிள்ளைகள் என்பது உண்மைதான். அப்படியெனில், இவ்வுலகில் கிறிஸ்து வாழ்ந்தபோதும், உலகம் அவரைத் தள்ளி பரிகாசம்பண்ணி சிலுவையில் அறைந்தபோதும் அவருக்குள் இருந்த நம்பிக்கை, சந்தோஷம், சமாதானம் எப்படி அசைக்கப்படாமல் இருந்ததோ, அந்த சாட்சி நம்மிலும் வெளிப்பட வேண்டாமா? நமக்குள் நம்பிக்கை உண்டு, ஆனால் நம்புவதில்லை. சந்தோஷம் வேண்டும், ஆனால், மெய்யான சந்தோஷத்தை அனுபவிக்க மனதில்லை. முழு உலகமுமே சமாதானத்துக்காக என்னென்னவோ செய்கிறது. ஆனால், யுத்தங்களும் சீர்கேடுகளும் வெடித்துச் சிதறுகிறது. சமாதானம் என்பது ஒவ்வொரு தனிமனிதனின் உள்ளத்திலும் உறைந்து கிடக்கிறது என்பதை எவரும் புரிந்து கொள்வதில்லை. இப்படியே எல்லாம் இருந்தும் எதுவும் இல்லாத நிலையல்லவா இது.

பயணப்பையைத் தூக்கிச்செல்ல நாடா இல்லாவிட்டால் பயணமே பாரமாகிவிடும். நம்பிக்கை, சந்தோஷம், சமாதானம் எல்லாம் இருந்தும் அவற்றை இழந்து தவிக்கிறோம் எனில், ஏதோவொன்று குறைகிறது என்பது தானே அர்த்தம். ஆம், 'பரிசுத்தாவியின் பலம்' இதுவே மனிதனுக்குத் தேவையான அதிமுக்கிய விடயம். நமக்கு நல்லது தெரியாது என்பது அல்ல; தெரியும். ஆனால், நமக்குள் இருப்பதை வெளியில் கொண்டுவந்து செயலில் நடப்பிப்பதில்தான் நாம் தடுமாறுகிறோம். இதனை நாம் தனியே செய்யமுடியாது. பரிசுத்தாவியானவரின் பலமும் ஒத்தாசையும் அவசியம். நமது பலவீனங்களை அவர் ஆளுகை செய்யும்போது, சாவும் நமக்கு ஆதாயமாகிவிடும்.

**'சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்.'** யோவா.16:13

சிந்தனைக்கு:

பரிசுத்தாவியானவரின் ஆளுகை எனக்குள் உண்டா? இதுவரை தோற்றுப்போன விடயங்களில் நான் விட்ட தவறுகள் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணடைந்துவிடு!

ஜனவரி
**13**
செவ்வாய்

வேதவாசிப்பு: எரேமியா 12:1-5

**'நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப்பண்ணி னார்களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்ன செய்வாய்?'** எரேமியா 12:5

தாங்கொண்ணாத வியாதியின் வேதனையில், "ஆண்டவரே, மற்ற நோயாளிகள் சுகமடைந்து வீடு செல்லும்போது, எனக்கு மட்டும் ஏன் இப்படி?" என ஒருவர் ஜெபித்தார். அப்பொழுது இந்த எரேமியா 12:5ம் வசனம் அவரு டைய உள்ளத்தில் புத்துணர்வை ஏற்படுத்தியது. இது நடந்து ஒரு வாரத்தில், அவர் மரித்து விடுவாரோ என எண்ணுமளவுக்கு வியாதி முற்றிவிட்டிருந்தது. ஆனால் அவரோ, "நெருக்கத்திலே உம்மை அழைத்தேன்; நெருங்கி வந்து எனக்கு இளைப்பாறுதல் தந்தீர்" என வாய்விட்டுப் பாடியபோது, சூழ நின்றவர் கள் அழுதே விட்டனர். இது 1990ம் ஆண்டிலே நிழந்த சம்பவம்.

தேவனிலே அன்பு வைத்தும் அவருக்குக் கீழ்ப்படிந்திருந்தும் எரேமியா வின் வாழ்க்கை இலகுவானதாக இருக்கவில்லை. பல நெருக்கங்கள், தேவனு டைய வார்த்தையை உரைத்ததால் மக்களினதும் ராஜாவினதும் சினத்துக்கு ஆளானார். ஆகாதவர்கள் செழிக்கிறார்கள், துரோகிகள் சுகித்திருக்கிறார்கள். ஆனால், எரேமியாவுக்கோ மிகுந்த துயரம். தேசமும் தேவனுக்குச் செவி கொடுக்கவில்லை. இதனால் குழப்பமடைந்த எரேமியா கர்த்தரிடம் முறையிட்டு தன்னை விடுவிக்கும்படி ஜெபிக்கிறார். கர்த்தரோ, எரேமியாவின் விண் ணப்பத்துக்கு நேரடியான பதில் கொடாது, "இந்த நிலைமையைப் பார்த்து நீ இப்படி அழுதால், இனி வரப்போகிற அதி தீதான காலத்தில் நீ என்ன செய் வாய்?" என்று ஒரு மறுகேள்வியுடன் அவரைத் தட்டி எழுப்பினார்.

நமது ஜெபங்களுக்குக் கிடைக்கின்ற பதில்கள் எப்போதும் மனதுக்கு இதமாகவும், இலகுவானதாகவும் இருப்பதில்லை. யுத்த சூழல், எதிர்பாராத இழப்புகள், மரணத்தால் ஏற்படும் இழப்புகள், பயங்கர வியாதி போன்றவற்றை அனுபவித்தவர்களுக்கு இது புரியும். ஆனால், மெய்யாகவே தேவனுடைய பிள்ளைகளானால், நாம் அவரை முற்றாக நம்ப வேண்டும். அவருடைய பதில்கள் நமக்கு உடனடி ஆறுதலைத் தராவிட்டாலும், நிலைமைகள் மென் மேலும் மோசமடைந்தாலும்கூட, தேவனுடைய கரத்தில் நம்மை ஒப்புவிப்பதே நாம் செய்யக்கூடிய காரியமாகும். இவ்வாறு சரணடைதல் தருகின்ற சமாதானத்தை நாம் வேறு எங்கும் பெற்றுக்கொள்ள முடியாது.

**'என் இருதயம் தொய்யும்போது பூமியின் கடையாந்தரத்திலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுவேன். எனக்கு எட்டாத உயரமான கன்மலையில் என்னைக் கொண்டுபோய்விடும்.' சங்.61:2**

சிந்தனைக்கு:

விடைதெரியாத கேள்விகளுடன் போராடுகிறேனா? இன்று தேவவார்த்தை கற் றுக்கொடுத்தபடி, என்னைத் தேவகரத்தில் முற்றாய் விட்டுவிட ஆயத்தமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உம் சித்தம்போல்...

ஜனவரி
**14**
புதன்

வேதவாசிப்பு: எரேமியா 18:1-6, 19:1-13

**'குயவன் வனைந்துகொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப்போயிற்று. அப்பொழுது அதைத் திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான்.'** எரே. 18:4

முதூர் பிரதேசத்திலே மண்பாண்டம் செய்கின்ற ஒரு இடத்தைப் பார்க்கச் சென்றபோது, வெறும் மண், பதப்படுத்தப்பட்ட மண், வனையப்பட்ட ஆனால் அடிப்புறம் மூடப்படாத ஈரமான பாத்திரங்கள், சூளையில் இடப்பட்ட பாத்திரங்கள், பாவனைக்குத் தயாரான பாத்திரங்கள் என்று பல ரகங்களைக் கண்டோம். ஒரு கோடியில் சில பாத்திரங்கள் கிடந்தது. அது என்ன என்று கேட்டபோது, "இவை உதவாதவை, சரிப்படுத்த முடியாதவை" என்றார் அந்தப் பெரியவர்.

எரேமியா தேவன் கூறியபடி ஒரு மாநாட்டைக் கூட்டுவிக்கிறான். அவனது கையில் ஒரு மண் கலசம். அழைக்கப்பட்டவர்கள், தேவாலயத்துத் தலைவர்கள். இடம், எருசலேமின் கிழக்கு வாசலுக்கு எதிராக இருந்த தோப்பேத் என்றும் அழைக்கப்படுகின்ற இன்னோம் பள்ளத்தாக்கு. இந்த இடத்தில் பெரிய மாநாட்டு மண்டபமா இருந்தது? இல்லை. இது எருசலேமின் குப்பை கொட்டும் இடம். அந்நிய தேவர்களுக்குத் தூபம் காட்டி, குற்றமற்ற இரத்தம் சிந்தி, இஸ்ரவேலும் யூதாவும் தங்கள் பிள்ளைகளைப் பாகாலுக்குத் தகனபலியாக்கியதும் இங்கேதான். அந்த இடத்திலே கையிலுள்ள கலயத்தை கர்த்தர் சொன்னபடி எரேமியா போட்டு உடைத்தார். அது உடைந்து சுக்கு நூறாகியது. **'...திரும்பச் செப்பனிடப்படக்கூடாத குயவனுடைய மண்பாண்டத்தை உடைத்துப்போட்ட வண்ணமாக...'** (19:11), இஸ்ரவேலுக்கு தண்டனை வரும் என உணர்த்தினார் கர்த்தர். இதன் முதல் அதிகாரத்தில்தான், குயவனின் கையிலே கெட்டுப்போன பாத்திரம் திரும்பவும் திருத்திச் செய்யப்பட்டதை கர்த்தர் எரேமியாவுக்குக் காட்டினார். அந்தப் பாத்திரம் இன்னமும் குயவனின் கையிலேயும், இன்னமும் விட்டுக்கொடுக்கக்கூடிய இளகியதாகவும் இருந்ததால் அதனைச் சரிசெய்யக் கூடியதாக இருந்தது. ஆனால், கெட்டியாகிவிட்ட பாத்திரமோ திரும்பச் செப்பனிடப்பட முடியாததாகி விட்டது.

இதிலே நாம் யார்? "உடையும் நொருக்கும்" என்று ஆரவாரமாய் பாடுகின்ற நாம், மெய்யாகவே கர்த்தர் விரும்புகிற வடிவமைப்புக்கு ஏற்ப நம்மைப் புதுப்பிக்கும்படி பரிசுத்தாவியானவரின் கைகளில் நம்மை விட்டுக்கொடுக்கின்ற நிலையில் இருக்கின்றோமா? அல்லது, இறுகிப்போய், நமது விருப்பப்படிதான் ஆக வேண்டும் என்று கடின இருதயத்தோடிருந்து கெட்டுப்போகின்றோமா?

**'...தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.'** தீத்து 3:5

சிந்தனைக்கு:

நான் இளகிய களிமண்ணா? கடினமாகிவிட்ட பாத்திரமா? இரண்டின் விளைவுகளையும் அறிந்திருக்கிற நான் இன்று எப்படி என்னை ஒப்புவிக்கப்போகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுகளை மறைக்காதே!

ஜனவரி
**15**
வியாழன்

வேதவாசிப்பு: சங்கீதம் 77:1-9

**'நான் தேவனை நினைத்தபோது அலறினேன்; நான் தியானிக்கும்போது என் ஆவி தொய்ந்து போயிற்று' சங்.77:3.**

"யுத்தத்தில் கணவன் இறந்தார், ஒரு மகன் காணாமல் போனான், இப்போது என் மகளுக்கு புற்றுநோய். இது என்ன கொடுமை?" இந்தத் தாயைப்போல பலவிதங்களில் தாக்குண்டிருக்கின்ற ஏராளன பேர் நம் மத்தியில் இருக்கின்றனர். 'என் தேவனை நோக்கிக் கதறினேனே! இப் புதிய ஆண்டிலாவது பதில் கொடுக்க மாட்டாரா?' என்ற கேள்வியுடன் நம்மிலும் பலர் இருக்கலாம். நமது கதறலின் சத்தத்தைக் கேட்காமல் இருக்க நமது ஆண்டவர் கல்லும் மண்ணும் அல்ல! அவர் கேட்கிறார். ஆனால் எப்படி நடத்துகிறார் என்பதில்தான், நாம் தெளிவற்றவர்களாக இருக்கிறோம். நமது கலக்கத்திற்கு முக்கிய காரணம் நமது பிரச்சனைகள் என்பதிலும், கர்த்தரைக் குறித்து நமக்குள்ள தெளிவற்ற மனநிலை என்பதே உண்மை.

அன்று ஆசாபின் வாழ்விலும் பெரியதொரு மனஉடைவு ஏற்பட்டிருந்தது. அவன் தூக்கமின்றித் தவித்தான். ஆறுதலின்றிக் கலங்கினான். கர்த்தர் தள்ளி விடுவாரோ, தயைசெய்யாரோ என சந்தேகப்பட்டான். அதற்காக அவன் வேற்று வழிகளை நாடி ஓடவில்லை. அவன் தேவனை நோக்கியே கையெடுத்துக் கதறினான். அவனுக்கு வந்த ஆபத்தில் அவன் மனிதனை நாடவில்லை; ஆண்டவரைத்தான் நாடினான். தான் பாடிய சங்கீதங்களை நினைத்துப் பார்க்கிறான். அலறித் துடித்து அவன் தொய்ந்து போனான். இங்கே ஆசாபின் வார்த்தைகளை உற்றுக் கவனித்தால், அவனுக்கு வந்த கலக்கத்திற்கு அவனுடைய பிரச்சனை என்பதிலும், தேவனைக் குறித்து அவனுக்குள் எழுந்த 'சந்தேகம்'தான் முக்கிய காரணம் எனில் மிகையாகாது. நெருக்கத்தில் சந்தேகத்துக்கு இடமளித்தவனை, சந்தேகம் பற்றிக்கொண்டு விட்டது.

ஆசாபிற்கு ஏற்பட்ட சந்தேகத்திற்கு தேவனிடமிருந்து நேரடியான விடை கிடைத்ததா? பின்னர் சிந்திப்போம். ஆனால், ஆசாப் தனக்குள் எழுந்த சந்தேகத்தை, தடுமாறிய உணர்வலைகளை மறைக்காமல் தேவனிடம் கொட்டித் தீர்க்கத் தவறவில்லை. அதற்காக கர்த்தர் கோபப்பட்டாரா? நீ யார் என்னைக் கேள்விகேட்க எனக் கடிந்து கொண்டாரா? இல்லை! ஆசாபின் தொய்ந்துபோன உள்ளத்தை அவர் மதித்தார். கோபமோ, சந்தேகமோ, வேதனையோ உள்ளதை உள்ளபடி தேவனிடம் கொட்டிவிடுவோமாக. அதுவே எமது வேதனைகளுக்கு முதல் மருந்தாகும். நமது திறந்த மனதையே தேவனும் விரும்புகிறார். நாம் அவர் முன்பு நடிக்கவேண்டிய அவசியமில்லை.

**'உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்?' சங்கீதம் 139:7**

சிந்தனைக்கு:

இதுவரை நான் மனம் திறந்து ஜெபித்தேனா? அல்லது மரியாதைக்குரிய ஜெபம் செய்தேனா? இனி என் உள் உணர்வுகளை தேவனிடம் கொட்டுவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்து வந்த வருஷங்களை...

ஜனவரி
**16**
வெள்ளி

வேதவாசிப்பு: சங்கீதம் 77:10-12

**'அப்பொழுது நான்: இது என் பலவீனம். ஆனாலும் உன்னதமானவருடைய வலதுகரத்திலுள்ள வருஷங்களை நினைவுகூருவேன்.....' சங்கீதம் 77:10**

'நினைவுகூருதல்' மனித வாழ்வில் மிக இயல்பான ஒன்று. பிறந்தநாள், திருமணநாள, கடந்தகால முக்கிய நிகழ்வுகள் என பல நினைவுகூருதல்கள் உள்ளன. மேலும் கிறிஸ்து பிறப்பு, சிலுவை மரணம், உயிர்ப்பு என இன்னும் பல நினைவுகூருதல்கள். அன்று எகிப்திலிருந்து இஸ்ரவேலர் விடுதலையான இரவின் நினைவுகூருதலாக பஸ்காவை ஆசரிக்கும்படி கர்த்தர் இஸ்ரவேலைப் பணித்தார் (யாத்.12:14). இயேசுவோ, நம்மை மீட்கும் பலியாகத் தம்மை தாமே ஒப்புவிப்பதை நினைவுகூரும்படி சீஷரைப் பணித்தார். அதனால் தான் இன்றும் நாம் திருவிருந்தில் பங்குகொள்கிறோம். மனிதனுடைய நினைவுகள் இருக்கும்வரைக்கும் நினைவுகூருதலும் இருக்கும். ஆனால், நாமோ தக்க சமயத்தில் இந்த நினைவுகூருகின்ற கிருபை வரத்தையே மறந்து விடுகிறோம். அதுவே நமது மனக்கலக்கத்திற்கு வழிவகுத்து விடுகிறது.

பாதிக்கப்பட்ட தன் மனஉணர்வுகளை ஒளிவுமறைவின்றி வெளியே கொட்டிப் பாடிக்கொண்டிருந்த ஆசாப், 'சேலா' எனக்கூறி பாட்டை நிறுத்துகிறான். இப்போது அவனது மனஉணர்வு வேறுபக்கம் திரும்புகிறது. திரும்பவும் பாட ஆரம்பித்தபோது, 'நினைவுகூருவேன்' என்று மூன்று முறையும், 'தியானிப்பேன்', 'யோசிப்பேன்' எனும் சொற்களைச் சேர்த்துப் பாடுகிறதையும் நாம் அவதானிக்கலாம். 'தேவனுடைய கிருபை முற்றிலும் அற்றுப்போயிற்றோ? வாக்குத்தத்தமானது தலைமுறை தலைமுறைக்கும் ஒழிந்துபோயிற்றோ' என சந்தேகத்தை எழுப்பிய ஆசாபிற்கு, 'ஆசாப் நான் அப்படிப்பட்டவரல்ல, என்னை சந்தேகிக்கிறாயா?' எனவோ, 'என்னை சந்தேகிக்க நீ யார்?' எனவோ கர்த்தர் கடிந்து கொள்ளவில்லை. மாறாக, தேவன் ஆசாபின் மனதை வேறு பக்கம் திருப்புகிறார். 'நீ இதுவரை நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்த்து நினைவுகூர்ந்துபார்' என்பதுபோல கர்த்தர் ஆசாபின் மனஉணர்வுகளைத் திருப்புகிறார்.

பிரியமானவனே! மனஉணர்வுகள் தடுமாறும்போது, சற்று அமர்ந்து, இதுவரை நடந்துவந்த பாதைகளை, கர்த்தர் இதுவரை நடத்திவந்த வழிகளைத் திரும்பிப் பார்ப்பது நமக்கு நல்ல மருந்தாகும். நமக்கு அன்றாட பிரச்சனைகள் பூதாகாரமாகத் தெரியும். ஆனால், அதைவிடக் கடின பாதையை நாம் கடந்து வந்திருப்போம். அதை நாம் சிந்திப்பதில்லை. இன்று அமர்ந்திருந்து கர்த்தர் இதுவரை நடத்திவந்த வழிகளைச் சிந்தித்துத் தியானிப்போமா!

**'என் படுக்கையின்மேல் நான் உம்மை நினைக்கும்போது, இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன். நீர் எனக்குத் துணையாயிருந்ததினால், உமது செட்டைகளின் நிழலிலே களிகூருகிறேன். சங்கீதம் 63:6,7**

சிந்தனைக்கு:

இத்தனை வருடங்களாக கர்த்தர் நம்மை நடத்திவந்த வழிகளை ஒரு பேனா எடுத்து ஒவ்வொன்றாக இன்று எழுதிப்பார்ப்போமா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவனை மையமாக...

ஜனவரி
**17**
சனி

வேதவாசிப்பு: சங்கீதம் 77:13-15

**'தேவனே, உமது வழி பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது; நம்முடைய தேவனைப்போலப் பெரிய தேவன் யார்?' சங்கீதம் 77:13**

நேற்றைய தினத்தில் ஒரு வைத்தியசாலையில் கிட்னி வியாதியால் தாக்குண்ட ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. நோயுற்ற தன் இளமையான கணவனைப் பார்த்து கலங்கி நின்ற மனைவியிடம்: "1990ம் ஆண்டு எனக்கு நேர்ந்த கிட்னி வியாதியின் கொடூரத்தை வைத்தியர் விளங்க வைத்தபோது, நொடிப்பொழுதில் நான் ஒடிந்துபோனேன். இந்த இளம் வயதில் எனக்கு இந்த வியாதியா என்று கலங்கியே விட்டேன். ஆனால், ஒரு சில மணிநேரத்தில், கரைபுரண்டு ஓடிய யோர்தான் நதி என் மனக்கண்ணில் தோன் றியபோது, 'நானா' 'எனக்கா' என்ற நினைவெல்லாம் அழிந்து, 'என் தேவன்' 'என் ஆண்டவர்' என்ற சிந்தனை என்னை ஆட்கொண்டது. இன்று நான் ஜீவித்திருப்பதற்கும் இதுதான் முக்கிய காரணம்" என, என் சாட்சியைப் பகிர்ந்த போது, அது அவர்களைப் பெலப்படுத்தியது. கர்த்தருக்கே ஸ்தோத்திரம்.

'ஆண்டவர் நித்திய காலமாய்த் தள்ளி விடுவாரோ? இனி ஒருபோதும் தயை செய்யாதிருப்பாரோ?' என சந்தேக வார்த்தைகளை உதிர்த்துப் புலம்பிய ஆசாப், சற்று பின்னால் திரும்பி, இதுவரை கர்த்தர் நடத்திய வழிகளை அவரு டைய செயல்களை நினைவுகூரும்படி எப்போது தன் மனதைத் திருப்பினானோ அப்போதே அவனுடைய மனதில் மாற்றம் ஏற்பட ஆரம்பித்தது. 'நான்' 'என்' என புலம்பியவன் இப்போது, 'தேவனே', 'உமது' எனப் பாடுகிறான். நடந்தது என்ன? நினைவுகூருதல் என்பது அவனது மனதின் சந்தேகத்தைத் திசை திருப்பியது. 'அவருடைய கிருபை முற்றிலும் அற்றுப்போயிற்றோ?' எனக் கேள்வி எழுப்பியவனுக்கு நேரடியாக பதிலளிக்காத தேவன், தமது கிருபையை அவனில் பெருகப்பண்ணி, அவனது சிந்தனையைப் பின்னோக்கித் திருப்பினார். அப்போது, தன்னையே மையமாகக்கொண்டு ஆசாப் எழுப்பிய சந்தேகம் மறைய ஆரம்பித்தது. 'தேவன் அளித்த வாக்குத்தத்தம் தலைமுறைக்கும் ஒழிந்து போயிற்றோ', தேவன் வாக்கு மாறிவிட்டாரோ என்று சந்தேகித்த ஆசாப் "யாக்கோபு, யோசேப்பு என்பவர்களின் புத்திரராகிய உம்முடைய ஜனங்களை மீட்டுக்கொண்டீர்" என தேவனை மையமாக்கொண்டு பாடினான்.

நமது காரியமும் இதுதான். எப்போது நாமும் 'நான்', 'எனது', 'எனக்கா' எனும் கேள்விகளிலிருந்து விடுதலையாகி, நமது வாழ்வில் தேவனை மையமாகக்கொண்டு, 'என் தேவன்' என அறிக்கை செய்கிறோமோ அங்கே தான் நமது விடுதலை உறுதியாகிறது. நம்மை மையமாகக்கொண்ட வாழ்விலிருந்து, தேவனை மையமாகக்கொண்ட வாழ்வுக்குத் திரும்புவோமாக.

**'என் வாய் நாள்தோறும் உமது நீதியையும் உமது இரட்சிப்பையும் சொல்லும். அவைகளின் தொகையை நான் அறியேன்.' சங்கீதம் 71:15**

சிந்தனைக்கு:

இதுவரை என் மனதைக் குழம்பிய காரணம் என்ன? என் கண்கள் யாரை நோக்குகின்றன? என்னையா? தேவனையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலிலும் வழி உண்டு!

ஜனவரி

18

ஞாயிறு

வேதவாசிப்பு: சங்கீதம் 77:16-20

**'உமது வழி கடலிலும், உமது பாதைகள் திரண்ட தண்ணீர்களிலும் இருந்தது.... ' சங்கீதம் 77:19**

"பயங்கரமான இருள், வழி தெரியவில்லை. இரு பக்கமும் அடர்ந்த மரங்கள், பயம் பற்றிக்கொள்ள, தடுமாறி நின்றபோது, வீட்டிலே பணிபுரிந்த குமார் என் முன் நின்றான். என்னைக் காணாததால் வீட்டிலிருந்து அவனை அனுப்பியிருக்கிறார்கள் என எண்ணி 'குமார்' என்றேன். அவன் பேசவில்லை. முன்னே நடக்க ஆரம்பித்தான். நானும் நடந்தேன். நான் நின்றால் அவனும் நிற்பான், நடந்தால் நடப்பான். பயத்துடன் அவன் பின்னே சென்றபோது, நெடுஞ்சாலை தெரிந்தது. தெருவெளிச்சமும் இருந்தது. நிமிர்ந்து பார்த்தால், குமாரைக் காணவில்லை." இது என் தகப்பனாரின் ஆச்சரிய அனுபவம்.

தேவனுடைய பரிசுத்தம், அன்பு, கரிசனை குறித்த சந்தேகத்தை விலக்கியபோதுதான் ஆசாப்பின் மனக்குழப்பமும் தீர்ந்தது. கர்த்தர் சிவந்த சமுத்திரத்தைப் பிளந்து தமது ஜனத்தை அக்கரைப்படுத்திய சம்பவத்தை அன்று இஸ்ரவேலர் சந்ததி சந்ததியாக நினைவுபடுத்தினர். கர்த்தர் நம்பப்படத்தக்கவர், அவர் தங்களை எப்போதும் நடத்த வல்லமை மிக்கவர் என்பதை, நெருக்கங்கள் உண்டானபோதெல்லாம் அவர்கள் நினைத்துப் பார்க்கத் தவறவில்லை. அதையே இப்போது ஆசாப்பும் செய்தான். கடலில் வழி உண்டா? திரண்ட தண்ணீர்களில் பாதை உண்டா? தண்ணீரில் பாதச்சுவடுகள் தெரியுமா? ஆனால், அங்கேயும் வழி சமைக்க நமது ஆண்டவர் ஒருவரால்தான் முடியும்.

திரும்பும் வழிதெரியாமல் தடுமாறி நிற்கும்போது கர்த்தர் நமக்கு வழியாக நிற்கிறார். வழியின்றித் தவிக்கும்போது, நினையாத வழிகளைத் கர்த்தர் திறக்க வல்லமையுள்ளவர். உறுதியானதும், பாதை சமைக்கக் கூடியதுமான தரையைவிட்டு, குழப்பங்கள் நிறைந்ததும், அமிழ்த்தி விடக்கூடியதுமான கடலில் நடக்க நேர்ந்தாலும், கடலினூடாகவும் கடலின் மேலாகவும் நடப்பதற்கு வழியுண்டாக்க வல்லவர் நமது தேவன். தண்ணீரில் அவருடைய பாதடிகள் தெரியாமற்போனாலும், அவரை நம்பி கால் வைக்கும்போது, தமது வழியை அறிந்தவர் நம்மைக் கரம்பிடித்து நடத்திச் செல்லுகிறார்.

தேவனண்டை திரும்பி நாம் ஜெபிக்கும்போது, நமது குழப்பங்களைச் சீர்செய்து, கண்களைத் தம் பக்கம் திருப்புகின்றார். அவருடைய ஜீவவார்த்தை நமக்கு வழியாயும் பாதையாயும் இருக்கின்றது. பின்னர் ஏன் தடைகளைக் கண்டு தடுமாற்றம்? தைரியமாய் முன்செல்லலாமே!

**'உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.' சங்கீதம் 119:105**

சிந்தனைக்கு:

என் கடந்த வாழ்விலே கர்த்தர் கடலிலே வழி சமைத்த அனுபவம் உண்டா? அதே தேவன் இன்னமும் நடத்துவார் என என்னால் நம்ப முடிகிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்பு!

ஜனவரி
19
திங்கள்

வேதவாசிப்பு: எரேமியா 15:15-21

**'...நீ திரும்பினால் நான் உன்னைத் திரும்பச் சீர்ப்படுத்துவேன்; என் முகத்துக்கு முன்பாக நிலைத்துமிருப்பாய். நீ தீழ்ப்பானதினின்று விலையேறப்பெற்றதைப் பிரித்தெடுத்தால் என் வாய் போலிருப்பாய்.' எரேமியா 15:19**

கரப்பான் பூச்சியை சாகடித்தாலும், சற்று நேரத்தில் உயிர்பெற்று ஓடித் தப்பிவிடுகிறது. அதுபோலவே நமக்குள் எழுகின்ற சந்தேகமும், சுயபரிதாபமும் போன்ற விடயங்கள். அதனைத் தவிர்க்க நினைப்போம். ஆனால் சந்தர்ப்பங்கள் நெருக்கும்போது அதே சந்தேகம் சுயபரிதாபம் நமக்குள் தலைதூக்கிவிடுகிறது.

ஆசாபின் மனதில் எழுந்தது தேவனைக் குறித்த சந்தேகம் எனில், எரேமியாவின் மனதில் எழுந்தது என்ன? **'என் நோவு நித்திய காலமாகவும், என் காயம் ஆறாத கொடிய புண்ணாகவும் இருப்பானேன்? நீர் எனக்கு நம்பப்படாத ஊற்றைப்போலவும், வற்றிப்போகிற ஜலத்தைப்போலவும் இருப்பானேன்?'** என்கிறான் எரேமியா. **'உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது'** (வச.16) என, மார்தட்டிய எரேமியா, அடுத்த வசனத்திலேயே **'உமது கரத்தினிமித்தம் தனித்து உட்கார்ந்தேன்'** என அலுத்துக்கொள்வது வேடிக்கைதான். தேவனுடைய வார்த்தையை உரைத்த எரேமியாவுக்கு மக்களிடமும் ராஜாவிடமும் வரவேற்புக்குப் பதில் வெறுப்புத்தான் கிடைத்தது. இதனால் எரேமியா அடிக்கடி தடுமாறினான். **'நான் உம்முடைய நிமித்தம் நிந்தையைச் சகிக்கிறேன்'** (எரே.15:15) எனும் எரேமியாவின் வார்த்தையிலிருந்து அவனைத் தாக்கியது சந்தேகம் அல்ல, 'சுயபரிதாபம்' என்பதை நாம் உணரலாம்.

தன் மன உணர்வுகளை ஒளிவின்றிக் கொட்டித்தீர்த்த எரேமியாவை தேவன் கண்டிக்கவில்லை. அதற்காக ஒரு தாயைப்போல அணைத்துத் தேற்றிப் பதிலளிக்கவுமில்லை. மாறாக, "நீ திரும்பினால்..." என்கிறார். அதற்காக தேவன் எரேமியாவின் உணர்வுகளைப் புறக்கணித்தார் என்று சொல்லலாமா? இல்லை! அவனை, அவனுக்கு உணர்த்தினார். அவனை ஆட்கொண்டிருந்த சுயபரிதாபம் நீங்கி, முற்றிலுமாக மனந்திரும்ப வேண்டிய அவசியத்தை தேவன் உணர்த்தினார். 'நான் உன்னோடிருப்பேன்' (எரே.1:8) என்பது ஏற்கனவே தேவன் எரேமியாவுக்கு அளித்திருந்த வாக்குறுதி. அவன் அதை மறந்து கதறுகிறான். ஆகவே, 'என்னிடம் திரும்பு' என்றார் கர்த்தர். 'மனந்திரும்பு' என தேவன் இன்று நம்மையும் உணர்த்துகிறார். தேவனிடம் மாத்திரம் திரும்புவோமானால் அவர் தமக்கேற்றபடி நம்மையும் புதுப்பிப்பார்!

**'என் ஆவி என்னில் தியங்கும்போது, நீர் என் பாதையை அறிந்திருக்கிறீர்.' சங்.142:3**

சிந்தனைக்கு:

நான் தியங்கித்தயங்கி குழம்பும்போது என்னைச் சுயபரிதாபம் ஆட்கொண்டிருப்பதை உணர்ந்திருக்கிறேனா? தேவனை முழுதாக நம்பினாலும் அடிக்கடி முறையிட்டுக் கதறுவது ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையோடு அமர்ந்திருப்பாயா!

ஜனவரி

# 20

செவ்வாய்

வேதவாசிப்பு: ஏசாயா 30:8-18

**'அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும் என்று இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற கர்த்தராகிய தேவன் சொல்லுகிறார்.' ஏசாயா 30:15**

உண்மைகளை ஏற்றுக்கொள்ள நாம் தயங்குவதுண்டு. நமது மனதுக்கு ஏற்றபடி நல்ல செய்திகளைக் கேட்பதே நமக்கு விருப்பம். ஒரு பயணம் புறப்படும்போது, திடீரென அந்தப் பாதையில் கலவரம் ஏற்பட்டு மூடப் பட்டுவிட்டது எனும் செய்தி வந்தால், சரி பொறுத்துப் பார்ப்போம் என இருப் போமா? வேறு வழி கிடைக்காதா எனத் தேடி, கிடைக்கின்ற வழி நன்மையா தீமையா என்பதைச் சிந்திக்கவும் நேரமின்றி புறப்பட்டுச்சென்று, பின்னர் இன்னும் வேறு பிரச்சனைக்குள் அகப்பட்டு.... ஏன் நமக்குள் அமைதியில்லை?

இந்தத் தவறைத்தான் அன்று யூதாவும் செய்தது. கர்த்தருடைய தீர்க்க தரிசி சொல்லுவதைக் கேட்க மனதற்ற பலர், தமக்குச் சகாயம் தேடி எகிப்திடம் ஓடினார்கள். இக்கட்டில் தாங்கள் நினைத்தபடி நினைத்த வேளையில் சகாயம் கிடைக்காததால், தேவனுக்குக் காத்திருக்க மனதற்று, பார்வோனின் தயவை நாடினர் இந்த மக்கள். இது அவர்களை நொறுக்கிப்போடும் என்று கர்த்தர் எச்சரித்தார். எகிப்திடம் போவது உடனடி விடுதலைபோலத் தெரியலாம். ஆனால், மெய்யான விடுதலை தர வல்லவர் இஸ்ரவேலின் பரிசுத்தர் ஒருவரே! தேவன் மனிதனுடைய வேளையில் கிரியை செய்கிறவர் அல்ல. எது தகுந்த நேரம் என்பதை தேவனே அறிவார். யூதா செய்யவேண்டியது ஒன்றுதான். அமர்ந்திருக்க வேண்டும், நம்பிக்கையோடிருக்க வேண்டும்.

இந்த இரண்டும் நமக்கும் கடினமான காரியங்களே. தேவனை நாம் நம்புகிறோம் என்பது உண்மை. நெருக்கங்கள் நம்மை அழுத்தும்போது ஜெபம் செய்கிறோம். ஜெபித்தபடியே தேவனுடைய வேளைக்கும் சித்தத்துக்கும் இணங்கி, நம்பிக்கையோடு அமர்ந்து, அவரையே சார்ந்திருக்கிறோமா என்பதே கேள்வி. கர்த்தருடைய வழியைப் பின்பற்றி வாழுவது நமக்கு சற்று நோவு உண்டாக்கக்கூடும். ஆனால், கர்த்தர் நம்மீது வைத்திருக்கும் அன்பின் நிமித்தம் தான் சகலத்தையும் செய்கிறார். அவர் தாமதிப்பதும் நம்மீது கொண்ட அன்பினால்தான் என்பதை நாம் ஏற்கவேண்டும். பொய்களும் மாயைகளும் மனதுக்கு இதமாகவே இருக்கும். ஆனால் அவை நம்மை வழிவிலகப் பண்ணி அழிவுக்குள் இட்டுச்சென்றுவிடும். ஆகவே, எது நேர்ந்தாலும் தேவனுக்காகக் காத்திருக்கும்படி. நம்மைப் பெலப்படுத்துகின்ற தேவனுடைய கரத்திலேயே நம்மை விட்டுவிடுவோமாக. கர்த்தருக்காகக் காத்திரு!

**'கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்.' ஏசாயா 40:31**

சிந்தனைக்கு:

இதுவரை நேரிட்ட தோல்விகளுக்குரிய காரணத்தை இன்று என்னால் உணரக் கூடியதாக இருக்கிறதா? இனிவரும் நாட்களில் என் தீர்மானம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தப்புவியாமற்போனாலும்...

ஜனவரி
**21**
புதன்

வேதவாசிப்பு: தானியேல் 3:13-29

**'விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள்.' தானியேல் 3:18**

மாற்றுத்திறனுள்ள பிள்ளைகளின் பாடசாலை ஒன்றில் அர்ப்பணிப்புடன் சேவைசெய்த கிறிஸ்தவ ஆசிரியை, பிறதெய்வ வணக்க வழிபாடு செய்யும்படி பணிக்கப்பட்டார். அவள் அதற்கு மறுப்புத் தெரிவித்தபோது, பல பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டு, இறுதியில் ஆசிரிய பணியை ராஜினாமா செய்ய நேரிட்டது. இது பாபிலோன் ராஜா காலத்துச் சம்பவம் அல்ல. தற்போது நடந்தது. நமது விசுவாசத்திற்கான சோதனைகளை நாளாந்தம் சந்திக்கிறோம் என்பதை நம்மில் எத்தனைபேர் உணருகிறோம்?

ராஜா செய்வித்த சிலையை வணங்க மறுத்த மூன்று வாலிபர்மீது கோபமடைந்த ராஜா, அவர்களுக்கு மீண்டும் ஒரு தருணத்தைக் கொடுத்து, வணங்காவிட்டால், "உங்களை என் கைக்குத் தப்புவிக்கப்போகிற தேவன் யார்" என்று சூளுரைத்தான். அவர்களோ, "நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன்..." என்று ஆரம்பித்ததிலிருந்தும், "எரிகின்ற அக்கினிக்கும் ராஜாவின் கைக்கும் விடுவிக்க அவரால் கூடும்" என்று உறுதியாக அறிக்கையிட்டதிலிருந்தும் அவர்கள் தங்கள் தேவனை எவ்வளவாக அறிந்திருந்தார்கள் என்பது தெளிவாகிறது. பின்னர், "விடுவிக்காமற்போனாலும்...." என அவர்கள் கூறியது என்ன? தற்சமயம் தேவன் விடுவிக்காமற்போனால், தாம் தோற்றுப்போய்விடக் கூடாது என்ற எண்ணம்? இல்லை. தேவன் விடுவிப்பார். ஆனால், அவர் அவர்களை விடுவித்துத்தான் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணி தம்மை நிரூபிக்க வேண்டிய அவசியம் தேவனுக்கு இல்லை. ஆகவே, தேவனுடைய வல்லமையைச் சோதிக்க அவர்கள் விரும்பவில்லை. விடுவிப்பார் என அவர்கள் கூறியபடி நடந்துவிட்டாலும்...' என ராஜா எண்ணினானோ என்னவோ, சூளையை ஏழு மடங்கு அதிகமாகச் சூடாக்குவித்தான். அந்த ஏழு மடங்கு அக்கினி, தேவனுடைய வல்லமை ஏழேழு மடங்கு அதிகமாக வெளிப்பட ஏதுவாயிற்று. அவர்கள் அன்று அக்கினியிலே வீசப்பட்டிராவிட்டால், "அவர் தமது தூதர்களை அனுப்பி தம்முடைய தாசரை விடுவித்தார்." என ராஜா அறிக்கையிட்டிருக்க முடியாதல்லவா!

நமது விசுவாசம் எப்படிப்பட்டது? நம்மில் பிறர் தேவனுடைய வல்லமையைக் காணுமளவுக்கு விசுவாச சோதனைகளைச் சந்திக்க நாம் தயாரா? அக்கினிக்குள் போடப்படும் அனுபவம் வரும்போதுதான் நமது விசுவாசத்தின் ஸ்திரம் வெளிப்படுகிறது. சோதனைகளை இனங்கண்டு சந்திக்க நாம் தயாரா?

**'உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.' சங்கீதம் 91:11**

சிந்தனைக்கு:

அன்று அவர்களுக்கு வந்த சோதனை இன்று எனக்கு நேர்ந்தால்.....??



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவிடம் கையளித்துவிடு!

ஜனவரி

22

வியாழன்

வேதவாசிப்பு: யோவான் 2:1 -11

**'எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து,... பின்பு ருசி குறைந்ததைக் கொடுப்பான். நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான்.' யோவான் 2:10**

ஒருவர், காலைதோறும் நல்ல பால் கொண்டுவந்து தருவார். நாட்கள் செல்லச்செல்ல பாலின் ருசி குறைந்தது. எப்படி? அவருக்குள்ளதோ இரண்டு பசுக்கள்தான். ஆனால் எத்தனைபேர் கேட்டாலும், அவர் பால் தருவார். இது எப்படி? தண்ணீர் கலக்கவேண்டியதுதான். இப்படியே இன்று அநேகருடைய வாழ்வும். ஆரம்பம் நன்றாக இருக்கும். காலம் செல்லச்செல்ல அந்த வாழ்வைத் தக்கவைப்பதற்கு கலப்படம் செய்யத் தயங்குவதில்லை. ஆனால் அது சுவை கெட்டுப்போவதை ஏனோ அவர்கள் உணருவதில்லை.

கலியாணவிருந்திலே திராட்சரசம் குறைவுபட்டுவிட்டது என்று மரியாள் இயேசுவிடம் சொன்னதும், வேலைக்காரரைப் பணித்ததும் நாம் அறிந்ததே. கற்சாடியில் வெறும் தண்ணீர்தான் ஊற்றப்பட்டது. அவை 20-30 கலன் தண்ணீர் கொள்ளக்கூடிய ஜாடிகள். அதில் நிரப்பப்பட்ட தண்ணீரை இயேசு தொட்டார் என்றோ, வானத்தை அண்ணாந்து பார்த்து ஜெபித்தார் என்றோ எழுதப்படவில்லை. கற்சாடிகளை நிரப்பிய வேலைக்காரரிடம்: "நீங்கள் இப்பொழுது மொண்டு பந்தி விசாரிப்புக்காரரிடத்தில் கொண்டுபோங்கள் என்றார் இயேசு. அவர்கள் கொண்டுபோனார்கள்." நடந்தது என்னவெனில், முந்தியதிலும் பார்க்க பிந்தியது மிகுந்த ருசியாக இருந்தது. 'முதலில் ருசியானது கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்தபின்பு, ருசி குறைந்தது கொடுக்கப்படும்' என்பதை பந்தி விசாரிப்புக்காரனே ஒத்துக்கொண்டான். ஆனால், இயேசுவிடம் கையளிக்கப்பட்ட வெறும் தண்ணீர் முந்திய ரசத்திலும் அதிக ருசியுள்ளதானது.

நமது வாழ்வு கசப்பானதாகவோ, குறைவுள்ளதாகவோ இருக்கலாம். அதை இயேசுவிடம் கொடுத்து விடுவோம். 'எழுந்து, கொண்டுபோங்கள்' என்று ஒரு வார்த்தைதான். அந்த வேலைக்காரர் செய்ததுபோல, நாமும் விசுவாசத்தோடு எழுந்துபோக வேண்டியதுதான். வாக்குவாதம் செய்த யோபு கர்த்தரிடம் சரணடையும்வரை அவனுடைய பின்நிலைமை ஆசீர்வதிக்கப்படவில்லை. சரணடைந்தபோதோ கர்த்தர் இரட்டிப்பாக ஆசீர்வதித்தார். சிலசமயம் ஆரம்ப வாழ்வு ருசிபோலத் தெரிந்திருக்கலாம். ஆனால், இயேசுவிடம் கையளிக்கப்பட்டு மாற்றப்பட்ட வாழ்விலிருந்துகொண்டு, பழையதை நினைத்துப் பார்த்தால் வேறுபாடு விளங்கும். எல்லாமே குறைவுபடும்வரை நாம் ஏன் இருக்க வேண்டும்? நமக்குள்ளே மறைந்திருக்கும் ருசியை ஏன் கடைசிவரை வைக்கவேண்டும்?

**'கர்த்தர் யோபின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார்.' யோபு 42:12**

சிந்தனைக்கு:

இயேசுவிடம் இன்றே நம்மைக் கையளித்துவிடுவோம். இதுவரை கையளித்த நிச்சயம் இருந்தால் முந்தியதையும் பிந்தியதையும் சிந்தித்துப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைத்துவத்தோடு...!

ஜனவரி
23
வெள்ளி

வேதவாசிப்பு: சங்கீதம் 51:1 -17

**'தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான். தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.' சங்கீதம் 51:17**

ஒருவருக்குப் பரிசு கொடுக்கும்போது, நமக்கு ஏற்கனவே கிடைத்ததில் நமக்குப் பிடிக்காத ஒன்றைக் கொடுப்போமா? வெறுங்கையோடு போகக்கூடாது என்பதற்காகக் கொடுப்போமா? கடமை தீர்க்கக் கொடுப்போமா? இவை எதையும் பரிசு எனக் கூறமுடியாது. என்ன கொடுக்கிறோம் என்பதல்ல. என்ன நோக்கத்துடன் கொடுக்கிறோம் என்பதே முக்கியம்.

தாவீது ராஜாவான பின்பு எந்தக் குறைவும் இருக்கவில்லை. "சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடே இருந்தார்" (2சாமு.5:10) என, "தாவீது சென்ற இடங்களிலெல்லாம் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்" (2சாமு.8:6) என வாசிக்கிறோம். கர்த்தருடைய பெட்டியை தாவீதின் நகரத்துக்குக் கொண்டு வந்து, அதற்கான கூடாரத்தில் பலி செலுத்திக் கொண்டாடினான் தாவீது. கர்த்தருக்கென்று ஒரு ஆலயம் கட்ட வேண்டும் எனும் எண்ணம் முதலில் உதித்ததும் தாவீதின் மனதில்தான். இப்படியே கர்த்தருக்கென்று எதுவும் செய்ய, எதையும் கொடுக்க தாவீது தயாராய் இருந்தான். இப்படிப்பட்ட தாவீது, "தேவனே, என்னிடம் இருப்பவை எதுவும் தகுதியில்லை. என் நொறுங்குண்ட நருங்குண்ட இருதயத்தையே தருகிறேன். இதை நீர் புறக்கணிக்கமாட்டீர்" என ஜெபித்தது என்ன?

உரியாவின் மனைவி பத்சேபாள் விடயத்தில் தாவீது பாவம் செய்ததுமல்லாமல், அதைக் குறித்து உணர்வற்றவன்போல இருந்தது அதைவிடப் பெரிய பாவமாயிற்று. ஒரு ஏழையிடமிருந்த ஒரேயொரு செல்ல ஆட்டுக்குட்டியை ஐசுவரியவான் கொன்று சமையல் பண்ணுவித்ததைக் கேட்டபோது தாவீது கொதித்தெழுந்ததையும் வாசிக்கிறோம். ஆனால், அந்த ஐசுவரியவான் தானே தான் என உணர்த்தப்பட்டபோதுதான் தாவீது விழித்தான்! இருதயம் குத்துண்டவனாக, மனமுடைந்து தேவபாதம் விழுந்து கதறுகிறான். தாவீது கர்த்தருக்காக எத்தனை பெரிய காரியங்களைச் செய்திருந்தாலும், அவனுடைய இந்த உடைந்த உண்மையுள்ள இருதயத்தையே தேவன் கண்டார்.

நமது நல்ல செயல்களினாலே தேவனைப் பிரியப்படுத்த முயற்சிப்பது வீண். உடைந்த, உண்மையுள்ள இருதயமே தேவனுக்குப் பிரியம். மனம் நொந்து நமது உண்மை நிலைமையை உணர்ந்திருக்கிறோமா? கலக்கம் வேண்டாம். உங்கள் நொருங்குண்ட உண்மையுள்ள இருதயமே தேவனை அதிகமாகப் பிரியப்படுத்தும்.

**'அவர் முன்பாக மனவுண்மையாயிருந்து, என் துர்க்குணத்துக்கு என்னை விலக்கிக் காத்துக்கொண்டேன். ஆகையால் கர்த்தர்... எனக்குப் பலனளித்தார்.'சங்.18:23,24**

சிந்தனைக்கு:

என் இருதயம் தேவனுக்கு முன்பாக உண்மையாயிருக்கிறதா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுவாழ்வு

ஜனவரி

24

சனி

வேதவாசிப்பு: யோவான் 1:10-14

**'அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்' யோவான் 1:12.**

பல ஆண்டுகளுக்கு முன்னர் வீட்டு வேலைக்காக சிறுவயதுள்ள ஒரு ஏழைப் பிள்ளை, என் நண்பி வீட்டிலே விடப்பட்டான். ஆனால், அவர்களோ வேலை நேரம்போக, அவனையும் பாடசாலை அனுப்பினர். யுத்த மேகம் சூழ்ந்த சூழலில், உணவுப் பஞ்சம் நேரிட்டபோது, இருந்ததை தமது பிள்ளைகளுக்கும் அவனுக்கும் பிரித்துக் கொடுத்துவிட்டு, இவர்கள் இருவரும் பட்டினியிருந்தனர். அவனும் அவர்களுக்கு விசுவாசமாயிருந்தான். இன்று இவன் ஒரு பல் சத்திர சிகிச்சை நிபுணராக நமது நாட்டிலேயே பணியாற்றுகிறான். நம்பியவர்களையே கைவிட்டுவிடுகின்ற இந்த சமுதாயத்தில் புறமதத்தைச்சேர்ந்த என் நண்பியையும் கணவரையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

தன்னை நம்பியவனைத் தனது பிள்ளையாக்கி, எல்லா உரிமையும் கொடுத்தான் என்பதை நாம் நம்புகிறோம் என்றால், நம்மைப் பிள்ளைகளாக ஏற்றுக்கொண்ட தேவாதி தேவனைக் குறித்து நமது எண்ணம் என்ன? அவர் நமக்கு உரிமையளித்திருக்கிறார் என்ற விசுவாசம் நமக்கிருக்குமெனில், அதற்கேற்ப நமது வாழ்வு இருக்கிறதா?

கிறிஸ்துவை அறிந்திருக்கிறோம். அவர் கடவுள் என நம்புகிறோம். ஆனால், அவர் எனக்கு யார்? இந்தக் கேள்விக்குரிய நமது பதிலிலேதான் எல்லாமே தங்கியிருக்கிறது. இதற்கும், 'அவர் எமது இரட்சகர்' என்ற பதில் நம்மிடம் உண்டு. ஆனால், அவர் என் இரட்சகரானால் அவருடைய பிள்ளைகள் என்ற அதிகாரத்தை, அவருக்குள்ளான புதிய வாழ்வைப் பெற்றிருக்கிறோமா? கிறிஸ்துவில் நாம் வைக்கின்ற விசுவாசம் நமது உள்ளான வாழ்வில் ஆரம்பித்து வெளிவாழ்வையும் கிறிஸ்துவுக்குள்ளாக மாற்றிப்போடுகிறது என்பது சத்தியம். அதாவது, நமது சிந்தனைகள் நோக்கங்கள் விருப்பங்கள் செயற்பாடுகள் யாவையும் மறுசீரமைத்து, அவற்றுக்கூடாக அவர் நம்மில் வெளிப்படும்படி ஆண்டவர் நம்மை ஆட்கொள்கிறார். நாம் தொடர்ந்து இந்த மாம்ச சரீரத்தில் வாழ்ந்தாலும், நமது ஆவிக்குரிய வாழ்வு, தேவனுடனான உறவு எல்லாமே மாற்றமடைகிறது. ஏனெனில் நாம் இப்போது தேவனுடைய குடும்பத்தார். அந்தப் புதிய வாழ்வுக்குரிய சாட்சி என்னில் வெளிப்படுகிறதா?

**'...ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின. எல்லாம் புதிதாயின.' (2கொரி.5:17)**

சிந்தனைக்கு:

நான் முன்னர் எப்படி இருந்தேன்? தம் பிள்ளையாக்க தேவன் என்னில் கிருபை கூர்ந்தது என்ன? இன்று நான் தேவனுடைய பிள்ளை என்பதை என் வாழ்வு சாட்சி பகருகிறதா? அல்லது, நான் பொய்யனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்யான ஒளி

ஜனவரி

**25**

ஞாயிறு

வேதவாசிப்பு: யோவான் 1:1-9

**'உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.' யோவான் 1:9**

'மெய்யான ஒளி' என்றால், 'பொய்யான ஒளி' என ஒன்று உண்டோ! மங்கலான விளக்கு வெளிச்சத்தில் பழகியிருக்க, பிரகாசமான மின்சாரக் குமிழ் எரியுமானால் எப்படி இருக்கும்! இயேசு உலகிற்கு வரும்வரையிலும் இந்த உலகம் இருட்டாகவா இருந்தது? சூரியன் பிரகாசித்துக் கொண்டுதான் இருந்தது. இந்தச் சூரியன், தான் படைக்கப்பட்ட நாளிலிருந்து தன்னைப் படைத்தவருடைய ஒழுங்கை இன்னமும் மீறாததால் அதன் பிரகாசமும் இன்னமும் மங்கிப்போகவில்லை. ஆனால், தமது சாயலிலேயே தன் னைப் படைத்த தேவனையே அலட்சியப்படுத்தத் துணிந்த மனுஷன், தேவன் தந்த மகிமையை இழந்துவிட்டதை உணர முடியாது வாழுவது எப்படி?

**'தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர்'** (எபி.2:10), **'உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று. உலகமோ அவரை அறியவில்லை'** என வாசிக்கிறோம். ஆனால், வார்த்தையாக நின்ற கிறிஸ்துவால் படைக்கப்பட்ட மனுஷனோ, தேவனிடமிருந்து பெற்ற வெளிச் சத்தை வீசுகின்ற சூரியனைத் தெய்வமாக நினைத்தானே தவிர, தன் வாழ்வில் ஒளியாயிருக்கிற கிறிஸ்துவை அறியவில்லை. ஆனால், மனுஷனை நேசித்த தேவன், நிரந்தரமாக மனிதன் இருளுக்குள் தள்ளப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே, தாமே ஒரு மனிதனாக வந்து, இருளின் ஆதிக்கத்திலிருந்தும், சாத்தானின் ஆளுகையிலிருந்தும் மனிதனை மீட்கச் சித்தமானார். இந்த உலகை அதற்காகவே ஆயத்தம்செய்ய தேவன் தெரிந்துகொண்ட ஜனமாகிய இஸ்ரவேலும் தன் அழைப்பில் தவறியது. கூறியபடியே உலகிற்கு மனுஷனாக வந்த இயேசு, இருளின் ஆதிக்கத்தை உடைத்தெறிந்தபோதும், இன்னமும் இந்த உலகம் அந்த ஒளியைப் பெற்றுக்கொள்ளாதிருப்பது ஏன்?

இந்த இடத்தில்தான் நமது பொறுப்பைச் சிந்திக்க அழைக்கப்படுகி றோம். தேவனுடைய வழியில் நடக்கவும், அவரைக் கிட்டிச்சேரவும் மனுக் குலத்தை விடுவிக்க வந்த கிறிஸ்து, உலகில் உள்ளது மாயையான ஒளி என்பதை உலகிற்கு உணர்த்தி, மெய்யான ஒளி கிறிஸ்துவே என்பதைத் தெரிவிக்கவும், தம்முடைய மகிமையின் ஒளியைத் தமது பிள்ளைகளில் பிரகா சிக்கச்செய்யச் சித்தம் கொண்டார். அவருடைய பிள்ளைகளாகிய நம்மில் பட்டுத் தெறிக்கின்ற அந்த வெளிச்சத்தை இன்று நாம் என்ன செய்கிறோம்? இதெல்லாம் தெரிந்த சத்தியம் என்று அலட்சியப்படுத்துவதனாலேதானா இயேசு நமக்களித்திருக்கும் பொறுப்பின் அவசியத்தை உணராதிருக்கிறோம்?

**'நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். மலையின்மேல் இருக்கிற பட்ட ணம் மறைந்திருக்க மாட்டாது.' மத்தேயு 5:14**

சிந்தனைக்கு:

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நான், என்னில் பிரகாசிக்கின்ற கிறிஸ்துவின் ஒளி பிறருக்கு வெளிச்சமாயிருக்கும்படி பயன்படுகிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனக்குள் இருக்கும் ஒளி!

ஜனவரி
26
திங்கள்

வேதவாசிப்பு: 2கொரிந்தியர் 4:4 -7

**'இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.' 2கொரிந்தியர் 4:7**

பொருட்கள் வாங்கும்போது, அது வைக்கப்பட்டிருக்கும் பாத்திரம் அல்லது பொதியின் அழகையா அல்லது அதனுள்ளிருக்கும் பொருளின் தராதரத்தையா பார்த்து வாங்குவோம்?

தேவன் தமது விலைமதிக்க முடியாத பொக்கிஷம் ஒன்றை உலகிற்கு அறிமுகப்படுத்துவதற்காக அதனை வைப்பதற்கு ஒரு பாத்திரத்தைத் தேடினார். அதற்காக அவர் தெரிந்தெடுத்தது பெலவீனமானதும் இலகுவில் உடைந்து அழிந்து போகக்கூடியதுமான மனிதன். அவனுடைய பெலவீனமான சரீரம். இந்த உலகில் மனிதனுடைய சரீர வாழ்வு நிரந்தம் அல்ல. அவனுக்குள் அந்த பொக்கிஷத்தை வைத்தவர் தேவன். ஆகவே, மனிதன் தனக்குள் தேவன் வைத்த பொக்கிஷத்தைக் குறித்துப் பெருமை பாராட்ட முடியாது. விலைமதிக்க முடியாத அந்த விசேஷித்த பொக்கிஷம் எது? **'இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளி'**. இந்தப் பொக்கிஷத்தை நமக்குள் வைத்தது யார்? அண்டசராசத்தையே படைத்து ஆளுகை செய்கின்றவரும் தமது வார்த்தையினாலே இருளுக்குள் ஒளியைப் பிரகாசிக்கச் செய்த தேவனே (ஆதி.1:2,3). பாவ இருளுக்குள் இருந்த நமக்குள், தமது மகிமையின் அறிவொளியை, இயேசு கிறிஸ்துவின் முகத்தில் பிரகாசித்த ஒளியை, கிறிஸ்துவின் சுவிசேஷம் எனும் மகிமையான ஒளியை அவர் நமக்குள் வைத்தது எண்ணி முடியாத ஆச்சரியம்! கிருபையாலே மீட்கப்பட்ட நமக்குள் - நாளை இவ்வுலகில் மறைந்து போகின்ற மண்பாண்டத்துக்குள்-கிறிஸ்துவின் சுவிசேஷம் வைக்கப்பட்டிருக்கிறது. இதை நாம் சிந்தித்துப் பார்த்திருக்கிறோமா?

பவுலடியார், அழிந்துபோகின்ற இந்த மண்பாண்டத்தை அல்ல; அதற்குள் வைக்கப்பட்டிருக்கிற விலைமதிக்க முடியாத பொக்கிஷமாகிய, சுவிசேஷத்தின் வல்லமையையே நோக்குகிறார். தேவன் தமது நற்செய்தியை மக்களுக்கு எடுத்துச்சொல்ல நம்மைத்தான் உபயோகிக்கிறார். சுவிசேஷம் தேவனுடையது; நம்முடையது அல்ல. ஆகையால் நமக்குள்ளிருக்கும் பொக்கிஷத்தைக் குறித்து நாம் பெருமை கொள்ளமுடியாது. நாம் மண்பாண்டங்களாய் இருந்தும் நமக்குள் தமது ஒளியை தேவன் வைத்தாரே! நினைத்துப் பார்ப்போமாக! **'நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் பிள்ளைகளல்லவே' 1தெசலோனிக்கேயர் 5:5.**

சிந்தனைக்கு:

என்னைச் சுற்றியிருக்கிற மக்கள் இன்னமும் சுவிசேஷமாகிய ஒளிக்குள் வழிநடத்தப்படாமல் இருப்பதற்கு நான் எவ்விதத்தில் காரணமாயிருக்கிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவனுடைய வெளிச்சத்துக்குள் வா!

ஜனவரி
27
செவ்வாய்

வேதவாசிப்பு: யோவான் 3:16-21

**'பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக் கிறான்.' யோவான் 3:20**

"என் மனவிருப்பங்கள் மாறிவிடும் எனப் பயந்ததால்தான், கிறிஸ்தவ ஐக்கியத்தில் கலந்துகொள்ள விரும்பவில்லை" என்றாள் ஒரு இளம் பெண். ஆனால் இன்று அதே பெண், "என் இயேசு என்னைத் தூக்கியெடுத்தார்" எனப் பகிரங்கமாகச் சாட்சி கூறுகிறாள். இந்த மாற்றத்தின் காரணம் என்ன? "என்னிலிருந்த தவறுகள் வெளியே தெரிந்தால் வெட்கம் என்பதால், அதைச் சரிப்படுத்தவும் மனதின்றி ஒதுங்கியிருந்தேன். ஆனால் இப்போது என் இருதயத்தில் இயேசு ஒளியாக இருப்பதால், நான் விடுதலையானேன்" என்றாள் அவள்.

**'பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள்' (ஆதி.3:8).** ஆதாமின் இடத்தில் நம்மை வைத்து எப்பொழுதாவது சிந்தித்திருக்கின்றோமா? தாம் படைக்கப்பட்டதிலிருந்து தேவனோடு நல்லுறவில் இருந்த ஆதாமும் மனைவியும் இப்போது ஒளிந்துக்கொள்ள என்ன காரணம்? ஒன்று, தாங்கள் நிர்வாணிகள் என உணர்ந்ததால் தேவனுக்கு முன்பாக அவர்களால் வரமுடியவில்லை. அடுத்தது, வந்தால், தங்கள் நிர்வாண நிலையைத் தேவன் காண்பார் என பயந்தனர். தவறு வெளிவந்துவிடும் என்பதால், தங்களை தேவனுடைய வெளிச்சத்துக்கு முன்பாக வெளிப்படுத்த முடியாமல் ஓடி ஒளிந்தார்கள்.

இன்றும் அநேகருடைய நிலைமையும் இதுதான். தங்கள் காரியங்கள் வெளிவந்துவிடும் என்பதனால், தேவனுடைய வெளிச்சத்துக்கு முன்பாக தங்கள் வாழ்வை வெளியரங்கமாக்க பலர் விரும்புவதில்லை. ஏனெனில், அவர்கள் தங்களை மாற்றிக்கொள்ள விரும்பாததே. மனிதருக்கு முன்பாக நல்லவர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ள பெரும்பாடுபடுகின்ற இவர்கள், தேவனுடைய வெளிச்சத்தில் வாழுகின்ற பிள்ளைகளையும் எதிர்க்கத் தயங்கமாட்டார்கள். இவற்றுக்குக் காரணம் என்ன? மறைந்திருக்கும் துணிகரமான பாவமே! தவறுகள் வாழ்வில் நேரிடலாம். ஆனால், அவை வெளிவந்துவிடக் கூடாது என தேவபிரசன்னத்துக்கு வரத் தயங்குகிறவன், தேவனுடைய வெளிச்சத்தில் வாழுகின்ற அந்த மாபெரும் விடுதலையை இழந்து விடுகிறான்.

**'துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும். அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும். அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும் பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன்.' சங்கீதம் 19:13**

சிந்தனைக்கு:

எனக்குள் மறைந்திருக்கிற காரியங்கள் உண்டா? நான் உண்மையாகவே தேவனுடைய வெளிச்சத்தில் வாழுகிறேனா? இல்லையானால்......!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடினால் போதுமா?

ஜனவரி
28
புதன்

வேதவாசிப்பு: மாற்கு 10:17-22, 46-52

**'உடனே அவன் பார்வையடைந்து வழியிலே இயேசுவுக்குப் பின் சென்றான்.' மாற்கு 10:52**

பாடசாலை, வகுப்பு, ஆசிரியர், பாடம் எல்லாமே ஒன்று. ஆனால், ஒரு மாணவன் சித்தியடைகிறான்;. அடுத்தவன், தோற்றுப் போகிறான். எப்படி? கெட்டித்தனம் ஒருபுறம் இருந்தாலும், அவனவனுடைய தெரிவு, விடாமுயற்சி என்பன அவரவர் வெற்றியில் பெரும் பங்கு வகிக்கிறது.

ஒரே அதிகாரத்திலேயே இரண்டு மனுஷர். ஒருவன் தன் எல்லாத் தேவைகளையும் சந்திக்கக்கூடியளவு பணக்காரன். மற்றவன் குருடன், அன்றாடக உணவுக்காக பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். பண விஷயத்தில் எப்படியிருந்தாலும் ஆவிக்குரிய விடயத்தில் இருவரிலும் பல பொதுவான விடயங்கள் இருந்தன. பணக்காரன் இயேசுவை இலகுவாக நெருங்கினான். மற்றவன் ஜனக்கூட்டத்தின் மத்தியில் சத்தமாகக் கூப்பிட்டு இயேசுவை நெருங்கினான். பணக்காரன் முழங்கால்களில் விழுந்து நித்திய ஜீவனுக்காக மன்றாடினான். ஏழையோ கிழிந்த பாயில் இருந்தபடி இரக்கத்துக்காக மன்றாடினான். ஒருவன் அன்புகூரப்பட்டான் (வச.21). மற்றவன் திடப்படுத்தப்பட்டான் (வச.49). மொத்தத்தில் இருவரும் தங்கள் எஜமானனை நாடினார்கள்.

கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதைக் குறித்து இயேசு பணக்காரனிடம் பேசியபோது, தன் சிறுவயது முதல் அவற்றைக் கைக்கொள்வதாகக் கூறினான். என்ன வேண்டும் என இயேசு ஏழையிடம் கேட்டபோது, தான் பார்வையடைய வேண்டும் என்றான். முதலாமவன், எதைக் கடினம் என்று நினைத்தானோ, அதைச் செய்யும்படி, ஆஸ்திகளை விற்று ஏழைகளுக்குக் கொடு எனப் பணிக்கப்பட்டான். ஏழையோ பார்வையடைந்தான். முதல் மனிதனிடம் 'நீ போய்', செய்துவிட்டு 'பின்பு' வா எனக் கூறப்பட்டது. அடுத்தவனிடமும், 'நீ போகலாம்' எனக் கூறப்பட்டது. பணக்காரன் துக்கத்துடன் போய்விட்டான். ஏழையோ தனக்கிருந்த மேல்வஸ்திரத்தையும்கூட எறிந்துவிட்டு இயேசுவைப் பின்பற்றிச் சென்று அவருடைய சீஷனானான்!

இங்கு பணம் முக்கியமாகத் இருந்தாலும், இருவருக்கும் உள்ள ஒற்றுமைகளை கவனியுங்கள். இருவருக்கும் தேவை இருந்தது. பதில் இயேசுவிடமே உள்ளதென நம்பினர். இருவரும் இயேசுவின் அன்பைப் பெற்றனர். மொத்தத்தில் இருவரும் இயேசுவை அறிந்திருந்தனர், தேடினர். ஒருவன் அவரைப் பின்பற்றினான்? மற்றவன் எங்கே? இயேசுவைப் பின்பற்ற வேண்டாமா?

**'ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.' மாற்கு9:24**

சிந்தனைக்கு:

நம்மில் அன்புகூர்ந்த இயேசுவை வெறுமனே தேடுவதால், நான் அவரை நேசிக்கிறேன் எனலாமா? அல்லது அவரை உண்மையாகவே பின்பற்றி என் நேசத்தை வெளிப்படுத்துவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவபெலத்தைக்கொண்டு...

ஜனவரி
29
வியாழன்

வேதவாசிப்பு: மத்தேயு 17:14-21

**'உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்...' மத்தேயு 17:20**

மிகப் பயங்கரமான இக்கட்டிலிருந்த ஒரு சகோதரன், அதிலிருந்து வெளிவந்தபோது, "என்னைக் காப்பாற்றவும், தூக்கியெடுக்கவும், வெற்றியளிக்கவும், கர்த்தருடைய வல்லமை எனக்குண்டு என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையோடிருந்தேன்." என்றான்.

சுகம் கொடுக்கின்ற அதிகாரத்தைப் பெற்றிருந்தும் அந்தப் பையனைச் சுகப்படுத்த சீஷர்களால் முடியவில்லை. ஏன் என்று கேட்டதற்கு, இயேசு அவர்களுடைய விசுவாசக் குறைவையே சுட்டிக் காட்டினார். கடுகுவிதையளவு மிகச் சிறிய விசுவாசம் இருந்தாலே மலையையே பெயர்க்க முடியும் என்றார் இயேசு. அன்று சீஷருக்கு அப்படிப்பட்ட விசுவாசம்கூட இருக்கவில்லையா? இருந்தது. ஆனால், முடியவில்லை, அது ஏன்? மலைகளைப் பெயர்ப்பது நமக்குள் இருக்கும் விசுவாசத்தின் அளவில் அல்ல, மாறாக, தேவன் அதைச் செய்வார் என தேவனில் நாம் கொண்டிருக்கும் விசுவாசத்திலேயே தங்கியிருக்கிறது. நாம் சுயமாக எதுவும் செய்ய முடியாது.

"தேவனால் கூடாத காரியம் ஒன்றுண்டோ" என்ற வார்த்தை நமக்கு நல்ல மனப்பாடம். ஆனால், இயேசுவோ, "உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது" என்கிறார். எந்த நிலைமையிலும் தேவனுடைய சித்தத்தை அறிந்து, துக்கத்தோடும் புலம்பலோடும் அல்ல. களிப்போடும் சங்கீதத்தோடும் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராகும்போது, இயேசு கூறிய இந்த வார்த்தையில் அடங்கியுள்ள தேவனுடைய வல்லமையை நம்மால் உணரக்கூடும். விசுவாசம் என்பது, நாம் நமக்குள் உருவாக்கும் ஒரு விடயம் அல்ல! இயேசுவை விசுவாசிக்கவும் பரிசுத்தாவியானவரே நமக்குள் விசுவாசத்தைத் தொடக்கவும் வேண்டும். தேவன் என்னைக்கொண்டு பெரிய காரியம் செய்வார் எனும் விசுவாசமும் அவரிடமிருந்தே வரவேண்டும். அப்போது எனது விசுவாசம் அல்ல; எனக்குள் வாசம் பண்ணும் தேவனே எல்லாம் செய்வார் என்ற விசுவாசம் மேலோங்குகிறது. தேவநாமம் மகிமைப்பட பெரிய காரியங்கள் நடக்கும்.

ஆம்! பொக்கிஷசாலையின் திறவுகோலை இயேசு நமக்குக் கையளித்திருக்கிறார். அதிலிருந்து எடுக்கின்ற பொக்கிஷத்தின் அளவு நம்மைப் பொறுத்தது. சிறுபகுதிபோதுமென இருப்போமானால், அது யாருடைய தவறு? ஒவ்வொரு நாளும், விநாடியும்கூட பரிசுத்தாவியானவரின் உதவியினால் கிறிஸ்துவுடன் தங்கி, தேவனோடு நடந்தாலன்றி நம்மால் எதுவும் கூடாது.

**'உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு...' 1கொரிந்தியர் 2:4**

சிந்தனைக்கு:

எனக்குள்ளிருக்கும் விசுவாசம் சுயபெலத்தில் தங்கியிருக்கிறதா? தேவனில் நான் கொண்டிருக்கும் அசைக்க முடியாத விசுவாசத்தில் தங்கியிருக்கிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னத பனி

ஜனவரி
**30**
வெள்ளி

வேதவாசிப்பு: ஓசியா 14:1-6

**'நான் இஸரவேலுக்குப் பனியைப்போலிருப்பேன்; அவன் லீலிப் புஷ்பத்தைப்போல் மலருவான்.' ஓசியா 14:5**

அதிகாலையில் புற்கள் செடிகளைக் கவனித்திருக்கிறீர்களா! பசுமை நிறைந்த ஒருவித ஈரத்தன்மை,புல் நுனிகளில் நடனமாடும் பனித்துளி, மலரும் மொட்டுளில் படிந்திருக்கும் நீர்த்திவலை, விடிகாலையில் தெரிகின்ற இந்தக் கொள்ளை அழகை இரவிரவாகக் கொடுத்தவர் யார்?

இரவில் பெய்கின்ற பனி பூமியை ஈரமாக்கி, செழிப்பிக்க ஒரு இயற்கை வழி. இஸ்ரவேலை மனந்திரும்பும்படி அழைத்த தேவன், அவர்கள் மனந்திரும்பினால், இயற்கை பனியினால் மூடபட்டுப் புதுப்பிக்கப்படுவதுபோல, தாமும் இஸ்ரவேலைப் புதுப்பிப்பதாகச் சொல்லுகிறார். தம்மைவிட்டு விலகிப்போய் தனது அழகை இழந்துநிற்கும் தமது மக்கள், இழந்துபோன அழகை மீளப் பெறவேண்டும், புதுப்பிக்கப்பட வேண்டும் என விரும்பும் கர்த்தர், அவர்களில் தாம் கொண்டிருக்கும் அன்பை விளக்கிய பல உதாரணங்களில் பனியும் ஒன்று.

அடுத்தது, "இரவில் இலைகள் அசையாதிருக்கும்பொழுது தாவரங்களின் துவாரங்கள் புத்துயிரும் புதுப்பெலனும் அளிக்கும் ஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் திறந்திருக்கின்றன" என ஒருவர் எழுதுகிறார். அதாவது, பெய்கின்ற பனி துவாரங்களில் உட்சென்று புதிய உணர்வையும் செழிப்பையும் தாவரம் பெறவேண்டுமானால், அந்த இலைகள் அசையாதிருக்க வேண்டும். கர்த்தருடைய சந்நிதானத்தில் அமர்ந்திராவிட்டால், ஆவிக்குரிய புத்துணர்வை நாம் பெறுவதும் கூடாத காரியம். ஆத்திரப்பட்டு அவசரப்பட்டு அலசடிப்பட்டால் இந்த உன்னத பனியைப் பெற்றுக்கொள்ள முடியாது. காற்றும் வெப்பமும் இருக்கும்போது பனித்துளி விழாது. காற்று நின்று, உஷ்ணம் குறைந்து, ஆகாயமும் குளிர்ந்து அமர்ந்திருக்கும்போதுதான் கண்ணுக்குத் தெரியாத நீர்த்திவலை தாவரத்துக்குக்கிட்டும் எனில், தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்ள நமது ஆத்துமா எவ்வளவாக அமர்ந்திருக்க வேண்டும்!

அவசரமும், பெருஞ்சத்தங்களும் நிறைந்த இந்நாட்களில் அமர்ந்திருப்பது நமக்கு ஒரு சவால்தான். கவலைகள் சச்சரவுகள், வீண் முயற்சிகள் யாவும் சேர்ந்து வாழ்வையே இருளாக்கிவிடும். இந்நாட்களில் அந்த இரவிலும் அமர்ந்திருப்பது நமக்கு ஒரு சவால்தான். உன்னத பெலனால் தரிப்பிக்கப்படாவிட்டால் வாழ்வின் போராட்டங்களை ஜெயிக்க முடியாது. ஜெயம் வேண்டுமானால் இருளிலும் அமர்ந்திருக்கத்தான் வேண்டும்.

**'அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும் என்று இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற கர்த்தராகிய தேவன் சொல்லுகிறார். நீங்களோ அப்படியிராமல்...' ஏசாயா 30:15**

சிந்தனைக்கு:

வீணான முயற்சிகள், கவலைகள், ஆசைகள் யாவையும் உதறித்தள்ளி, உன்னத பனி என்னை நனைக்கும்படி என் ஆத்துமா அமர்ந்திருக்க ஆயத்தமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவனோடு தனித்திரு

ஜனவரி
31
சனி

வேதவாசிப்பு: சங்கீதம் 42:1-11

**'...யோர்தான் தேசத்திலும் எர்மோன் மலைகளிலும் சிறுமலையிலுமிருந்து உம்மை நினைக்கிறேன். ....உமது அலைகளும் திரைகளும் எல்லாம் என்மேல் புரண்டுபோகிறது.' சங்.42:6,7**

"ஒவ்வொரு நாள் காலையிலும் எனது தாயார் வீட்டின் பின்புறத் தோட்டத்தில் தனியாக உலாவிச்செல்லும் ஒரு பாதை உண்டு. அது அவர் தேவனோடு தனித்திருக்கும் இடம். இப்போ தாயார் இறந்துவிட்டாலும் அந்தப் பாதை தேவனோடு தனித்திருப்பதை நமக்கு உணர்த்துகிறது" என்று ஒருவர் தன் தாயின் தனித்திருந்த வாழ்வைக் குறித்துப் பகிர்ந்து கொண்டார்.

42வது சங்கீதத்தை எழுதிய சங்கீதக்காரனுடைய மனஉணர்வுகளை நாமும் அனுபவித்திருக்கிறோம். மனஅழுத்தம், தனிமை, ஏக்கம் நிறைந்த ஒருவன்தான் இந்த சங்கீதக்காரன் என்பது விளங்குகிறது. ஆனால், அது எதுவும் தன்னை அழித்துவிடாதபடி, அவன் தேவனை நோக்கித் தன் பார்வையைத் திருப்பியிருந்தான் என்பதையும் நாம் கவனிக்கலாம்.

இயேசு உலகில் வாழ்ந்த காலத்தில், அவர் தனியே பிதாவோடு மாத்திரமே தனித்திருந்த வேளைகள் பல. மனிதரோடு எந்நேரமும் சம்மந்தப்பட்டிருப்பது நம்முடைய பெலனைக் குறைக்கிறது. அதை அறிந்திருந்த இயேசு, தமது ஒப்பற்ற ஊழியத்தையும், தமது மனுஷீகத்தையும் மனதில்கொண்டு, முழுவதுமாக தேவனைச் சார்ந்திருப்பதையே முதன்மையாகக் கொண்டிருந்தார். இப்படியிருக்க, சாதாரண மனிதராகிய நமது காரியம் என்ன?

இங்கே சங்கீதக்காரன் நமக்கு உணர்த்துவது என்ன? கடல் அலைகள் யாவும் ஒன்றுசேர்ந்து கொந்தளித்து நுரைத்து, எழுந்து தேவனுடைய முகத்தை மறைத்தாலும், நமக்கு முன்பாக பெரிய பளிங்குப் பாறைகள் திரைபோட்டு மறைத்து நம்மைக் கதிகலங்க வைத்தாலும், இவை யாவும் தேவனுடையவைகளே என்பதை சங்கீதக்காரன் உணருகிறான். அதனால்தான், **'ஆகிலும், கர்த்தர் பகற்காலத்தில் தமது கிருபையைக் கட்டளையிடுகிறார். இராக்காலத்தில் அவரைப் பாடும் பாட்டு என் வாயிலிருக்கிறது'** என்கிறான்.

கிறிஸ்துவோடு தனித்திருக்கும் பழக்கத்தை நமதாக்கிக் கொள்வோம். அதுதான் இந்த உலகத்தை மேற்கொள்ளவும், தேவனோடு சஞ்சரிக்கவும் ஒரே வழி. வாழ்வில் என்ன புயல் வீசினாலும் தேவனோடு தனித்திருக்கும்போது அந்தப் புயலே நாம் தேவனை அடைகின்ற வழியாக மாறிவிடுகிறது. இந்த ஆண்டின் முதல் மாதத்தை முடிக்கின்ற நாம், இந்த முழு ஆண்டையும் ஆளவேண்டுமானால் தேவனோடு தனித்திருக்க நம்மை அர்ப்பணிப்போமாக.

**'விடியற்காலத்தில் நீ ஆயத்தமாகி, சீனாய் மலையில் ஏறி, அங்கே மலையின் உச்சியில் காலமே என் சமுகத்தில் வந்து நில்.' யாத்திராகமம் 34:2**

சிந்தனைக்கு:

24மணி நேரத்தில் எவ்வளவு நேரத்தை என் தேவனோடு தனித்திருக்க ஒதுக்கியிருக்கிறேன்? வாழ்வில் தோல்வியுற்ற நேரங்களை எண்ணிப் பார்ப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவனுக்கென்றே செய்யுங்கள்.

பெப்ரவரி
1
ஞாயிறு

வேதவாசிப்பு: கொலோசெயர் 3:12-25

**'எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.' கொலோ. 3:24**

குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருடைய கடமைகளையும் உணர்த்தி, அவர்கள் எப்படியான மனநிலையில் எதைச் செய்ய வேண்டும் என்பதை இன்றைய வேதவாசிப்பில் பவுல் வலியுறுத்தி எழுதியுள்ளார். கணவன், மனைவி, பிள்ளைகள், வேலைக்காரர் இப்படியாக ஒரு குடும்பத்திலே ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு பொறுப்புகள் உள்ளன. இப் பொறுப்புகள் குடும்பத்துக்குக் குடும்பம் வித்தியாசமாக இருக்கலாம். ஆகவே ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்புகளைச் சரியாக இனங்கண்டு செய்ய வேண்டியது அவசியம். இவற்றைச் செய்யும்போது, அதை மனுஷருக்கென்று அல்ல, தேவனுக்கென்றே செய்கிறோம் எனும் மனநிலை நமக்கு இருக்க வேண்டியது மிக அவசியம். அந்த மனநிலை நமது பொறுப்புக்களைப் பொய்யின்றி செவ்வனே செய்ய நமக்கு உதவுகிறது.

உதாரணமாக, கணவன், காரியாலயத்தில் தன் உயர் அதிகாரிக்குப் பயந்து வேலை செய்கிறவராக இருந்தால், அதிகாரி இல்லாத வேளையில் அவர் தனது கடமையில் தவறுகிறவாராய் இருப்பார். அதேபோல் மனைவி, கணவனுக்குப் பயந்து தனது கடமைகளைச் செய்கிறவராக இருப்பாரானால், கணவன் இல்லாத வேளையில் அவள் வழி தவறுபவளாகப் போக வாய்ப்புண்டு. அதேபோல, பிள்ளைகளும் பெற்றோர் இருக்கும்போது ஒரு விதமாகவும் இல்லாதபோது வேறுவிதமாயும் நடக்கக்கூடும். வேலைக்காரர்கூட எஜமான் இருக்கும்போது வேலை செய்கிறவர்கள்போலக் காட்டிக்கொண்டு, இல்லாதபோது சோம்பேறிகளாக இருப்பர். ஆனால் கணவன், மனைவி, பிள்ளைகள், வேலைக்காரர் அனைவருமே, தேவனுக்குத்தான் யாவற்றையும் செய்கிறோம் என்னும் மன நிலையோடு செயற்படுவார்களேயானால், எப்போதும் எந்தவேளையிலும் தேவன் தம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறார் எனும் உணர்வோடு தமது கடமைகளைப் பொறுப்புடன் செவ்வனே செய்வார்கள். நீங்கள் உங்கள் பொறுப்புகளை முன்னெடுக்கும்போது எந்த மனநிலையோடு செய்கிறீர்கள்?

எமது கடமைகளை செவ்வனே செய்தும், அது மற்றவர்களால் அங்கீகரிக்கப்படாதபோது, நாம் மனமுடையும் சந்தர்ப்பங்களும் நேரிடலாம். சோர்ந்து போகாதீர்கள். பவுல், **'...சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்கள்'** (கொலோ.3:23) என எழுதியுள்ளார். தெய்வ பயத்துடனும் செய்கின்ற ஒவ்வொன்றுக்கும் பலன் உண்டு. ஆகவே இந்த வசனத்தை மனதில் நிறுத்தி, நமது பொறுப்புகளைத் தேவனுக்காக நிறைவேற்றுவோம்.

சிந்தனைக்கு:

இதுவரை என் பொறுப்புகளை தேவனுக்கென்று செய்தேனா? அல்லது, மனுஷரிடம் நற்பெயர் எடுப்பதற்கு செய்தேனா? இனி என்ன செய்யப் போகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுள்ளவர்களாய் இருங்கள்!

பெப்ரவரி
**2**
திங்கள்

வேதவாசிப்பு: லூக்கா 17:11-19

**'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து,..' எபேசியர் 5:20**

ஒருவர் எமக்கு உதவி செய்தால் சாதாரணமாக அதற்கு நாம் நன்றி சொல்லுவது வழக்கம். இன்றும் எமது கலாச்சாரத்தில் பதிலுபகாரம் செய்வது ஊறிப்போன விடயம். ஒருவர் ஏதாவது உணவுப் பண்டத்தை ஒரு பாத்திரத்தில் வைத்து அனுப்பிவிட்டால், அப் பாத்திரத்தைக் கவனமாய் வைத்திருந்து அதில் வேறேதாவது பொருளை வைத்துக் கொடுக்காவிட்டால் சிலருக்குத் திருப்தியிராது. இப்படியிருக்க எமது நடைமுறை வாழ்விலே தேவன் செய்யும் நன்மைகளை நாம் இலகுவில் மறந்துவிடுவது ஏன்?

வாழ்விலே இன்பமும், துன்பமும் மாறி மாறி வரத்தான் செய்யும். இன்பம் வரும்போது தேவனைப் போற்றி வாழும் நாம், துன்பம் வரும்போது கடந்த நாட்களில் அவர் செய்த நன்மைகளை எண்ணிப்பாராது அவரைத் தூற்றி வாழ முற்படுகிறோம். அதுமட்டுமல்ல, தேவையான நேரத்தில் அவரைத் தேடுகிறோம். மற்றப்படி நாம் எம் பாதையில் போய்க்கொண்டே இருக்கிறோம்.

ஒருமுறை தேவையோடிருந்த பத்துப்பேர் இயேசுவை நோக்கிக் கூப்பிட்டனர். தேவை தீர்ந்ததும் ஒன்பதுபேரும் காணாமல் போய்விட்டனர். ஆனால், நன்றியறிதலுள்ள ஒரு மனுஷன் மாத்திரம் நன்றி சொல்ல இயேசுவைத் தேடி வந்தான். இயேசு அவனை நோக்கி "மிகுதி ஒன்பது பேரும் எங்கே?" என்று கேட்டார். ஆம், இயேசு அவர்களைத் தேடினார்.

நாம், தேவைகள் இருக்கும்போது மட்டும் தேவனைத் தேடுகிறோமா? மற்றவேளைகளில் எம் விருப்பம்போல வாழ்கிறோமா? இன்று நாம் ஜெபிக்கிறோம்; ஆனால் உண்மையான உள்ளத்துடன் ஆண்டவரைத் தேடுகிறோமா? கடன் தொல்லை நெருக்கும்போது கணவன் தேவனைத் தேடுகிறார். பிள்ளைக்கு வியாதி வரும்போது மனைவி தேவனிடம் ஓடுகிறார். பரீட்சை நெருங்கும்போதுதான் பிள்ளைகள் தேவனை நினைக்கிறார்கள். அப்படியானால் இப்படிப்பட்ட குடும்பத்தில் தேவன் எங்கே? பொதுவாக அருகில் இல்லாத ஒருவரைத்தான், தேவை வரும்போது தேடி ஓடவேண்டும். எம் குடும்பத்தில் தேவன் இருந்தால் அவரை ஆராதிக்கும் ஆராதனையும் அவர் எம் வாழ்வில் செய்த நன்மைகளையும் நினைத்து, எப்போதும் அவரைத் துதிக்கும் துதியும் நம் வாயில் இருக்கவேண்டுமே. 'அவர் செய்யும் நன்மைகளை எண்ணி' என்று நாம் சொல்லுவதுண்டு. அப்படியானால் தீமையும் செய்வார் என்று கருதமுடியுமா? அவர் செய்வது யாவுமே நன்மைக்குத்தான். ஆகவே, எப்போதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து வாழக் கற்றுக்கொள்ளுவோம்.

சிந்தனைக்கு:

தேவனை நான் நினைக்காத தேடாத வேளைகள் என் வாழ்வில் இருந்ததுண்டா? அவற்றை அறிக்கையிட்டு ஜெபிப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுச் சரீரமும் காக்கப்பட...

பெப்ரவரி
**3**
செவ்வாய்

வேதவாசிப்பு: லூக்கா 11:34-36, யாக்கோபு 3:5-10

**'நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று...'** ரோமர்12:1

நமது சரீரத்தில் எல்லா அவயவங்களும் நமக்கு முக்கியமே. விரல் நுனியிலுள்ள நகம்கூட அதன் வேலையைச் சரியாகச் செய்ய முடியாதபடி காயப்பட்டால் முழுச் சரீரமுமே பாதிக்கப்பட்டுவிடும்.

கண் சரீரத்தின் விளக்கு, கண் தெளிவாக இருந்தால் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். அதேபோல் நாவு சிறிய அவயவமாக இருந்தாலும் அது எம் சரீரம் முழுவதையும் கறைப்படுத்த முடியும் என்று யாக்கோபு குறிப்பிடுகிறார். கண்ணானது வெளியில் இருந்து எல்லாவற்றையும் உள்ளுக்குள் எடுக்கிறது. நாவோ உள்ளிருந்து எல்லாவற்றையும் வெளியே கக்குகிறது. எனவே, வெளியிலிருந்து உள்வருவதும் உள்ளிருந்து வெளியே போவதும் இரண்டுமே எம் சரீரத்தைக் கறைப்படுத்துவதாய் இருக்கிறது. இன்னும், வாய்க்குள்ளே போகும் உணவு மனுஷனைத் தீட்டுப்படுத்தாது. ஆனால், வாயினூடாக வெளிவரும் காரியங்கள் அவனைத் தீட்டுப்படுத்தும். (மத்.15:17-20) இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். (மத்.12:34) வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும். அவைகளே மனிதனைத் தீட்டுப்படுத்தும். (மத்.15:18) இவையாவும் ஆண்டவர் பேசிச் சொன்ன வார்த்தைகள்.

ஆம், எமது சரீரம் முழுவதும் காக்கப்படவேண்டுமானால் எம் எல்லா அவயவங்களும் பரிசுத்தமாய் காக்கப்படவேண்டும். சில அவயவங்களைக் கவனித்துக்கொண்டு சிலவற்றை அசதியாய் விட்டுவிடவும் முடியாது. வாய்க்குள்ளே போகும் உணவைக் குறித்து எமக்குள்ள கரிசனை, வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகளைக் குறித்துக் கிடையாது. அவற்றால் பிறனைக் கொலை செய்யவும் கூடும் என்பதைக் குறித்து நாம் சிந்திப்பதே இல்லை. எமது கண்ணினால் நாம் பார்க்கும் பலவித காட்சிகள் எம் இருதயத்தில் ஏற்படுத்தும் மாற்றங்களை நாம் உணர்வது கிடையாது. கேட்பவற்றிலும் பார்க்க, காண்பவைகள் மனதில் உடனே பதிந்துவிடுவதால், அவற்றால் நமது வாழ்வில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்த முடியும். இவைகள் மிகமுக்கியமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதனாலேயே இயேசு இவைகளை வலியுறுத்திக் கூறினார்.

எமது முழுச்சரீரத்தையும் நாம் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும் என்றும் அதுவே நாம் செய்யக்கூடிய புத்தியுள்ள ஆராதனை என்றும் கூறுகிறார். தேவனுக்கு உகந்த இந்த ஆராதனையை நாம் செய்கிறோமா? ஒவ்வொரு அவயவமாக தேவனிடம் ஒப்புக்கொடுத்து ஜெபிப்போமாக.

சிந்தனைக்கு:

ஒவ்வொரு அவயவமாய் ஒப்புக்கொடுக்கும்போது, சில காரியங்களை நாம் விட்டுவிடவேண்டி நேரிடும். அதற்கு நாம் தயாரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கி நிறுத்துங்கள்!

பெப்ரவரி

**4**

புதன்

வேதவாசிப்பு: யோவான் 8:1-11

**'தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான். தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.' சங்.51:17**

"பனை மரத்திலிருந்து விழுந்தவனை மாடு மிதித்த கதை" என்று நாம் சொல்லுவதுண்டு. நாம் நடக்கும் பாதையெல்லாம் குன்றும், குழியு மாகவே உள்ளது. தேவகிருபையினாலேயே நாம் பார்த்துப்பார்த்து நடக்க வேண்டியுள்ளது. ஒருவர் படுகுழியிலே விழுந்து, "ஐயோ விழுந்து விட்டேனே" எனக் கதறும்போது, அவரை இன்னமும் படுகுழியிலே வைத்து அமுக்குவதா, அல்லது, அவர் மேலேயெழும்பி மீண்டும் சீராய் நடப்பதற்குக் கைகொடுப்பதா? எது நியாயம்? மனித அறிவுக்கு எது நியாயம் என்று தெரியும்.

பரிசேயரும் வேதபாரகரும் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் விழுத்த திட்டமிட்டனர். விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை எல்லோர் முன்னிலையிலும் அவமானப்படுத்தி, கல்லெறிந்து கொல்லுவது ஒன்று என்றால், இந்த விடயத்தில் இயேசுவில் குற்றம் பிடிப்பதே அவர்களது முக்கிய நோக்கமாக இருந்தது. ஆனால் இயேசுவோ அந்த தந்திர திட்டத்தை ஒரே வார்த்தையினால் முறியடித் தார். அதேவேளை அந்தப் பெண் ஒரு புதிய வாழ்வு வாழ, மீண்டும் பாவம் செய்யாதிருக்க, இயேசு மன்னிப்பு என்னும் ஊன்றுகோலை, "நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே" என்ற வார்த்தையைக்கொண்டு அவளுக்கு நீட்டினார். பாவத்தின் படுகுழியிலே விழுந்துபோய்க் கிடந்த அந்தப் பெண் இயேசுவின் மன்னிப்பு என்னும் ஊன்றுகோலில் ஊன்றி எழுந்து உயிர் பெற்றாள். வந்தவர்கள் வெட்கப்பட்டுத் திரும்பிப்போனார்கள்.

நாத்தான் தீர்க்கனால் பாவம் உணர்த்தப்பட்டபோது தாவீது பாடிய 51ம் சங்கீதத்திலே 'தேவனே நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்' என்கிறார். ஆம், பாவத்தில் விழுந்தவன் தனது பாவத்தை உணர்ந்து கதறும்போது தேவன் அதைக் கேட்கிறார். அவனை மன்னிக்கிறார். அவன் புதுவாழ்வு வாழ வழிவகுக்கிறார். ஆனால், நாம் என்ன செய்கிறோம்? ஒருவர் பாவம் செய்துவிட்டார் என்று கேள்விப்பட்டால் யோசனையின்றி, நமது நிலைமையை மறந்து, அவரைக் குற்றப்படுத்திப் பேசுகிறோம். விழுந்தவர் மீண்டும் எழும்பாதவாறு சொற்கள் என்னும் கல்லடி கொடுத்து அவரை ஒரே யடியாய் சாய்க்க முயலுகிறோம். இப்படிச் செய்யும் நாம் கிறிஸ்தவர்கள் என்று பெருமையாகச் சொல்லிக்கொள்ளுகிறோம். இன்றைய நாளில் சற்றே ஒருகணம் நின்று சிந்திப்போம். மனந்திரும்புகிற ஒரே பாவியின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகிறது என்று இயேசு சொன்னார். அந்த சந்தோ ஷத்திற்கு நீங்களும் நானும் தடைக் கற்களாய் இருக்கலாமா? பாவத்தில் விழுந்தவர்களைத் தூக்கி நிறுத்த முன்வருவோமாக.

சிந்தனைக்கு:

இயேசு என்னைத் தூக்கியெடுத்ததை மறந்து, பிறருக்கு ஊன்றுகோலாய் நிற்க வேண்டிய நான் எத்தனைபேர் விழுந்துபோகக் காரணியாய் இருந்திருக்கிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்மானித்துச் செயற்படுங்கள்!

பெப்ரவரி

5

வியாழன்

வேதவாசிப்பு: தானியேல் 1:8-20

**'நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம், உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்...'** (எரே.1:8)

எமது மீட்புக்கான சகலவற்றையும் தேவன் செய்து முடித்துவிட்டார். அந்த மீட்பைப் பெற்றுக்கொள்ள நாம்தான் தீர்மானம் எடுக்கவேண்டும். எமது இதயக் கதவின் வாசலில் நின்று தட்டிக்கொண்டிருக்கும் இயேசுவை உள்ளே அழைக்க, கதவைத் திறப்பதா வேண்டாமா என்ற தெரிவு நம்முடையது. கதவைத் திறந்து அவரை உள்ளே அழைப்போமானால், அவர் நமக்குள் வாசம்பண்ணுவார். வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நாம்தான் தீர்மானங்கள் எடுக்கவேண்டும். தேவன் வலுக்கட்டாயமாக எதையும் எமக்குள் திணிக்கிறவர் அல்ல. எமக்கு முழுச் சுதந்திரத்தையும் அவர் கொடுத்திருக்கிறார். நாம் அவர் சித்தத்திற்குள் எம் வாழ்வைத் தத்தம் செய்தால் அவர் எம்மில் சுயாதீனமாகக் கிரியை செய்வார். இல்லையானால் அவர் நம்மைக் கட்டாயப் படுத்தமாட்டார். நமது கடினத்துக்கு நாம் விட்டுவிடப்படுவோமானால், அதுவே நம்மை அழிவுக்கு இட்டுச்சென்றுவிடும்.

தானியேல் இராஜ போஜனத்தால் தன்னைத் தீட்டுப்படுத்தல் ஆகாது என்று தீர்மானம் செய்துகொண்டான். அதைத் தேவனும் ஆதரித்தார். பாபிலோனுக்குச் சிறைப்பிடிக்கப்பட்டுப் போன தானியேலுக்கு இத் தீர்மானமானது, அவர் தொடர்ந்தும் தேவனுக்காய் உறுதியோடு நிற்க மிகவும் உதவி செய்தது. சிங்கக் குகையிலும் அவர் தன் விசுவாசத்தைக் கைவிட்டுவிடவில்லை. அதே போல் காணாமற்போன மகன், மீண்டும் தன்னுடைய தகப்பனிடத்துக்குப் போய் இன்னின்ன பிரகாரமாய்ச் சொல்லுவேன் என்று ஒரு தீர்மானம் பண்ணிக்கொண்டு புறப்பட்டுப் போனான். அந்தத் தீர்மானமே அவனுக்கு ஒரு புதிய வாழ்வைக் கொடுத்தது. தனது தந்தையின் பாசமிகு பிள்ளையாக வாழ மீண்டும் ஒரு அருமையான சந்தர்ப்பத்தைத் தேடிக் கொடுத்தது. எனவே தீர்மானம் எடுப்பதும் அதைச் செயற்படுத்துவதும் கிறிஸ்தவ வாழ்வுக்கு இன்றியமையாதது.

கிறிஸ்துவை எமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதோடு எமது கிறிஸ்தவ வாழ்வு முடிந்துவிடவில்லை. தொடர்ந்தும் சாட்சியாக வாழவேண்டிய பொறுப்பு எமக்குண்டு. எடுக்கும் தீர்மானங்கள் எமக்கு உதவி செய்கின்றன. அவை வேதத்தின் அடிப்படையிலும் தேவவழிநடத்துதலோடு இருக்கவேண்டியது அவசியம். நமக்கு ஒரு தொழிலைத் தெரிந்தெடுக்கும்போது, வாழ்க்கைத் துணையைத் தெரிவுசெய்யும் முக்கியபடிகளில் தீர்மானம் முக்கியபங்கு வகிக்கிறது. கிறிஸ்தவ ஓட்டத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் தீர்மானமே எம் வாழ்வை நிர்ணயிக்கிறது. கர்த்தருக்குள் நாம் செய்யும் திடமான தீர்மானங்களே பாவத்தில் விழுந்துவிடாமல் உறுதியாயிருக்கத் துணை புரிகின்றது.

சிந்தனைக்கு:

இதுவரை நான் செய்த தீர்மானங்கள் என்னை தேவனுக்குப் பிரியமாய் வாழ வைத்ததா? எவை தேவனைவிட்டுப் என்னைப் பிரித்தது? தீர்மானங்களை ஒப்புக்கொடுத்து ஜெபிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை

பெப்ரவரி
6
வெள்ளி

வேதவாசிப்பு: யோவான் 15:1 -12

**'ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு. நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமைப்படுத்துவாய்' சங்கீதம் 50:15**

கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை என்ன? இதைக் குறித்து ஆண்டவர் அழகாக எடுத்துரைக்கிறார். திராட்சைச் செடியிலே எவ்விதமாய் கொடியானது நிலைத்திருக்கிறதோ, அதுபோலவே கிறிஸ்துவில் ஒரு கிறிஸ்த வன் நிலைத்திருக்கவேண்டும். இதுவே கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை. நிலைத் திராதவன் வெட்டுண்டு போவான். நாளாந்த வாழ்வில் தேவனோடுள்ள உறவும் ஐக்கியமுமே கிறிஸ்தவ வாழ்வை சரியாக வாழ ஊக்குவிக்கும். கொடிகளாகிய நாம் கிறிஸ்துவாகிய செடியில் நிலைத்திருக்கும்போதுதான் நல்ல கனிகளைக் கொடுக்கமுடியும். நல்ல கனிகளை நாம் கொடுத்தால் அக் கனிகளைக் கண்டு பிறரும் கிறிஸ்துவண்டை வர அதுவே அடிகோலும்.

இன்று நமது கிறிஸ்தவ வாழ்வு எப்படிப்பட்டது? கிறிஸ்தவர்கள் என்ற பெயரைச் சூட்டிக்கொண்டு ஏனோதானோ என்று ஜீவித்துக்கொண்டிருப்பது அழகல்ல. ஆபத்துவேளையில் தேவனை நோக்கி ஓடுகிறோம். ஆபத்து மறைந் ததும் மீண்டும் நம் விருப்பப்படி வாழ்க்கையை ஓட்டுகிறோம். யுத்தம் சூழ்ந்த காலத்தில் ஷெல் சத்தம் கேட்கும்போது, 'ஆபத்துக் காலத்தில் என்னை நோக் கிக் கூப்பிடு என்று சொன்னீரே. உம்மையே நோக்கிக் கூப்பிடுகிறோம்' என்று கதறினார்கள். ஆனால் எல்லாம் ஓய்ந்து அமைதலாகிவிட்டதும் ஒரு ஜெபத் திற்கு அழைத்தால்கூட அவர்களுக்கு நேரமிருப்பதில்லை. சங்.50:15ல் ஆபத்துக் காலத்தில் மட்டும் கூப்பிடு என்றா சொல்லப்பட்டிருக்கிறது? இல்லை, ஏற்கனவே தேவனோடு நல்லுறவில் இல்லாத ஒருவனால் எப்படி ஆபத்தில் மாத்திரம் தேவனை நோக்கிக் கூப்பிடமுடியும்? தேவனை மகிமைப்படுத்துவதே ஒரு தேவபிள்ளையின் முக்கிய நோக்கம். கிறிஸ்தவ வாழ்வில் தேவனோடுள்ள தொடர்ச்சியான உறவு அவசியம். வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபம் தேவனுக்கு அருவருப்பானது. (நீதி28:9) செம்மை யானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம். (நீதி.15:8).

தேவனோடுள்ள உறவை இன்றே புதுப்பித்துக்கொள்வோம். அனுதின மும் வேதத்தை வாசித்து அதற்குக் கீழ்ப்படிவோம். ஜெபத்தில் தரித்திருப்போம். தேவ ஆவியானவரின் வழிநடத்துதலை வேண்டிநிற்போம். ஒரு பிள்ளைக்கு, அப்பாவை எப்படிப் பிரியப்படுத்துவது என்று அடிக்கடி சொல்லிக்கொடுக்க வேண்டியதில்லை. பிள்ளை, தானாகவே கற்றுக்கொள்ளும். எப்படி நடந்தால் அப்பாவுக்குப் பிடிக்கும், எதைச் செய்யக்கூடாது என்றெல்லாம் அப் பிள்ளை அறிந்து, அப்பாவுக்குப் பிரியமான பிள்ளையாக நடக்க முற்படுமல்லவா! அதுபோலவே தேவனோடு எமது உறவும் இருக்கவேண்டும்.

சிந்தனைக்கு:

நான் என் பரம பிதாவில் தங்கி வாழுகிறேனா? அவருக்குப் பிரியமானதைச் செய்கிறேனா? அல்லது, என் சுயவிருப்பமே எனக்கு முதன்மையானதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முழுமையும் அவருடையதே!

பெப்ரவரி

# 7

சனி

வேதவாசிப்பு: அப்போஸ்தலர் 5:1-10

**'இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள்...' லூக்கா 21:3**

"எமக்குள்ள அனைத்துமே தேவனுடையது; அவருடைய கையில் இருந்து நாம் பெற்றுக்கொண்டது" என்ற உணர்வு எமக் குண்டா? அப்படி ஓர் உணர்வு எமக்குள் இருக்குமாயின், அனைத்துக்கும் நான் தேவனுக்குக் கணக்கொப்புவிக்கவேண்டிய ஒரு பொறுப்பாளி என்ற உணர்வு தானாகவே வந்துவிடும், கூடவே அதைக் குறித்த பயமும் உண்டாகும்.

அனனியா, சப்பீராள் இருவரது காணிநிலங்களும் அவர்களுக்கே சொந்தம். அதை விற்கவும், அதில் ஒரு பங்கை எடுக்கவும், கொடுக்கவும் முழு உரிமையும் அவர்களுக்கு இருந்தது. ஆனால் அவர்கள் செய்தது என்ன? நிலம் முழுவதையும் விற்று, அதில் ஒரு பங்கை தமக்கென வைத்துக்கொண்டு, விற்றது இவ்வளவுக்கும்தான் என்று சொல்லி, மிகுதியை தேவனுக்காகவே முழுவதையும் கொடுப்பதுபோல நடித்தார்கள். அதனாலேயே அவர்கள் தேவனை வஞ்சித்தார்கள். நாமும்கூட எல்லாவற்றையும் தேவனுக்கு அர்ப்ப ணித்துவிட்டோம் என்று சொல்லுவோம். ஆனால் எமது ஆசை, எமது சித்தம், எம்முடையது என்று சிலவற்றைப் பிடித்து வைத்துக்கொண்டிருப்போம்.

"எதை நாம் கொடுக்கிறோம்" என்று தேவன் கணக்குப் பார்க்கிறவர் அல்ல. எப்படியான உள்ளத்தோடு கொடுக்கிறோம் என்பதையே பார்க்கிறார். இரண்டு காசு போட்ட ஏழை விதவையின் விடயத்தில், அவள் போட்ட தொகை மற்றவர்கள் பார்வையில் மிகவும் குறைந்ததாக இருக்கலாம். ஆனால் அவளைப் பொறுத்தமட்டில் அது மிகப் பெரிய ஒன்று. அவள் தன்னிடம் உள்ள அனைத்தையுமே போட்டுவிட்டாள். இவள் மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிக மாய்க் கொடுத்தாள் என்றார் ஆண்டவர். அவளது காணிக்கை தேவ பார் வையில் பெரிதாய்க் காணப்பட்டது. காரணம், தனக்குரியதை மனப்பூர்வமாய்க் கொடுத்துவிட்டாள். பணமானாலும் சரி, நேரமானாலும் சரி நாம் எம்மிடம் இருப்பதையே தேவனுக்குக் கொடுக்கிறோம். கொடுப்பதை முழுவிருப்பத்தோடு நாம் கொடுக்காவிட்டால் அதனால் என்ன பயன்?

எதைக் கொடுக்கிறோம், எவ்வளவாகக் கொடுக்கிறோம் என்பது முக்கி யம்; ஆனால், எவ்வித மனநிலையில் கொடுக்கிறோம் என்பது அதைவிட முக்கி யம். எதுவானாலும், தேவன் எனக்குத் தந்ததிலிருந்தே அவருக்குக் கொடுக்கி றேன் என்று எண்ணினால் தவறு விடமுடியாது, நாம் கொடுத்துத்தான் தேவன் தம் பணியை நடத்தவேண்டும் என்பதல்ல. ஆனால், நாம் கொடுக்கும்போது தேவன் நம்மில் மகிழ்ந்திருக்கிறார். பணம், பொருள், நேரம் மாத்திரமல்ல, எம் முழுமையையும் நாம் தேவனுக்கென்றே கொடுத்துவிடுவோமா!

சிந்தனைக்கு:

எனக்காக தம்மை முழுமையாகக் கொடுத்த ஆண்டவரிடத்தில் இதுவரை நான் உண்மையாய் நடந்திருக்கிறேனா? அல்லது, அனனியா, சப்பீராள்போல சிலவற்றை ஒளித்துவைத்து பொய்யாய் நடந்திருக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்சை அன்பின் அடையாளம்

பெப்ரவரி

**8**

ஞாயிறு

வேதவாசிப்பு: எபிரேயர் 12:5-13

**'எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாய் இருப்பீர்களே.' எபிரெயர் 12:8**

ஒரு தந்தை தனது காரியாலய வேலைகளைச் செய்து கொண்டிருந்தபோது, அவரது மகன் அருகிலிருந்து விளையாடிக்கொண்டிருந்தான். அவனது விளையாட்டுப் பொருட்கள் அவனுக்கு அலுப்புத்தட்டவே, மேசையிலிருந்து பென்சிலை எடுத்தான். பின்னர் பேனாவை எடுத்தான். மீண்டும் மேசைமீதிருந்த சிறிய கத்தியை எடுத்தான். தந்தையார் உடனே பாய்ந்து அதைப் பறித்துக்கொண்டார். உடனே மகன் அது வேண்டுமென்று அடம்பிடித்தான். தந்தை எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. கடைசியில் தந்தையிடம் இரண்டு அடி வாங்கினான் மகன். இதைத் தண்டனை என்பதா? கண்டிப்பு அல்லது சிட்சை என்பதா? சிட்சை என்பதே பொருந்தும். இங்கு தந்தை மகனுக்கு ஏன் கத்தியைக் கொடுக்கவில்லை என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும்.

இதேபோல எம் பரலோக தந்தையும் எம்மை சிலவேளைகளில் சிட்சிக்கிறார். அவை எமது நன்மைக்கும், எமது பிரயோஜனத்துக்குமே தவிர நம்மில் அவர் பிரியமற்றவர் என்பது அதன் அர்த்தமல்ல. நாம் அவருடைய பிள்ளைகள்; அப்படியே என்றென்றைக்கும் நாம் அவருக்குப் புத்திரராய் இருக்கவேண்டும் என்பதற்காகவே அப்பப்போ அவர் நம்மைச் சிட்சிக்கிறார்.

தேவனுடைய சிட்சை என்பது எது என்று நாம் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். சிலவேளைகளில் நாமாகவே ஏதாவது தவறு செய்துவிட்டு, அதனால் ஏற்படும் விளைவை, தேவசிட்சை என்றோ, அவர் என்னைத் தண்டிக்கிறார் என்றோ கூறமுடியாது. ஆகையால் இதைக் குறித்து நாம் மிகவும் கவனமாய் நிதானித்து புரிந்துகொள்ளவேண்டும். ஆகவே, பாதகமான காரியங்கள் நேரிடும்போது, நேரடியாகவே ஆண்டவரில் பொறுப்பைப் போடாமல், நம்மை நாம் ஆராய்ந்து, நமது தவறுகளைச் சரிப்படுத்தவேண்டியது நமது பொறுப்பு. அதற்கும் ஆண்டவர் நமக்குப் பெலன் தருவார்.

தேவ்ன் நம்மைச் சிட்சிக்கும்போது அது எமக்கு நன்மையே பயக்கும், எம்மை நல்ல முறையில் உருவாக்கும். தேவசிட்சைக்கு நாம் அஞ்சி நடந்தால் நாம் எப்போதும் அவர் பிள்ளைகளாய் இருக்கலாம். சிட்சையை நாம் உதாசீனம் செய்தால், நாம் தேவனுக்கு விரோதமான பிள்ளைகளாகி அழிந்து போவோம். சிட்சையானது தற்போது துன்பமாகக் காணப்பட்டாலும் பிற்காலத்தில் அது நன்மைக்கு ஏதுவாகவே இருக்கும். தேவசிட்சைக்கு உட்பட்டாலும், அதை உணர்ந்து சீராக நடப்போம். எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை எமக்குக் கிடையாதிருந்தால், நாம் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாய் இருப்போமே.

சிந்தனைக்கு:

**ஆண்டவர் என்னைச் சிட்சிக்கும்போது, அது அவருடைய நேசத்தையே வெளிப்படுத்துகிறது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியுமா? இதுவரை என் வாழ்வில் அதை அனுபவித்ததை எண்ணிப்பார்த்து நன்றி சொல்லலாமே!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கண்கள்

பெப்ரவரி

**9**

திங்கள்

வேதவாசிப்பு: 2பேதுரு 1:1-10

**'....சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுத லையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். இவைக ளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை.' 2பேது.1:10**

"நான் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட ஆரம்ப காலத்திலே, வெளிப்படுத் தல் விசேஷத்திலிருந்து இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்த வேதப் படிப்பை ஒரு பிரசங்கியார் மூலமாகத் தொடர்ந்து படித்து வந்தேன். திடீரென ஒருநாள், இயேசு வந்துவிட்டதாகவும், அநேகரைக் காணவில்லை என்றும், மக்கள் அங்கும் இங்குமாகத் தேடிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதாகவும் கனவு கண்டேன். அப்பொழுது அந்தக் கனவில் நான் எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கிறேன்; ஆனால் நான் அதையிட்டு சற்றேனும் கவலைப்படாமல், இரண் டாம் வருகையைக் குறித்துப் பிரசங்கம் எடுத்த அந்தப் பிரசங்கியார் இருக்கி றாரோ, அல்லது எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டாரோ எனப் பார்க்க ஆவலோடு அவர் வீடு நோக்கி ஓடுகிறேன்." இப்படி ஒருவர் தன் கனாவைப் பகிர்ந்துகொண் டார். இதுதான் எம் எல்லோருக்கும் இருக்கும் ஒருவகை வியாதி. எம்மை அழைத்த தேவன் எம் ஒவ்வொருவர் கையிலும் எத்தனையோ பொறுப்புகளைத் தந்திருக்கிறார். நாம் அவற்றைச் சரிவரச் செய்யாமல், மற்றவர்கள் தங்கள் பொறுப்புகளைச் சரிவரச் செய்கிறார்களா என்று பார்ப்பதும், அவர்கள் வாழ்க் கையில் மூக்கை நுழைப்பதுமே தொழிலாகிவிட்டது.

முதலாவது, எமது அழைப்பு என்ன; தேவன் தந்திருக்கும் பொறுப்பு என்ன என்பதை இனங்கண்டு அதை ஒழுங்காகச் செய்யக் கற்றுக்கொள்ளு வோம். எமது பொறுப்புகளை நாம் சரிவரச் செய்கிறோமா என்பதைக் குறித்து எமது கண் எப்போதும் எம்மீதே நோக்கமாய் இருக்கட்டும். எமது கையில் தேவன் கொடுத்திருப்பது ஒரு பாரிய பொறுப்பாக இருக்கலாம், அல்லது ஒரு சிறிய பொறுப்பாக இருக்கலாம். அது எதுவாக இருப்பினும் அதைச் செவ்வனே செய்வோம். "உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாய் இருந்தாய்; உன்னை அநேகத்தில் அதிகாரியாக வைப் பேன். உன் எஜமானின் சந்தோஷத்துக்குள் பிரவேசி" என்று நம்மைப் பார்த்து ஆண்டவர் கூறுவதைக் கேட்க பிரயாசப்படுவோம். எங்கள் கையில் அவர் தந்திருக்கும் பொறுப்புகள் என்ன என்பதை உட்கார்ந்திருந்து பட்டியலிட்டுப் பார்ப்போம். அப்போது நமக்குரிய பொறுப்புகளைச் செய்யவே நமக்கு நேரம் போதாதிருப்பது தெரியும். எமது கையில் தேவன் தந்திருக்கும் பொறுப்பு களுக்கு நாம் ஒருநாள் அவருக்குக் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். இப்படியி ருக்க மற்றவர் அலுவலில் தலையிடுவது எப்படி? எனவே எப்பொழுதும் எங்கள் கண் எங்கள் மீதே இருக்கட்டும். எங்கள் அழைப்பை உறுதியாக்குவோமாக.

சிந்தனைக்கு:

என்னுடைய அழைப்பு என்ன, அதை நான் என்ன செய்கிறேன் என்பதை அமர்ந்திருந்து சிந்தித்து, தவறுகளைச் சரிப்படுத்துவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
10
செவ்வாய்

## கீழ்ப்படிவே முக்கியமானது

வேதவாசிப்பு: 1சாமுவேல் 15:13-22

**'கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ?' 1சாமுவேல் 15:22**

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் ஒருவர் தனது காரியாலயத்திலிருந்து கடதாசித் தாள்களைக் கட்டுக்கட்டாக எடுத்துச் செல்வதை சக ஊழியர்கள் அவதானித்தனர். இதைக் குறித்து அவரிடம் கேட்டபோது, "ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் நான் சுவிசேஷ ஊழியம் செய்யப்போவதுண்டு. அதற்குத் துண்டுப் பிரசுரம் அடிப்பதற்காகவே இதனைக் கொண்டு போகிறேன்" என்று தயக்கமின்றி சொன்னாராம். அதாவது, 'இது களவுதான் என்றாலும், தேவனுக்காகவே எடுக்கிறேன்' என்பதையே அவர் மறைமுகமாகச் சொன்னார். ஆகையால் அது களவாக இருக்கமுடியாது, அப்படி இருந்தாலும் தேவன் அதை மன்னித்துவிடுவார் என்பது அவரது எண்ணம்.

இதைத்தான் சவுலும் கூறினான். அமலேக்கியரின் சகலவற்றையும் தேவன் முற்றாக அழிக்கச் சொன்னபோது, அவற்றில் சில முதற்தரமான மிருகஜீவன்களை அழிக்க மனதில்லாமல் கொண்டுவந்து, அதை ஜனங்கள்தான் கொண்டுவந்தார்கள்; அதுவும் சாமுவேலின் தேவனுக்கே பலியிடுவதற்காக அவர்கள் கொண்டுவந்தார்கள் என்றும் சொன்னான். அதற்கு சாமுவேலின் பதில், "கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாய் இருக்குமோ?" எனவே எது முக்கியம் பலியா? கீழ்ப்படிவா?

சவுலைப்போல நொண்டிச்சாட்டுகள் சொல்லுவதில் நாமும் தயங்குவதில்லை. தேவன், தமது வார்த்தைக்குக் கீழ்ப்படிவதையே முதலாவதாக விரும்புகிறார். அதுவே அவர் பார்வையில் முக்கியமானதாகத் தெரிகிறது. நாமோ தேவனுக்காக எத்தனை எத்தனை காரியங்களைச் செய்ய முன் நிற்கிறோம். ஆனால், அவர் வார்த்தைக்குக் கீழ்ப்படிவதற்கு மாத்திரம் பின் நிற்கிறோம். எமது கீழ்ப்படிவை மற்றவர்கள் கவனிக்கிறார்கள். நாம் பேசுவது ஒன்று செய்வது ஒன்று என்றால் யார் அதைக் கேட்பார்கள்? பேச்சும், செயலும் ஒன்றுடன் ஒன்று ஒவ்வாததாய் இருப்பின் யார் அதைப் பின்பற்றுவார்கள்? அது நமது தேவனுடைய நாமத்திற்கும் அபகீர்த்தியையே கொண்டுவரும்.

இயேசுவானவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டும் தனது மரணபரியந்தம் பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தார். (பிலி.2:8.) அவ்விதமான ஒரு கீழ்ப்படிவையே ஆண்டவர் எம்மிடமும் எதிர்பார்க்கின்றார். கீழ்ப்படிவு ஒன்றையே தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார் என்பதை அறிந்திருந்தும், தேவனுக்குக் கீழ்ப்படிய முடியாதபடி நாம் அடிக்கடி தவறிப்போவது ஏன்?

சிந்தனைக்கு:

தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அதனால் ஏற்பட்ட விளைவுகளையும், கீழ்ப்படியாமற்போனதினால் ஏற்பட்ட விளைவுகளையும் சிந்திப்போமா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தில் வைத்து வைத்து...

பெப்ரவரி
11
புதன்

வேதவாசிப்பு: சங்கீதம் 119:145-152

**'நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்.'** சங்கீதம்119:11

யுத்த சூழலில் அகப்பட்டிருந்த ஒருவர், தனது அனுபவங்களை சாட்சியாகப் பகிர்ந்துகொண்டார். ஒரு ஞாயிறு ஆராதனை முடிந்து அவர் புறப்பட்டபோது, ஒரு சகோதரி கடதாசித் துண்டொன்றில் ஒரு வேதவசனத்தை எழுதி, "இதை உங்களிடம் கொடுக்கும்படிக்கு நான் உள்ளத்தில் ஏவப்பட்டேன்" என்று சொல்லிக் கொடுத்தாராம். போகிற அவசரத்தில் அதை வாங்கி பாக்கற்றுக்குள் வைத்துக்கொண்டு இவர் போய்விட்டார். வழியில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு 24 மணிநேரம் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். தூர இடத்தில் வசிக்கும் தனது குடும்பத்தினரை நினைத்து மிகவும் மனமுடைந்த அவர் தற்செயலாக சேட் பாக்கற்றுக்குள் கையை விட்டார். அப்போது அந்தக் கடதாசி அகப்பட்டது. எடுத்து வாசித்தார். அவர் உள்ளத்தைத் திடப்படுத்திய அந்த ஜீவனுள்ள வார்த்தைதான், அவர் தன் குடும்பத்துடன் வந்து சேரும்வரைக்கும் அவரை ஆறுதல்படுத்திப் பெலப்படுத்தியது என்று தனது அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார் அவர்.

சங்கீதக்காரரும் இதைத்தான் கூறுகிறார். **'நான் உமக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடிக்கு உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்.'** பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதியபோது, **'வேதவாக்கியங்கள், உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனம் உள்ளவைகளாய் இருக்கிறது'** (2தீமோ.3:16,17) என்று கூறுகிறார். **'கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது'** (சங்.19:7) என்று தாவீது பாடியுள்ளார்.

வேத வசனங்களை நாம் வாசித்தால் மட்டும் போதாது. அவை நமது மூச்சோடு கலக்கவேண்டும். அவற்றில் சிலவற்றையேனும் மனனம் செய்து வைத்தல் நல்லது, எமக்குச் சோதனையும் வேதனையும் வரும் வேளைகளில், அவ்வசனங்கள் எம்மைத் தேற்றும். "நான் வியாதிப்படுக்கையில் இருந்தபோது வேதத்தை வாசிக்க முடியவில்லை. அந்த நேரத்தில் நான் முன்னர் மனனம் செய்திருந்த, என் ஞாபகத்தில் வந்த சில வசனங்களையே எனது தியானமாகக் கொண்டு தியானித்தேன்" என்று தன் சாட்சியை ஒரு சகோதரி பகிர்ந்துகொண்டார். வேதவசனங்கள் எமது தியானமாய் இருக்கவேண்டும். என் சரீரமானது, ஆகாரத்தைப் புசிக்க ஆவலுடன் வாஞ்சிப்பதுபோல, என் ஆத்துமா தேவனுடைய வார்த்தைகளைத் தியானிக்க, ஆவலுடன் வாஞ்சிக்கவேண்டும். நாம் வாஞ்சிப்போமானால் அதை மனனம் செய்ய தேவன் ஞாபகசக்தி தருவார்.

சிந்தனைக்கு:

அழிந்துபோகும் நமது சரீரமா? ஆத்துமாவா? எது முக்கியம்? ஆத்துமாவுக்கு பெலனாயிருக்கிற எத்தனை வேதவாக்கியங்கள் என் மனதிலே பதிந்திருக்கிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன்மையானது தேவனுக்கே!

பெப்ரவரி

**12**

வியாழன்

வேதவாசிப்பு: மல்கியா 1:6-14

**'...பழுதுள்ளவைகளை நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தாமலும், அவைகளாலே கர்த்தருக்குப் பலிபீடத்தின்மேல் தகனபலியிடாமலும் இருப்பீர்களாக.' லேவியராகமம் 22:22**

பிரபல்யமான ஆலயமொன்றின் பிரசங்கபீடத்தில் நின்றிருந்த குருவானவர், "தயவுசெய்து கிழிந்த தாள்களையும் செல்லாக் காசுகளையும் காணிக்கைப் பெட்டியில் போடவேண்டாம்" என்று கூறினார். இதைக் கேட்டபோது மிகவும் வெட்கமாகவும், துக்கமாகவும் இருந்தது.

"நான் பிதாவானால், என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே? ஊனமானதை உங்கள் அதிபதிக்குக் கொடுத்தால் அவன் அதில் பிரியப்படுவானோ? அப்படியானால் ஏன் எனக்கு ஊனமானதைச் செலுத்துகிறீர்கள்?" என்று இன்று தேவன் நம்மைப் பார்த்துக் கேட்டால் நமது பதில் என்ன? தேவனுக்கு முதன்மையானதைக் கொடுக்கப் பழகிக்கொள்வோம்.

அன்று ஆபேல் தன் மந்தையின் தலையீற்றுக்களிலும், அவைகளில் கொழுமையானவைகளிலும் தேவனுக்குக் காணிக்கை கொண்டுவந்தான். தேவன் அதை அங்கீகரித்தார் என்று வாசிக்கிறோம். (ஆதி.4:3,4) ஆபேல் பார்த்துப் பார்த்து சிறந்ததைத் தெரிவு செய்து தேவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்தான். தேவனுக்கு அவனுடைய மனநோக்குப் பிரியமாயிருந்தது.

நாம் தேவனுக்குக் கொடுப்பவை எவை? கீரை விற்பவன் வேண்டாம் என்று திருப்பித்தந்த கிழிந்த பத்து ரூபாய் நோட்டையா? இல்லாவிட்டால் பிச்சைக்காரனே வேண்டாம் என்று சொல்லிப்போகும் ஐந்து ரூபாய் சில்லறையையா? சூப்பர் மார்க்கற்றுக்குப் போனால் அதிகூடிய மதிப்புள்ள தாள்களை கொடுக்கிறோம். ஆனால் ஆலயத்தில் காணிக்கைப் பை வந்ததும், பாக்கற்றுக்குள்ளும், கைப்பைக்குள்ளும் கையைவிட்டு சில்லறை ஏதும் அகப்படுமா என்று தேடித்தேடி எடுத்துக் கொடுக்கிறோம். அருமையானவர்களே, எமது நிலைமையைக் குறித்து நாம் வெட்கப்பட்டு எம்மைத் திருத்திக்கொள்ளவேண்டும்.

நாம் கொடுக்கும் காணிக்கையில் ஆண்டவர் வாழுகிறவர் அல்ல. அவர் அண்டசராசரங்களையும் படைத்து அவற்றை ஆளுகை செய்யும் உன்னதமான கர்த்தர். அவருக்கு நாம் கொடுக்கும் காணிக்கை தேவையற்றது. ஆனால் நாம், அவர்மீது கொண்டுள்ள அன்பின் அடையாளமாகவே கொடுக்கிறோம். அப்படியானால் தேவன் நம்மீது வைத்திருக்கும் அன்பை நாம் ஏன் சிந்திப்பதில்லை? எமக்காகத் தமது ஜீவனையே கொடுத்தாரே ஆண்டவர்! இந்த தேவனில் நாம் எவ்வளவு அன்பு வைத்திருக்கவேண்டும்! அந்த அன்பு உண்மையானால் நமக்குள்ளதில் முதன்மையானதைக் கொடுப்போம்!

சிந்தனைக்கு:

உனக்காக நான் மரித்தேனே, எனக்காக நீ என்ன செய்தாய் என்ற பாடலைப் பாடும்போது நமது மனஉணர்வு என்ன? இதுவரை நாம் கொடுத்த கொடையையும், கொடுத்த மனநிலையையும் சிந்தித்துப் பார்ப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...மிஞ்சி எண்ணாதிருங்கள்.



வேதவாசிப்பு: லூக்கா 18:9-14

**'கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்.' யாக்கோபு 4:10**

ஆண்டவரை ஏற்றுக்கொண்டு அவருக்காக வாழ ஆரம்பிக்கும்போது, நாம் அவரது சமுகத்தை அதிகமாகத் தேடுவோம். ஜெபத்தில் அநேக நேரத்தைச் செலவிடுவோம். வேதத்தை ஆர்வத்தோடு படித்துத் தியானிப்போம். சந்திப்போருக்கெல்லாம் ஆண்டவரைக் குறித்துச் சொல்லுவோம். இவ்விதமான ஒரு தாகம், ஆவல், வேகம் எம்மிலே தோன்றும். ஆனால், நாளடைவில் அவைகள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய ஆரம்பிக்கும். அதன்பின் "நான் ஆண்டவருக்காக அதைச் செய்தேன், இதைச் செய்கிறேன், இப்படிச் செய்யப் போகிறேன்" என்று நம்மை நாமே திருப்திப்படுத்துகின்ற ஒரு வாழ்வுக்குள் நாம் சுலபமாக வந்துவிடுவதுண்டு.

இன்றைய வாசிப்புப் பகுதியிலே, தங்களை நீதிமான்கள் என்று எண்ணி, மற்றையோரை அற்பமாக எண்ணுகின்ற சிலரைக் குறித்து இயேசு சொன்ன ஒரு உவமையை வாசித்தோம். ஜெபிப்பதற்கு நாம் தேவசமுகத்திற்குப் போகுமுன்பே, எம்மைக் குறித்து தேவன் சகலவற்றையும் அறிந்திருக்கிறார் என்பதை நாம் மறக்கக்கூடாது. ஆனால், இந்தப் பரிசேயனோ தன்னைக் குறித்து அளவுக்கு மிஞ்சி எண்ணினது மாத்திரமல்ல, தான் செய்த காரியங்களைத் தேவனுக்கு முன்பாகப் பட்டியல் போட்டுச் சொல்லிக் காட்டுகிறான். இவையெல்லாம் தேவனுக்குத் தெரியாது என்று எண்ணியதுபோல் அவற்றைத் தேவனுக்குத் தெரியப்படுத்துகிறான். ஆனால் ஆயக்காரனோ, "தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என மிகச் சுருக்கமான ஒரு ஜெபத்தை ஏறெடுக்கிறான். இவர்களில் நாம் யார்?

நமது வாழ்வும், நாம் தேவனுக்காய் செய்யும் காரியங்களும் தேவனுடைய சமுகத்தில் குப்பையும், தூசியும் போன்றது. அதையிட்டு எந்தப் பெருமையும் நாம் கொள்ளுவதற்கில்லை. இன்னும் என்னவெல்லாம் நாம் ஆண்டவருக்காய் செய்யலாம், எப்படி அவர் ஊழியத்தை விருத்தியாக்கலாம் என்ற எண்ணமே எமக்குள் எப்போதும் இருக்கவேண்டுமே தவிர, அவருக்காக, அவருடைய ஊழியத்திற்காக நாம் செய்யும் காரியங்களைக் குறித்து நாம் பெருமை கொள்ள ஒன்றுமேயில்லை. கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்பட்டால் அவர் எம்மை உயர்த்துவார். நம்மைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி நாம் எண்ணலாகாது. எமது வாழ்வைக் குறித்து நாம் கூறும் சாட்சியல்ல; மற்றவர்கள் எமது வாழ்வைக் குறித்துக் கூறும் சாட்சியே வலிமையுள்ள சாட்சியாக இருக்கும். எந்த நிலையிலும் நம்மைத் தாழ்த்தி வாழக் கற்றுக்கொள்வோம். தாழ்மையோடு சேவைச் செய்ய எம்மை அர்ப்பணிப்போம்.

சிந்தனைக்கு:

**சீஷரின் கால்களைக் கழுவி தாழ்மையின் ஊழியத்தைக் கற்றுத்தந்த ஆண்டவரின் வழியிலே நான் நிற்கிறேனா என நம்மை ஆராய்ந்து பார்த்து, பெருமையான நினைவுகளை அழித்து, நம்மைத் தேவ கரத்தில் ஒப்புவிப்போமாக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்கிரகத்தை உண்டுபண்ணாதீர்கள்!

பெப்ரவரி
**14**
சனி

வேதவாசிப்பு: 2இராஜாக்கள் 17:7-18

**'தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்த மேது?' 2கொரி.6:16**

பழைய ஏற்பாட்டில் பல இடங்களிலும் கர்த்தர், "நானே உங்கள் தேவனாகிய கர்த்தர், என்னையல்லாமல் உங்களுக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். நீங்கள் எந்த ஒரு விக்கிரகத்தையாவது உண்டாக்கவோ நமஸ்கரிக்கவோ வேண்டாம்" என்று அடிக்கடி இஸ்ரவேலை எச்சரித்ததைக் காண்கிறோம். இதற்கு அவர்கள் கீழ்ப்படிந்ததும் உண்டு. கீழ்ப்படியாமல், தேவகோபாக்கினைக்கு முகங்கொடுத்ததும் உண்டு.

புதிய ஏற்பாட்டில் பவுல், '**தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே**' என்று கொரிந்தியருக்கு எழுதுகிறார். நாம் தேவனுடைய ஆலயமாயிருந்தால், தேவன் எமக்குள் வாசமாயிருப்பது உண்மையாக இருந்தால், அந்த ஆலயத்தில் விக்கிரகங்களுக்கு இடமிருக்க முடியுமா?

விக்கிரகம் என்பது பொன்னினாலும், வெள்ளியினாலும் வார்க்கப்பட்ட ஒரு சிலை மாத்திரமல்ல, எமக்கும் தேவனுக்கும் இடையில் தடையாக இருக்கும் எதுவாக இருந்தாலும், அல்லது தேவனையும் நம்மையும் பிரித்துப்போடுகின்ற எதுவாக இருந்தாலும் அதுவும் விக்கிரகமே. தேவனுக்குக் கொடுக்கும் முதலிடத்தை வேறு ஏதாவது எடுக்குமேயானால் அதுவும் விக்கிரகமே. இப்போது எமது வாழ்வைச் சற்றே ஆராய்ந்து பார்ப்போம். நாம் ஏதாவது விக்கிரகத்தை உருவாக்கி வைத்திருக்கிறோமா? ஏதாவது எம்மைத் தேவனிடம் இருந்து பிரிக்கின்றதா? தேவனுக்கு நாம் கொடுக்கவேண்டிய முதலிடத்தை வேறு எதுவாவது பிடித்துக்கொண்டிருக்கிறதா?

பலதடவைகளில் நாம் செய்யும் காரியங்களே எமக்கும் தேவனுக்கும் இடையில் விக்கிரகம்போல் அமைந்துவிடுகிறது. தேவனுக்காய் இதைச் செய்வோம், அதைச் செய்வோம் என்று ஓடித்திரிவோம். ஆனால் தேவனோடுள்ள தனிப்பட்ட உறவாகிய ஜெபம், தியானம் என்பவற்றைக் கவனிக்காது விட்டுவிடுவோம். இதனால் தேவனோடுள்ள எமது உறவு பாதிக்கப்படுவதோடு மாத்திரமல்ல, நாம் தவறிப்போகவும் இது வழிவகுக்கும். "உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் சொன்னோம், பிசாசுகளைத் துரத்தினோம், வியாதிகளைக் குணமாக்கினோம் என்று சொல்லுகிறவர்களுக்கு பரலோக ராஜ்ஜியத்தில் இடமில்லை; பிதாவின் சித்தப்படி செய்கிறவர்களுக்கே அங்கு இடமுண்டு" என்று ஆண்டவர் கூறியதை நினைவுபடுத்தி (மத்.7:21,22) இந்த தியான வேளையிலே நமக்கும் ஆண்டவருக்கும் இடையே இருக்கும் விக்கிரகங்களை அடையாளங் கண்டு அவற்றை அழித்துவிடுவோமாக.

சிந்தனைக்கு:

முன்பின் சிந்தியாமல் என்னுடைய எந்தக் காரியமாவது, விருப்பமாவது விக்கிரகமாக எழுந்து என்னையும் ஆண்டவரையும் பிரித்து விடுகிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த ஒரு குறை?

பெப்ரவரி
**15**
ஞாயிறு

வேதவாசிப்பு: மாற்கு 10:17-22

**'அவர்கள் கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள்.' யாத்திராகமம் 24:7**

அவன் ஒரு வாலிபன். நித்தியஜீவனைச் சுதந்தரிக்க ஆசையுள்ளவன். சிறுவயதிலிருந்து சகல கற்பனைகளையும் கைக்கொண்டுவந்த ஒருவன். அதேநேரம் ஐசுவரியத்திலும் பற்றுதல் வைத்திருந்ததையும் அவதானிக்கலாம். அவனைப் பார்த்தது இயேசு, “உனது ஐசுவரியத்தை விற்று தரித்திரருக்குக் கொடுத்துவிட்டு, உன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றி வா”. என்றார். நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ள விரும்பியவனுக்குத் தனது ஐசுவரியத்தை இழக்க முடியவில்லை. ஆகவே அவன் துக்கத்தோடே திரும்பிப் போய்விட்டான்.

அந்த வாலிபனைப்போலவே நாமும் சிலசமயம் நடந்துகொள்கிறோம். நாமாக தேவனுக்குப் பல காரியங்களைச் செய்ய முன்வருவோம். பல காரியங்களை தேவனுக்காக விட்டுக்கொடுக்கவும் தயங்குவதில்லை. தேவனுடைய வார்த்தைகளில் பலவற்றுக்கு நாம் கீழ்ப்படிந்தும் இருப்போம். ஆனால் தேவன் எம்மோடு பேசி உணர்த்திய ஒரு காரியத்தை மட்டும் செய்யமுடியாது பின் வாங்கிவிடுவோம். அந்தக் காரியத்திற்குக் கீழ்ப்படியாது அதை மாத்திரம் எமது வாழ்வில் தவிர்த்துக்கொள்ள முயலுவோம். “இன்று உன்னிடத்தில் ஒரு குறையுண்டு” என்று தேவன் எம்மைப் பார்த்துக் கூறுகிறார். இதை நானும், நீங்களும் சரிசெய்துகொள்ள ஆயத்தமா என்பதைச் சற்றே சிந்திப்போம். நாம் தேவனுக்காகப் பல காரியங்களைச் செய்யலாம். ஆனால் அதைவிட முக்கியமானது கீழ்ப்படியும்படி அவர் எம்மிடத்தில் கூறுகின்ற அந்த ஒரு காரியமே. நாம் அதற்குக் கீழ்ப்படிய ஆயத்தமாய் இருக்கிறோமா?

ஆண்டவர் சிலுவையின் மரணபரியந்தம் பிதாவின் சித்தத்திற்கு மாத்திரமே கீழ்ப்படிந்தார். அவருக்கும் கீழ்ப்படிவை உடைத்துப்போடக்கூடிய கஷ்டமான பலவேளைகள் வந்தது. ஆனாலும் அவர் கீழ்ப்படிய மறுக்கவில்லை. கெத்செமனே தோட்டத்தில் உள்ளம் உடைந்து, நொறுக்கப்பட்டவராக இயேசு மனமுடைந்து ஜெபிப்பதைப் பார்க்கிறோம். “இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும், ஆயினும் என்னுடைய சித்தப்படியல்ல, உம்முடைய சித்தப்படியே ஆகக்கடவது” என்று இயேசு தம்மை ஒப்புக் கொடுத்து ஜெபித்தார். இவ்விதமாக ஆண்டவர் தமது மரணத்திலும் கீழ்ப்படிவை நமக்குக் கற்றுக்கொடுத்திருக்க, நாம் சிறிய சிறிய காரியங்களிலே அவருக்குக் கீழ்ப்படிய மறுக்கலாமா? அன்று இஸ்ரவேல் தாமாகவே கீழ்ப்படிவோம் என்றனர். ஆனால் கீழ்ப்படிவிலே அவர்கள் சறுக்கிவிட்டனர். இன்று நாம் சற்றே சிந்தித்துத் தீர்மானம் பண்ணுவோம். கீழ்ப்படிய முடியாதபடி, நமது சிலுவையை நாம் சுமந்து செல்லமுடியாதபடி நம்மைத் தடுப்பது எது?

சிந்தனைக்கு:

தேவன் நமக்கு உணர்த்திய எந்தக் காரியத்திற்கு, நாம் இன்னமும் கீழ்படியாது இருக்கிறோம்? நம்மிடத்தில் இருக்கின்ற அந்த ஒரு குறை என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றத்தை உணர்த்துதல்

பெப்ரவரி
**16**
திங்கள்

வேதவாசிப்பு: மத்தேயு 18:10-18

**'எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.' மத்தேயு 6:12**

"மன்னிப்பு" என்பது ஆண்டவராகிய இயேசு தமது வாழ்க்கையிலும், வார்த்தையிலும் எமக்குக் கற்பித்துக்கொடுத்த ஒரு முக்கிய பாடமாகும். அவரைப் பின்பற்றும் நாம் இதை எவ்வளவு தூரம் கடைப்பிடிக்கிறோம் என்பது கேள்விக்குறிதான். எமக்கு விரோதமாகக் குற்றம் செய்வோரை மன்னிப்பது மிகவும் முக்கியம்; அதேபோல, அவர்கள் செய்யும் குற்றங்களை அவர்களுக்கு உணர்த்தி அவர்களை நல்வழிப்படுத்துவதும் முக்கியமானதொரு பணி. எமக்கு விரோதமாக ஒருவர் குற்றம் செய்துவிட்டால் நாம் அவரைத் தூற்றித் திரிவதுண்டு. அவரைக் குறித்து பலருக்கும் புகார் செய்வதுண்டு. இவற்றை விட்டுவிட்டு, அவரை நல்வழிப்படுத்துவது நல்லதல்லவா. அதை எப்படிச் செய்யலாம் என்று இன்றைய நாளில் சற்றே தியானிப்போம்.

ஒருவர் எமக்கு விரோதமாகக் குற்றம் செய்திருந்தால் அவரது தவறை அவருக்கு உணர்த்தும் பொருட்டு, அவரைத் தனிமையில் அழைத்துச் சென்று அவரது குற்றத்தை உணர்த்தவேண்டும். மாறாக, மற்றவர் மத்தியில் அவரை விசாரிப்பது நல்லதல்ல. அவர் தன்னுடைய தவறை ஏற்க மறுத்தால், இரண்டொருவரை அழைத்துச் சென்று அவருடன் பேசவேண்டும். அதற்கும் மறுத்தால் சபைக்கு அறிவித்து விசாரிக்கவேண்டும். இப்படியாக ஆண்டவர் தமது போதனையில் நமக்குக் கற்றுத் தந்துள்ளார். இதை நாம் கடைப்பிடிக்க முயலுவோம்.

"எமது கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" என்று ஜெபிக்கும்படி ஆண்டவர் எமக்குச் சொல்லிக்கொடுத்துள்ளார். தேவனுடைய சமுகத்தில் நாம் ஜெபிக்கச் செல்லும்போது எமக்கு விரோதமாகக் குற்றம் செய்தோரை நாம் மன்னிக்கத் தயாராக இருக்கிறோமா? என்றும் எம்மை ஆராய்ந்து பார்ப்போமாக. இயேசு சிலுவையில் சொன்ன ஏழு வார்த்தைகளில், மரியாளுக்கும் யோவானுக்கும் கூறிய ஆறுதல் வார்த்தையும், தமது பணியின் நிறைவேற்றத்தைக் குறிக்கும் வார்த்தையும், பிதாவை நோக்கிக் கதறிய வார்த்தையும், பிதாவிடம் தன் ஆவியை ஒப்புவிக்கும் வார்த்தையும் இருந்தது. ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக "பிதாவே இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்" என்று ஜெபித்த வார்த்தையை சிந்திப்போம். ஒருவரை மன்னிப்பதும், அவர் விட்ட தவறுகளை அன்போடு சுட்டிக்காட்டி அவர் திருந்த வழியமைத்துக் கொடுப்பதும்கூட, ஒரு "ஆத்தும ஆதாயப்பணி" என்றால் அது மிகையாகாது.

இந்தப் பணிக்கு நாம் ஆயத்தமா? நேசிப்பவர்களை நேசிப்பதிலும், நம்மை வெறுக்கிறவர்களை நேசிப்பது நமது ஆத்துமாவுக்கு நல்லதொரு போஷணையாகும்.

சிந்தனைக்கு:

சிலர்பேரிலே இன்றும் நமக்கு மனக்குறை இருக்கலாம். சிலர் விடயத்தில் நமக்குத் தொந்தரவு வேண்டாம் என தள்ளி வைத்திருக்கலாம். எவராயினும் இன்று அவரைக் குறித்து கிறிஸ்துவுக்குள் ஒரு தீர்மானம் எடுக்க முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்தியான வாழ்வு

பெப்ரவரி
**17**
செவ்வாய்

வேதவாசிப்பு: எண்ணாகமம் 11:20-35

**'போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.' 1தீமோத்தேயு 6:6**

பேராசை பிடித்தவர்களைக் குறித்து அநேக கதைகளை நாம் கேள்விப்பட்டிருப்போம். தங்கமுட்டை போட்ட தாராவை வெட்டி எல்லா முட்டைகளையும் ஒரே நேரத்தில் எடுக்க முயன்ற ஒருவனைப் பற்றி ஒரு கதையுண்டு. அதேபோல் நான் தொடுவதெல்லாம் பொன்னாக வேண்டும் என்று வரம் கேட்ட அரசன், சாப்பிடுவதற்காக சாப்பாட்டைத் தொட்டதும், அதுவும் பொன்னானதைக் கண்டு பசியினால் துடித்ததாகவும் ஒரு கதை உண்டு. இக் கதைகளையெல்லாம் அறிந்தும் இன்னமும் போதுமென்கிற மனம் எமக்கு வரவில்லை என்பதும் ஒரு உண்மை.

ஒருமுறை சத்தியவசனக் கலண்டரில் அச்சடிக்கப்பட்டிருந்த ஒரு வாசகம் என் மனதைத் தொட்டது. "திருப்தியுள்ள மனமே மகிழ்ச்சியான வாழ்வின் இரகசியம்" ஆம், அதுபோலவே, "போதுமென்கிற மனதுடனேகூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்" என்று பவுலடியார் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். திருப்தியுள்ள மனம், போதுமென்கிற மனம் இவைகள் சந்தோஷமான வாழ்க்கைக்கு மிகவும் அவசியம். திருப்தியில்லாத மனதில் சந்தோஷம் செத்துவிடும். தேவன் எமக்குத் தந்த நன்மையான ஈவுகளில் நாம் நிறைவு காணவேண்டும்.

உயிர் வாழ உணவு அவசியம். அதற்கேற்ற ஒழுங்கை இஸ்ரவேலருக்குக் கர்த்தர் செய்திருந்தார். ஒரு வேலையும் செய்யாமலே, வானத்திலிருந்து விழுந்த முழுமையான உணவான மன்னாவை அவர்கள் சாப்பிட்டனர். ஆனால், அதற்கும் மேலாக இஸ்ரவேலர் உணவை இச்சித்து முறுமுறுத்தார்கள். தேவன் எவ்வளவு நன்மைகளைச் செய்தும், எவ்வளவு அதிசயமாய் நடத்தியும், அவ்வப்போது அவர்கள் தேவைகளையெல்லாம் சந்தித்தும், அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கியும், எல்லாவற்றையும் ஒரு நொடிப்பொழுதில் மறந்துபோனார்கள் இஸ்ரவேலர். இறைச்சி வேண்டும் என்று அடம்பிடித்தார்கள். அளவுக்கு அதிகமாக, காடைகளைச் சேர்த்துவைக்க முற்பட்டார்கள். ஆனால், நடந்தது என்ன? அவர்கள் கேட்டதை ருசித்துப் புசிக்கும் முன்னரே, இறைச்சி அவர்களுடைய பற்களினால் மெல்லப்படும்போதே இச்சித்தவர்கள் தேவகோபாக்கினைக்கு ஆளானார்கள்.

எமது வாழ்விலும் தேவை, ஆசை இரண்டும் அலைமோதுவது வழக்கம். இவற்றையும் மீறி இச்சைக்கு நாம் இடமளிக்கும்போதுதான் நாம் பிரச்சனைக்குள்ளாகிறோம். தேவைகளை நாம் தேவனிடம் கேட்போம். ஆசைகளை அறிக்கையிடுவோம். இச்சைகளைக் கட்டுப்படுத்தி வாழப் பெலன் கேட்போம். எப்போதும், தேவன் தரும் ஆசீர்வாதங்களில் திருப்திகாண முயலுவோம். தேவன் தாமே அதற்கான பெலனையும், பொறுமையையும் தந்தருளுவாராக.

சிந்தனைக்கு:

இன்று என்னென்ன விடயங்களில் நான் திருப்தியற்றிருக்கிறேன். அது எனக்குத் தேவையானதுதானா, அல்லது ஆசையா, அல்லது நான் இச்சிக்கிற காரியமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் சாகவேண்டும்!

பெப்ரவரி

**18**

புதன்

வேதவாசிப்பு: யோவான் 12:17-26

**'...கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்.' யோவான் 12:24**

மறுபடியும் ஒரு லெந்து காலத்துக்குள் கடந்துவர பெலனும் வாழ்வும் தந்த தேவனை நன்றியோடு துதிப்போமாக. வருடங்கள் கடந்து போகின்றன. முடிவு காலமோ நெருங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் நாம் எதிலும் கரிசனையற்றவர்களாக இருக்கிறோமா என்று எண்ணத்தோன்றுகிறது. இதுவரை நம்மில் ஏதேனும் மாற்றங்கள் உண்டா? கிறிஸ்துவோடுள்ள உறவில் வளருகிறோமா? பின்னடைந்து விட்டோமா? அல்லது வேறு உறவுகளில், வேறு காரியங்களில் களித்திருக்கிறோமா?

ஒரு சஞ்சிகையின் முன் அட்டையில் "எல்லோரும் பரலோகம் செல்ல விரும்புகிறார்கள்; ஆனால், யாரும் சாக விரும்புவதில்லை" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. நாமெல்லாரும் பிறந்தபடியினாலேதான் சாகிறோம்; சாகவேண்டும். ஆனால், கிறிஸ்துவோ சாவதற்கென்றே பிறந்தவர். மரித்த லாசரு உயிரோடே எழுப்பப்பட்டதை அறிந்து, கிரேக்கர்களும் இயேசுவைக் காண விரும்பினர். இப்படி இயேசுவின் புகழ் பரம்பிய வேளையில், இயேசுவோ, சாவைப்பற்றிப் பேசினார். தன் ஜீவனை வெறுக்கிறவனே வாழ்வான் என்னும் திடுக்கிடும் விடயத்தைச் சொன்னார். மரித்தவனையே உயிரோடெழுப்பிய ஒருவர் என்ற புகழ் ஏணியின் உச்சிக்கு ஏறக்கூடிய தருணத்தில் சாவைப்பற்றிப் பேசியது எப்படி?

ஆம், தமது வாழ்வில் அல்ல, சாவிலேதான் மனுக்குலத்திற்கு வாழ்வு; தமது புகழில் அல்ல, சிலுவையில்தான் பிதாவின் சித்தம் நிறைவேறும்; நம்மைப் பரலோகவாசிகளாக்க பூமியில் தாம் மரிக்கவேண்டியது அவசியம்; தமது மரணத்தினாலே மனுக்குலத்தின் பாவம் பரிகரிக்கப்படுவது மாத்திரமல்ல, மரணத்தின்மீது தமக்குள்ள அதிகாரமும் வெளிப்படும்; இவை யாவையும் அறிந்திருந்த ஆண்டவர், தாம் பலியாவதைக் குறித்து ஒரு கோதுமை மணியைக் கொண்டு விளங்கவைத்தார். அப்படியே இயேசு மரித்தார், உயிர்த்தெழுந்தார். அந்தப் பலியினால் இன்று நாமும் ஜீவனைப் பெற்றுக்கொண்டோம்.

இயேசுவின் வழி நடக்க அழைக்கப்பட்ட நாமோ, இந்த உலகில் சுக போகமாக வாழுவோம் என்று நினைப்பது எப்படி? தன்னில் தானே சாகாதவன் ஒருபோதும் வாழமுடியாது. நாம் நமக்குள் சாகவேண்டும், அதற்காக, நமது வாழ்வு பாழாகவேண்டும் என்பது அர்த்தமல்ல. நாம் கிறிஸ்துவுக்குள் புதுத் துளிர்விட்டு எழும்ப வேண்டுமானால் நமக்குள் வேர்விட்டிருக்கும் சுயநலம், நமது வாழ்வு, நமது குடும்பம் என்று நம்மைச் சுற்றிய நினைவுகள் இவை யாவும் அழியவேண்டும். நமது வாழ்வின் அதிகாரத்தை ஆண்டவரின் மகிமைக்காக அவரிடம் ஒப்புவிக்கவேண்டும். மொத்தத்தில் நான் எனக்குள் மரிக்கவேண்டும். அப்போதுதான் எனக்குள் இருக்கும் ஜீவன் வெளிப்படும்.

சிந்தனைக்கு:

நான் எனக்குள் சாகாதவரைக்கும் கிறிஸ்து எனக்குள் எழுந்திருக்க முடியாது என்ற சத்தியம் எனக்கு துக்கத்தைத் தருகிறதா? மகிழ்ச்சியைத் தருகிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவை அவமானத்தின் அடையாளம்

பெப்ரவரி

**19**

வியாழன்

வேதவாசிப்பு: கலாத்தியர் 6:12-16

**'நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவை யைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக.' கலாத்தியர் 6:14**

"கிறிஸ்தவர்கள் எல்லாவற்றிலும் குறைந்தவர்களாம்; இழி வானவர்களாம். ஏதோ குறைவுள்ளவர்கள்தான், கிறிஸ்தவ சமயத்தில் சேருவார் களாம்.... என் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததால் என் கணவர் இப்படிச் சொல்லி, என்னைவிட்டே பிரிந்துவிட்டார். ஆனால் நானோ, கிறிஸ்து என்னோடிருக்கிறார் என்ற ஒரே தைரியத்தோடே வீட்டுவேலை செய்து என் பிள்ளைகளை கிறிஸ்துவின் பிள்ளைகளாக வளர்த்து ஆளாக்கிவிட்டேன். 'நான் ஒரு கிறிஸ்தவள்' என்று சொல்லுவது ஒன்றே எனக்குப் பெருமை" என்று ஒரு சகோதரி என்னிடம் பகிர்ந்துகொண்டார்.

யூதர்களுக்கு தாங்கள் யூதர் என்பதில் ஒரு பெருமை. அதனாலே விருத்தசேதனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இப்படியே இன்றும் பலர் தத்தமது நிலைகளுக்கேற்ப தங்கள் செயல்களிலே பெருமை கொள்வதுண்டு. ஆனால் பல பெருமைகளைக் கொண்ட பவுலோ, ரோமர்கள் வாயினால் உச் சரிக்கக்கூட அருவருக்கின்ற "சிலுவையே தன் வாழ்வின் பெருமை" என்று எழுதியுள்ளார். சிலுவை ஒரு சாதாரண கொலைமரம் மாத்திரமல்ல. அன்று எல்லோருக்கும் அது அருவருப்பானது, அவமானத்திற்கு அடையாளமானது, நிந்தைக்குரியது, மிகக்கொடிய குற்றவாளியின் சின்னம் அது. அதிலும் இயேசு சிலுவையிலே அறையப்பட்டபோது உலகத்தின் நீதியே செத்துவிட்டது. இந்த இழிவான சிலுவை, பவுலுக்கு மேன்மையாகக் காணப்பட்டது ஏன்? அதுவே அவரது வெற்றியின் இரகசியம் என்றால், அவர் அடைந்த வெற்றிதான் என்ன?

"கடவுள் மனிதன்மேல் கொண்ட அன்பின் உச்சநிலையின் வெளிப் பாடே சிலுவை" என 'சம்பத் பகவன் தாஸ்' என்பவர் எழுதியுள்ளார். அந்த அன்பிற்கு முன், இந்த உலக வாழ்வு கொடுத்த எந்த வெற்றியையும் ஒப்பிட்டுப் பார்க்க பவுலுக்கு முடியவில்லை. வெறுமனே கிறிஸ்து அல்ல; கிறிஸ்துவின் சிலுவை ஒன்றே தனது மேன்மை என்ற சிந்தனையே பவுலின் வாழ்வின் அடித்தளத்தை மாற்றிது. இதனால் உலகில் அவர் அடைந்த சகல மேன்மைக ளும் தூசியாகிவிட்டன. அன்பின் வெளிப்பாட்டை அவர் வாழ்வில் அனுபவிக்கக் கிடைத்த பாக்கியமே, அவர் அடைந்த பெரிய வெற்றி.

தேவபிள்ளையே, அந்த ஏழைத் தாய்க்கு, கணவன் அருவருத்த கிறிஸ்துவே மேன்மை. அதற்காக அவள் கைவிடப்பட்டும் கலங்கவில்லை. பவுலுக்கு அவமானத்தின் அடையாளமான சிலுவையே மேன்மை. அதற்காகப் பெருமைபாராட்ட அவர் தயங்கவில்லை. இன்றைக்கு என் மேன்மை எது?

சிந்தனைக்கு:

இன்று எனக்குப் பெருமையாயிருக்கும் காரியங்கள் எவை? இவற்றை சிலுவையண்டையில் வைத்து நிறுத்துப் பார்ப்பேமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவை சாவின் அடையாளம்

பெப்ரவரி

20

வெள்ளி

வேதவாசிப்பு: கலாத்தியர் 5:22-26

'கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்.' கலா.2: 20

சிலுவை என்றாலே சாவுதான்; அந்நாட்களிலே ஒருவனுக்கு சிலுவை தீர்ப்பானால், ஒருவனுடைய தோளிலே சிலுவை சுமத்தப்பட்டால் அதன் முடிவு மரணம்தான். இதைத் தவிர வேறொரு அர்த்தமும் கிடையாது, சம்பவிக்கவும் மாட்டாது. தான் சாகப்போகும் சிலுவையை தானே தூக்கிய ஒருவன் தப்பிக்கொண்டதாக சரித்திரமே இல்லை. அப்படியிருக்க அந்த சிலுவையைக் குறித்து, நமக்கிருக்கும் சிந்தனை என்ன? கிறிஸ்தவர்களின் சின்னமாகிவிட்ட இந்த சிலுவை நம் வாழ்வில் வகிக்கும் பங்கு என்ன? யார் இன்று சிலுவையைக் குறித்துப் பேசுகிறார்கள், பிரசங்கிக்கிறார்கள்? என்னருமை கிறிஸ்தவனே, கிறிஸ்தவளே, நாம் சிலுவை சுமக்கிறவர்களாக வாழ்ந்தால் மாத்திரமே "நான் ஒரு கிறிஸ்தவன், நான் ஒரு கிறிஸ்தவள்" என்று சொல்ல நாம் தகுதி பெற்றவர்களாவோம். அந்தத் தகுதியை நமக்குண்டா என்பதை நமது தியானநேரத்திலே சிந்திப்போமாக.

இதமானதும் சுகமானதும் தேவையானதும் என நினைக்கக்கூடிய ஏராளமான காரியங்கள் நமது மனதை, சிந்தையை, சரீரத்தைக் கெடுத்துப் போடக்கூடியதாக நம்மைச் சுற்றிலும் பெருகியிருக்கின்றன என்பதை நாம் உணரவேண்டும். அதிலும் இன்று விழிப்புணர்வு கொண்டதாகக் கூறி, எத்தனையோ கலாச்சாரப் பழக்கங்கள் நமது சாட்சியுள்ள வாழ்வையே கெடுத்துப்போடுமளவிற்கு, நமது ஆவிக்குரிய கண்களையே குருடாக்கி விட்டிருக்கின்றன. நம்மில் எத்தனைபேர், கர்த்தாவே, எனக்குப் பகுத்தறியும் ஆவியின் வரத்தைத் தாரும் என ஜெபிக்கிறோம்? நமக்கு அந்த அற்புதமான வரத்தைக் குறித்துக் கவலை இல்லை. நாம் சிலுவை சுமக்க வேண்டியவர்கள், இந்த உலகத்திற்கு நாம் சிலுவையில் அறையப்பட வேண்டியவர்கள். சாகவேண்டியவர்கள். வாலிபர் மத்தியிலே வல்லமையாக ஊழியம்செய்து, பலரை கிறிஸ்துவுக்குள் வழி நடத்திய ஒரு பெண் திருமணமானதும், கிறிஸ்தவ சாட்சியை கெடுக்கக்கூடிய அவசியமற்ற அலங்காரங்களைத் தன்னில் கூட்டிக்கொண்டார். திகைப்போடு, "இது என்ன புதிதாக?" என்று அவரிடம் கேட்டதற்கு "இது கலாச்சாரம்" என்று அவர் மிடுக்கோடு பதிலளித்தார்.

கிறிஸ்தவனே, கிறிஸ்தவளே, உண்மையாகவே இன்று கிறிஸ்து போதித்த விழிப்புணர்வை, பகுத்தறிவின் ஆவியின் வரத்தைக் கேட்டுப்பெற்றுக் கொள்ளவேண்டும். நம்மை நெருக்கிக் கொண்டிருக்கின்ற, நம்மை அழித்துப் போட வல்லமையுள்ள காரியங்களிலிருந்து தப்பித்துக்கொள்ள ஒரே வழி அதுவே. "கர்த்தாவே, நித்தமும் என்னைச் சிலுவையில் அறைந்துகொள்ள உதவி செய்யும்" என ஜெபிப்போமாக. பவுல் அதைத்தான் செய்தார். நாம் சிலுவை சுமக்க வேண்டியவர்கள். சாவுக்கு அடையாளமான சிலுவையை சுமக்க சம்மதமில்லாமல் பரலோகம் போவதை நாம் சிந்திப்பது எப்படி?

சிந்தனைக்கு:

கிறிஸ்தவ வாழ்வைக் குறித்து இதுவரை நான் கொண்டிருந்த மன எண்ணம் என்ன? சிலுவை சுமக்கின்ற அந்த உன்னத பாதையை நான் ஏற்பேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவுடனேகூட...

பெப்ரவரி

21

சனி

வேதவாசிப்பு: கலாத்தியர் 2:17-21

**'அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்.' கலாத்தியர் 6:14**

"இனி நான் உனக்குத் தகப்பனுமில்லை; நீ எனக்குப் பிள்ளையுமில்லை" என்று உறவுகளை அறுத்துவிடுகிறதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், ஒரு தகப்பன்-பிள்ளை எனும் உறவு எப்போது உண்மையில் அறுந்துபோகிறது தெரியுமா? யாராவது ஒருவருடைய மரணத்தின்போதுதான். ஆனால், இங்கே இருவரும் உயிரோடிருக்கும்போது, மனக்கசப்பினால் ஒருவருக்கொருவர் செத்தவர்களைப்போலாகி விடுகிறார்கள். குடும்ப உறவுகளிலே இது எவ்வளவாய் வேதனை கொடுக்கும் வார்த்தைகளாக அமைந்து விடுகின்றன. நாமோ இதைச் சொல்லக்கூடாத இடத்தில் சொல்லி உறவுகளை உடைத்துப் போடுகிறோம். அதேசமயம், சொல்லவேண்டிய இடத்திலே சொல்லாமல் தவறிழைத்தும் விடுகிறோம்.

தான், உலகத்திற்குச் செத்ததாகவும், உலகம் தனக்குச் செத்ததாகவும் பவுல் எழுதியபோது, அதுவரை நெருக்கமாக இருந்த ஓர் உறவை முற்றிலுமாக முழுவதுமாக அவர் அறுத்தெறிந்து விட்டார். இதுவரை அனுபவித்த சந்தோஷங்கள், மேன்மைகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அந்த உணர்வினால், இதுவரை தான் நேசித்த யாவுமே, இப்போது செத்துப்போனதைப்போல அவருக்குத் தெரிகிறது. இன்னும் உலகம் இன்பம் தருகிறது; ஆனால் அதை அனுபவிக்க உணர்வு இல்லை. என் தேவைகளுக்காக நானும் வழக்கம்போல உலகத்தை திரும்பிப் பார்க்கிறேன். அங்கே உயிரோட்டம் இல்லை. ஏனெனில், அதைப் பார்த்தால் செத்துப்போனதைப்போலத் தெரிகிறது. செத்தவைகளுடன் உறவு வைத்துக்கொள்ள முடியுமா? இந்த உண்மை அனுபவத்தை சாதாரணமாக ஒரு மனிதனால் தானாக பெற்றுவிடவே முடியாது. உலகத்தின் சகலத்தையும் சிலுவையில் ஆணியறைந்து கொன்றுவிட்ட கிறிஸ்துவினால் மட்டுமே இது முடியும். ஆகவேதான் பவுல், "கிறிஸ்துவால் உலகம் எனக்கு சிலுவையில் அறையுண்டிருக்கிறது" என எழுதியுள்ளார்.

நாம் கிறிஸ்துவின் விசுவாசிகள். இந்த லெந்து நாட்களில் நாம் துளிர் விட்டு எழும்பவேண்டுமானால், முதலில் நாம் சாகவேண்டும். இதுவரை நம்மை அனுபவித்த உலகம், இப்போ நம்மைச் செத்தவர்களாகக் காணவேண்டும். நாமும்கூட உலகத்தைச் செத்துப்போனதாக ஒன்றுமில்லாததாகக் காணவேண்டும். இதுவரை வாழ்ந்த வாழ்வை, நடந்த பாதையை விட்டுவிடுவதல்ல; வேறு வழி செல்லுவதுமல்ல; அதற்கு நாம் சாகவேண்டும். இது கடினம்தான். ஆனால், இயேசுவால் முடியும். எனவே இன்று எமக்குள் உள்ள "நான்" சாகவும், கிறிஸ்து நமக்குள் வாழும்படி, அவர் நமக்காகச் சுமந்த சிலுவையையும், நாம் சுமக்க வேண்டிய சிலுவையையும் தியானிப்போமாக.

சிந்தனைக்கு:

**தினமும் நமது மாம்ச இச்சைகளை சிலுவையில் அறைவது என்பது என்ன? இந்தக் கடின பாதையில் கிறிஸ்துவின் கரம்பிடித்து நடக்க நான் ஆயத்தமா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு விலை

பெப்ரவரி

22

ஞாயிறு

வேதவாசிப்பு: கலாத்தியர் 5:19-26

**'கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்' கலாத்தியர் 5: 24**

இயேசுவின் சிலுவை அன்பைக் குறித்து தன் கணவனுடன் பகிர்ந்துக் கொண்டாள் மனைவி. ஆனால் அவரோ, "நீ சொல்லும் சமய வாழ்வு வேறு; என் சொந்த வாழ்வு வேறு. நானும் ஆண்டவரை நேசிக்கிறேன். ஆனால் அதற்காக என் குடிப்பழக்கத்தை விடமுடியாது" என்றார். மனைவியோ, "இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யமுடியாது" என்று சொல்லப்பட்டிருக்கிறதே என்றாள். அதற்கு கணவர், "இந்நாட்களில் மேலதிக வருமானம் சேர்த்துக்கொள்ள இரண்டு தொழில் செய்து இரு எஜமான்களுக்கு வேலை செய்பவர்கள் உண்டே" என தன் தவறுக்கு நியாயம் கற்பிக்க முயன்றார்.

இப்படி எங்களிலும் எத்தனைபேர் இருக்கிறோம்? அதிலும் அப்பப்போ உலகத்தைத் திருப்திப்படுத்திவிட்டு திரும்பி வருவோர் அநேகர். இந்த இரட்டை வாழ்வு நமக்கு வேண்டாம். எனக்கு உலகமும், இந்த உலகத்திற்கு நானும் சாகும்வரைக்கும், நமது இந்த வாழ்வினால் எந்தப் பிரயோஜனமும் இல்லை. சிலுவை சுமக்காத எவனும் கிறிஸ்துவைப் பின்பற்ற முடியாது. அப்படியானால் இந்த வாழ்வை நான் துக்கத்தோடும் பாடுகளோடும்தான் வாழவேண்டுமா? இல்லவே இல்லை. பரலோக சந்தோஷத்தை நாம் இந்த வாழ்விலேயே அனுபவிக்கும் பாக்கியம் பெற்றிருக்கிறோம். உண்மையில் பாடுகளும் துக்கமும் எப்போது வருகிறதெனில், உலகம் தரும் இன்பங்களையும், நிலையற்ற நிறைவுகளையும் அதிகமாய் தேடிப்போகும்போதுதான், நமக்கு நாமே பாடுகளை சேர்த்துக்கொள்கிறோம். இந்த உலகமும் அதற்குரியவையும் ஒருநாள் அழிந்து போகும். ஆகவே நாம் செய்யவேண்டியது என்ன? நமக்கு உதவாதவை எதுவானாலும் அதை விட்டுவிட வேண்டியதுதான்.

நமது பாவ வாழ்வின் தண்டனைக்குரிய கிரயமாக, தன்னையே பலியாக ஈந்தார் இயேசு. அதனால் அவர் பெற்றுத்தந்த விடுதலையை நாம் பெற்றுக்கொள்ளவேண்டுமானால் நாம் ஒரு விலையைக் கொடுக்கவேண்டும். அது என்ன? நமக்குப் பெறுமதியான சந்தோஷம் என்று நாம் நினைக்கின்ற எமது ஆசைகள், நமக்குள் இருக்கும் கோபம், பொறாமை, விரோதம், வைராக்கியம், மற்றும் யாவும், நம்மால் கட்டுப்படுத்த முடியாத அற்பமான இச்சைகள், எல்லாவற்றையும் நாம் கொன்றுப்போட வேண்டும். மொத்தத்தில் எந்நேரமும் நாம் சிலுவையில் அறையுண்டவர்கள் என்ற எண்ணம் நமக்கு வேண்டும். அதாவது நமது உள்ளான மனுஷன் சிலுவையில் தினமும் சாகவேண்டும். இது கடினமாகத் தெரியலாம். ஆனாலும் இந்த அற்பமான விலையை நாம் செலுத்துமளவும், ஆண்டவர் நமக்காகச் செலுத்திய ஒப்பற்ற விலை என்ன என்பதை நம்மால் உணர்ந்துகொள்ள முடியாது.

சிந்தனைக்கு:

ஆண்டவருக்காக நான் எதைச் செய்தாலும், எதை இழந்தாலும் அது அவருடைய அன்புக்கு ஈடாகாது என்பதை நான் உணர்ந்திருக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் சிலுவை

பெப்ரவரி

23

திங்கள்

வேதவாசிப்பு: மாற்கு 8: 31-38

**'....தன் சிலுவையை எடுத்துக்கொண்டு...' மாற்கு 8 :34**

"கிறிஸ்துதாமே சிலுவை சுமந்து விட்டார்; நான் ஏன் சுமக்க வேண்டும்' என சிலர் கேட்பதுண்டு. பிரியமானவனே, கிறிஸ்து சுமந்த சிலுவையை யாருமே சுமக்க முடியாது. அவரும் இன்னொருதரம் அதைச் சுமக்கத் தேவையுமில்லை. தாம் உலகிற்கு வந்த நோக்கத்தை நிறைவேற்றி, பரத்துக்கு ஏறி, பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக் கிறார் ஆண்டவராக. அங்கு அவர் களைத்துப்போய் உட்காரவில்லை. வெற்றி வேந்தனாக வீற்றிருக்கிறார். அவர் சிலுவையிலே செய்து முடித்ததை நாம் சுதந்தரிக்கும்வரை எமக்கு ஏது வாழ்வு?

சிலுவை என்பது நிந்தையை, அவமானத்தைக் குறிக்கிறது. அது மர ணத்தைச் சுட்டிக்காட்டுகிறது. இந்த நிந்தையையும் அவமானத்தையும் மரணத் தையும் பற்றிப் பேச பேதுருவுக்கு விருப்பமில்லை. இயேசு தமது மரணத்தைப் பற்றிக் கூறியபோது, பேதுருவால் ஏற்றுக்கொள்ள முடியவுமில்லை. இயேசுவை இரகசியமாகக் கூட்டிச்சென்று, 'இப்படிப் பேச வேண்டாம்' எனப் பேதுரு அவரைக் கடிந்துகொண்டான். ஆனால் இயேசுவோ, "அப்பாலே போ சாத்தானே" என்று பேதுருவைக் கடிந்துகொண்டு, தம்மைப் பின்பற்ற விரும்பு கிறவன் தன் சிலுவையைச் சுமந்துகொண்டு தம்மை பின்பற்றி வரக்கடவன் என்றார். ஆனால் பாருங்கள், இயேசு இந்த வார்த்தைகளைக் கூறியபோது, அவர் சிலுவையைச் சுமந்திருக்கவில்லை. ஆனால் தாம் சுமக்கவேண்டிய சிலு வையை அவர் அறிந்திருந்தார். தம்மைப் பின்பற்றுகிறவர்களும் தமது நிமித்தம், நிந்தைகளையும் அவமானங்களையும், ஏன் மரணத்தையும்கூட சந்திக்க நேரிடும். அதை ஏற்றுக்கொள்ள விரும்புகிறவன் தம்மைப் பின்பற்றலாம் என்பதையே ஆண்டவர் பேதுருவுக்கு உணர்த்தினார். ஏன் தெரியுமா? உலக மும் பாவமும் நமக்கு இன்பத்தைத் தரலாம். அதன் முடிவோ துன்பம்தான். தேவனுக்குரியவைகளை இந்த உலகம் வெறுக்கிறது. மாம்சத்திற்கு எதிரான எந்தவொரு காரியத்தையும் உலகம் அருவருக்கிறது. அப்படியிருக்க பாவத்தை வெறுத்து, மாம்ச கிரியைகளை அருவருத்து, கிறிஸ்துவினுடைய வழியில் நடக்கும் ஒருவனை இந்த உலகம் நிம்மதியாக இருக்க விடுமா?

அருமையான தேவபிள்ளையே, கிறிஸ்துவின் வழியில் நடந்தும் உனக்குத் துன்பமும் பாடுகளும்தான் மிச்சம் என்று எண்ணுகிறாயா? கலங் காதே! நீதான் பாக்கியவான். நீ சுமப்பது துன்பமல்ல; அது கிறிஸ்துவுக்குள் ளான சிலுவை. அதன் முடிவு வேதனையும், மரணமாகக்கூடத் தெரியலாம். ஆனால் அது முடிவல்ல; அது உயிர்த்தெழுதலுக்கும் நித்திய வாழ்வுக்குமான ஆரம்பம். மரிக்காதவன் உயிர்த்தெழுவது எப்படி? இது மாய்மால வார்த்தை அல்ல. சத்தியம்! நீ உன் சிலுவையைச் சுமப்பாயா?

சிந்தனைக்கு:

எனக்காக சிலுவை சுமந்தவருடைய வழியில் நடக்க என்னை ஒப்புவித்திருந்தும், நிந்தைகள் பாடுகள் வரும்போது நான் தடுமாறுகிறேனா? அப்படியிருந்தால் நமது ஒப்புக்கொடுத்தலை இன்று புதுப்பிப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளா?

பெப்ரவரி

24

செவ்வாய்

வேதவாசிப்பு: லூக்கா 14:25-27

**'...ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து,...' மத்தேயு 16: 24**

இந்த நிமிஷம் வரைக்கும் கிறிஸ்துவின் நாமத்துக்காக நாம் என்ன செய்திருக்கிறோம் என்று சற்று சிந்திப்போமா! ஆராதனைகள், நிகழ்ச்சிகள், பரிசுகள், பாடல்கள், ஜெபங்கள், காணிக்கைகள், கொடைகள், தசமபாகங்கள், இவற்றோடு வைத்தியசாலை ஊழியம், வயோதிபர் ஊழியம், என எத்தனை! எல்லாமே நல்லது, தேவையானது. ஆனால் இவற்றையெல்லாம் செய்துவிட்டு நாம் மாத்திரம் ஒதுங்கிக்கொண்டால் பிரயோஜனம் என்ன? ஏனெனில் சகலவிதமான நற்கிரியைகளையும் யாரும் செய்யலாம். ஆனால் ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்ப்பது, நம்மை நாமே அவருக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்பதே.

இவ்வுலகிலே நமக்கிருக்கும் முக்கியமான பிணைப்பு, நமக்கிருக்கும் உறவுகள்தான். ஆண்டவரோ, தகப்பன், தாய், மனைவி, பிள்ளை, சகோதரர் யாவரையும் விட்டு தம்மைப் பின்பற்றி வரும்படி அழைக்கிறார். தாய், தகப்பனைக் கனம்பண்ணச் சொன்னவர் இவ்வாறு அழைக்கலாமா? கணவன்-மனைவி உறவை அமைத்தவர் இப்படிச் கூறலாமா? கர்ப்பத்தில் பிள்ளைகளைக் கொடுக்கிறவர் இப்படிக் கேட்கலாமா? ஆனால் அவர் அப்படித்தான் அழைத்தார். அப்படியானால் ஆண்டவர் சொல்லுவது என்ன? இந்த உறவுகளை உனக்குக் கிருபையாய் கொடுத்த என்னிலும் பார்க்க, இந்த உறவுகள் உனக்கு முக்கியமா? இந்த உறவுகளைக் கட்டிக்காக்கும் உனக்கு ஞானமும் பெலமும் தந்த என்னிலும் பார்க்க, இந்த உறவுப் பிணைப்புகளா முக்கியம்? நான் உன்னோடு கொண்டுள்ள உறவின் எடுத்துக்காட்டுகளாக நானே கொடுத்த இந்த உறவுகளிலும் பார்க்க, நான் உனக்கு முக்கியமற்றுப் போய்விட்டேனா? நித்திய உறவுக்கென்று உன்னை ஏற்படுத்திய என்னைவிட, நாளை மாறிப்போகும் இந்த மனித உறவுகளா உனக்கு முக்கியம்?

தேவபிள்ளையே, உறவுகள் என்பது தேவனால் நமக்கு அருளப்பட்ட பெரிய ஈவு. அதைக் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பும் நமக்குண்டு. ஆனால் அந்த உறவிலும் பார்க்க நமது ஆண்டவர் பெரியவர் அல்லவோ! உறவுகளை உதறித்தள்ளி எறிந்துவிட ஆண்டவர் நம்மை அழைக்கவில்லை. அந்த உறவுகளைக் கட்டிக்காக்க எடுக்கும் சகல தீர்மானங்களிலும் வழிகளிலும் கிறிஸ்துவுக்கே முதலிடம் கொடுக்க நாம் அழைக்கப்படுகிறோம் என்பதையே நாம் மனதில் நிறுத்த வேண்டும். கிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுக்கும்போது கட்டாயம் அங்கே நமக்கு சிலுவை காத்திருக்கும். எதிர்ப்புகளும் ஏளனங்களும் எதிர்பார்த்திருக்கும். ஆனால் அதுவும் ஒரு சுகமாக இருக்கும். நமது உறவுகளுக்கு நாம் கொடுத்திருக்கும் முன்னுரிமை எப்படிப்பட்டது?

சிந்தனைக்கு:

நான் கர்த்தரைச் சேவிப்பதில் என் உறவுகள் ஏதாவது தடையாக இருக்கிறதா? அத் தடைகளையும் மீறி, என்னால் வைராக்கியத்துடன் என் இயேசுவைப் பின்பற்றிச்செல்ல என்னை இன்று ஒப்புவிப்பேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்குரியவைகளா?

பெப்ரவரி

**25**

புதன்

வேதவாசிப்பு: மாற்கு 10:17-23

**'....அவன் தன்னைத்தான் வெறுத்து...' மத்தேயு 16: 24**

நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி என்ன செய்யவேண்டும்? எனக் கேட்டுக்கொண்டு ஒருவன் இயேசுவிடம் வந்தான். தன் சிறுவயது முதல் கற்பனைகளைக் கவனமாகக் கைக்கொண்டு வந்தவன் அவன். நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கத் தனக்குத் தகுதி உண்டு என்று அவன் தன்னைக் குறித்து ஒருவித திருப்தி கொண்டிருந் தான். ஆனால் வழிதான் தெரியவில்லை. இயேசுவோ அவனிடம், சிலுவையை எடுத்துக்கொண்டு தமக்குப் பின்னே வரவேண்டும் எனக் கூறினார். அதைத் தவிர வேறுவழியே இல்லை. ஆனால் சிலுவை சுமப்பதற்கு அவனிடம் ஒரு தடை இருந்தது. அதை நீக்கும் வரைக்கும் அவனால் சிலுவையைச் சுமக்க முடியாது என்பதை ஆண்டவர் சுட்டிக் காட்டினார். அந்தத் தடை என்ன? அவனுக்கு இருந்த ஐசுவரியமே! அவன் அதிக செல்வந்தனாக இருந்ததால் துக்கத்தோடு திரும்பிப் போய்விட்டான்.

அவனுக்கு இருந்த தடை அவனுடைய பணம். இன்று நமக்கு இருக்கும் தடை என்ன? ஒருவேளை நாம் பணக்காரராக இல்லாமலிருக்கலாம். ஆனால் பணத்தேவை யாருக்குத்தான் இல்லை. இந்தப் பணத்தை சம்பாதிப் பதற்காக நாம் என்ன பாடுபடுகிறோம். குடும்பத்தைவிட்டு, ஊரைவிட்டு, நாட்டை விட்டே இந்த பணம், தன்னைத் தேடும்படி நம்மைத் துரத்துகிறது. அது தன் னையே நம்பும்படி நம்மை இழுத்துக்கொள்கிறது. நமது தேவைகளுக்காக பணம் என்னும் நிலை மாறி, பணத்துக்காக நாம் என்ற நிலை வந்துவிடுகிறது. இறுதியில் பணமே நம்மை ஆண்டுகொள்கிறது. அப்போது நமது நேரம், சுகம், உறவுகள், யாவையும் பணம் ஆட்கொள்கிறது. தேவன் பேரில் அல்லாமல், நம்மிடமுள்ளவற்றிலே நம்பிக்கை நிலைத்து விடுகிறது. அதன்பின் நம்மிடம் உள்ளதை மற்றவர்களுடன் பகிர்ந்துக்கொண்டு, சிலுவை சுமப்பது எப்படி?

அந்த வாலிபனைப்போல நித்திய ஜீவனை யாரும் விரும்பாமல் இருக் கமுடியாது. அதற்காக, நமக்கிருக்கும் யாவையும் விற்றுவிட்டு ஒன்றுமில்லாத வர்களாக இருக்கும்படி ஆண்டவர் அவனுக்கோ நமக்கோ கூறவில்லை. நமது வீடு, வாகனம், பட்டம், பதவி, பணம் எதுவானாலும், அவை நம் வாழ்வில் முக்கியம் வகிக்குமானால், அதுவே ஆண்டவருக்கும் எனக்கும் இடையில் தடையாகிவிடும். சிலுவை சுமப்பதற்கும் எனக்கும் சம்பந்தமும் இராது. ஏனெ னில் சிலுவை தனக்கென எதையும் வாங்குவதல்ல. தன்னையே கொடுப்பது தான் சிலுவை. தனக்கென்று சேர்ப்பதல்ல; தன்னையே செலவுசெய்வது. இன்று நாம் எதில் நம்பிக்கை வைத்திருக்கிறோம்? நமக்கிருக்கும் தடைகள் என்ன? பணமும் வசதிகளும் நமக்குத் தேவைதான். ஆனால் அவைதான் வாழ்வல்ல. கிறிஸ்துவினிமித்தம் எதையாவது விட்டுவிடவேண்டிய நிலைவந்தால், நான் தயாராய் இருக்கிறேனா? சிந்திப்போம்!

சிந்தனைக்கு:

இன்று என்னை ஆளுகை செய்யும் காரியம் என்ன என்பதை உண்மைத்துவத் துடன் சிந்தித்து, அறிக்கைசெய்து, அதை விட்டு, இயேசுவண்டை சேருவேனா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குரியதா? கிறிஸ்துவுக்குரியதா?

பெப்ரவரி
26
வியாழன்

வேதவாசிப்பு: பிலிப்பியர் 2:19-24

**'மற்றவர்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல், தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்.' பிலிப்பியர் 2: 21**

பிலிப்பு பட்டணத்து விசுவாசிகளை, நேரில் போய் விசாரிப் பதற்காக, அவர்களிடம் அனுப்புவதற்கு தீமோத்தேயுவைத் தவிர பவுலுக்கு வேறு யாரும் பொருத்தமாகத் தெரியவில்லை. ஏனெனில், அநேகமானோர் தமக் குரியவைகளையே நாடித் தேடுகிறவர்களாக இருந்தனர். கிறிஸ்துவினிமித்தம் தன்னைக் கொடுக்கக்கூடியவனாக தீமோத்தேயு ஒருவனே காணப்பட்டான். இவன் ஒரு வாலிபன். பவுலோடுகூட ஊழியத்தில் முழுமூச்சாக ஈடுபட்டவன். வாலிபனாக இருந்தும் தன் வாலிப சந்தோஷங்களை அல்ல; கிறிஸ்துவினி மித்தம் வரும் நிந்தைகளையும் கஷ்டங்களையும் பெரிதென்று நினைத்தவன். கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்துத் தனக்கு இருக்கும் மனநிலை அவனி டமும் இருப்பதை பவுல் கண்டார். மற்றவர்களும் விசுவாசிகள்தான். ஆனால், அவர்களோ தமக்காக மட்டும் வாழுகிறவர்களாய் இருந்தனர்.

**'தன் சிலுவையை சுமந்துகொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்'** என்றார் ஆண்டவர் (லூக்கா 14:27). இயேசு சிலுவை சுமந்தது எருசலேம் நகர் வீதியில் மட்டுமா? இல்லை. அவர் இந்த உலகில் வாழ்ந்த நாட்களில், தாம் எடுத்துவைத்த ஒவ்வொரு அடியிலும் சிலுவையைச் சுமந்தவராகவே வாழ்ந்தார். சிலுவைப்பலி ஒன்றே அவர் மனதை நிறைத்திருந்தது. பிசாசு அவருக்கு உலகத்தையே கொடுப்பதாகச் சொன்ன போதும், மக்கள் அவரை ராஜாவாக்க நினைத்தபோதும், அதிகாரிகளும் பிரதான ஆசாரியர்களும் அவரை ஆச்சரியத்தோடு பார்த்தபோதும், தாம் சுமக்க வேண்டிய சிலுவையை அவர் மறந்து அவர்களுக்கு இணங்கியிருந்தாரானால், இன்று நாம் எங்கே இருந்திருப்போம்? கிறிஸ்து தமது பிதாவுக்குகடுத்தவை களையே தேடினார். இன்று நாமும் கிறிஸ்துவுக்கு ஏற்றவைகளையே நாடித் தேட அழைக்கப்பட்டிருக்கிறோம்.

தம்மைப் பின்பற்றிவரத் தீர்மானிப்பவன் எவனும் தன் வாழ்வில் மிக அருமையானது என்று எண்ணிக்கொண்டிருப்பவற்றைக்கூட, கிறிஸ்துவுக்குத் தன்னை அர்ப்பணிக்கும் பொருட்டுத் தள்ளிவிட ஆயத்தமாயிருக்க வேண்டும். உலக அதிகாரம், புகழ், வல்லமை, செல்வம் போன்ற இவைகளை இயேசுவைப் பின்பற்றுவதனால் பெறலாம் எனும் எண்ணத்துடன் பின்பற்றுதல் முற்றிலும் மாறானது என்பதையே சிலுவை சுமப்பதன் செய்திக்கூடாக ஆண்டவர் நமக்கு விளக்குகிறார். நாம் இன்று எதைத் தேடுகிறோம்? நமக்குத் தேவையானவற்றையா? கிறிஸ்துவுக்கு அடுத்தவைகளையா? சிலுவையைப் போல கடினமானதும் இல்லை! அதைப்போல இன்பமானதுமில்லை!

சிந்தனைக்கு:

இன்று எனக்கென்றிருப்பவற்றை சற்று ஆராய்ந்து பார்ப்பது நல்லது. அவை எனக்குரியதா? அல்லது கிறிஸ்துவுக்குரியதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈசாக்கு சுமந்த கட்டை

பெப்ரவரி

**27**

வெள்ளி

வேதவாசிப்பு: ஆதியாகமம் 22:1-14

**'ஆபிரகாம் தகனபலிக்குக் கட்டைகளை எடுத்து, தன் குமாரனாகிய ஈசாக்கின்மேல் வைத்து,...' ஆதியாகமம் 22: 6**

ரோம அரசாட்சியிலே யாராவது சிலுவை சுமந்து சென்றால், அவர் உயிரோடு திரும்பி வரப்போவதில்லை என்பது சுமப்பவனுக்கும் தெரியும்; அதைக் காண்பவர்களுக்கும் தெரியும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில்கூட மரத்திலே தூக்கிப்போடுகிற வழக்கம் இருந்தது (ஆதி.40:19). இவை குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை. ஆனால், ஈசாக்கு சுமந்து சென்ற கட்டைகள் சற்று வித்தியாசமானவை. நூறு வயதிலே ஆபிரகாமுக்கு ஒரு மகனைக் கொடுத்த கர்த்தர், அந்தப் பிள்ளையைத் தகனபலியாகப் பலியிடும்படி சொல்கிறார். கனத்த இருதயத்தோடு ஆபிரகாம் மகனைக் கூட்டிப்போனார். தனக்கு என்ன நடக்கப்போகிறது என்பது தெரியாமலேயே, தான் பலியிடப்படத் தேவைப்பட்ட கட்டைகளைத் தானே சுமந்துகொண்டு சென்றான் ஈசாக்கு. பலிபீடத்தை ஒழுங்கு செய்யும்போது பல கேள்விகளைக்கேட்ட ஈசாக்கு, அதே கட்டைகள்மீது கிடத்தப்பட்டபோது, எதுவும் பேசியதாக எழுதப்படவில்லை. தானே சுமந்துவந்த கட்டைகள்மீது, தானே கிடத்தப்பட்டபோது அதை அர்ப்பணிப்போடு ஏற்றுக்கொண்டான்.

இங்கே இந்தக் கட்டைகள் தண்டனையை நிறைவேற்றுபவையாக அல்ல, மாறாக, கர்த்தர்மீது ஆபிரகாமுக்கு இருந்த விசுவாசத்திற்கு அக்கினிச் சோதனையாகும். தகப்பன் மீது மகனுக்கு இருந்த அன்பிற்கும் விசுவாசத்திற்கும் இந்தக் கட்டைகள் பரீட்சைக்களமாயின. தகப்பன் கட்டைகளை மகனின்மீது வைத்தார். மகன் அவற்றைச் சுமந்து வந்தான். தன் வாழ்வு இந்தக் கட்டைகளில் முடிகிறது என அறிந்தபோது, ஈசாக்கு அதை ஏற்றுக்கொண்டான். ஏற்றுக்கொண்டபோது, கர்த்தரோ, அவனை விடுவித்தார். ஆயத்தப்படுத்தப்பட்ட பலிபீடம் வெறுமையாக விடப்படவில்லை. கர்த்தரே ஓர் ஆட்டை அனுப்பினார். அது அந்தப் பலியை நிறைவேற்றியது.

இப்படியே பலதடவை நம்மையும் அறியாமலேயே நாமும் கட்டைகளைச் சுமக்க நேரிடுகிறது. ஆனால், அவற்றை நம்மேல் வைத்த நம் பரமபிதா அதை அறிந்திருக்கிறார். நாம் சுமக்கும் வரையிலும் அவை வெறும் பாரங்களும் துன்பங்களும்தான். அவையே நம்முடைய தகனபலிக்கு உரியவை என அறியும்போது, நாம் அதை எப்படி ஏற்றுக்கொள்கிறோம் என்பதே காரியம். நமது தகப்பன் சரியானதைச் செய்வார் எனும் அர்ப்பணிப்போடு ஏற்றுக்கொள்வோமா? அல்லது, அந்த இடத்தைவிட்டே ஓடிவிடப் பார்ப்போமா? ஈசாக்கு அமைதியாக ஏற்றுக்கொண்டார். ஏற்றுக்கொண்டவர் விடுவிக்கப்பட்டதுமன்றி, தனக்கான பலியையும் கண்டார். நாம் என்ன செய்கிறோம்? நமக்காகப் பலியானவரைக் காணவேண்டுமாயின், முதலில் நம்மை ஒப்புவிக்க வேண்டுமே!

சிந்தனைக்கு:

**நான் சுமக்கின்ற எதுவும் தீமைக்கல்ல, அவை என்னை உயர்த்தி எழுப்பும் கருவிகளே என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறதா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசு சுமந்த சிலுவை

பெப்ரவரி
28
சனி

வேதவாசிப்பு: யோவான் 19:14 -22

**'அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு... கபாலஸ் தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார்.' யோவா. 19: 17**

ஏறத்தாழ பத்து வருடங்களுக்கு முன்னர் பிள்ளைப் பேற்றுக்காக அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு தாயை சந்தித்ததை நான் ஒருபோதும் மறப்பதில்லை. ஆபத்தான நிலையில் இருந்த அவளுக்குச் சத்திர சிகிச்சை செய்து பிள்ளையைக் காப்பாற்றினால், அவளுக்குச் சாவு நிச்சயம். தானாகப் பிள்ளை பிறக்காவிடில் வயிற்றிலேயே பிள்ளைக்குச் சாவு நிச்சயம். ஆனால், அந்தத் தாயோ, "என்னை வெட்டிப்போட்டு குழந்தையைக் காப்பாற்றுங்கள்" எனக் குமுறிக்குமுறி அழுதாள். பிள்ளை தப்பவேண்டுமானால் அவள் சாகவேண்டும். சத்திரசிகிச்சை செய்யப்படும் மேசை இவளுக்கென்ன பலிபீடமா என, என்னை நானே கேட்டுக்கொண்டேன்.

தன் பிள்ளையை ஜீவனோடு காப்பாற்ற அந்தத் தாய் மரணத்தையும் சந்திக்கத் தயாராக இருந்தால், நமது பரமபிதா நமக்கு ஜீவன் தர என்னதான் செய்யமாட்டார்? அன்று எதுவும் அறியாதவனாய் தான் பலியிடப்படவேண்டிய கட்டையைத் தானே சுமந்துசென்ற ஈசாக்கு, பலிபீடத்தை மௌனத்தோடு ஏற்றுக்கொண்டான். ஆனால் ஆண்டவரோ, தாம் சுமக்கப்போகிற சிலுவை இன்னதென்றும், அதிலே தாம் அடையப்போகிற பாடுகளும் மரணமும் எத்தகையது என அறிந்திருந்தும், தமது சிலுவையைத் தாமே சுமந்துசென்றார். கள்வர்களுக்குத் தாம் சுமந்து சென்றது தண்டனைக்குரிய மரமாக இருந்தது. ஆனால், ஆண்டவருக்கோ அது தண்டனைக்குரிய மரமாக அல்ல; தம்மைப் பலி செலுத்தும் ஒரு பலிபீடமாகவே தெரிந்தது. ரோம அரசாங்கமும் யூதரும், தாமே கிறிஸ்துவின்மீது சிலுவையைச் சுமத்தியதாக நினைத்தனர். ஆனால், அவர்களுக்காகவும் நமக்காகவும் ஆண்டவர் தாமே, சிலுவையைச் சுமந்து சென்றார் என்பதை அன்று அவர்களும் அறியவில்லை; இன்றும் உலகமும் அறியவில்லை. அறிந்திருக்கிற நாமும் அறியாதவர்கள்போல இருக்கிறோம்!

பிரியமான கிறிஸ்தவனே, உனக்கு உலகம் வேண்டுமா? சிலுவை சுமந்த இயேசு வேண்டுமா? குற்றவாளி அறையப்பட்டபோது அது இழிவான தொரு மரம் மட்டுமே. ஆனால் ஆண்டவர் அறையப்பட்டபோது அதுவே ஒரு பரிசுத்த பலிபீடமானது. அவர் தம்மைத் தாமே ஏகபலியாகச் செலுத்திய உன்னதமான பலிபீடம் அது. ஏனெனில் அவர் தமக்காக அல்ல, பாவத்திற்குச் சிறைப்பட்டுப்போன உலகத்திற்காக, நம் ஒவ்வொருக்குமாக அந்தச் சிலுவை மரத்தைப் பலிபீடமாக்கினார். தம்மைத் தாமே ஏகபலியாக்கினார். இந்த இயேசுவை நாம் என்ன செய்கிறோம்? சிலுவை என்பது ஒரு பலிபீடம். அதிலே தம்மைப் பலியாக்கி நமக்கு ஜீவன் தந்த இயேசுவின் வழி நடந்து, நாம் சுமக்கும் நமது சிலுவையில் நம்மை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுக்க நாம் தயாராக இல்லையெனில், நாம் கிறிஸ்துவின் பிள்ளைகள் என சொல்லலாமா?

சிந்தனைக்கு:

இயேசு சுமந்த சிலுவை என்னை விடுதலையாக்கியது. இன்று நான் சுமக்க வேண்டிய சிலுவை இயேசுவுக்குச் சாட்சியாகிறது. நான் சிலுவை சுமக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைக்கப்பட ஆயத்தமா!

மார்ச்

**1**

ஞாயிறு

வேதவாசிப்பு: எரேமியா 4:1 - 9

**'....கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நீங்கள் முள்ளுகளுக்குள்ளே விதையாதிருங்கள். உங்கள் தரிசுநிலத்தைப் பண்படுத்துங்கள்.'** எரே.4:3

ஏர் பூட்டி வயல் உழுவதைப் பார்த்திருக்கிறீர்களா? கலப்பையில் மாடுகளைப் பூட்டி ஒருவர் உழ, வயலின் மூலைகளை இன்னொருவர் கொத்த, இப்படியாக வயல் நிலம் பண்படுத்தப்படும். மழையால் நனைந்த நிலம் அடிமட்டத்தில் உடைக்கப்படும்போது, மறைந்திருக்கும் வேர்கள், கற்கள், பெரிய புழுக்கள்கூட மேலே வரும். அவற்றைக் கொத்திப்போக ஒரு காகக்கூட்டமே காத்திருக்கும். உடைக்கப்படாத எந்த நிலமும் விவசாயத்திற்கு உதவாது.

இதுதான் நமது ஆவிக்குரிய வாழ்வின் உண்மை நிலையும். கர்த்தருடைய ஜனம் அவருடைய வழிகளைவிட்டு அடிக்கடி விலகிச்சென்றனர். **'அவர்கள் தங்கள் முகத்தையல்ல, தங்கள் முதுகை எனக்குக் காட்டினார்கள்'** என்று கர்த்தர் வேதனைப்படுவதைக் காண்கிறோம்(எரே.2:27). தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்திய இந்த மக்களைப் பார்த்து, **'உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள்'** என்கிறார் எரேமியா. யோசியா போன்ற சில ராஜாக்கள் மக்களைத் தேவனண்டைக்குத் திருப்ப பல முயற்சிகள் எடுத்தும் பலனளிக்கவில்லை. அப்படி அன்று என்னதான் செய்தார்கள்? தேவனைவிட்டு அடிக்கடி அந்நிய ராஜாக்களிடத்திற்கும், தெய்வங்களிடத்திற்கும் அவர்கள் ஓடினார்கள். அந்தளவுக்கு அவர்களின் இருதயம் கடினப்பட்டிருந்தது. கடின இருதயம் தேவனுடைய வார்த்தையை ஏற்காது. அதனுடைய கடினத் தன்மை மாத்திரமல்ல, அது தன்னகத்தே கொண்டிருக்கிற கற்களும் முட்களும் புழுக்களும்கூட அகற்றப்படும்வரைக்கும் நல்ல விதைகள் வேரூன்ற இடமில்லை.

இன்று நாம் அந்நிய தெய்வங்களிடம் போவதில்லை. அப்படியிருக்க நமது மனம் கடினப்பட்டிருக்கிறது என்று எப்படிச் சொல்லுவது? இதனை நாம் இன்னொரு புறமாகச் சிந்தித்தால், நமது இருதயம் எதனால் நிறைந்திருக்கிறது என்று நம்மை ஆராயவேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு நமது இருதயத்தில், வாழ்வில் நாம் கொடுத்திருக்கிற இடம் என்ன? தேவனை நம்புகிறோம் என்று சொல்லுகிற நாம், அந்த நம்பிக்கைக்கு ஏற்றபடியா வாழுகிறோம்? நமது இருதயம் உடைக்கப்படும்வரைக்கும் அதற்குள் புதைந்திருக்கிற கற்களும் முட்களும், புழுக்களும் வெளித்தெரியாது. அவை அகற்றப்படும்வரைக்கும் தேவனுடைய வார்த்தை நமது வாழ்வில் பலன் தர இடமுமிராது. விசேஷமாக இந்த லெந்து காலத்தில் நாம் உடைக்கப்படுவதற்கு நம்மை ஒப்புவிப்போமா!
**'நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது. அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன்.'** சங்கீதம் 119:71

சிந்தனைக்கு:
என் இருதயம் கடைசியாக உடைக்கப்பட்டு உழப்பட்டது எப்போது என்பது ஞாபகமா? இன்று மேலும் அது உழப்பட நான் என்னை ஒப்புவிப்பேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறிந்துபோன அன்பின் உறவு

மார்ச்

2

திங்கள்

வேதவாசிப்பு: ஆதியாகமம் 3:1-10

**'...தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள்.'** ஆதி.3:8

"நான் இல்லை என்று சொல்லி அனுப்பிவிடு" என்று தங்களை ஒளித்துக்கொள்ளுகிறவர்கள் பலர். இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், இது வரை நேசித்துப் பழகிய ஒருவருக்குக்கூட ஒளிப்பதென்றால் அவர்களுடைய உறவு முறிந்துவிட்டது என்றுதானே அர்த்தம். "புற்றுநோயின் வலியைவிட என் மனைவி உறவை முறித்துவிட்ட வலி மிக அதிகம்" என்றார் ஒருவர்.

தமது சாயலிலே, தம்முடைய உறவுக்கென்று கடவுள் மனிதனைப் படைத்த நாளிலிருந்து கடவுளுக்கும் மனிதனுக்குமிடையிலான உறவை வேதம் ஒரு வார்த்தையில் அழகாக விளக்குகிறது. **'பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தர்...'**. இது எப்படி நடந்தது என்பதெல்லாம் நமக்குத் தெளிவில்லாவிட்டாலும், தேவனாகிய கர்த்தர் அவர்களுடன் உலாவுவதற்காகத் தோட்டத்திற்கு வந்தார் என்பது தெளிவு. வழக்கம் போல தேவனாகிய கர்த்தர் வந்தார், ஆனால் ஆதாமும் மனைவியும் ஓடி ஒளித்தனர். அவர்களுடைய பாவம் வெட்கத்தை உண்டாக்கிவிட்டிருந்தது. பாவமும் பரிசுத்தமும் ஒன்றையொன்று சந்திக்க முடியாததால் உறவு முறிந்தது.

என்றாலும், கர்த்தர், நமக்குள் வைத்திருக்கும் குற்றத்தை உணர்த்தும் மனச்சாட்சிக்காக அவருக்கு நன்றி செலுத்தவேண்டும். எல்லாமே பிழைக்கும் போது அது நம்மை எச்சரித்துணர்த்துகிறது. ஆனபடியால்தான், அன்று ஆதாமும் மனைவியும் தங்கள் பாவநிலையை உணர்ந்து, வெட்கப்பட்டு, ஓடி ஒளித்தனர். ஆனால், செய்த தவறுக்குரிய காரணத்தைக் கண்டு சரிசெய்யாமல், எச்சரிக்கின்ற மனச்சாட்சியை மழுங்கடிப்போமானால், அங்கேதான் ஆபத்து நேரிடுகிறது. மனச்சாட்சியை மழுங்கடிக்காமல், அது உடைக்கப்பட இடமளித்து மனந்திரும்புவோமானால் நிச்சயம் நமக்கு விடுதலை உண்டு. தேவனுடனான உறவை நாம் அசுத்தப்படுத்தும்போது குற்ற உணர்வு நம்மை உணர்த்தும் வரைக்கும் நமக்கு நல்லது. மனந்திரும்பவும், உடைந்துபோன உறவை மீளக் கட்டியெழுப்பவும் அது உதவுகிறது. ஆகவே, தேவன் நமக்குள் வைத்துள்ள அந்த நல்மனச்சாட்சியை எந்த நிலையிலும் மழுங்கடித்துவிடாமல், நாமே சரியென்று சாதித்து தேவனுடனான உறவை முற்றாய் முறித்துவிடாமல், நாம் உடைக்கப்படுவதற்கு நமது கடின இருதயத்தை ஒப்புவிப்போமாக.

**'இந்த நல்மனச்சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள்.'** 1தீமோ.1:19

சிந்தனைக்கு:
நான் கிறிஸ்தவனானாலும், கிறிஸ்துவுடனான உறவில் உத்தமனாயிருக்கிறேனா? நல்மனச்சாட்சியோடே சிந்தித்து உடைந்த உறவைச் சரிசெய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவு உடைந்தது ஏன்?

மார்ச்
**3**
செவ்வாய்

வேதவாசிப்பு: ஆதியாகமம் 2:15-17. 3:6

**''உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.' 1யோவான் 2:15**

காலையில் கண்விழிக்கும்போதே, எழும்புவதா விடுவதா என்பதிலிருந்து, காப்பியா தேனீரா, தோசையா இட்டலியா என்றும், இரவு படுக்கையில் கண்மூடும் வரைக்கும் நாம் எடுக்கும் தீர்மானங்களுக்கு அளவேயில்லை. ஆனால், அதிக தூக்கம், துரித உணவு என்று நாம் எடுக்கும் தீர்மானங்கள் ஒவ்வொன்றும் நம்மையும், சிலசமயம் நமது உறவுகளையும் பாதித்துவிடுகிறது. முகப்புத்தகத்தை மூடிவிட்டுத் தூங்கும்படி அம்மா சொல்ல, பிள்ளை எரிச்சலடைய.... அப்பா கோபப்பட.... இவை சாதாரண விஷயங்கள்தான். ஆனால், நாம் வாழ்வில் எடுக்கும் சில சிறிய தீர்மானங்கள்கூட பாரிய விளைவுகளை ஏற்படுத்தி, நமது அன்பின் உறவுகளையே தகர்த்தெறிந்துவிடுகிறது.

அன்று ஏவாள் செய்ததும் இதுதான். தேவனுடைய கட்டளையைப் பொருட்படுத்தாமல், விலக்கப்பட்ட கனியைச் சாப்பிடுவது என்று தீர்மானித்த ஏவாள், `ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய்' என்று பெயர்பெற்ற ஏவாள், தான் எடுக்கும் தீர்மானம், ஜீவனுள்ளோரையெல்லாம் பாதிக்குமா என்று ஒரு கணம் சிந்தித்திருந்தால், மனுக்குலம் முழுவதும், விசேஷமாக பெண்கள் என்றால் வஞ்சிக்கிறவர்கள் என்ற பெயர் பெண்களுக்கும் வந்திருக்காது; தேவனோடு மனிதனுக்கிருந்த பரிசுத்த உறவில் விரிசல் ஏற்பட்டிராது. நித்தியமாய வாழப் படைக்கப்பட்ட மனுஷன் சாவை எதிர்நோக்கியிருக்கவும் நேரிட்டிருக்காது.

ஆனால், தேவனோ, உலக ஆசையில் சிக்கிய மனிதன், கனியின் ருசியில் மயங்கி, தேவனோடு வாழுகின்ற தீர்மானத்தில் தவறி, தன்னிஷ்டப்படி வாழத் தீர்மானித்தபோதும், உலகத்தோற்றத்திற்கு முன்னரே தாம் தீர்மானித்தபடியும், ஆதிமுதல் கிறிஸ்துவை மனுக்குலத்திற்கு இரட்சகராக நியமித்தபடியும் (1பேது.1:20) தாம் கொண்டிருந்த தீர்மானத்தில் மாறவேயில்லை. மனிதன் தம்முடன் நித்தியமாய் வாழவேண்டுமென்ற தமது தீர்மானத்திலும் அவர் மாறவேயில்லை. அதனால்தான் கிறிஸ்துவை நமக்குக் கிருபையாய் தந்தருளி, அவருக்குள்ளாக மீட்பை அருளினார். இப்படியிருக்க, நாம் இன்னமும் ஏவாளையே சொல்லிக்கொண்டு, நமது தீர்மானங்களில் தடுமாறலாமா? இன்னமும் உலகம் காட்டும் இச்சைகளில் இழுவுண்டு, மனிதரைத் திருப்திப்படுத்தி, தேவனைவிட்டு விலகலாமா? தேவனோடுள்ள உறவை நமது தவறான தீர்மானங்களால் முறித்துப்போட்டால், இயல்பாகவே அது மனித உறவையும் பாதித்துவிடும்.

**'...தம்முடைய தீர்மானத்தின்படியே ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும் நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.' 2தீமோத்தேயு 1:9**

சிந்தனைக்கு:
வாழ்வில் ஏற்பட்ட உடைவுகளுக்கு நான் எடுத்த தீர்மானங்கள் எவ்வளவுதூரம் காரணமாயிருந்திருக்கிறது? இனி நான் செய்யப்போவது என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்துபோன சகோதர உறவு

மார்ச்
**4**
புதன்

வேதவாசிப்பு: ஆதியாகமம் 4:1-12

**'பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப்போலிருக்கவேண்டாம்.' 1யோவா. 3:12**

பெற்றோர் தன்னிலும்பார்க்க தன் தங்கையை அளவுக்கதிகமாக நேசிக்கிறார்கள் என்று எண்ணிய மூத்த மகள், அவளும் சிறுமிதான், தன் சிறிய தங்கையைக் கொலை செய்த சம்பவத்தை சமீபத்தில் பத்திரிகை வாயிலாகக் கேள்விப்பட்டோம். இவள் இன்னுமொரு காயீனா?

உலக வரலாற்றிலேயே முதல் சகோதரர்கள் என்று பெயர் பெற்றவர்கள் காயீனும், ஆபேலும். அந்தப் பெருமையைத் தக்கவைக்க முடியாமல், 'முதற் கொலையாளி' காயீன் என்று உலகத்தின் முடிவுமட்டும் சொல்லத்தக்கதாக, காயீன் முதற்கொலையைச் செய்து, தன் பெற்றோர் ஆரம்பித்து வைத்த பாவத்தை அரங்கேற்றிவைத்தான். காயீனும் ஆபேலும் காணிக்கை கொண்டு வந்தார்கள். ஆனால், **'காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது.'** ஆதி.4:5 இதனை மேலோட்டமாகப் பார்த்து, சகோதரருக்குள் பகையை மூட்டிவிட்டது கர்த்தர் என்று சொல்லுகிறவர்கள் உண்டு. ஆனால், காயீனுடைய மாறுபட்ட முகநாடியைக் கர்த்தர் வெளிக்கொணர்ந்தார் என்பதுதான் உண்மை. அத்துடன் கர்த்தர், அந்த எரிச்சலிலிருந்து வெளிவருவதற்கான போக்கையும் காயீனுக்குக் கூறினார். ஆனால் காயீன் மூட்டிவிட்ட நெருப்பு அவனையே பற்றிக்கொண்டது. அதனால்தான் யோவான், **'அவன் எதினிமித்தம் அவனைக் கொலை செய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே'** (1யோவான்3:12) என்று எழுதுகிறார். காயீன் மாத்திரம் அன்று தன் இருதயத்தில் உடைபட்டவனாய், தேவபாதத்தில் விழுந்து, 'என்னை உடைத்துப் பண்படுத்தும்' என்று ஜெபித்திருந்தால், இப்பூமியில் அவனும் அலைந்து திரிந்திருக்கமாட்டான்; அவன் சந்ததியில் வந்த லாமேக்கும் இன்னொரு கொலைகாரனாக மாறியிருக்கமாட்டான்.

**'இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்'**(நீதி.17:17). இந்த உறவை நாம் என்ன செய்கிறோம்? கோபம் எழுந்தாலும், 'அவன் என்ன செய்தான்' என்பதை விடுத்து, 'நான் என்ன செய்கிறேன்' என்று சிந்தித்தால், நமது உறவுகள் பாதுகாக்கப்படும். நமது சகோதரர் எவரிலாவது நமக்குப் பகையுணர்வு இருக்குமானால், நம்மை உடைத்து, நம்மூலம் சகோர உறவைச் சரிசெய்யும்படி தேவகரத்தில் நம்மைக் கொடுப்போமா?

**'தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான். ...அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது என்று அறவீர்கள்.' 1யோவான் 3:15**

சிந்தனைக்கு:

நான் மனுஷ கொலைபாதகனா? அல்லது, தேவனுடைய பிள்ளையா? அதை நிதானித்து, சகோதர உறவுகளைச் சரிசெய்வேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர்செய்யப்படவேண்டிய உடைவு

மார்ச்
**5**
வியாழன்

வேதவாசிப்பு: 1யோவான் 3:9-18

**'கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார்.' ஆதியாகமம் 4:9**

"தம்பி ஏன் அழுகிறான்? அவனுக்கு என்ன செய்தாய்?" அம்மாவின் குரல் கேட்ட மகன், "எனக்குத் தெரியாது" என்கிறான். மழலை மாறாத தம்பிக்கு, அண்ணா அடித்ததைச் சொல்லத் தெரியவில்லை.

"நீ எங்கே" என்று ஆதாமிடம் கேட்ட கர்த்தர், "உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே" என்று காயீனிடம் கேட்கிறார். சகோதர உறவு தேவன் தந்திருக்கிற பெரிய கொடை. ஒரு குடும்ப உறவு பெற்றோருடன் ஆரம்பிக்கிறது என்றால், சகோதர உறவு அதை மேலும் பலப்படுத்துகிறது. இன்று நாம் மாம்ச சம்பந்தமான சகோதர உறவில் மாத்திரமல்ல, கிறிஸ்துவின் இரத்த சம்பந்த மான பெரியதொரு குடும்ப உறவில் ஒருவராக இருக்கிறோம். ஆக, நம் தாய் வயிற்றில் பிறந்தவர்களை மாத்திரமல்ல, கிறிஸ்துவின் இரத்தத்தால் புதிதாய் பிறந்த ஒவ்வொரு சகோதரருடனான உறவைக் குறித்தும் மிக ஜாக்கிரதையாக இருத்தல் அவசியம். இந்த உறவுக்குள்ளும் பிரச்சனைகள் எழும். அன்று காயீன் தன் முதற்பேறான, முதற்தரமான காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்தவில்லை என்பதை ஆபேல் செலுத்திய காணிக்கைதான் வெளிப்படுத் தியது. இதனால்தான் காயீனுக்கு தன் தம்பியில் எரிச்சலும் கோபமும் உண் டாகி, அவனைக் கொன்றுபோடுமளவுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது. அதாவது, ஒருவனுடைய நன்நடத்தையும், நல்வாழ்வும், உயர்வுமே, அடுத்தவனுடைய தீங்கான வாழ்க்கையை, தீதான மனதை வெளிப்படுத்துகிறது என்பது விளங் குகிறது. இதனால்தான் இவன் அவனை வெறுக்கிறான்.

ஆக, நமக்கு நமது சகோதரரில், அவன் கூடப்பிறந்தவனோ, ஆவிக் குரியவனோ யாராயினும், நமக்குக் கோபமோ எரிச்சலோ வருகிறது என்றால், நம்மைத்தான் நாம் ஆராய்ந்துபார்க்கவேண்டும். தேவபிள்ளைகள் நாம் ஒருபடி மேலே நின்று, அடுத்தவன் நம்மை நியாயமில்லாமல் கோபித்தாலும்கூட அவ னில் கோபப்பட்டு அவனை வெறுப்பது நமக்கு நல்லதல்ல. அந்த இடத்திலும் நம்மை ஆராய்ந்துபார்ப்பதே நமக்கு நல்லது. கர்த்தர் நம்மிடம், "உன் சகோத ரன் எங்கே" என்று பெயர் குறிப்பிட்டுக் கேட்டால் நமது பதில் என்ன? ஆனால், இருதயத்திலே உடைக்கப்படாத எவனும், தன்னை விரோதிக்கிற சகோதரனில் இப்படிப்பட்ட அன்பைச் செலுத்துவது கடினமே. ஆகவே, குடும்பத்திலே சபை யிலே நமக்கு யாருடனாவது கோபம் எரிச்சல் இருந்தால், அந்த உறவைச் சீர் செய்ய ஏதுவாக நாம் உடைக்கப்படும்படிக்கு தேவகரத்தில் ஒப்புவிப்போமா!

**'நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன் பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.' யோவான் 15:12**

சிந்தனைக்கு:

சொந்த சகோதரனிலோ, அல்லது விசுவாச சகோதரனிலோ யாரிலாவது எனக்கு வெறுப்புணர்வு இருக்குமானால், இன்றே அதைச் சீர்செய்வேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைவிலும் கர்த்தர் போதும்!



வேதவாசிப்பு: ஆதியாகமம் 39:1-6

**'கர்த்தர் யோசேப்போடே இருந்தார். அவன் காரியசித்தியுள்ளவனானான்.'** ஆதியாகமம் 39:2

உறவுகளையும் உடைமைகளையும் இழந்து நிற்கின்ற தனிமை மிகுந்த வேதனை என்றால், எல்லாம் இருந்தும் எதுவும் இல்லாததுபோன்ற நிலைமை மிகக் கொடுமை. அதிலும் அநியாயத்திற்கு உறவுகள் உடைக்கப்படும்போது அதன் தாக்கம் மிக மிகக் கொடுமை!

இப்படியொரு சூழ்நிலையைத்தான் யோசேப்பு அனுபவிக்க நேர்ந்தது. அவனுக்கு அப்பா இருந்தார்; ஆனால் இல்லை. சகோதரர்கள், தன் அம்மாவுக்குப் பிறந்த தம்பிகூட இருந்தான்; ஆனால் இல்லை. சுதந்தர பூமி இருந்தது; ஆனால் இல்லை. வீடு சொத்து சுகம் எல்லாம் இருந்தது; ஆனால் இல்லை. பலவர்ண ஆடை இருந்தது; ஆனால் இல்லை. ஆபிரகாமுக்குப் பூட்டன் என்ற பெருமை இருந்தது; இப்போ அவன் அடிமை. இது கொடுமை அல்லவா! அதிலும் கொடுமை, அவன் நீதியாய் நடந்தான்; அநீதி திணிக்கப்பட்டது. உண்மையுள்ளவனாயிருந்தான்; பொய்யனாக்கப்பட்டான். உத்தமனாயிருந்தான்; எஜமானின் கோபத்துக்கு ஆளாக்கப்பட்டான். அடிமையானாலும் காரியசித்தியுள்ளவனாயிருந்தான்; இப்போ சிறைக்கைதியானான். மொத்தத்தில் யோசேப்பு உடைத்தெறியப்பட்டான். அவன் பூஜ்ஜிய நிலைக்குத் தள்ளப்பட்டான்.

அதற்காக யோசேப்பின் வாழ்வு அழிந்துபோனதா? அண்ணன்மாரினாலேயே குழிக்குள் வீசப்பட்டபோதும், இஸ்மவேலரிடம் விற்கப்பட்டபோதும், பயமும் துயரமும் அவனைச் சும்மாவிட்டிராது. எதிர்காலம் சூனியமாகிவிட்டது என்று எண்ணுமளவுக்கு காரியங்கள் நடந்தன. அப்படிப்பட்ட யோசேப்பு, அந்நிய தேசத்திலே, ராஜாவின் நம்பிக்கைக்குப் பாத்திரவானானது எப்படி? **'தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப்போல வேறொருவன் உண்டோ'** (ஆதி.41:38) என்று ராஜாவினால் புகழப்பட்டது எப்படி? அவன் அந்நிய தேசத்துக்கு அதிகாரியானது எப்படி? இதற்கெல்லாம் ஒரே பதில்: **'கர்த்தர் யோசேப்போடேகூட இருந்தார்'** என்பதே. இது எப்படி? யோசேப்பும் கர்த்தரோடேகூட இருந்தான் என்பதே காரியம். தேவபயம் அவனுக்குள் இருந்தது; இல்லாவிட்டால் பாவசோதனைகளில் பாடுகளில் அவனால் நிலைத்திருந்திருக்கமுடியாது.

பிரியமானவனே! உடைக்கப்படுதல் பெரிதல்ல; அந்த நிலையிலும் தேவன் நம்மோடே இருப்பாரானால் அந்த உடைபடுதலே நமக்கு ஆசீர்வாதமாக மாறும். மனிதன் நம்மை உடைத்தெறிவான். கர்த்தரோ அந்த உடைவுகளுக்கே ஜீவன் தருவார். ஆனால், நாம் கர்த்தரோடே நிற்கிறோமா?

**'நான் விழும்படி நீ என்னைத் தள்ளினாய். கர்த்தரோ எனக்கு உதவி செய்தார்.'** சங்கீதம் 118:13

சிந்தனைக்கு:

யோசேப்புடன் இருந்தவரே என்னுடனும் இருப்பதால் தனிமையுணர்வில் தவிக்கின்ற ஒருவருக்காவது இன்று என்னால் ஒரு நம்பிக்கை கொடுக்கமுடியுமா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானே முதலில் உடைக்கப்பட...

மார்ச்
7
சனி

வேதவாசிப்பு: ஆதியாகமம் 45:1 -14

**'அவன் சத்தமிட்டு அழுதான். அதை எகிப்தியர் கேட்டார்கள். பார்வோனின் வீட்டாரும் கேட்டார்கள்.' ஆதி.45:2**

ஒரு சட்டையில் சிறு கிழிசல் ஏற்பட்டது. எறிந்துவிட மனதில்லாததால், அதைத் தைக்க முயன்றேன். தையல் நேர்த்தியாகவும் பெலமாகவும் இருப்பதற்காக, பொருத்தமான வேறொரு துணியில் ஒரு சிறு துண்டை வெட்டி, இந்தக் கிழிசலின் உட்புறத்தில் வைத்துத் தைத்தேன். அப்போது, 'இந்த உடை கிழிந்ததற்கு, அந்தத் துணி வெட்டப்படவேண்டுமா' என்று எண்ணம் தோன்றியது. (இப்போது யார் இப்படித் தைத்துப் பாவிக்கிறார்கள்?) ஆம், சிலசமயங்களில் பிறரின் உடைவுகளைச் சரிப்படுத்துவதற்கு தேவபிள்ளைகள் நாமேதான் உடைக்கப்படவேண்டியது அவசியமாகிறது.

சகோதர உறவிலிருந்து உடைத்தெறியப்பட்ட யோசேப்பைக் கர்த்தர் உயர்த்தினார். தேசமெங்கும் பஞ்சம் வந்தது. தானியம் நிறைந்திருந்த எகிப்தை நோக்கி மக்கள் அலைமோதினர். அவர்களில் யோசேப்பின் சகோதரரும் இருந்தனர். யோசேப்பு தன் அண்ணன்மாரை அடையாளம் கண்டபோதும், 17வயதில் விற்கப்பட்ட தங்கள் தம்பி இப்போ பெரியவனாகி, எகிப்திய அதிகாரத்தில் உட்கார்ந்திருந்ததால் அண்ணன்மாரினால் அவனை அடையாளங்காணமுடியவில்லை. யோசேப்புக்குப் பழிவாங்க இது நல்ல தருணம். முழு எகிப்தும் யோசேப்பின் பக்கம் இருந்ததால் யோசேப்பு என்ன செய்தாலும் கேட்க ஆள் இருக்கவில்லை. ஆனால் யோசேப்போ, சில காரணங்களினிமித்தம் தன்னை முதலில் வெளிக்காட்டாவிட்டாலும், ஒரு தருணத்தில் தானே உடைந்தான்; சத்தமிட்டு அழுதான். பார்வோனின் வீட்டாரும் கேட்குமளவுக்குக் கதறி அழுதான். உண்மையில் உடைந்து அழுதிருக்கவேண்டியவர்கள் சகோதரர்கள். ஆனால், இங்கே தன் பாசத்தைக் கட்டுப்படுத்த முடியாத யோசேப்பு தானே உடைந்தான். அப்போதுதான் சகோதரரும் உடைந்தனர், பயந்தனர். அங்கேதான் ஒப்புரவாகுதல் ஏற்பட்டது. உடைக்கப்பட்ட உறவு ஒன்றானது.

உடைந்த உறவுகளைச் சரிப்படுத்த, அடுத்தவரே முன்வரவேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் பலர். ஆனால், நம்மை உடைத்தெறிந்தவர்கள் அல்ல; நாமேதான் முதலில் உடைக்கப்படவேண்டியிருக்கிறது. அங்கேதான் நமது கிறிஸ்தவ சாட்சி வெளிப்படுகிறது. கிறிஸ்துவின் பிள்ளைகள் நாம் உடைக்கப்படும்போது, யோசேப்பின் சகோதரரைப்போல, இந்த உலகமும் நிச்சயம் பயப்படும். உடைந்திருக்கிற நம்முடைய உறவுகளைச் சீர்செய்ய இன்று நாம் உடைபடத் தயாராயிருக்கிறோமா?

**'...உங்கள்நிமித்தம் நான் அநுபவிக்கிற உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்து போகாதிருக்க வேண்டிக்கொள்ளுகிறேன். அவைகள் உங்களுக்கு மகிமையாயிருக்கிறதே.' எபேசியர் 3:13**

சிந்தனைக்கு:

மற்றவனுடைய சந்தோஷத்திற்காக, மனமாற்றத்திற்காக, அவன் தன் வாழ்வின் பெறுமதியை உணருவதற்காக, நான் உடைக்கப்படத் தயாராய் இருக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டவரை நினைந்து...

மார்ச்
8
ஞாயிறு

வேதவாசிப்பு: சங்கீதம் 139

**'நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக் கிறீர். என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும்.' சங்கீதம் 139:3**

சிலி நாட்டிலே, 700மீற்றர்(2300அடி) ஆழமுள்ள ஒரு சுரங் கத்தில் 69நாட்களாக சிக்குண்டிருந்த 33 சுரங்கத் தொழிலாளிகள் அதிசயக்கத்தக்க விதமாக மீட்கப்பட்ட சங்கதியை நாம் மறக்கமுடியாது. அவர் களில் 19வயதுள்ள ஒருவன் தன் அனுபவத்தை இப்படி எழுதுகிறான்: "உண் மையிலேயே நாம் 33பேர்கள் அல்ல; 34பேர்கள் இருந்தோம். அந்த ஆழத்திலும் கர்த்தர் எங்களைக் கைவிடவில்லை" என்பதே அது. நமது கடின இருதயங்கள் உடைக்கப்பட, கர்த்தர் நம்மேல் எவ்வளவு கரிசனையாயிருக்கிறார் என்பதை ஒரு கணம் சிந்தித்தாலேபோதும் என்றே நான் நம்புகிறேன்.

தாவீது பகைமையுணர்வுடன் ஜீவித்திருந்தால் எத்தனைபேரைக் கொன் றிருக்கவேண்டும். சவுல் தொடக்கம், சொந்த மகன் அப்சலோம் வரைக்கும் எத்தனைபேர் தாவீதின் வாழ்வை உடைத்தெறிந்தனர். ஒவ்வொரு சந்தர்ப்பத்தி லும் மற்றவர்கள் அல்ல, தாவீதே மனமுடைந்தான் என்று காண்கிறோம். இது எப்படி? அவன் தன்னில் கரிசனையாயிருந்த தேவனை நன்கு அறிந்திருந்தான். கர்த்தர் எல்லாவற்றையும் அறிந்தவர் (வச.1), உணர்வுகளை அறிந்தவர்(வச.1), நினைவுகள் செயல்களை அறிந்தவர்(வச.2,3), பேசுவது, போகும் இடம்(வச.4,5) யாவையும் முற்றிலும் அறிந்தவர். மாத்திரமல்ல, தேவபிரசன்னம் எப்போதும் எந்த இடத்திலும் நம்முடன் இருக்கிறது(வச.7,8). கருவிலேயே கர்த்தர் நம்மைக் கண்டவர், ஒவ்வொரு நாட்களும் அவருடைய புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக் கிறது. அத்தனையாய் கர்த்தர் சர்வவல்லமை மிக்கவராயிருக்கிறார்(வச.13-16). இப்படிப்பட்ட கர்த்தர் நமக்கிருக்க, நாம் அவருக்கு என்ன பதிலுரை செய்யப் போகிறோம்? பகைமையும், குரோதங்களும் கோபங்களும் மனதில்கொண்டு வாழுவோமானால் அது ஆண்டவரை எவ்வளவாய் துக்கப்படுத்தும் என்பதை நாம் சிந்திக்கவேண்டும். தாவீது தன்னை ஆராய்ந்து, நித்திய வழியிலே நடத் தும்படி தேவனிடம் சரணடைந்தான். வாழ்வில் உடைக்கப்பட்டபோதெல்லாம், தாவீது இன்னமும் அதிகமாகப் பெலனடைந்ததன் இரகசியம் இதுதான்.

இன்று நாம் பெலனற்றிருப்பதன் காரணம் என்ன? மனம் கடினப்படும் போதுதான் நாம் அதிகமாகப் பெலனை இழந்துபோகிறோம். நம்மேல் கரிசனை யாயிருக்கிற கர்த்தரை ஒருகணம் நோக்கிப்பார்ப்போம். நமது ஒவ்வொரு அசை வையும் தமது கண்களுக்குள் வைத்து நம்மை நடத்துகிற தேவனை நினைத் தாலே நமது உள்ளங்கள் உடைந்துவிடும். அந்த ஒவ்வொரு உடைவுகளுக் குள்ளிருந்தும் தேவன் அழகிய பூக்களை நிச்சயம் மலரச்செய்வார்.

**'கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும்.... அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது.' சங்கீதம் 103:17**

சிந்தனைக்கு:

உண்மையுள்ள இருதயத்துடன் என் உள்ளத்தைத் திறந்து உடைக்கப்படாத கடினமான பாகங்களை இன்றே தேவனிடம் ஒப்புவிப்பேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைக்கப்பட்ட கற்பனை

மார்ச்

9

திங்கள்

வேதவாசிப்பு: யாத்திராகமம் 32:7-20

**'....மோசே கோபம் மூண்டவனாகி, தன் கையிலே இருந்த பலகைகளை மலையின் அடியிலே எறிந்து உடைத்துப்போட்டு....' யாத்திராகமம் 32:19**

தன் கணவன் தனக்களித்த முதலாவதும், விலைமதிக்க முடியாததுமான ஒரு அன்பளிப்பைப் பத்திரமாகப் பாதுகாத்து வந்த மனைவி, கணவன் தனக்குத் துரோகம் செய்துவிட்டது உறுதிப்பட்டபோது, அந்த அன்பளிப்பைப் போட்டு உடைத்தாள். "நான் உடைத்தது கணவரின் அன்பளிப்பை அல்ல; அவருடைய தவறு எவ்வளவு கொடுமையானது என்பதை உணர்த்தவே அவருடைய அன்புப் பரிசை நான் உடைத்தேன்" என்றாள் அவள்.

தாம் மீட்டுக்கொண்ட ஜனங்கள்மீது அளவில்லா கரிசனைகொண்ட தேவன், தமக்குச் சாட்சியான வாழ்விலே அவர்களை வழிநடத்துவதற்காக **'சீனாய்மலையில் அவர் மோசேயோடே பேசி முடித்தபின், தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளை அவனிடத்தில் கொடுத்தார்.'** (யாத்.31:18) அந்தப் பலகைகளைத்தான் கோபம் மிகுதியினால் மோசே போட்டு உடைத்தான். இப்போ மோசே உடைத்தது கற்பலகைகளையா? கற்பனைகளையா? மோசே உடைத்தது, ஏற்கனவே மலை அடிவாரத்திலே மக்கள் உடைத்துப்போட்ட கற்பனைகளைக்கொண்ட கற்பலகைகளை என்பதை நாம் கவனிக்கவேண்டும். அவர்கள் பொன் கன்றுக்குட்டியைத் தங்கள் தெய்வமாக்கி, அதைக் கொண்டாடியபோதே அவர்கள் தேவனுடைய கற்பனைகளை உடைத்திருந்தார்கள். ஆக, மோசே, தேவனுடைய கையினாலே எழுதப்பட்ட கற்பலகைகளை உடைத்தபோது, தேவஜனத்தின் பாவம் எவ்வளவு கொடிதானது என்பதையே அது காட்டிற்று.

கற்பனையை மீறிய பாவத்திற்காக கர்த்தர் தமது ஜனத்தைக் கொன்றுபோட நினைத்தார். அது அவருடைய நீதி. ஆனால், மோசே ஜனங்களுக்காக மன்றாடியபோது, **'...கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொண்டார்.'** (யாத்.32:14) இது அவருடைய கிருபை. இன்று அந்தக் கிருபை கிறிஸ்துவில் நமக்கு வெளிப்பட்டுள்ளது. ஆக, அந்த நீதியைச் சோதிப்பதோ, கிருபையை நமக்குச் சாதகமாக்கிக்கொள்வதோ நமக்குத் தகாத காரியம். இஸ்ரவேல் கற்பனையை உடைத்தது; தேவ கிருபை அவர்களைக் காத்துக்கொண்டது. அக் கிருபை நமக்கும் உண்டு என்பதற்காக இன்று நாமும் தேவனுடைய வார்த்தையை உடைத்தெறியக்கூடுமோ?

**'பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது.'** ரோமர் 5:21

சிந்தனைக்கு:

இஸ்ரவேலைக் குற்றம் பேசுகின்ற நான், கிறிஸ்துவின் கிருபையின் கீழிருந்தும், தேவனுடைய வார்த்தையை உடைத்தெறிவதுபோல வாழுவது தகுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்த உள்ளத்துடன்...

மார்ச்
**10**
செவ்வாய்

வேதவாசிப்பு: யாத்திராகமம் 40:1-16, 34

**'மகா பரிசுத்த ஸ்தலத்திலே சாட்சிப் பெட்டியின்மீதில் கிருபாசனத்தை வைப்பாயாக.' யாத்.26:34**

தவறு செய்த பிள்ளையை அடித்துவிட்டு, பின்னர் அவன் பக்கத்தில் அமர்ந்திருந்து தடவிக்கொடுத்துக் கண் கலங்கும் தகப்பன்மாரைக் கண்டிருக்கிறீர்களா! மெய்யான அன்பில், பாசத்துடன் கண்டிப்பும் கலந்திருக்கும். கண்டிப்பின் பின் அன்பு அதிகளவாய் ஊற்றெடுக்கும்.

மலையுச்சிக்கு மோசேயை அழைத்த தேவன், மனுஷனை நியாந்தீர்க்கின்ற நியாயப்பிரமாணங்களை மாத்திரம் கொடுத்தனுப்பியிருந்தால், தேவநீதி மாத்திரமே வெளிப்பட்டிருக்கும். கர்த்தரோ அதனுடன் கூடவே ஆசரிப்புக் கூடாரத்தின் மாதிரியையும் காண்பித்தே அனுப்பினார். அதன் மகாபரிசுத்த ஸ்தலத்தில், கற்பனைகள் எழுதப்பட்ட கற்பலகைகளைக்கொண்ட சாட்சிப்பெட்டி வைக்கப்படவேண்டும். அது மனிதனை நியாயந்தீர்க்கும். கர்த்தரோ, அந்தப் பெட்டியின்மீது கிருபாசனத்தை வைக்கும்படி மோசேக்குக் கட்டளையிட்டார். அது கிருபையின் ஆசனம். நீதியுடன் கிருபையையும் வெளிப்படுத்துகின்ற ஆண்டவர் எவ்வளவு உயர்ந்தவர்! ஏற்கனவே மலையடிவாரத்தில் கற்பனைகளை உடைத்துப்போட்ட இஸ்ரவேலில் கர்த்தர் கோபங்கொண்டாலும், புறக்கணிக்கவில்லை. திரும்பவும் மோசேயை அழைத்து, அவனைக்கொண்டு பத்துக் கற்பனைகளாகிய உடன்படிக்கையின் வார்த்தைகளை எழுதுவித்தார் (யாத்.34:28). திரும்பி வந்த மோசே ஆசரிப்புக்கூடாரத்தை, "கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்தான்". சாட்சிப்பெட்டியின்மீது கிருபாசன மூடியை வைத்து, மறைவின் திரைச்சீலையைத் தொங்கவைத்து சாட்சிப்பெட்டியை மறைத்துவைத்தான்.

கற்பனைகள் அடங்கிய சாட்சிப்பெட்டி தேவனுடைய நீதியை வெளிப்படுத்தியது; அதன் மீது வைக்கப்பட்ட கிருபாசனம் பாவ மனிதன் மீட்கப்பட தமது கிருபை வேண்டும் என்பதை பழைய ஏற்பாட்டிலேயே கர்த்தர் வெளிப்படுத்திவிட்டார். அந்தக் கிருபை கிறிஸ்துவில் நமக்கு வெளிப்பட்டிருக்கிறது. அவர் தம்மைப் பலியாக்கியதால் திரைச்சீலை கிழிய, தேவசந்நிதானத்திற்கு தைரியமாய் கிட்டிச்சேருகின்ற பாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். இந்தப் பெரிய கிருபையை, அதனாலுண்டான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்று, அதனைத் துஷ்ப்பிரயோகம் செய்வோமானால் நாம் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வோம்?(எபி.2:4) ஆகவே, ஆண்டவரின் அன்பையும் கிருபையையும் நினைந்து உடைந்த உள்ளத்துடனும் நொருங்குண்ட ஆவியுடனும், அவருடைய கிருபாசனத்தண்டை சேருவோமாக.

**'ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.' எபிரெயர் 4:16**

சிந்தனைக்கு:

நான் மரணத்துக்கு நியமிக்கப்பட்டவன் என்பதையும், தேவகிருபையே என்னை மீட்டது என்றும் நினைக்கும்போது, எனது உள்ளம் உடையவில்லையா???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைக்கப்பட்ட உடன்படிக்கை

மார்ச்

**11**

புதன்

வேதவாசிப்பு: எண்ணாகமம் 14:26-39

**'....எதுவரைக்கும் இந்த ஜனங்கள் எனக்குக் கோபம் உண்டாக்குவார்கள்? தங்களுக்குள்ளே நான் காட்டின சகல அடையாளங்களையும் அவர்கள் கண்டும், எதுவரைக்கும் என்னை விசுவாசியாதிருப்பார்கள்?' எண்ணாகமம் 14:11**

"என் பொறுமைக்கும் எல்லையுண்டு. எல்லாவற்றையும் விட்டெறிந்து விட்டுப் புறப்பட்டுவந்துவிட்டேன்" என்றார் குடும்ப உறவை உடைத்தெறிந்த ஒருவர். இத் தம்பதிகளின் விவாக உடன்படிக்கை உடைந்தது.

தேவன் தாம் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையை ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் நினைவூட்டி, இஸ்ரவேலுக்கும் உறுதிப்படுத்தினார். உடன்படிக்கையின் புஸ்தகம் வாசிக்கப்பட்டபோது, கர்த்தர் சொன்னபடியெல்லாம் கீழ்ப்படிந்து நடப்போம் என்று சொன்ன ஜனங்கள்மீது மோசே பலி இரத்தத்தைத் தெளித்து, "...கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான்" (யாத்.24:8) ஆனால், அவர்களோ திரும்பவும் உடன்படிக்கையை உடைத்தெறிந்தனர். இதன் விளைவாக, அவர்களில் இருவரைத் தவிர யாரும் கானானுக்குள் கால் மிதிக்கவில்லை. கர்த்தர் சொன்னபடி அவர்களுடைய பிள்ளைகளே கானானுக்குள் பிரவேசித்தார்கள். உடன்படிக்கையில் மாறாத கர்த்தர், அடுத்த சந்ததியை கானானுக்குள் பிரவேசிக்கப்பண்ணினார். ஆனால், இஸ்ரவேலோ தங்கள் உள்ளங்களில் உடைந்து மனந்திரும்புவதை விடுத்து, அடிக்கடி உடன்படிக்கையையே உடைத்தார்கள்.

ஆகவேதான், கர்த்தர், இனி ஒருபோதும் உடைக்கப்படாத நித்திய உடன்படிக்கையாக புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். அதற்குச் சாட்சியாக கிறிஸ்துவையே ஏகபலியாக்கவும் சித்தங்கொண்டார். இஸ்ரவேலினால் நிறைவேற்றத் தவறிய பழைய உடன்படிக்கையை, கிறிஸ்துவின் இரத்தத்தால் உண்டான புதிய உடன்படிக்கை நிறைவேற்றியது. பழைய உடன்படிக்கை எதைச் சுட்டிக்காட்டியதோ அது கிறிஸ்துவில் நிறைவேறியது. இதற்காக நாம் அல்ல; கிறிஸ்துவே உடைக்கப்பட்டார் என்பதை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. அன்று இஸ்ரவேல், கர்த்தர் செய்த மகா அடையாளங்களைக் கண்டும் உடன்படிக்கையை உடைத்தெறிந்தனர். இன்று கிறிஸ்துவின் மகா பலியை நாம் அறிந்தும், அதனாலுண்டான மீட்பை அனுபவித்தும், நமது இருதயத்தில் நாம் உடைவதை விடுத்து, அந்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்று எண்ணி கிருபையின் ஆவியை நிந்திப்போமானால் (எபி.10:29), நாம் எவ்வளவு கொடியவர்களாவோம்!

**'...இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.' 1கொரிந்தியர் 11:25**

சிந்தனைக்கு:

கிறிஸ்துவின் பலியை நினைந்து உள்ளத்தில் உடைந்திருக்கிறேனா? அல்லது, இன்னமும் இஸ்ரவேலின் வழிநின்று உடன்படிக்கையை உடைக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்பாண்டங்கள் உடையட்டும்!

மார்ச்

12

வியாழன்

வேதவாசிப்பு: நியாயாதிபதிகள் 7:16-22

**'....இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.' 2கொரிந்தியர் 4:7**

பரிசுப்பொருள் என்னவென்று பார்க்கவேண்டுமானால். அந்த பரிசுப்பொதி பார்ப்பதற்கு அழகாயிருந்தாலும், அது உடைக்கப்படவேண்டும். பொதியா? அதற்குள்ளிருக்கும் பரிசா?

மீதியானியரிடமிருந்து இஸ்ரவேலை மீட்பதற்காகக் கிதியோனை அழைத்த கர்த்தர், அவனிடம் பெரிதாக எதையும் கொடுக்கவில்லை. யுத்தவீரர் முந்நூறு பேர்கள், அவரவர் கைகளில் ஒரு எக்காளம், வெறும் பானை, அந்தப் பானைக்குள் தீவட்டி, இவ்வளவும்தான் யுத்தத்துக்கு கொடுக்கப்பட்ட ஆயுதங்கள். இது வேடிக்கையல்லவா! மூன்று படையாகப் பிரித்துப் பதிவிருக்கப் பணிக்கப்பட்ட அந்த முந்நூறு பேரிடமும், 'நான் எப்படிச் செய்கிறேனோ அப்படியே நீங்களும் செய்யவேண்டும்' என்றான் கிதியோன். நடு ஜாமத்தின் துவக்கமே சரியான நேரம் என்று கண்ட கிதியோனும் அவனோடிருந்தவர்களும் எக்காளத்தை ஊதி கையிலிருந்த பானைகளை உடைத்தார்கள். மற்றவர்களும் அப்படியே பானைகளை உடைத்து, தீவட்டிகளை இடதுகையிலும், எக்காளங்களை வலதுகையிலும் பிடித்துக்கொண்டு, “கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம்” என்று சத்தமிட்டார்கள், அவ்வளவும்தான். கிதியோன் தனது பானையை உடைக்க, மற்றவர்களும் தங்கள் தங்கள் பானைகளை உடைத்தனர். அப்படி உடைத்திராவிட்டால் தீவட்டிகளின் வெளிச்சம் பிரகாசித்திராது; மீதியானியரும் பயந்து பின்வாங்கி ஓடியிருக்கமாட்டார்கள்.

நாமும் இன்று ஒரு பெரிய போர்க்களத்தில்தான் நிற்கிறோம். சுவிசேஷமாகிய ஒளி மண்பாண்டங்களாகிய நமக்குள் வைக்கப்பட்டிருக்கிறது. தேவன் அன்று கிதியோனை அழைத்ததுபோல, இன்று நம் ஒவ்வொருவரையும் நம்பித்தானே கிறிஸ்துவின் சுவிசேஷ ஒளியை நமக்குள் தந்திருக்கிறார். சத்துருவின் கோட்டையைத் தகர்க்க அந்த வெளிச்சத்தைத் தவிர வேறு எதனாலும் முடியாது. நாம் அதிகமாக எதுவும் செய்யவேண்டிய அவசியமே இல்லை. கிறிஸ்து யாவையும் செய்துவிட்டார். அவர் நமக்குள் வைத்திருக்கும் அந்த ஒளியை வெளிஉலகுக்கு வெளிச்சம்போட்டுக் காட்டவேண்டிய ஒன்றுதான் நமது பொறுப்பு. சத்துரு தோற்கடிப்பட்டு மக்கள் விடுவிக்கப்படவேண்டுமானால் மண்பாண்டங்களாகிய நாம் உடைக்கப்படவேண்டும். நாமோ நமக்குள் சுவிசேஷத்தைப் பொத்திவைத்திருக்கிறோம். நமக்குள் வைக்கப்பட்டுள்ள சுவிசேஷ ஒளி பிரகாசிக்கும்படி நாம் உடைக்கப்பட நம்மைக் கொடுப்போமா?

**'நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், ....எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம்.' 1தெசலோனிக்கேயர் 2:8**

சிந்தனைக்கு:

நான் சுவிசேஷ ஒளியைப் பெற்றுக்கொள்ளும்படி உடைக்கப்பட்டவர் யார்? பிறருக்காக என்னை உடைத்து சுவிசேஷ ஒளியைப் பிரகாசிக்கப்பண்ணுவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைபடாத உள்ளம்

மார்ச்
**13**
வெள்ளி

வேதவாசிப்பு: 1சாமுவேல் 15:10-31

**'....நான் கர்த்தருடைய கட்டளையையும் உம்முடைய வார்த்தைகளையும் மீறினதினாலே பாவஞ்செய்தேன். நான் ஜனங்களுக்குப் பயந்து அவர்கள் சொல்லைக் கேட்டேன்.'** 1சாமுவேல் 15:24

விளையாடும்போது கோபப்பட்ட தம்பி அண்ணனை அடித்துவிட்டான். அப்பாவிடம் முறைப்பாடு போனது. அவர் சின்னவனை அழைத்து, அண்ணாவிடம் sorry கேள் என்றார். தம்பியோ பேசாமல் நின்றான். அப்பா விடவில்லை. அப்பா சொன்னதற்காக, 'sorry' என்று ஏனோதானோவென்று சொல்லிவிட்டுச் சென்றான் தம்பி. அண்ணாவை அடித்ததற்காக தம்பி மனம்வருந்திக் கேட்ட மன்னிப்பா இது? இல்லவேயில்லை.

ஏற்கனவே ஒரு தவறைச் செய்துவிட்ட சவுல் இரண்டாந்தரமும் கீழ்ப்படியாமற்போனான். அதன் விளைவைக் குறித்து சாமுவேல் சொன்னபோது, 'நான் பாவஞ் செய்தேன்' என்று சவுல் சொன்னது, உள்ளம் உடைந்து சொன்ன வார்த்தையா? இல்லை. ஏனெனில், சவுல் திரும்பவுமாகத் தவறு செய்தான். அதற்கு ஜனங்களைச் சாட்டினான். அவனுக்கு இப்போ தனது பாவமோ, அதன் பயங்கர விளைவோ கணக்கில் இல்லை. தான் ஜனத்தின் மூப்பர்கள் முன்பாகவும், இஸ்ரவேலுக்கு முன்பாகவும் தான் கனம்பண்ணப்படவேண்டும். தான் தேவனைத் தொழுதுகொள்வதை மக்கள் பார்த்தால்தான் அவர்கள் தன்னைக் கனம்பண்ணுவார்கள், இதுதான் அவனது கவலை. செய்த தவறுக்கு மனம் வருந்துகின்ற ஒருவன் பேசும் பேச்சா இது? ஏதோ சாட்டுக்கு ஒரு மன்னிப்பு, அவ்வளவுதான். ஆனால், சாமுவேலோ உள்ளம் உடைந்தான். சவுலை ராஜாவாக்கினதினிமித்தம் கர்த்தர் மனஸ்தாபப்பட்டதனால், **'....சாமுவேல் மனம் நொந்து, இராமுழுதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்.'** (1சாமு.15:11)

கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்து, கீழ்ப்படியாமல், நம் இஷ்டப்படி நாம் நடக்கும்போது நமது நிமித்தம் கர்த்தர் எவ்வளவாய் துக்கிக்கிறார் என்பதை 1சாமுவேல் 15:11 தெளிவாக விளக்குகிறது. சவுல் தான் செய்த தவறை உணர்ந்து, அல்லது சாமுவேல் உணர்த்தியபோது அதை ஏற்றுக்கொண்டு உண்மையாகவே உடைந்த உள்ளத்துடனும் மனஸ்தாபத்துடனும் மனந்திரும்பி அதைச் சரிசெய்திருந்தால் கர்த்தர் அவனைத் தள்ளிவிட்டிருப்பாரோ! அப்படித் தள்ளிவிட அவர் அநீதியுள்ள தேவன் அல்லவே! மனம் உடைந்த சாமுவேல் இறுதிவரைக்கும் தேவனோடிருந்தார். கடின இருதயத்துடனிருந்த சவுலோ ராஜ்யத்தையும் இழந்து, தன்னையும் இழந்தான். இந்த நிலைமை நமக்கு வேண்டாம். இன்றே உண்மையாய் மனந்திரும்புவோமாக.

**'சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிர கோபாக்கினை வரும்.'** ரோம.2:8

சிந்தனைக்கு:

உடைபடாத உள்ளத்தில் தேவன் வாசம்பண்ணுவாரா? நான் ஆண்டவரிடமும், பிறரிடமும் கேட்கும் மன்னிப்பு உண்மையாகவே உடைந்த உள்ளத்திலிருந்து புறப்படுகிறதா? அல்லது, வெறும் நடிப்பா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொருங்குண்ட பாத்திரம்

மார்ச்
**14**
சனி

வேதவாசிப்பு: 2சாமுவேல் 12:7-23

**'உமது சமுகத்தைவிட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாம லும் இரும்.' சங்கீதம் 51:11**

கண்ணாடிப் பாத்திரத்தைக் கையில் எடுக்க, அது துண்டு துண்டாய் உடைந்தது. ஏற்கனவே வெடிப்பேறியிருக்கவேண்டும். நொருங்கிப் போனதை குப்பையில் எறிந்துவிடுவதைத் தவிர வேறு என்ன செய்யலாம்?

வெடிப்பேறியது தெரியாமல்தான் தாவீதும் ராஜ சிங்காசனத்தில் வீற்றி ருந்தான். "நீயே அந்த மனுஷன்" என்று தாவீதின் பாவத்தை நாத்தான் உணர்த் தியபோதுதான் தாவீதின் வாழ்வில் ஏற்பட்டிருந்த வெடிப்பு சிதற ஆரம்பித்தது. "கர்த்தருக்கு விரோதமாக நான் பாவஞ்செய்தேன்" என்று கதறியபோது அவன் நொருங்கிப்போனான். "தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ் செய்து...." என்று தன் பாவத்தை உணர்ந்து மன்னிப்பிற்காக ஜெபித்தபோது, அவனுடைய நொருங்கிய உள்ளம் வெளிப்பட்டது. ஒளிப்பிடத்தில் செய்த பாவம் வெளிப்பட்டபோது, தேவசமுகத்திலிருந்து தான் தள்ளப்பட்டுவிட்டதை உணர்ந் தான். அதுதான் அவனுடைய மெய்யான மனந்திரும்புதலின் அடையாளம். நொருங்கிய தாவீதைக் குப்பைக்குள் தூக்கிவீச அவன் கண்ணாடிப்பொருள் அல்ல. கர்த்தர் அவனுடைய நொருங்குதலைக் கண்டார். தேவ மன்னிப்பைப் பெற்ற உறுதி ஏற்பட்டதால்தான், "தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித் தீர்" (சங்.32:5) என்று பின்னர் பாடிவைத்தான் தாவீது. சில விளைவுகளை முதலில் சந்தித்தாலும், தேவகரம் கூடவே இருந்ததால், முதிர்வயது வரைக்கும் தேவனுக்குப் பிரியமானவனாக வாழ்ந்து மரித்தான் தாவீது.

நாம் பாவமனுஷர் என்பதைத் தேவன் அறிவார். ஆனால், நாம் நொருங்குமட்டும் கர்த்தரால் நமது வாழ்வில் எதுவும் செய்யமுடியாது. பாவம் மன்னிக்கப்பட்டாலும், சில விளைவுகளை நம்மால் தவிர்க்கமுடியாது. பிரபல மான ஒருவரைச் சுட்டுக்கொன்றதற்காக இருவருக்குத் தூக்குத்தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது. அந்த நாளுக்காக சிறையில் காவல் வைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் அவர்கள் கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானமும் பெற்றார்கள். அதற்காக அவர்களுடைய தண்டனை ரத்தா னதா? இல்லை. ஆனால் அவர்கள் மகிழ்ச்சியோடு தண்டனையை ஏற்றுக் கொண்டனர். (இது பல வருடங்களுக்கு முன்னர் நமது நாட்டில் நடந்தது; சமீபத்தில் பத்திரிகையில் வெளியானது.) தர்க்கங்களையும் சுயநீதிகளையும் களைந்துவிட்டு, நம்மை நாமே உணர்ந்து, நொருஙகுண்டவர்களாக தேவ சமுகத்தில் வந்து சேர தேவாவியானவர் நம்மை நடத்துவாராக.

**'தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான். தேவனே, நொறுங் குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.' சங். 51:17**

சிந்தனைக்கு:

கடின இருதயத்தை உடைத்து, என்னை ஆராய்ந்து, என் வெடிப்புகளைச் சரி செய்யும்படி இன்றே நொருங்குண்ட இருதயத்துடன் தேவசமுகம் சேருவேனா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேவிபோசேத்

மார்ச்
15
ஞாயிறு

வேதவாசிப்பு: 2சாமுவேல்:9:1 -13

**'அப்பொழுது அவன் வணங்கி: செத்த நாயைப்போலிருக்கிற என்னை நீர் நோக்கிப்பார்க்கிறதற்கு உமது அடியான் எம்மாத் திரம் என்றான்.' 2சாமுவேல் 9:8**

உள்ளம் உடைந்தால் 'மனஅழுத்தம்' என்போம்; கால்கள் முறிந்தால் 'முடம்' என்போம்; உள்ளமும் அவயவங்களும் சேர்ந்து உடைந் தால் என்னவென்போம்? இந் நிலையில் ஒருவன் சாதாரணமான வாழ்வு வாழுவது மிக மிகக் கடினம்.

மேவிபோசேத் ஐந்து வயதாயிருந்தபோது, அவனுடைய தகப்பன் யோனத்தானும் தாத்தா சவுலும் இறந்துபோனார்கள். சவுலின் முழுக் குடும்பத் துக்கும் அழிவு நேரிட்டபோது, இப் பிள்ளையின் தாதி இவனை எடுத்துக் கொண்டு ஓடிப்போனாள். அந்த அவசரத்தில் அவன் விழுந்து முடவனானான். (2சாமு.4:4) இவனுக்கும் தாதிக்கும் மாகீர் என்பவன் அடைக்கலம் கொடுத்திருந் தான். சிறுவயது, உயிராபத்து, குடும்ப உறவு என்று சொல்ல யாருமற்ற நிலை, கால்கள் முடம், வேற்று மனுஷன் வீட்டில் வாழுதல், இவை போதாதா ஒரு மனுஷன் உடைந்து நொருங்க??? இப்போது, எந்த ராஜாவுக்குப் பயந்து ஒளித்திருந்தானோ அந்த ராஜாவிடமிருந்தே அழைப்பு வருமானால் இதை என்னவென்று நினைப்பது? மேவிபோசேத் தாவீதிடம் கொண்டுவரப்பட்டபோது, முகங்குப்புற விழுந்து வணங்கியதிலிருந்து அவனுடைய பயந்த, உடைந்த உள்ளம் வெளிப்பட்டது. தன்னைத்தானே 'செத்தநாய்' என்று சொன்னபோது அவன் நொருங்குண்டிருந்தது தெரிந்தது. ஆனால், அவன் பயந்ததுபோல எதுவும் ஆகவில்லை. தன்னைக் கொல்ல வகைதேடின சவுலின் வம்சத்தில் எஞ்சியிருப்பவனையும் கொன்றுபோட தாவீது நினைக்கவில்லை. தன் நண்பன் யோனத்தானின் நிமித்தம் இவனுக்குத் தயைசெய்யத்தக்க மனதைக் கர்த்தர் தாவீதுக்குக் கொடுத்திருந்தார். ராஜவம்சத்திலிருந்து வந்த அவனை தாவீது கனப்படுத்தினான். "நீ பயப்படாதே. நீ என் பந்தியில் நித்தம் அப்பம் புசிப்பாய்" என்று சொல்லி, சவுலின் சகல நிலங்களையும் அவனுக்குக் கொடுப்பதாகவும் வாக்களித்தான் தாவீது. உடைந்த உள்ளம் குணப்பட்டிராதா!

ஐந்து வயதிலிருந்தே உள்ளம் உடைந்தவனாக ஒளிந்து வாழ்ந்த மோவிபோசேத்தை தாவீதின் கண்கள் கண்டது என்றால், உடைபட்ட நமது உள்ளங்களைக் கர்த்தர் காணாதவர்போல இருப்பாரா? உள்ளங்கள் உடைய லாம்; அவயவங்கள் ஊனமாகலாம். ஆனால் கர்த்தரையே நம்பி ஜீவிக்கும் ஜீவியத்தில் நாம் பின்வாங்கிப்போகக்கூடாது. உலக பாரம் அல்ல; இயேசு தொங்கிய சிலுவை நம்மை உடைத்து நொருக்கட்டும்.

**'உமது கிருபையிலே களிகூர்ந்து மகிழுவேன். நீர் என் உபத்திரவத்தைப் பார்த்து, என் ஆத்துமவியாகுலங்களை அறிந்திருக்கிறீர்.' சங்கீதம்31:7**

சிந்தனைக்கு:

என் இழப்புகளில் நான் தேவனைக் குறை கூறியிருக்கிறேனா? அல்லது, நொருங்குண்ட இருதயத்துடன் அவருக்காய் காத்திருக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடைந்துபோனாலும் காத்திரு!

மார்ச்
**16**
திங்கள்

வேதவாசிப்பு: 1சாமுவேல் 1:1-19

**'என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு.' சங்கீதம் 42:5**

1993ம் ஆண்டு பெப்ரவரி மாதம். ஒரு அநியாய வழக்கிற்கு முகங்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஒருவருக்கு. "நாளை நான் சந்திக்கப்போகும் வழக்கில் உமக்குச் சாட்சியாய் என்னை நிறுத்துவதானால், நாளை நான் இந்த உலகத்தைக் காணட்டும்" என்று அவர் ஜெபித்தார். எந்த உதவியுமின்றி நொருங்கிப்போன இருதயத்தில் 'ஏன் கலங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு' என்ற சத்தம் ஒலித்துக்கொண்டே இருந்தது என்றார் அவர். காலையில் கண்விழித்து, தான் இன்னமும் உயிருடன் இருப்பதைக் கண்ட அவருக்கு, 'தேவன் பெரிய காரியம் செய்வார்' என்ற நிச்சயம் உண்டானது. பயமும் கலக்கமும் மறைந்தது. இறுதியில் இவருக்கு எதிராக வழக்கு வைத்தவர் இவரிடம் மன்னிப்புக் கோரியபோது தன்னால் தேவனைத் துதிக்காமல் அவ்விடத்தைவிட்டு அசையமுடியவில்லை என்றார் அவர்.

அன்னாளுக்கு ஏற்பட்ட நிந்தைக்கு, பிள்ளை இல்லை என்பதைவிட, பெனின்னாள் அவளை மனமடிவாக்கியதுதான் முக்கிய காரணமாயிற்று. "கர்த்தருடைய ஆலயத்தில் அன்னாள் மனங்கசந்து மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினாள்" என்று வாசிக்கிறோம். வருஷந்தோறும் ஆலயத்துக்குப் போகும்போதெல்லாம் ஒரு பெண் இந்த நிந்தைக்கு, அதிலும் அவளுடைய சக்களத்தியின் நிந்தைக்கு முகங்கொடுப்பதென்றால் அது கொடுமை! அவளுடைய ஆத்துமா கலங்கித் தவித்தது. ஆனால், அவள் ஆசாரியனாகிய ஏலியிடமோ, தன் கணவனிடமோ, வேறு யாரிடமோ எதுவும் சொல்லவில்லை. உடைந்த உள்ளத்துடன் அன்னாள் கர்த்தரையே நோக்கினாள். அவளுடைய விண்ணப்பம் சாதாரணமானது அல்ல; கர்த்தருடைய சந்நிதானத்தில் இருதயத்தை ஊற்றிவிட்ட ஜெபம் அது. அவளுக்கு ஒரு சாமுவேல் பிறந்தான். பெனின்னாள் பெற்ற பிள்ளைகள் யார் என்றும் தெரியாத பட்சத்தில், அன்னாளின் மகன் சாமுவேல் கர்த்தருடைய உத்தம ஊழியனாய் கடைசி மட்டும் வாழ்ந்தார் என்றால், இதிலே அன்னாளின் பங்களிப்பு மிகப் பெரியதாகும்.

உடைந்த உள்ளத்துடன், தேவனுக்குக் காத்திருக்கும் ஒருவனை தேவன் ஒருபோதும் தள்ளமாட்டார். உபத்திரவங்கள் நிந்தைகள் வரும். ஆனால், கர்த்தர் தாமே தமது கரத்தை உயர்த்தும்படி விட்டுவிடுவோமானால், என்றும் அழியாத உன்னத கிருபை நமக்கு நிச்சயம் கிடைக்கும். உள்ளம் உடைந்தாலும் தேவனுக்காய் காத்திருப்போம்.

**'நான் சிறுமையும் எளிமையுமானவன். கர்த்தரோ என்மேல் நினைவாயிருக்கிறார். தேவரீர் என் துணையும் என்னை விடுவிக்கிறவருமாயிருக்கிறீர்.' சங்கீதம் 40:17**

சிந்தனைக்கு:

உள்ளம் உடைந்த வேளைகளில் தேவனுக்காய் காத்திராமல் சுயவழி சென்று வெட்கப்பட்ட சந்தர்ப்பங்கள் உண்டா? உடைவுகளைத் தேவன் கவனிப்பாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்ததைச் சீர்செய்ய...

மார்ச்
**17**
செவ்வாய்

வேதவாசிப்பு: ரூத் 1:1-7(அ)

**'...நீங்கள் என்னை நகோமி என்று சொல்லாமல், மாராள் என்று சொல்லுங்கள். சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார்.'** ரூத்.1:20

நுவரேலியா பிரதேசத்திலே வளருகின்ற பூஞ்செடியை யாழ்ப்பாணத்தில் வளர்க்க ஆசைப்பட்டால் என்னவாகும்? நாம் எடுக்கும் தீர்மானங்களே சிலசமயங்களில் நமது மனஉடைவுக்குக் காரணமாகிவிடுகிறது. பூஞ்செடி வாடினால் பரவாயில்லை; ஆனால் வாழ்க்கை உடைந்துபோனால்??? அது சீர்செய்யப்பட வாய்ப்புக் கிடைப்பது என்பது நிச்சயமற்ற விடயம்.

'அப்பத்தின் வீடு' என்ற அர்த்தம்கொண்ட பெத்லெகேம் ஊரிலிருந்து உணவு தேடி மோவாப் தேசத்திற்குத் தன் குடும்பத்தை அழைத்துக்கொண்டு போனான் எலிமலேக்கு. உணவு கிடைத்திருக்கும், ஆனால் உடைந்தது அவனுடைய மனைவி நகோமிதான். அவள் தன் கணவனையும் இழந்து, தன் இரண்டு குமாரரையும் இழந்தாள். மோவாபிய, அதாவது புறவின மருமக்கள் மாத்திரமே எஞ்சிய நிலையில், அதிலும் ஒரு மருமகள் திரும்பித் தன் ஊருக்குச் சென்றுவிட, ஒரு மருமகளுடன் பெத்லெகேமிற்குத் திரும்பினாள் நகோமி. 'பிரியமுள்ள' என்ற அர்த்தமுள்ள பெயரைத் மாற்றி 'கசப்பு' என்ற அர்த்தமுள்ள மாராள் என்ற பெயரை தனக்குத் தானே சூட்டிக்கொள்ளுமளவுக்கு நகோமியின் வாழ்வு உடைந்து நொருங்கிவிட்டிருந்தது. ஆனாலும், பெத்லெகேமுக்குத் திரும்பி வருவது என்று அவள் எடுத்த முடிவுதான் நகோமியின் உடைந்த காயங்களைக் குணமாக்கியது. "இன்று உனக்குத் தயை செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று மற்ற ஸ்திரீகள் நகோமியை வாழ்த்துவதற்கு வழிவகுத்தது.

பலவேளைகளிலும் நாம் எடுக்கும் தீர்மானங்களும், நமது செயல்களும் நமக்குச் சரியானவைபோலவே தோன்றும். அவை நன்றாகவும் இருக்கும்; எதிர்பார்த்தவையும் கிடைக்கும். ஆனால், எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராதவை நிகழும்போது, "எனக்கு இது ஏன்" என்று தடுமாறிப்போகிறோம். நமது வாழ்வில் உடைவுகள் ஏற்படும்போது, இழப்புகள் நம்மை உருக்குலைக்கும் போது சற்று அமர்ந்திருந்து நாம் கடந்துவந்த பாதைகளை நிதானிப்பது நல்லது. நகோமி மனந்திரும்பி நல்லதொரு தீர்மானம் எடுத்தாள். அவளுக்கு ரூத் மருமகளாகக் கிடைத்ததும் ஒரு பாக்கியமே. நமது வாழ்வில் ஏற்படும் உடைவுகளுக்குக் காரணம் தேடுவதையும், பிறரைச் சாடுவதையும் விட்டுவிட்டு, நாம் மனந்திரும்புவதே நல்லது. அதுவே நமது சொஸ்தத்திற்கும் ஆசீர்வாதத்திற்கும் ஒரே வழி. மனந்திரும்புதல் நிச்சயம் மகிழ்ச்சியைத் தரும். ஏனெனில் மனந்திரும்புகின்ற எவரையும் தேவன் தள்ளமாட்டாரே!

**'தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது.'** 2கொரி.7:10

சிந்தனைக்கு:

என் வாழ்வில் ஏற்பட்ட அல்லது இன்று ஏற்பட்டிருக்கிற உடைவுகளுக்கு காரணம் என்ன? நான் எந்த இடத்தில் மனந்திரும்பவேண்டும்? சிந்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்துபோனாலும் நம்பிக்கையுண்டு!

மார்ச்

**18**

புதன்

வேதவாசிப்பு: மாற்கு 5:22-34

**'நான் அவருடைய வஸ்திரத்தையாகிலும் தொட்டால் சொஸ்த மாவேன் என்று தன் உள்ளத்தில் எண்ணிக்கொண்டு அவர் பின்னாலே வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட் டாள்.' மத்தேயு 9:21**

நீண்ட காலம் வியாதிப்பட்டதனால் உடலிலும், உள்ளத்திலும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்காக நாம் பாரப்பட்டிருக்கிறோமா?

பெயர் அறியப்படாத ஒரு பெண் அவள்; வியாதியால் 12 வருடங்களாக வருத்தப்படுகிறாள் என்பது இலகுவான விடயம் அல்ல. வைத்தியனான லூக்கா வின்படி அவளுடைய வியாதி வைத்தியர்களால் குணப்படுத்தமுடியாத ஒன்றா யிருந்தது (லூக்.8:43). அன்றைய சமுதாயத்தில், அவளுடைய நிலைமை கண வனால் வெறுக்கப்படவும், சமூகத்தால் தள்ளப்படவும் ஏதுவான ஒன்று. யூத பிரமாணத்தின்படி அவள் தீட்டானவள். அவளும் யாரையும் எதனையும் தொட முடியாது, அவளைத் தொட்டதும் தீட்டு என்று கருதப்படும். இயல்பான வாழ்வு வாழமுடியாத அவள் எல்லா வைத்தியரையும் நாடினாள்; பணமும் விரயமானது. இப்படிப்பட்ட நிலை நமக்கு வருமானால் நாம் உடைந்து சுக்குநூறாக மாட்டோமா? தற்கொலை செய்தாலென்ன என்று யோசிக்கவராதா? ஆனாலும், 12 வருடங்களாகப் போராடிய இவளது வாழ்விலும் ஒருநாள் மலர்ந்தது. இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டாள். எப்படியும் தான் சுகமடைய வேண்டும் என்பதற்காக, தீட்டையும் மறந்து, இரகசியமாகத்தன்னும் அவருடைய வஸ்திரத்தையாகிலும் தொடவேண்டும் என்று நினைத்து, தைரியமாக வஸ்திரத் தின் ஓரத்தைத் தொட்டாள்; உடைந்துபோயிருந்த அவளது சரீரத்துக்கும் உள்ளத்துக்கும் நம்பிக்கை பிறந்தது; அவள் சுகமானாள், புத்துயிர் பெற்றாள்.

டோனாவூரிலே அநேக பெண்பிள்ளைகளுக்கு வாழ்வளித்த ஏமி கார் மைக்கல் அம்மையார், ஒருநாள் தடுக்கி விழுந்ததால் ஏறத்தாழ 14 ஆண்டு களுக்கும் மேலாக படுக்கையாகிக் கிடந்தார். அதற்காக அவர் தன் நம்பிக் கையை இழக்கவில்லை. படுக்கையிலிருந்து அவர் எழுதிய தியான நூல்களும் மற்றைய நூல்களும் இன்றும் பல உடைந்த உள்ளங்களுக்குப் புத்துயிர் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. இதுதான் வாழ்வின் வெற்றி. சுகத்திற்காக அன்று ஏங்கிய அந்தப் பெண்ணின் விசுவாசமும், சுகவீனத்திலும் தேவனைப் பறைசாற்றுவேன் என்ற இவரின் விசுவாசமும் இன்று நமக்குண்டா? உடைந்து போனாலும் நம்பிக்கையுடன் எழுந்து ஒளிவீச இயேசு நமக்கிருக்கிறாரே!

**'....கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.' 2கொரி.12:9**

சிந்தனைக்கு:

உடைந்த உள்ளத்துடன் இன்னமும் ஏன் நான் போராடவேண்டும். அந்த உடைவிலிருந்து நானும் எழுந்து, பிறரையும் தைரியப்படுத்துவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்து வீசும் நறுமணம்!

மார்ச்
21
சனி

வேதவாசிப்பு: லூக்கா 7:36-50

**'...அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங் களை முத்தஞ்செய்து, பரிமளதைலத்தைப் பூசினாள்.' லூக்7:38**

நாம் வசதியாய் ஜீவிக்கும்போது நம்முடன் நட்பாயிருக்கிறவர்களில் எத்தனைபேர், நாம் மிகுந்த பணநெருக்கடியில் திகைத்து நிற்கும்போது நமக்கு உதவ முன்வருவார்கள்? அப்படியான தருணங்களில் நம்மைத் தாங்குகிறவர் களை நம்மால் மறக்கவும்முடியாது; மறந்தால் நாம் மனுஷருமல்ல.

பகிரங்கமாக பாவத்தில் ஜீவித்திருந்தாலும், இருதயம் நிறைய நன்றி யைச் சுமந்துநின்ற ஒரு பெண்ணைத்தான் இன்று சந்திக்கிறோம். ஜாதி, சுத்தம் என்று பல ஆச்சாரங்களுள்ள பரிசேயன் வீட்டிலே ஒரு பாவியான ஸ்திரீயா? அழைப்பும் இன்றி துணிகரமாக உள்ளே வந்தவள் யாரையும் பொருட்படுத் தாமல், வேகமாகச் செய்துமுடித்த காரியம் எல்லோரையும் திகைப்புக்குள்ளாக் கியிருக்கும். அவளோ வெட்கப்படவில்லை; அழுதாள். இயேசுவின் பாதங்களில் கண்ணீர் சிந்தினாள். ஒரு பெண்ணுக்கு மகிமை சேர்க்கும் தலைமுடியினாலே இயேசுவின் பாதத்தைத் துடைத்தாள். முத்தம்செய்தாள்; தனக்கென்று வைத்தி ருந்த விலையேறப்பெற்ற குப்பியைத் திறந்து, இயேசுவின் பாதங்களில் பரிமள தைலத்தைப் பூசினாள். அவளுடைய வாசனைத் தைலம் இயேசுவின் பாதங் களில் சங்கமமாயிற்று. எப்பொழுது தைலக்குப்பியை உடைத்துத் திறந்து, இயேசுவின் பாதங்களில் பூசினாளோ, அப்பொழுதே அவளுடைய மனமாற்றமும் அவளுடைய அநேக பாவங்கள் அவளுக்கு மன்னிக்கப்பட்டது என்பதுவும் உறு தியாயிற்று. இதனால்தான் அவள் அதிகம் அன்புகூர்ந்து இப்படிச் செய்தாள் என்ற இரகசியத்தை முறுமுறுத்த பரிசேயனுக்கு இயேசு வெளிப்படுத்தினார். "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. சமாதானத்தோடே போ" என்று இயேசு சொன்னபோது, அவள் தன் அசுத்த வாழ்வை உடைத்தெறிந்துவிட்டாள் என்ப துவும் தெளிவாயிற்று. அவள் இனிப் பாவத்திற்கு அடிமையல்ல. அந்த தைலம் அவளுடன் இருந்தவரைக்கும் அவள் வாழ்வு நறுமணம் பெறவில்லை. அது உடைந்தபொழுது அவளுடைய வாழ்வு நறுமணம் வீசியது.

அவளுடைய பாவவாழ்வு உடைந்ததால்தான் அவளது வெள்ளைக் கல் பரணியும் உடைந்தது. அவள் அதை உடைத்ததால்தான் அவளுக்குள்ளி ருந்த நறுமணம் வெளிவீசியது. அவள் தன்னுடையதை உடைத்ததால்தான் பரிசேயன் மன்னிப்பின் நறுமணத்தை நுகர்ந்தான். இன்று நமது காரியம் என்ன?

**'நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன் னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.' 1யோவான் 1:9**

சிந்தனைக்கு:

'இனிப் பாவம் செய்யாதே' என்ற வார்த்தை என் செவிகளிலும் கேட்கட்டும். நான் ஒளித்துவைத்திருக்கும் வெள்ளைக்கல் பரணிகள் இன்றே உடையட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிதீர்க்கப்படவேண்டியதன் அவசியம்!

மார்ச்

22

ஞாயிறு

வேதவாசிப்பு: ரோமர் 5:1-9

**'ஆலயம் கட்டப்படுகையில், அது பணிதீர்ந்து கொண்டுவரப்பட்ட கற்களாலே கட்டப்பட்டது. ஆகையால் அது கட்டப்படுகிறபோது, ....சத்தம் அதிலே கேட்கப்படவில்லை.'** 1இராஜாக்கள் 6:7

"அடுத்த வீட்டிலே கட்டுமானப்பணி நடந்துகொண்டிருப்பதால் நமது வீட்டில் இருக்கமுடியவில்லை, அவ்வளவு சத்தம்" என்று அலுத்துக்கொண்டார் ஒரு முதியவர். கட்டுவேலைகள் நடக்கும் இடத்தில் எங்கேயென்றாலும் சத்தம் இல்லாமல் இருக்குமா?

ஆனால், எருசலேமிலே முதன்முதலாக தேவனுடைய ஆலயப்பணிகள் முன்னெடுக்கப்பட்டபோது, தேவனுக்குக் கனம் செலுத்துமுகமாக, கட்டுவேலைகள் நடந்த இடத்திலே எந்தச் சத்தமும் கேட்கப்படவில்லை. மிக அமைதியாகவே வேலை நடந்தது. இது எப்படி? ஆலயப்பணிக்குப் பாவிக்கப்பட்ட கற்கள் யாவும் கல்குவாரியிலேயே வெட்டப்பட்டு தேவையானபடி உருவாக்கப்பட்டு, தயார்நிலையில் கொண்டுவரப்பட்டு, வெகு அமைதியாக ஆலயம் கட்டப்பட்டது. இன்று நாம் கட்டுகின்ற ஆலயங்கள் எப்படிக் கட்டப்படவேண்டும் என்பதற்காக இது எழுதப்படவில்லை; மாறாக, தேவனுக்கும் அவருடைய வாசஸ்தலத்திற்கும் நாம் எவ்வளவு கரிசனையும் பயபக்தியும் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதையே இது நமக்கு உணர்த்துகிறது.

இன்று கிறிஸ்துவாகிய அஸ்திபாரத்திலே கட்டப்படுகின்ற தேவனுடைய மாளிகையில் நாமும் வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறோம் என்று பவுல் அழகாக விபரித்திருக்கிறார். அப்படியென்றால், அந்த மாளிகையின் கட்டுமானப்பணியில் சத்தங்களும் அழுகையும் கூக்குரலும் ஆரவாரமும் கேட்பது எப்படி? மாளிகையின் கற்களாக நாம் கூட்டிக்கட்டப்படுகிறோம் என்றால், பணிதீக்கப்படாத கற்கள் மாளிகையில் சேர்க்கப்படுவது எப்படி? பிரியமானவனே! தேவமாளிகையில் கிறிஸ்துவுடன்கூடச் சேர்ந்து இணைக்கப்படுவதற்காகவே இந்த உலக வாழ்வு நமக்கு அருளப்பட்டிருக்கிறது என்று நம்புகிறேன். நாம் பணிதீர்க்கப்படவேண்டிய கல்குவாரி இந்த உலகம்தான். இந்த உலக வாழ்விலே நாம் வெட்டப்பட்டு வடிவமைக்கப்பட்டு ஆலயத்திற்கு ஏற்றதான உருவத்திற்கு உருவாக்கப்படாமல் தேவமாளிகையில் நாம் இணைக்கப்படுவது எப்படி? பணிதீர்க்கப்படவேண்டியதன் அவசியத்தை நாம் உணருவோமானால் உலக வாழ்வில் வரும் உடைவுகள் உபத்திரவங்களுக்கு நாம் பயப்படோம். ஆகவே, உடைக்கப்பட்டு உருவாக்கப்பட இன்றே நம்மைத் தேவகரத்தில் தருவோமாக.

**'அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்.'** எபே.2:21,22

சிந்தனைக்கு:

நித்திய தேவாலயத்திலே இணைக்கப்பட்டு இசைவாகக் கூட்டிக்கட்டப்பட ஏதுவாயிருக்க, இவ்வுலக உடைவுகளை என்னால் நன்மையாக எண்ணமுடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைக்கல் பரணி உடையட்டும்!

மார்ச்
19
வியாழன்

வேதவாசிப்பு: மாற்கு 14:1-9

**'....ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டுவந்து, அதை உடைத்து, அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றி னாள்.' மாற்கு 14:3**

தேவையிலுள்ள ஒருவருக்கு அல்லது, ஆலயப்பணிக்கு நம்மிடம் இருப்பதில் எடுத்துக் கொடுப்பது ஒன்று; நம்மிடம் இருப்பதில் மிகச் சிறந்ததை, விலைமதிப்பானதை எடுத்து மனப்பூர்வமாய்க் கொடுப்பது இன்னொன்று.

பெத்தானியா ஊரிலே சீமோனின் வீட்டிலே போஜனபந்தியிலிருந்த இயேசுவிடம் அழையாத விருந்தாளியாக வந்த பெண், தான் கொண்டுவந்திருந்த வெள்ளைக்கல் பரணியை உடைத்தாள். அழகாகச் செதுக்கப்பட்ட இந்த பரணியும், அதனுள் இருக்கும் தைலமும் அதிக விலையுள்ளது. இப் பரணியைக் கண்டாலே அதற்குள்ளிருப்பது உத்தம தைலம் என்பது யாவருக்கும் தெரியும். பெண்களுக்கு மிக விசேஷமான இந்த வாசனைத் தைலம் மிகவும் விலையேறப்பெற்றது, பல வருஷ ஊதியத்தின் பெறுமதி அதற்கு உண்டு என்று சொல்லப்படுகிறது. அவளுக்கு அது விசேஷ பொக்கிஷம். அதைத்தான் அவள் உடைத்தாள். உடைத்த அந்த தைலக் குப்பியைப் பின்னர் சரிப்படுத்தமுடியாது. ஆக மொத்தத்தில், அவளுக்கு இனி அது உதவாது. அந்தளவுக்கு அவள் தன்னுடைய விசேஷித்ததை ஆண்டவர் பாதத்தில் ஊற்றிவிட்டாள். இது வீண் விரயம் என்று சிலர் முறுமுறுத்தனர். ஆனால், "நான் அடக்கம்பண்ணப்படுவதற்கு எத்தனமாக என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்டாள்" என்றார் இயேசு. மேலும், அடுத்ததாக இயேசுவின் மரணம் நிகழப்போவதை இவளுக்கு யார் சொன்னார்? இயேசுவின்மீது அவள் கொண்ட பக்தி அன்பு எல்லாமே அவளுடைய உள்ளுணர்வை உணர்வடையச்செய்திருந்தது. மாத்திரமல்ல, இயேசுவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் எல்லா இடத்திலும் இவள் செய்தது நினைவுகூரப்படும் என்று இயேசு சொன்னமாதிரியே இன்றும் நாம் அவளை நினைவுகூருகிறோம் அல்லவா! அன்று மாத்திரம், தனக்கிருந்த விலையேறப் பெற்றதை இவள் உடைத்திராவிட்டால் இன்று இவள் எங்கே?

நாம் எதையெல்லாம் நமக்கு, நம்முடையது என்று பத்திரப்படுத்தி வைத்திருக்கிறோம்? ஒரு பொருளை யாரும் உடைத்துவிட்டால் எவ்வளவு கோபப்படுகிறோம். அதிக விலை என்று நாம் நினைத்து பல வெள்ளைக்கல் பரணிகளை நமது வாழ்வில் நிரப்பி ஒளித்து வைத்திருக்கும்போது, விலைமதிப்பேயில்லாத கிறிஸ்துவின் அன்பு நம்மை எப்படி நிரப்பப்போகிறது?

**'அவருக்காக (கிறிஸ்துவுக்காக) எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன். குப்பையுமாக எண்ணுகிறேன்.' பிலிப்பியர் 3:11**

சிந்தனைக்கு:

எனக்கு வேண்டும் என்றோ, விலையுள்ளது என்றோ நான் பொத்திப் பாதுகாக்கும் பொருள் அல்லது விடயம் என்ன? அதை நான் இயேசுவுக்காய் உடைத்தெறிய ஆயத்தமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நறுமணம் வீசட்டும்!



வேதவாசிப்பு: யோவான் 12:1-8

**'....அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது.' யோவான் 12:3**

'ரோஜா வாசனைத்தைலம்' தயாரிப்பதற்கு ஆயிரமாயிரம் ரோஜா மலர்கள் நசுக்கப்படவேண்டுமாம். ஆனால், இத் தைலத்தின் வாசனை வெளிவீசப்படவேண்டுமானால் அது வைக்கப்பட்டுள்ள குப்பி உடைக்கப்படவேண்டும்; தைலம் ஊற்றப்படவேண்டும்.

பெத்தானியா மரியாள் கொண்டுவந்தது 'களங்கமில்லாத' நளதம் என்னும் தைலம் என்று யோவான் குறிப்பிட்டு எழுதியுள்ளார். அது நூற்றுக்கு நூறு வீதம் தூய்மையானது. விலையேறப்பெற்ற இத் தைலம் அன்று யூதப் பெண்களுக்கு மிக முக்கியமானது. தங்கள் திருமணநாளுக்காக வரப்போகும் கணவனை மகிழ்விப்பதற்காக அவர்கள் இதைச் சேகரித்து வைத்திருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. மாத்திரமல்ல, மரியாள் கொண்டுவந்திருந்ததின் பெறுமதி பல வருட ஊதியத்திற்குச் சமமாகும். இத் தைலம் இந்தியாவின் மலைகளிலிருந்து பெறப்பட்டது என்றும் நம்பப்படுகிறது. அப்படிப்பட்ட தைலத்தைத் தான் மரியாள் இயேசுவின் பாதங்களில் பூசினாள். அதைப் பூசியதால்தான் அந்த வீடு முழுவதும் நறுமணத்தால் நிறைந்தது. "என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள்" என்று மரியாளின் செயலுக்கு இயேசு சாட்சி சொன்னார். மரியாள், அவரே மேசியா என்ற தனது விசுவாசத்தை தனது செயலிலே வெளிப்படுத்தினாள். இறந்த உடலுக்கு வாசனைத்திரவியம் போடும் பழக்கம் அன்று இருந்தது. அதை அவள் முந்திச் செய்தாள் என்றார் இயேசு. தனக்கென்று எதுவும் வைக்காத மரியாளின் இந்தச் செயல், அதனால் வீட்டுக்குள் வீசிய நறுமணம் இரட்சிப்பின் வாசனையைத் தந்தது!

**'....நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்'** (2கொரி.2:15) மரியாள் பூசிய நளதத்தைப் பார்க்கிலும் விலைமதிக்கமுடியாததும், கல்வாரி மலையிலிருந்து பெறப்பட்டதும், உடைக்கப்பட்டு நசுக்கப்பட்டு சுகந்த வாசனையைப் பெற்றதும், நித்திய வாசனை உடையதுமான ஒரு நளதம் இன்று நமக்குள் வைக்கப்பட்டுள்ளது. கல்வாரியில் உடைக்கப்பட்டதால் வாசனை பெற்ற அந்த சுவிசேஷத்தை நமக்குள் அடக்கிவைக்கும்வரைக்கும் அதன் வாசனையோ பெறுமதியோ வெளித்தெரிய முடியாது. பாவத்தால் உண்டாகும் நாற்றம் ஒழியவேண்டுமானால் நாம் உடைக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் நம்மைச் சுற்றிலுமுள்ள மக்கள் மத்தியில் கிறிஸ்துவின் சுவிசேஷ வாசனை நறுமணம் வீசும். அந்த நற்கந்தம் வெளிவீசும்படி நாம் உடைக்கப்பட ஆயத்தமா?

**'கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.' 2கொரிந்தியர் 2.14**

சிந்தனைக்கு:

என்னைச் சுற்றிலும் வீசுகின்ற வாசனைக்கு, அது நறுமணமா அல்லது நாற்றமா, எதுவானாலும் அதற்கு நானே பொறுப்பு என்பதை ஏற்றுக்கொள்வேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைவிலும் நம்பிக்கை

மார்ச்
**23**
திங்கள்

வேதவாசிப்பு: அப்போஸ்தலர் 16:6-12. 22-32

**'நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம்.' 2கொரிந்தியர் 1:9**

"பாதுகாப்பான இடம் என்று தெரிந்துதான் அந்தப் பகுதிக்கு வந்தோம். கடவுள்தான் நம்மைப் பாதுகாத்தார் என்று நம்பினோம். ஆனால், எதிர்பாராத நேரத்தில் என் கணவனும் ஒரு மகனும் ஸ்தலத்திலேயே உடல் சிதறி இறந்தார்கள். பயந்து ஓடிய மகனை என்னால் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை". யுத்த சூழ்நிலையில் அகப்பட்ட ஒரு தாயின் புலம்பல் இது.

கொரிந்தியருக்கு எழுதிய இந்த வசனத்தில் பவுல் எந்த சம்பவத்தைக் குறிப்பட்டார் என்பது தெரியாவிட்டாலும், பிலிப்பு பட்டணத்தில் நடந்த சம்பவம் முக்கியமானது. ஆசியா நாட்டிற்குப் போகாதபடி தடுத்த பரிசுத்த ஆவியானவர், பித்தினியா நாட்டுக்குப் போகாதபடியும் தடுத்தார். இரவு கண்ட தரிசனத்தின்படி, மக்கெதோனியாவுக்குப் போவதே தேவசித்தம் என்று நிச்சயம்பண்ணிய பின்னர் தான் அவர்கள் பிலிப்பிக்குப் போனார்கள். ஆனால் நடந்தது என்ன? கிழிந்த உடையுடன், அடிகாயங்களுடன், சிறைச்சாலையின் உட்காவலறையிலே தொழுமரத்திலே கால்கள் மாட்டப்பட்ட நிலையிலே கிடந்தார்கள் பவுலும் சீலாவும். இனித் தப்புவதற்கு வழியே இல்லை. தங்களுக்குத் தாங்கள் உதவவும் முடியாது; பிறரும் அவர்களுக்கு உதவவும் முடியாது. இனிச் சாவுதான். தங்களை முற்றும் தேவகரத்தில் ஒப்புவிக்கிறதைத் தவிர அவர்களால் செய்ய எதுவும் இருக்கவில்லை. இந்த இடத்தில் நாம் இருந்தால், "கர்த்தரின் சித்தப்படி தானே வந்தோம். இப்படி ஆயிற்றே" என்று மனம் உடையமாட்டோமா!

ஆனால், பவுலும் சீலாவும் என்ன செய்தார்கள், என்ன நடந்தது என்பதை நாம் இன்று வாசித்தோம். மரணம் நிச்சயம் என்றிருக்க, அதே மரண சூழ்நிலையைக் கர்த்தர், ஒரு குடும்பத்தின் இரட்சிப்புக்கு ஏதுவாக மாற்றிப்போட்டது எத்தனை ஆச்சரியம்! அதன் இரகசியம் என்ன? மனமுடைந்த வேளையிலும் அவர்கள் தேவனைத் துதித்துப் பாடி ஜெபித்து தேவனையே சார்ந்துகொண்டார்கள் என்பதுவே. அந்த தேவன்தான் நமது தேவனும். இனி எதுவும் முடியாது என்று மனம் உடைந்தாலும், சாவுதான் முடிவு என்ற நிலைதான் வந்தாலும் நமக்கு ஒரு நம்பிக்கை உண்டு. மனம் உடைந்து நொருங்கினாலுங்கூட, மரணம் காலடியில் வந்தாலும்கூட கர்த்தரையே சார்ந்துகொள்ளப் பழகிவிட்டால் அதுதான் நமது வாழ்வின் பெருவெற்றி.

**'...பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம்.' சங்கீதம் 46:2,3**

சிந்தனைக்கு:

சாவு நெருங்கி, பின்னர் தள்ளிப்போன அனுபவம் உங்களுக்குண்டா? அந்த சமயத்தில் மனஉணர்வு எப்படி இருந்தது? இனி நான் எப்படி இருப்பேன்?



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலக பாதுகாப்புகள் உடையட்டும்!

மார்ச்
24
செவ்வாய்

வேதவாசிப்பு: அப்போஸ்தலர் 27:6-15, 39-44

**'...சிலர் பலகைகள் மேலும், சிலர் கப்பல் துண்டுகள்மேலும் போய்க் கரையேறவும் கட்டளையிட்டான். இவ்விதமாய் எல்லா ரும் தப்பிக் கரைசேர்ந்தார்கள்.' அப்போஸ்தலர் 27:44**

ஒருபோதும் உடையாது என்று எண்ணிய டைட்டானிக் கப்பல் முதல் பயணத்திலேயே உடைந்தது. பாதுகாப்பு என்று நாம் நினைக் கின்ற பல காரியங்களே நமக்கு ஆபத்தையும் அழிவையுங்கூடக் கொண்டுவர லாம். அவை உடைக்கப்படவேண்டும். கருப்பைதான் பாதுகாப்பு என்றிருந்தால் பிள்ளை வாழுமா? சாகுமா? அவன் வாழவேண்டுமானால் இதுவரை பாதுகாப் புக் கொடுத்த தாயின் கருப்பையின் வாசல்கள் உடையவேண்டும்

ரோமாபுரிக்குச் சென்ற பவுலின் இறுதி யாத்திரை மிகக் கடுமையானது. அலெக்சாந்திரியா கப்பல் பாதுகாப்பானது என்றுதான் நூற்றுக்கதிபதி பவுலை யும் மற்றக் கைதிகளையும் அதிலே ஏற்றினான். ஆபத்து வரும் என்று பவுல் தடுத்தும் அவன் கேட்கவில்லை. மாலுமியின் பேச்சை நம்பி பயணத்தை ஆரம்பித்தபோது, தென்றலும் வீசியது. ஆனால், கடுங்காற்று கப்பலில் மோதி கப்பலின் பின்னணியம் உடைந்து சிதறியபோது, வாய்த்தது என்று நினைத்த பிரயாணம் ஆபத்தானது. ஆனால் கப்பல் காற்றில் அலசடிப்பட்டிராவிட்டால், மெலித்தா தீவுக்கு அவர்கள் சென்றிருக்கமாட்டார்கள்; மெலித்தா தீவிலே தேவனுடைய நாமம் மகிமைப்பட்டிராது. நூற்றுக்கதிபதி பாதுகாப்பு என்று எண்ணிய அந்தக் கப்பல் துண்டுகளாக உடைந்திராவிட்டால் சிறைக்கைதிகள் தப்பிக்க வழி கிடைத்திராது. நாம் வரமாட்டோம் என்று யாராவது தட்டிநின்ற கப்பலின் முன்னணி யத்திலேயே நின்றிருந்தால் அவர்கள் தப்பியிருக்கவும் முடியாது. அன்று அந்தப் போர்வீரரின் சதிக்கு ஆளாகாமல் பவுல் உட்பட அனைத்துக் கைதிகளும் தப்புவதற்கு அந்தக் கப்பல் உடைக்கப்பட வேண்டி யிருந்தது.

பாதுகாப்பு என்று நாம் நினைக்கின்ற பல காரியங்கள் உடைக்கப்பட வேண்டும். அதற்காகவே சில கடுங்காற்றுகளும் மோதியடிக்கின்ற அலைகளும் வரவேண்டும். பணம் சொத்து என்றும், மனித தயவு என்றும் நம்முடைய பாதுகாப்புக்கென்று நாம் தேடலாம். அது தவறு அல்ல; இவற்றை மாத்திரமே தேடுவதுதான் ஆபத்து. நமது நம்பிக்கையை எவற்றில் வைக்கிறோம் என்பதே கேள்வி. நூற்றுக்கதிபதி தன் நம்பிக்கையை கப்பலிலும், மாலுமியிலும் வைத் தான். அந்த நம்பிக்கை அவர்களைக் காப்பாற்றியதா? யுத்த காலத்தில் அடைக் கலம் என்று தேடிஓடிய இடங்கள் மனித உயிர்களைப் பாதுகாத்ததா? ஆகவே, வாழ்வில் கடும்புயல் போன்ற கஷ்டங்கள் தாக்கி நம்மை அழிக்கப் பார்த்தாலும், நாம் தேடிய பாதுகாப்புகள் உடைந்துபோனாலும், அங்கேதான் தேவனுடைய பாதுகாப்பு நமக்குக் கிடைக்கிறது. அதற்காக தேவனை ஸ்தோத்தரிப்போமாக.

**'தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.' சங்கீதம் 46:1**

சிந்தனைக்கு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூரைகள் உடையட்டும்!

மார்ச்

**25**

புதன்

வேதவாசிப்பு: மாற்கு 2:1-12

**'அப்பொழுது நாலுபேர் ஒரு திமிர்வாதக்காரனைச் சுமந்து கொண்டு அவரிடத்தில் வந்தார்கள்.' மாற்கு 2:3**

மனநிலை பாதிக்கப்பட்டவர்களைக் குறித்து நீங்கள் சிந்திப்பதுண்டா? அவர்களுக்கு இனி அறிவுரை சொல்லமுடியாது; இயேசுவை அறிவிக்க முடியாது. அவர்களால் தங்கள் பாவங்களை அறிக்கையிடவும் முடியாது. அவர்களுக்குத் தங்களையே தெரியாது. இவர்களை இயேசுவண்டை தூக்கிச்செல்ல, இவர்களுக்காகவும், இயேசுவை அறியாத அநேகருக்காகவும் ஜெபிக்க உழைக்க ஒரு நாலுபேர் தேவை. நாம் முன்வருவோமா!

இந்த நாலுபேரும் தமக்காகவோ, பிரசங்கம் கேட்பதற்காகவோ வரவில்லை. எழுந்து நடக்கமுடியாதபடி திமிர்வாதத்தால் பாதிக்கப்பட்ட ஒருவனைச் சுமந்து வந்தனர். ஆனால், இயேசுவைக் கிட்டிச்சேர முடியாதபடி, பிரசங்கம் கேட்பதற்கு நின்றிருந்த கூட்டம் இடங்கொடுக்கவில்லை. இன்றும் இயேசுவைக் கிட்டிச்சேர முடியாதபடி மக்களுக்குத் தடையை ஏற்படுத்துகிறவர்களும் இப்படிப் பட்டவர்கள்தான். அதற்காக இந்த நாலுபேரும் பின்வாங்கவில்லை. வீட்டுக்குள் இருந்தவர்கள் பிரசங்கத்தை விட்டுவிட்டு மேலே பார்க்கிறார்கள். வீட்டின் கூரை பிரிகிறது. வீட்டுக்காரன்கூட அதற்காக கோபித்ததாக எழுதப்படவில்லை. இயேசுவும் பிரசங்கிப்பதை நிறுத்திவிட்டு அவர்களைக் கவனித்ததாலோ என்னவோ, வீட்டுச் சொந்தக்காரனும் அமைதியானான். அந்த நாலுபேருக்கும் பிரசங்கத்தை விட அந்த மனிதனுடைய சுகமே முக்கியமாகப்பட்டது. அதற்காக அவர்கள் கூரையை உடைத்துப் பிரிக்கத் தயங்கவில்லை. அன்று மாத்திரம் இந்த நாலு பேரும் கூரையை உடைத்தாவது அந்த மனிதனுக்கு உதவ முன்வராதிருந்திருந்தால் அவன் பாவத்திலும் வியாதியிலும் செத்திருப்பான்.

செத்தவனைத் தூக்கிச் செல்ல நாலுபேர் வேண்டுமே! அந்த உடலை அடக்கம்செய்ய எத்தனை துரிதமாக நாம் செயற்படுகிறோம். அப்படியிருக்க, செத்தவர்களைப்போல வாழுகிறவர்கள் உயிர்பெற நாம் எவ்வளவு துரிதமாகக் கிரியை செய்யவேண்டும்! நம்மைச் சுற்றிலும் எத்தனை ஆயிரமாயிரம் மனிதர் தங்களைத் தூக்கிச் சுமக்க ஆளில்லாமல் தவிக்கிறார்கள். தங்களுக்கு வாழ்வளிக்க ஒருவர் இருக்கிறார் என்றுகூட அறியாமல் இருக்கிறார்கள். இவர்களைக் குறித்த பாரமின்றி, செய்தி கேட்பதிலும் நம்மையே பெலப்படுத்துவதிலும் நாம் கொண்டிருக்கிற அக்கறையோ சொல்லிமுடியாது. ஜெபத்துக்கும் பிரசங்கத்துக்கும் திறந்திருக்கிற நமது வீடுகள், பாவிகளுக்குத் திறவாதிருப்பது ஏன்? உடையட்டும்; நமது வீட்டுக்கூரைகள் உடையட்டும். நமது இறுகிய மனங்களும் உடையட்டும். அழிந்துகொண்டிருக்கும் ஆத்துமாக்களைத் தூக்கிச் சுமந்து இயேசுவண்டை கொண்டுவருகின்ற நாலுபேரில் நாமும் ஒருவராகட்டும்.

**'...ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்தில் கொண்டு போய் விடுகிறதற்கு ஒருவருமில்லை....' யோவான் 5:7**

சிந்தனைக்கு:

இந்த ஓலம் இன்று எனது காதுகளில் கேட்கிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானியம் இடிக்கப்படட்டும்!



வேதவாசிப்பு: ஏசாயா 28:23-29

**'அப்பத்துக்குத் தானியம் இடிக்கப்படும்.' ஏசாயா 28:28**

அழகான மேசையில் அமர்ந்து, ருசியான உணவைப் பரிமாறி இராவிருந்து உண்ணும்போது சிலசமயம் அந்த உணவுக்காக நன்றி சொல்லுவோம்; சிலசமயம் அதுவும் இல்லை. ஆனால், அந்த அப்பம் நமது மேசைக்கு வருவதற்கு முன்னால் அது எங்கிருந்து, எதிலிருந்து, எப்படி வந்தது என்பதை நாம் சிந்திப்பதுண்டா?

ஒரு விவசாயினிடத்தில் நிலத்தை உழவும், கொத்திப் பண்படுத்தவும், களை அறுக்கவும் என்று பல உபகரணங்கள் இருக்கும். தானியங்களை அததற்கு ஏற்றாற்போல் அவன் விதைக்கிறான். விளைச்சலை சேர்க்கவும், போரடிக்கவும், தானியத்தை வேறாக்கவும் என்றும் பல யந்திரங்கள் உண்டு. இத்துடன் நிறுத்தினால் நமக்கு அப்பம் கிடைக்காது. பின்னர் அந்தந்த தானியம் அததற்கு ஏற்ற விதத்தில் பதர் அகற்றப்படும். ஆனால் அப்பம் வேண்டுமானால், "அப்பத்துக்குத் தானியம் இடிக்கப்படும்". தானியம் இடிக்கப்படாவிட்டால் அப்பம் ஏது? அதற்காக, விவசாயி இடைவிடாமல் தானியத்தை இடித்துக் கொண்டே இருக்கமாட்டான் என்கிறார் கர்த்தர். அதாவது, பயன்பாட்டிற்கு ஏதுவாய் அந்தந்த தானியத்தை அவன் பதப்படுத்துவான் என்கிறார் கர்த்தர். ஆனால், அப்பத்துக்குத் தானியம் இடிக்கப்பட்டே ஆகவேண்டும்.

அப்பத்துக்குத் தானியம் இடிக்கப்படுவது மாத்திரமல்ல, அது பினையப்பட்டு, உருளைக்குக் கீழே நசுக்கப்பட்டு, நெருப்பில் சுடப்படவேண்டும். நிலம் உடைக்கப்படுவதிலிருந்து, நெருப்பில் சுடப்படுவது வரைக்கும் எல்லாமே நடந்தால்தான் பயன் கிடைக்கும். நாம் தானியமாய் இருக்கும்வரை நம்மால் பயன் ஏது? இத்தனை உடைதலுக்கும் தன்னைக் கொடுக்காதவன் இன்னொரு ஆத்துமாவின் பசியைத் தீர்ப்பது எப்படி? நாம் கிறிஸ்துவின் பிள்ளைகளானால் அவர் கையால் நாம் பிட்கப்படவேண்டும். இல்லையானால் உலகின் பசியை ஆற்றுகின்ற ஆகாரமாக நாம் பயன்படமுடியாது. சிலசமயம் ஆண்டவர் தரும் ஆசீர்வாதங்கள் நமக்குத் துக்கமாகக்கூட இருக்கலாம். பிறர் வாழ்வை மகிழ்விக்கும்படி நாம் துக்கம் அனுபவித்தால்தான் என்ன? இன்று நாம் உலகில் அனுபவிக்கின்ற இனிமையான பல விடயங்கள் வேதனைகள் கண்ணீர்மூலமே பெறப்பட்டவை என்பதை யார் உணருகிறோம்! யுத்தம் என்றால் வெற்றியும் நஷ்டமும் இருக்கும்; ஏனெனில் நாம் கிறிஸ்துவின் பிள்ளைகள். நமக்கு அதிக கஷ்டம் என்று எண்ணுவோமானால், நாம் கிறிஸ்துவின் இருதயத்தில் தனி இடத்தில் இருக்கிறோம் என்பதை நம்பலாம். "அதிகமாக வருத்தப்படுகின்ற ஆத்துமாவே உன்னத நிலைமைக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட ஆத்துமா" என்றார் ஒருவர். **'...கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது.' பிலி.1:29**

சிந்தனைக்கு:

கிறிஸ்துவுக்காய் இடிக்கப்பட்டதனால் உண்டான மகிழ்ச்சியை என் வாழ்வில் அனுபவித்திருக்கிறேனா? அதற்காக இன்னும் என்னைக் கொடுப்பேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பங்கள் உடைக்கப்படட்டும்!

வேதவாசிப்பு: மத்தேயு 14:15-21

**'அவைகளை என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றார்.' மத்தேயு 14:18**

13பேர்கள் திடீரென வீட்டுக்கு வந்துவிட்டார்கள். மதியம் கடந்துவிட்டது. புதிதாக சமையல் செய்ய நேரம் போதாது. ஒரு பெரிய சட்டியை எடுத்து வீட்டிலிருந்த சாதம் கறிகள் யாவையும் அதனுள் இட்டு ஒரு குளையல் செய்து, உருண்டைகளாக உருட்டிக் கொடுத்தேன். எல்லோரும் திருப்தியாகச் சாப்பிட்டார்கள். பகிர்ந்து சாப்பிட்ட அனுபவம் உங்களுக்கு உண்டா? பகிரும்போது அது எப்படிப் பெருகுகிறதோ தெரியவில்லை.

அவர்களிடம் இருந்தது சொற்பம் என்று தெரிந்தும் ஆண்டவர் சொன்னது மூன்று சொற்கள்தான்: "அவைகளை என்னிடத்தில் கொண்டு வாருங்கள்." அந்த திரளான ஜனங்களுக்கு உணவளிக்க ஆண்டவராலே முடியாதா? வானத்திலிருந்து மன்னாவையோ, சூழ நின்ற மரங்களிலிருந்து கனிகளையோ வருவித்திருக்க அவருக்கு முடியும். ஆனால் ஆண்டவரோ, உள்ளதைத் தம்மிடம் கொண்டுவரும்படிக்கே கூறினார். அவர்கள் கொடுத்ததோ ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களுமே. அவர் அதை ஆசீர்வதித்துப் பெருகப்பண்ணவில்லை; ஆசீர்வதித்துப் பிட்டுச் சீஷர்களிடத்தில் கொடுத்தார். சீஷர்கள் அதை ஜனங்களுக்குக் கொடுத்தார்கள். அப்பங்கள் பிட்கப்படவேண்டும்.

இந்தச் சம்பவத்தைக் குறித்து பல காரியங்களை நாம் இதுவரை கற்றிருக்கலாம். ஆனால் இன்று, ஒரு விடயத்தை நாம் தியானித்துப் பார்ப்பது நல்லது. நம்மைச் சுற்றிலும் எவ்வளவு திரளான ஜனக்கூட்டம் சரீர பசி மாத்திரமல்ல, ஆத்தும பசியினாலும் தவிப்பதை நாம் காண்கிறோமா? சரீர பசிக்குக்கூட நாம் எவ்வளவுதூரம் நமது கைகளை விரிக்கிறோமோ தெரியாது. அவர்களின் ஆத்தும பசி தீர்க்கும்படிக்கும் இயேசு நம்மிடம்தான் கேட்கிறார். ஒரு முக்கோணத்தை ஒரு வட்டம் ஒருபோதும் நிரப்பமுடியாது என்று ஒருவர் சொன்னார். அதுபோலவே, தேவஅன்புக்காக ஏங்கும் மனிதனுடைய ஆத்துமாவைத் திருப்தியாக்க இந்த உருண்டையான உலகத்தால் முடியாது. அவனுக்கு இயேசு வேண்டும். அந்த இயேசுவைக் கொடுப்பதற்கு அவரைக் கொண்டிருக்கும் நாம் நம்மை இயேசுவின் கைகளில் உள்ளதை உள்ளபடி கொடுக்கவேண்டும். அவர் நம்மை ஆசீர்வதித்து உடைத்துப் பிட்டுத் தருவார். நான் என்னைப் பிட்கப்படக் கொடுக்காத வரைக்கும் என்னைச் சுற்றிலும் உள்ள மக்களின் கிறிஸ்துவுக்கான ஆத்தும பசியை என்னால் தீர்க்கமுடியாது. அவர்களுக்குக் கிறிஸ்து வேண்டும்; அதற்காக பெருகவும், ஆசீர்வதிக்கப்படவும் விரும்புகிற நாம் கிறிஸ்துவின் கரங்களால் பிட்கப்படவும் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

**'...நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம்.'** 1தெசலோனிக்கேயர்.2:8

சிந்தனைக்கு:

நான் பெலவீனனோ, என்னிடத்திலுள்ளது கொஞ்சமோ, சிறியதோ, அதை அப்படியே கிறிஸ்துவின் கரத்தால் பிட்கப்பட இன்று கொடுப்பேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைவுகள் உடையட்டும்!

மார்ச்
28
சனி

வேதவாசிப்பு: எபேசியர் 2:1-22

**'அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், ....நம்பிக்கை யில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந் தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள்.'** எபேசியர் 2:12

சில சமயங்களில் உடைவுகள் உடைத்தெறியப்படாவிட் டால், புதிய காரியங்கள் உருவாக வழி பிறக்காது. ஒரு தொங்கு பாலம் உடைந்தால், அதைச் சீர்செய்வதா, புதிய பாலம் அமைப்பதா, எது பாதுகாப்பு?

யூத வம்சத்திலே பிறந்ததால் கிறிஸ்து தமக்குரியவர் என்ற எண்ணம் யூதருக்கு. இதனால் யூதர்கள் புறவினத்தாரைப் புறந்தள்ளி, அவர்களைப் பகை வராக எண்ணி, பெரும் பிளவை ஏற்படுத்தியிருந்தனர். கோபம், வெறுப்பு, எல்லா வற்றையும் ஒன்றிணைத்து புறவினத்தாருக்கும் தமக்கும் இடையே ஒரு தடைச் சுவரை எழுப்பியிருந்தனர். முன்னர் தாம் அந்நியராக, அடிமைகளாக, தேவனற் றவர்களாக இருந்ததையெல்லாம் மறந்து, இப்போது புறவினத்தாரை இவர்கள் வெறுத்தனர். தம்மைச் சுத்தவான்களாக அவர்கள் நினைத்தனர். இதற்கு முக்கிய காரணம் விருத்தசேதனம். இப் பிரச்சனை சபைகளுக்குள்ளும் வந்தது. யூத கிறிஸ்தவர்கள், புறவின கிறிஸ்தவர்களை ஏற்க மறுத்தனர். இது தவறு என்றே பவுல் எபேசு சபைக்கு எழுதுகிறார்.

யூதனோ, புறவினத்தானோ, ஆண்டவர் முன்னிலையில் அனைவரும் அசுத்தர்கள் என்றும், அனைவரும் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படவேண் டும் என்பதையுமே பவுல் விளங்கவைக்கிறார். யூதர்கள் எழுப்பி வைத்திருந்த தடைச்சுவரை, உறவில் ஏற்படுத்திய உடைவை, சிலுவையிலே இயேசு தமது மரணத்தால் உடைத்தெறிந்து, இரு பகுதியினரையும் தமக் குள்ளாக ஒன்றாக்கி, எல்லோருக்கும் சமாதானத்தை அருளினார். ஆம், பகைமை ஏற்படுத்திய உடைவை இயேசு சிலுவையில் உடைத்தெறிந்தார்.

இன்று நமக்குள் ஏற்படுகின்ற உடைவுகளுக்கும் இப் பகைமையும் பெருமையும்தான் முக்கிய காரணம். ஆனால், தேவனைவிட்டு அவரது அன்பை விட்டுத் தூரம்போய், நம்பிக்கையற்றவர்களாய் நாம் வாழ்ந்த நாட்களையும், கிருபையாலே நாம் தேவனண்டை சேர்க்கப்பட்டிருப்பதையும் நாம் மறக்கலாமா? பின்னர் நமக்குள் ஏன் உடைவுகளும் கோபதாபங்களும்? நமது முன்நிலை மையை மறந்தால், உறவுகளுக்குள் நாம் ஏற்படுத்திய உடைவுகளை நம்மால் உடைத்தெறியமுடியாது. உடைவுகளை வைத்துக்கொண்டு சமாதானம் என்று சொல்லுவது எப்படி? நமக்குள்ளிருக்கும் உடைவுகள் உடையவேண்டும். தேவ னுடனும் பிறருடனும் நமது உறவுகள் புதுப்பிக்கப்படவேண்டும்.

**'பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி, ...'** 1பேதுரு 2:11

சிந்தனைக்கு:

எனக்குள், என் குடும்பத்தினுள், சபையில் ஏற்பட்டுள்ள உடைவுகளுக்கு யார் அல்லது என்ன காரணம்? அவற்றை உடைத்தெறிய நான் தயாரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடையாதவை உடைக்கப்படும்!

மார்ச்

**29**

ஞாயிறு

வேத வாசிப்பு : லூக்கா 19:28-44

**'உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும்.' லூக்கா 19:42**

**'சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு. எருசலேம் குமாரத்தியே கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார். அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்.'(சக.9:9)** ஏறத்தாழ 500ஆண்டுகளின் பின்னர் இத் தீர்க்கதரிசனம் நிறைவேறியது. எருசலேமுக்குள் இயேசு சென்ற கடைசிப் பயணம் ராஜரீக பவனியாக மாறியது. இதனை நினைவுகூருகின்ற இந்த ஞாயிறிலே கிறிஸ்தவர்கள் குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, "ஓசன்னா பாடுவோம், தாவீதின் குமாரனுக்கே" என்று பாடி, பவனியாக ஆலயத்துக்குள் செல்லுவது வழக்கம்.

அன்று இப் பவனியில் இயேசுவைச் சுற்றி நடந்த ஜனக்கூட்டமும் குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு ஆர்ப்பரித்தது (மாற்.11:9). தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதல் இயேசுவில் உண்டு என்றும், தம்மை மீட்க வந்த ராஜா அவரே என்றும் அவரை நம்பிய அந்த யூதர், அவருடைய ராஜரீகம் அவர்களை எங்கே கொண்டுபோய் விடும் என்பதை உணராதிருந்தார்கள். இந்தப் பயணத்தின் முடிவு என்னவென்று அவர்களுக்கு ஊகிக்கவும் முடியாதிருந்தது. கழுதையில் வந்த இயேசுவைக் கண்டதும் ஆரவாரம் தானாக எழும்பியது. ஆனால், அதே நாளிலேதானே இயேசு சொன்ன தீர்க்கதரிசன வார்த்தையைப் புரிந்துகொள்ளும் நிலையில் அவர்கள் இருக்கவில்லை. எருசலேம் மனந்திரும்பவும், சமாதானத்தைத் தேடவும் தருணம் அளிக்கப்பட்டது. தன் தவறை நினைந்து உடைந்து மனந்திரும்பவேண்டிய இந்த யூதரோ, ஓசன்னா பாடிய அதே வாயினாலேயே, "சிலுவையில் அறையும்" என்று பின்னர் கூச்சலிட்டார்கள்.

மனந்திரும்பாத எருசலேம், இயேசு சொன்னபடியே கி.பி.70ம் ஆண்டளவில் தீத்து ராயனால் உடைக்கப்பட்டது. தானாகவே மனந்திரும்பக் கொடுத்த தருணத்தை இழந்த எருசலேம் பின்னர் உடைக்கப்பட்டு அழிந்தது என்பதை நினைந்து இந்த நாளிலே நாம் ஓசன்னா பாடுவோமாக. சகரியா சொன்னபடியே இயேசு எருசலேமுக்குள் ராஜபவனி சென்றார். இயேசு சொன்னபடியே எருசலேம் அழிந்தது. ஆகவே, இயேசு சொல்லியிருக்கிறபடியே அவர் ராஜாதி ராஜாவாக திரும்பவும் வருவார். அன்று நாம் ஓசன்னா பாடுவோமா? நியாயத்தீர்ப்புக்காக நடுநடுங்கி நிற்போமா? நாம் உடைபடக் கொடுக்கப்படும் தருணங்களை அலட்சியப்படுத்தினால், பின்னர் அது அதிக வேதனை தரும். '...நாம் **அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப்போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங் கள். 1யோவா.2:28.'**

சிந்தனைக்கு:

மனந்திரும்பும்படி கிருபையாய் எனக்கு அருளப்பட்ட தருணங்களை நான் என்ன செய்கிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைத்தெறியப்பட்ட கள்ள வியாபாரம்

மார்ச்

**30**

திங்கள்

வேதவாசிப்பு: மத்தேயு 21:10-14

**'என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்.' ஏசாயா 56:7**

ஆலயத்திற்கு வருவதை விட்டுவிட்ட ஒரு தாயிடம் காரணம் கேட்டபோது, "என் குடும்பத்தை இங்கே யாரும் பொருட்படுத்துவதில்லை. என் பிள்ளைகள் ஓய்வுநாட் பாடசாலை நிகழ்வுகளில் பங்குபெற அனுமதிக்கப்படவுமில்லை" என்றார் அவர். இயேசுவை ஏற்றுக்கொண்டு வந்த அந்தக் குடும்பத்துக்கு ஆலயத்திலுள்ளவர்களே தடுக்கலானார்கள்.

அன்று எருசலேம் தேவாலயத்திலும் இதுவே நடந்தது. இன்று வாசித்தது இரண்டாவது சம்பவம். முதல் தடவை(யோவா.2:13-17) இயேசு கயிற்றினால் சவுக்கையுண்டுபண்ணி தேவாலயத்திலே விற்கிறவர்களையும் காசு மாற்றிகளையும் துரத்தி, "என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள்" என்று கண்டித்தார். இரண்டாவது தடவையாக இயேசு தேவாலயத்தைச் சுத்திகரித்ததையே இன்று வாசித்தோம். ஜெபவீட்டைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்று எல்லாவற்றையும் கவிழ்த்து, ஆடு மாடுகளைத் துரத்தி, ஒரு குழப்பத்தையே ஏற்படுத்திவிட்டார். தூர இடங்களிலிருந்து எருசலேமுக்கு வருகிற புறவினத்தார் நின்று வழிபடுகின்ற பிரகாரத்திலேதான் யூதர் தங்கள் கடைகளை விரித்திருந்தார்கள். வருகிறவர்களை நெருக்கி, பலிக்குரியவற்றை அங்கே தானே வாங்கவேண்டுமென்று வற்புறுத்தி, அவற்றை அநியாய விலைக்கு விற்று, வெளியிலிருந்து கொண்டுவரும் பணத்தை தேவாலயத்து காசுக்கு காசுக்காரர் அநியாய விலைக்கு மாற்றிக்கொடுத்து, இப்படியாக புறவினத்தாரை அவர்கள் தொந்தரவு செய்தனர். இதன்னால் தூரத்திலிருந்து வருகிறவர்கள் தேவனை ஆராதிப்பதையே வெறுத்தனர். இதைக் கண்ட இயேசு கோபப்பட்டு, குழப்பத்தை ஏற்படுத்தியும் அங்கே யாரும் இயேசுவை எதிர்த்ததாக எழுதப்படவில்லை. மாறாக, தம்மிடம் வந்தவர்களை அவர் சொஸ்தப்படுத்தி, அவர்களை மகிழ்வித்திருந்தார் என்றே பார்க்கிறோம்.

இன்று, 'நாமே ஆலயம்' என்று சொல்லிக்கொண்டு, நமது தேவாலயங்களை நவீன விதங்களில் கள்ளர் குகைகளாக்குகிறோமா என்பதில் எச்சரிக்கையாயிருப்போமாக. நாம்தான் ஆலயம் என்றாலும், அந்த ஆலயத்தை நாம் கெடுத்தால், நமது நிமித்தம் இயேசுவண்டை வருகிறவர்களும் வெறுத்து ஒதுங்குவார்களானால் அதன் விளைவு என்ன என்பதையும் நாம் அறிவோம். இயேசு இன்னுமொரு தடவை சவுக்கு எடுக்கமாட்டார். தேவனை ஆராதிக்கிற இடங்கள், தேவனைத் தொழுதுகொள்ள வருகின்ற பிள்ளைகள் இவற்றுக்கெல்லாம் தடுக்கல்லாய் நாம் இருப்போமானால், நாம் உடைத்தெறியப்படுவது உறுதி.

**'...புறஜாதியார் இரட்சிக்கப்படுவதற்கு... தடைபண்ணுகிறார்கள்... அவர்கள்மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது.' 1தெசலோனிக்கேயர் 2:16**

சிந்தனைக்கு:

என் நிமித்தமாக ஆண்டவரை வெறுத்து ஒதுக்கினவர்கள் உண்டா? மறுபுறத்தில் ஆண்டவரிடம் பிறர் வருவதற்கு என் வாழ்வு எந்தவித்திலாவது தடையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைக்கப்பட்ட உள்ளம்

மார்ச்
31
செவ்வாய்

வேதவாசிப்பு: லூக்கா 22:31-34. 54-62

**'...கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவுகூர்ந்து, வெளியே போய், மனங்கசந்து அழுதான்.' லூக்கா 22:61-62**

மூளையில் பதிவாகும் விடயங்கள் இலகுவில் அழியாது. தெரியாததுபோல நாம் நடந்துகொண்டாலும், சில அடையாளங்கள் அவற்றை நினைவுபடுத்திவிடும். "அட! சீ! ஏன் இப்படி நடந்தேன்" என்று நம் வாழ்வில் எத்தனைதரம் நாமும் உள்ளம் உடைந்திருப்போம்!

சீஷர்கள் எல்லாரும் சிதறி ஓடிப்போக, தூரத்திலாவது பின்சென்று பிரதான ஆசாரியனுடைய வீட்டு முற்றம் வரைக்கும் போய், மற்றவர்களுடன் சேர்ந்து குளிர்காயும்வரைக்கும் பேதுருவுக்கிருந்த துணிச்சல், ஒரு வேலைக் காரியின் வார்த்தைக்கு ஆடிப்போனது எப்படி? "அவனை அறியேன்" என்று மறுதலித்தது எப்படி? 'காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றி வருவேன்' என் றவனுக்கு இப்போ, தன் உயிர்மேல் ஆசை வந்ததா? ஒருதரத்திற்கு மூன்று தரமாக இயேசுவைத் தெரியாது என்று பேதுரு மறுதலிக்கவும், சேவல் கூவவும் சரியாயிருந்தது. "சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறு தலிப்பாய்" என்று கர்த்தர் சொன்னது அப்பொழுதுதான் பேதுருவுக்கு நினை வுக்கு வந்தது; நினைவுக்கு வந்ததும் அவன் மனம் உடைந்து, மனங்கசந்து அழுதான். இனி எதுவும் செய்யமுடியாது. "ஐயோ, நானா, உம்மோடு சாவேன் என்று சொன்ன நானா" என்று நொருங்கியிருப்பான் பேதுரு.

ஆனால், அந்த உடைதல், நொருங்குதல் வீணாய்ப் போகவில்லை. அந்த உடைந்த மனதைக் கர்த்தர் கண்டார்; இந்தப் பேதுருவிடம்தான் தமது ஆடுகளை மேய்க்கின்ற பெரிய பொறுப்பைக் கொடுத்தார். மாத்திரமல்ல, பெந் தெகொஸ்தே நாளிலே எல்லோர் முன்பாகவும் எழுந்து நின்று, "இயேசுவை நீங்களே பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையிலே ஆணி யடித்துக் கொலைசெய்தீர்கள்" (அப்.2:23) என்று தைரியமாகப் பேசுமளவுக்கு பேதுருவுக்கு எங்கிருந்து துணிகரம் வந்தது? எல்லாவற்றையும் விட்டுவந்தது, இயேசுவை நோக்கி தண்ணீரில் நடந்தது, இவை பேதுருவுக்குப் பெருமை சேர்க் கும் விடயங்கள். ஆனால் இப்போ, அந்த பேதுரு செத்துப்போனான். முடிவிலே கர்த்தரின் நிமித்தம், சிலுவையிலே தலைகீழாக அறையப்பட தன்னை ஒப்புக் கொடுக்குமளவுக்கு உடைதல் அவனைப் புடமிட்டிருந்தது. அதனால்தான், **'இந் தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பிவிடு வது நியாயமென்று எண்ணுகிறேன்'** (2பேது.1:14) என்று எழுதிவைத்தார்.

**'...உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.' 1பேது.1:7**

சிந்தனைக்கு:

இன்று தேவனுடைய வார்த்தையே நமக்கு நினைப்பூட்டுதலாயிருக்கும்போது இன்னமும் மனம் உடையாமல் நான் கடின இதயத்துடன் வாழுவது தகுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைத்திடும் தனிமையை உடைத்திடு!

ஏப்ரல்
**1**
புதன்

வேதவாசிப்பு: யோவான் 16:27-33

**'இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் , தனியே விட்டுவிடுங்காலம் வரும். அது இப்பொழுது வந்திருக்கிறது.'** யோவான் 16:32

"என்னை விட்டுவிட்டுப் போகிறீர்கள். நான் இனி என்ன செய்வேன்?" மனைவியும் இறந்துவிட்ட நிலையில், முதியோர் இல்லத்திலே சேர்க்கப்பட்ட ஒரு தகப்பன், பிள்ளைகளும் வெளிநாடு புறப்படுகின்ற வேதனையில் சொல்லி அழுத வார்த்தைகள்தான் இவை.

இயேசு முன்சொல்லியிருந்தும், கெத்சமெனேத் தோட்டத்தில் அந்த இரவில்தானே, ஒரு சீஷன் காட்டிக்கொடுக்க, மற்றவர்கள் இயேசுவைத் தனியே விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். இயேசு நினைத்திருந்தால் தேவதூர்கள் சேனையை இறக்கியிருக்கக்கூடும். ஆனால், அவரோ தனிமையில் நின்றே பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார். அதனால் பிதா அவரோடேகூட இருந்தார். **'நான் முதல்விசை உத்தரவுசொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை. எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள்.'**(2தீமோ.4:16) இது பவுலின் அனுபவம். ஆனால், **'கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று, ...என்னைப் பலப்படுத்தினார்.'**(வச.17) என்று தொடர்ந்து பவுல் எழுதியதை வாசிக்கிறோம்.

தனிமையுணர்வு மனிதனை உடைத்து நொருக்கிப்போடும். உறவுகளோடும் சுற்றத்தாருடனும் கூட்டு வாழ்வு வாழ்ந்துவிட்டு தனிமை நிலையை அடைவது பெரும் வேதனை. நம்பியிருந்தவர்கள் கைவிடும்போதும், எல்லாரும் இருந்தும் யாரும் இல்லாத ஒரு நிலை வரும்போதும் தனிமையுணர்வு தாக்குமானால் அது எல்லாவற்றையும்விட துன்ப அனுபவமாகும். அதனால்தானோ, **'...ஒருவரையொருவர் கவனித்து, ...ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்'** (எபி.10:24,25) என்றும், **'ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்'**(கலா.6:2) என்றும் வேதாகமம் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறது. அப்படியே நாம் செய்கிறோமா? .

தனிமையிலே உடைந்து நொருங்கிப்போயிருக்கும் சகோதரனே, சகோதரியே, பவுல் தனித்துவிடப்பட்டும் கலங்கவில்லை. சிலுவையில் தொங்கிய இயேசு, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கதறியபோதும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற மறுக்கவில்லை. தேவனுக்கு நாம் கீழ்ப்படியும்போது அவரும் நம்முடன் இருக்கத் தவறுவதில்லை. தனிமையுணர்வு நம்மைக் கொன்றுபோட இடமளிக்கக்காமல், கர்த்தருக்குப் பிரியமாக வாழுவோமானால், தனிமையிலும் நாம் மகிழ்ந்திருக்கலாம்.

**'...பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை என்றார்.'** யோவான் 8:29

சிந்தனைக்கு:

தனிமை என்னை வாட்டிய அனுபவம் எனக்குண்டா? அந்த சமயத்தில் நான் என்ன செய்தேன்? இனி என்ன செய்யப்போகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைக்கப்பட்ட அப்பம்

ஏப்ரல்

2

வியாழன்

வேதவாசிப்பு: ஏசாயா 53:3-12

**'...அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது...என்றார்.' 1கொரிந்தியர் 11:24**

இயேசுவோடு உண்ணும் கடைசிப் பஸ்கா இதுதான் என்று சீஷர்கள் அறிந்திருந்திருக்க நியாயமில்லை. ஆனால், இயேசுவோ, பூமியிலே தாம் ஆசரிக்கிற கடைசிப் பஸ்கா இதுவே என்பதை அறிந்திருந்திருந்தபடியால், சீஷருக்கு முன்பாக பஸ்கா அப்பத்தைப் பிட்டபோது தமது மரணத்தைக் குறிப்பிட்டு இப்படிப் பேசினார். தாம் செய்யாத எதையும் எம்மைச் செய்யும்படி கேட்கும் ஆண்டவர் அல்ல அவர்.

மிக நல்லது என்று தேவன் தமது படைப்பைக் கண்டிருக்க, இன்று எல்லாம் உடைந்துபோயிருப்பது 'பாவம்' பாவம் உலகினுள் நுளைந்ததால் தான். அதனாலேதான் வாக்குறுதிகள், நம்பிக்கை, உறவுகள், குடும்பங்கள், எதிர்பார்ப்புகள், இருதயம், ஆவி எல்லாமே உடைந்தன. ஆனால் உடைக்கப்பட்டவைகளுக்கு நம்பிக்கை உண்டு. தேவஞானத்தை மகிமைப்படுத்தும்படி அவற்றை புதிதாக்கவே மனுஷகுமாரன் சிலுவையிலே உடைக்கப்பட்டார். ஆம், இயேசுவின் சரீரம் மெய்யாகவே உடைக்கப்பட்டது. அவரைச் சவுக்கால் அடித்ததால் தோல் வெடித்து, சதை கிழிந்தது. முள்முடி நெற்றியைக் குத்தியது. ஆணிகள் அவருடைய கை கால்களைத் துளைத்தன. ஈட்டியால் விலாவிலே குத்தியபோது பீறிப்பாய்ந்த இரத்தமும் தண்ணீரும் அவர் நமக்காய் சம்பூரணமாய் உடைந்து மரித்தார் என்பதை நிச்சயப்படுத்தியது. அதாவது, அவருடைய மாம்ச சரீரம் மாத்திரமல்ல, பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும்படி மனித பாவத்தைச் சுமந்துநின்ற அவருடைய சுயசித்தமும் உடைந்து நொருங்கியது. சிலுவையிலே தொங்கியபடி, "இதோ உங்களுக்காக உடைக்கப்பட்ட என்னுடைய சரீரம்" என்று அவர் சொல்லுவது நமது காதுகளில் கேட்கிறதா?

கல்வாரியிலே அவர் செய்து முடித்ததை, பாவத்தால் உடைக்கப்பட்ட இந்த உலகத்தைச் சீர்செய்யப்படவேண்டி தாம் முடித்த பணியை முன்னெடுக்கவே ஆண்டவர் நம்மை அழைத்திருக்கிறார். அவருக்காக நாம் உடைக்கப்பட ஒப்புக்கொடுக்கும்படிக்கே கேட்கிறார். நமது சரீரமாகிய மண்பாண்டத்தை, நமது கூரைகளை, வெள்ளைக்கல் பரணிகளை நம்மால் உடைத்தெறியமுடியுமா? நமது சுயத்தை உடைக்காதவரை நாம் தேவசித்தத்தை நிறைவேற்ற முடியாது. நேரிடும் பாடுகளில் உடைக்கப்படாதவரைக்கும், மனந்திரும்புதலின் மனமுடைவு ஏற்படாதவரைக்கும் தேவனுக்கு நாம் பயன்படமுடியாது. பரிசுத்த பந்தியில் அமரும்போது, உடைக்கப்பட்ட இயேசுவின் சரீரத்தை மாத்திரமல்ல, உடைக்கப்படவேண்டிய நமது வாழ்வையும் நினைவுகூருவோமாக.

**'உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்.' யோவான் 16:33**

சிந்தனைக்கு:

இன்றே நான் உடைக்கப்பட என்னை நானே தேவகரத்தில் ஒப்புவிப்பேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைச்சீலை கிழிந்தது!

ஏப்ரல்

3

வெள்ளி

வேதவாசிப்பு: யாத்திராகமம் 26:30 - 37

**'இயேசு, மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார். அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது.' மத்தேயு 27:50,51**

சீனாய் மலையிலே, மோசேக்கு ஆசரிப்புக்கூடாரத்தின் மாதிரியைக் காண்பித்த கர்த்தர், சொல்லப்பட்ட நூல்களினால் திரைச்சீலை உண்டாக்கப்பட்டு, அதிலே விசித்திரவேலையால் செய்யப்பட்ட கேருபீன்கள் வைக்கப்படவேண்டும் என்றும், இந்தத் திரைச்சீலை பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத் திற்கும் பிரிவை உண்டாக்கும் என்றும் கூறினார்.

உலகத்தோற்றத்தின் முன்னரே குறிக்கப்பட்ட இரட்சிப்பிற்கு (1பேதுரு 1:20) நேராக, பாவத்தில் விழுந்துபோன மனுக்குலத்தை தேவன் வழிநடத்திவந்ததை வேதாகமத்தின் ஆரம்பித்திலிருந்தே படிக்கிறோம். ஆசரிப்புக் கூடாரத்தின் மாதிரியை முதன்முதலாக மோசேக்குக் காட்டியபோது, பாவியாகிய மனிதன் பரிசுத்த தேவனை நெருங்கமுடியாது என்பதற்கு மாதிரியாக, உடன்படிக்கைப் பெட்டியும் கிருபாசனமும் வைக்கப்பட்ட மகா பரிசுத்த ஸ்தலத்தின் வாசலுக்குத் திரைச்சீலை தொங்கவிடப்பட்டது. இது மிகவும் தடித்தது என்று சொல்லப்படுகிறது. அதில் கேருபீன்கள் எதற்காக? **'அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும் வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்.'** (ஆதி.3:24) இங்கே மகா பரிசுத்தஸ்தலத்தின் வாயிலில் தொங்கவிடப்பட்ட திரைச்சீலையில் பதிக்கப்பட்ட கேருபீன்கள், அன்று மோசேக்கும், இன்று நமக்கும் எதனைப் புரியவைக்கிறது என்பது நமக்குப் புரிந்திருக்கும். பாவ மனுஷன் ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்து நித்தியமாய் பாவத்தில் ஜீவிக்காதபடிக்கு அன்பினால் அந்த வழியை அடைத்து கேருபீன்களைக் காவல் வைத்த தேவன், இந்த ஆசரிப்புக் கூடாரத்திலே அதன் மாதிரியை வெளிப்படுத்துவதைக் காண்கிறோம்.

எருசலேம் தேவாலயத்தில் மகா பரிசுத்தஸ்தலத்தின் வாயிலில் தொங்கிய இத் திரைச்சீலை, இயேசு ஆவியை விட்டபோது கிழிந்தது. பரிசுத்த தேவனுக்கும் பாவ மனுஷனுக்கும் இடையே போடப்பட்ட திரை கிழிந்தது. அது மேலிருந்து கீழாகக் கிழிந்ததால், இது தேவனாலேயே ஆனது. பாவநிவாரண பலியான கிறிஸ்து தமது மரணத்தினாலே திரையைக் கிழித்துடைத்து நித்திய ஜீவனுக்குரிய வாசலைத் திறந்தார். கிழிக்கப்பட்ட திரைச்சீலையில் கிழிக்கப்பட்ட ஆண்டவரை நம்மால் காணமுடிகிறதா? அவரை நாம் என்ன செய்கிறோம்?

**'நானே வாசல். என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்.' யோவான் 10:9**

சிந்தனைக்கு:

எனக்காய் கிழிக்கப்பட்ட இயேசுவுக்காய் நான் கிழிக்கப்பட என்னைத் தருவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய அஸ்தமனத்திற்கும் அப்பால்...

ஏப்ரல்
4
சனி

வேதவாசிப்பு: அப்போஸ்தலர் 13:26-29

**'அவரை மரத்திலிருந்து இறக்கி, கல்லறையிலே வைத்தார்கள்.' அப்போஸ்தலர் 12:29**

"மகனைக் கைதுசெய்துகொண்டு போனபோது மறையும் வரைக்கும் கண்ணீருடன் பார்த்துக்கொண்டே நின்றேன். இன்று வரை அவன் இல்லை. ஆனால் அவன் எங்கேயாவது இருப்பான் என்று நம்புகிறேன்." இப்படிப் பல பெற்றோர் கண்ணீர்விட்டிருக்கிறார்கள். நம்பிக்கையற்ற சூழ்நிலையிலும் இவர்களுக்கு ஒரு நம்பிக்கை.

ஆனால், மரித்துப்போன இயேசுவின் சரீரத்தை கல்லறையில் வைத்ததைப் பார்த்திருந்தவர்களின் மனநிலை அப்படியொரு நம்பிக்கையில் திடப்படவில்லை. ஆனால் இன்று நமக்கு ஒரு நம்பிக்கை உண்டு. கல்லறை கடைசி அல்ல; அதற்கும் அப்பால் நமக்கு வாழ்வு உண்டு என்ற உறுதியை ஆண்டவர் நமக்குத் தந்துள்ளார். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் விர்ஜில் பி. ப்ரொக் என்பவர் இயற்றிய பாடல் வரிகளின் அர்த்தத்தை இதோ தருகிறேன்.

**'சூரிய அஸ்தமனத்துக்கும் அப்பால் ஓர் ஆனந்த காலை, என் இரட்சகருடன் அது மலருகிறது. பூமியின் ஓட்டம் முடிய, என்ன மகிமையான அதிகாலை அது. சூரிய அஸ்தமனத்துக்கும் அப்பால் மேகக்கூட்டங்கள் இல்லை, புயல் பயமுறுத்தாது, பயம் வருத்தாது. மகிழ்ச்சியின் நாள் அது, முடிவில்லா நாள், சூரிய அஸ்தமனத்துக்கும் அப்பால் நித்திய சந்தோஷம். சூரிய அஸ்தமனத்துக்கும் அப்பால் ஒரு கரம் என்னை நடத்தும். நான் மிகவும் நேசித்த என் பரம தகப்பனிடம் அது என்னை நடத்தும். அந்த அற்புதமாக கரையிலே அவருடைய மகிமையின் சமுகமும், என்னை வரவேற்கும் அவருடைய வார்த்தையுமே என் பங்காயிருக்கும். சூரிய அஸ்தமனத்துக்கும் அப்பால், எனக்கு முன்னே அங்கே போனவர்களுடனே திரும்பவும் ஒன்று சேரும் மகிழ்ச்சி உண்டு. அந்த அன்பின் வீட்டிலே இனி பிரிவில்லை என்று அறிவேன். சூரிய அஸ்தமனத்துக்கும் அப்பால் நான் என்றும் ஜீவிப்பேன்.'**

இவ்வுலகில் உடைவுகள் நோவெடுக்கும்; உடைபடுதலும் வேதனை தரும். உறவுகள் உறங்கும்; வார்த்தைகள் மௌனிக்கும். கடந்த ஆண்டிலே வெளிநாடொன்றில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதற்காகவே பலர் வாளினால் தலை அரியப்பட்டும் சுடப்பட்டும் செத்துப்போனதை இணையத்தளத்தில் பார்த்தோம். அத்தனைபேரும் அக் கடைசி விநாடியிலும் இயேசு வேண்டாம் என்று ஓடாதது ஏன்? இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் கிறிஸ்தவ விசுவாசத்தில் ஊறிப்போயிருக்கும் நாம் நிலைநிற்போமா? சூரியன் நிச்சயம் அஸ்தமிக்கும். ஆனால் அதற்கு அப்பாலுள்ள நித்திய வெளிச்சத்தை நினைந்து இவ்வுலக வாழ்விலே இயேசுவுக்காய் வைராக்கியமாய் வாழ நம்மைத் தேவகரத்தில் தருவோமாக. **'...அப்படியே, இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்.'** 1தெசலோனிக்கேயர் 4:14

சிந்தனைக்கு:

கல்லறைக்கு அப்பாலுள்ள மகிழ்ச்சி என் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவின் கூர் ஒடிந்து உடைந்தது!

ஏப்ரல்

**5**

ஞாயிறு

வேதவாசிப்பு: 1கொரிந்தியர் 15:51-58

**'மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?' 1கொரிந்தியர் 15:55**

தூக்குக் கைதியாக சிறையிலிருந்த ஒரு மகன், தேவகிருபையால் இயேசுவை அறிந்து ஏற்றுக்கொண்டான். அப்போது அவன் சொன் னது, "சிறையே! உன் கம்பி எங்கே? தூக்குக் கயிறே! உன் பலம் எங்கே?" ஆம், இனி அவனை சிறையோ, மரணமோ எதுவும் ஒன்றும் செய்யமுடியாது.

ஏதேனிலும், சிலுவையிலும் தேவதிட்டம் உடைக்கப்பட்டு, சாத்தான் ஜெயித்துவிட்டதைப்போலவே தோன்றியது. ஆனால், இயேசு உயிர்த்தெழுந்தபோது, அந்த வெற்றி தோற்கடிக்கப்பட்டது. **'துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்.'** (கொலோ.2:15) ஆகவே, இனி சரீர மரணம் என்பது தேவபிள்ளைகளுக்கு பயத்தை ஏற்படுத்தாது.

**'இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்'** (லூக்.2:10) என்று கர்த்தருடைய தூதன் இயேசுவின் பிறப்பை அறிவித்தான். இப்போது, **'அவர் இங்கே இல்லை. அவர் உயிர்த்தெழுந்தார்'** (லூக்.24:6) என்று கல்லறையில் நின்ற தூதர்கள் அவருடைய உயிர்ப்பை அறிவித்தார்கள். முதல் அறிவிப்புக் கொடுத்த சந்தோஷம், இரண்டாம் அறிவிப்பிலே நிறைவேறியது. பாவத்தின் சம்பளமாகிய மரணத்தின் கூரை உடைத்து இயேசு உயிர்த்தெழுந்தார். அவருடைய உயிர்த்தெழுதலில் உறவுகளின் உடைவுகள் உயிர்பெற்றன. மரணம் தோற்கடிக்கப்பட்டது. ஆகவே, நாமும் மரணத்தை ஜெயிப்போம். கல்லறைக்கு அப்பால் நமக்கு ஒரு நம்பிக்கை உண்டு. நமது வாழ்வு உயிர்பெற இது போதுமே!

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அருளிய நம்பிக்கையின் நிமித்தம் பாடுகள் நிறைந்த இந்த உலக வாழ்வில் நாம் சோர்ந்துபோகவோ பின்வாங்கிப் போகவோ அவசியமேயில்லை. கிறிஸ்துவுக்காய் வாழ்ந்தும், நல்லது செய்தும் பலன் இல்லை என்று வேதனைப்பட வேண்டியதில்லை. ஏனனில், இந்த உலகில் நாம் செய்யும் எந்தக் காரியமும் வீண்போகாது. பரலோகத்தின் வெளிச்சத்தில் வாழுவதை நாம் விட்டுவிடாமல், உறுதியோடும் திடமனதோடும் இயேசுவுக்காக முன்செல்லுவோமாக. நமது செய்கைகளுக்கேற்ற பலனை நாம் இவ்வுலகில் எதிர்பார்க்கமாட்டோம். நாம் செய்வதால் உண்டாகும் மகிமை யாவும் கர்த்தருக்கே. இனி அவருக்கும் நமக்குமிடையே உடைவுகள் இல்லை; பிளவுகள் இல்லை. மரணத்திலும் நமக்குக் கலக்கமே இல்லை. அல்லேலூயா!

**'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.' 1கொரிந்தியர் 15:57**

சிந்தனைக்கு:

கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசிக்கின்ற நமது வாழ்விலே அந்த உயிர்த்தெழுதல் ஏற்படுத்திய தாக்கம் என்ன? மாற்றம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்காக வேண்டிக்கொள்கிறவர்!

ஏப்ரல்
6
திங்கள்

வேதவாசிப்பு: ரோமர் 8:19-27

**'....ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.' ரோமர் 8:26**

கிறிஸ்துவானவர் இவ்வுலகிற்கு வந்து, வாழ்ந்து, பாடுகள் பட்டு, மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, பின்பு உயிர்த்த கிறிஸ்துவாய் பரத்துக்குப் போகும்போது, தம்மோடு இருந்தவர்களை அப்படியே அநாதரவாய் விட்டுப் போகவில்லை. அவர்களுக்கு அவர் ஒரு வாக்குக் கொடுத்துச் சென்றார். **'பரிசுத்தஆவி உங்களிடத்திற்கு வரும்போது நீங்கள் பெலனடைந்து, ....பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.'** (அப்.1:8) இன்று நாம் தனித்து விடப்பட்டவர்கள் அல்ல. அதேநேரம் பொறுப்புகள் அற்றவர்களும் அல்ல. எம்மைப் பெலப்படுத்த பரிசுத்தஆவியானவர் எம்மோடு இருக்கிறார். பெலனடைந்து கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாய் வாழ அவர் நம்மை நடத்துவார்; அதற்கே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

நாம் பலவீனப்பட்டு, எப்படி வேண்டிக்கொள்வது என்று அறியாமலிருக்கும் வேளைகளில் ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்கிறவராய் இருக்கிறார். **'என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில், உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது'**(சங்.94:19) என்கிறார் சங்கீதக்காரர். அதுபோலவே எமக்காக எம்மோடு இருந்து எம்மைத் தாங்கும் ஆவியானவரை நாம் எம் வாழ்வில் உணர்ந்துகொண்டிருக்கிறோமா? பரிசுத்தாவியானவர் என்றவுடன், அது ஒரு பெலன் அல்லது ஒரு சக்தி; திடீரென வந்து எம்மை ஆட்டிப் படைக்கும் ஒரு வல்லமை என்று அநேகர் எண்ணுவதுண்டு. ஆனால், ஆவியானவர் எப்போதும் எம்மோடு இருந்து வழிநடத்தும் ஒருவர் என்பதை நாம் மறந்துபோகிறோம். எம்மோடு இருக்கும் ஆவியானவரை துக்கப்படுத்தாது வாழ நாம் பின்நிற்கிறோம்.

இன்று அநேகர் தம் வாழ்வில் சோர்வடைவதற்கும், விரக்தி நிலைக்குத் தள்ளப்படுவதற்கும் காரணம் தனிமையுணர்வே. எனக்கு யாரும் இல்லை என்ற ஏக்க நிலையே. ஆனால் தேவன் தமது பிள்ளைகளை இவ்வுலகில் தனித்து விட்டுவிடவில்லை. எவனொருவன் தன் பாவங்களை அறிக்கையிட்டு கிறிஸ்துவை தன் இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறானோ அந்த நேரமே அவனை ஆட்கொண்டு வழிநடத்த ஆவியானவர் அவனோடே இருக்கிறார். இந்த உறுதிப்பாடும், நம்பிக்கையும் எம்மிடம் உண்டா. இந்த நம்பிக்கை இருக்குமேயாகில் நாம் என்றுமே தனித்தவர்களல்ல. எம்மோடு இருந்து எம்மை வழிநடத்தவும், எமக்காக வேண்டிக்கொள்ளவும் பரிசுத்தாவியானவர் எம்மோடே இருக்கிறார். அந்த நம்பிக்கையில் நாம் வாழுவோமாக.

சிந்தனைக்கு:

என் வாழ்வில் பல காரணங்களால் தனிமையை உணர்ந்து விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்ட நேரங்கள் உண்டா? என் வாழ்வைத் தேவபாதத்தில் ஒப்படைத்து ஆவியானவரின் வழிநடத்துதலோடு வாழ இன்று என்னை அர்ப்பணிப்பேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிநடத்தும் ஆவியானவர்

ஏப்ரல்

7

செவ்வாய்

வேதவாசிப்பு: 2நாளாகமம் 24:1-2. 15-22

**'....ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள். அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.' கலாத்தியர் 5:16**

இப் பாவமான உலக வாழ்வில் நாம் விழுந்துபோவதற்கும், அடிக்கடி வழிதப்பி பாவச்சோதனையில் அகப்படுவதற்கும் அநேக சந்தர்ப்பங்கள் உண்டு. பிசாசானவன் எவனை விழுங்கலாம், வீழ்த்தலாம் என்று எதிர்பார்த்துச் சுற்றித்திரிந்துகொண்டிருக்கிறான். இவ்விதமான ஆபத்தான நிலையில் நாம் தனியே நடந்தாலும் எம்மை வழிநடத்துகின்ற ஆவியானவர் எம்மோடு இருக்கிறார் என்ற உறுதி எம்மைத் தைரியப்படுத்தும்.

இன்றைய தியானப்பகுதியில் வழிதப்பிப்போன அரசனாகிய யோவாஸைக் குறித்து வாசிக்கிறோம். இவன் ராஜாவாகிறபோது இவனுக்கு வயது ஏழு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும், ஆசாரியனாகிய யோய்தா அவனோடிருந்த நாளெல்லாம் கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்து வந்தவன், ஆசாரியன் மரித்துப்போனதும் யூதாவின் பிரபுக்களுக்குச் செவிகொடுத்து கர்த்தருக்குப் பிரியமற்ற காரியங்களைச் செய்து தேவகோபத்துக்கு ஆளானான் என்று வாசிக்கிறோம்.

கர்த்தரின் பாதையில் நடக்க நல்ல ஆலோசனையும், வழிநடத்துதலும், வழிநடத்துபவர்களும் நமக்கு அவசியம். கிறிஸ்தவ ஐக்கியம் அதைத்தான் நமக்குத் தருகிறது. அதோடுகூட ஆவியானவரின் வழிநடத்துதலும் அவருடனான ஐக்கியமும் நமக்கு மிகவும் அவசியம். பவுல் கலாத்தியரை எச்சரித்த போது, "ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள் அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்" என்கிறார். நாம் ஆவிக்கேற்றபடியாக வழிநடக்க ஆவியானவர் எமக்கு உதவிசெய்கிறார். ஆனால், ஆவியானவரின் சத்தத்திற்கு நாம் செவிகொடுக்க ஆயத்தமாய் இருக்கவேண்டும். அவர் எம்மோடு இடைப்பட நாம் எம்மை விட்டுக்கொடுக்கவேண்டும். இந்த ஆயத்தம் நம்மிடையே இல்லாவிட்டால் அவரது வழிநடத்துதலை நாம் உணர்ந்துகொள்ள முடியாது. தேவனோடுள்ள நெருக்கமான உறவே தேவாவியானவரின் வழிநடத்துதலை எமக்கு உணர்த்தும். அதில் நாம் வளர வளர உணர்வு நம்மில் உறுதிப்படும்.

ராஜாவாகிய யோவாஸ் கடைசிவரைக்கும் கர்த்தரின் சத்தத்திற்குச் செவிகொடாமல் அழிந்துபோனான். ஆசாரியனாகிய யோய்தாவின் மகன் சகரியாமூலமாகக் கர்த்தர் இடைப்பட்டபோதும் அதை கேட்க மறுத்து சகரியாவையும் கல்லெறிந்து கொலைசெய்வித்தான். கடைசியில் அவனே தேவதண்டனைக்கு உள்ளானான். அதேபோல் தேவவாவியானவரின் சத்தத்திற்குச் செவிகொடுத்து வாழ்பவனையே அவரால் வழிநடத்தமுடியும். சத்தத்தை அசட்டை பண்ணுகிறவன் அவரது வழிநடத்துதலையும் இழந்துபோவான்.

சிந்தனைக்கு:

தேவாவியானவரின் சத்தத்திற்குக் கீழ்ப்படிய மறுத்த சந்தர்ப்பங்களை நினைத்துப்பார்ப்போம். அதனால் வந்த விளைவுகள் என்னில் ஏற்படுத்திய பாதிப்புகள் என்ன? இனி என் வாழ்வில் நான் என்ன செய்யப்போகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவை நோக்கிய பயணம்

ஏப்ரல்

8

புதன்

வேதவாசிப்பு: தீத்து 3:1 - 9

**'அவர் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்தாவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்.' தீத்து** 3:7

உடை மிகவும் பழசாகிவிட்டது என்று எண்ணினால் ஒரு புதிய உடையை வேண்டுகிறோம். ஆனால் பழைய உடையையும் வீசாமல் எங்காவது வைத்திருப்போம். வெப்பம் கூடி வியர்த்துக் கொட்டும்போது பழைய உடைதான் உடம்புக்குச் சுகமாய் இருக்கிறது என்று அதைத் தேடியெடுத்து அணிந்துகொள்வதுண்டு. இப்படியே, பாவசரீரமாகிய பழைய மனுஷனைக் களைந்துபோட்டு, மீட்புப்பெற்ற புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டாலும், அவ்வப்போது விரும்பியே பழைய மனுஷனையும் எடுத்துத் தரித்துக்கொள்வதுண்டு.

பவுல் தீத்துவுக்கு எழுதும்போது இதைத்தான் வலியுறுத்துகிறார். நாம் முற்காலத்தில் பாவத்துக்கு அடிமைப்பட்டு சண்டைக்கும், பொறாமைக்கும் இடம்கொடுத்து வழிதப்பி நடக்கிறவர்களாய் இருந்தோம். ஆனால் இப்போதோ மீட்படைந்து கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்களாய் இருக்கிறோம். இந்த மீட்புக் கூட எமது நீதியினால் அல்ல; தேவனுடைய கிருபையினாலும், பரிசுத்தாவியின் புதிதாக்குதலினாலும் நடைபெற்றது என்கிறார் பவுல். இவ்விதமான மீட்பைப் பெற்ற நாம் தேவனை நோக்கியே எமது ஓட்டத்தையும், பயணத்தையும் மேற்கொள்ளவேண்டுமேதவிர, மீண்டும் எமது பழைய வாழ்வுக்கோ, பாதைக்கோ செல்லக்கூடாது என்பதையே பவுல் இங்கு வலியுறுத்துகிறார்.

தேவன், தம்மை நோக்கிய ஒரு உன்னதமான பயணத்திற்கு நம்மை அழைத்திருக்கிறார். நாம் அதில் பயணிப்பதோடு நிற்காமல், தேவனை அறியாமல் அழிவின் பாதையில் பயணிக்கின்ற மக்களையும் தேவபாதையில் கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பும் நம்முடையதே. தேவன் எம்மை மீட்டதோடு நின்றுவிடாமல், நாம் தொடர்ந்து இரட்சிப்பின் பாதையிலே பயணிக்க எமக்கொரு துணையையும் தந்திருக்கிறார். அதிலும், பரிசுத்தாவியை நம்மேல் சம்பூரணமாய் பொழியப்பண்ணினார் என்று பவுல் எழுதுகிறார். பரிசுத்தாவியானவர் எம்முடன் எப்போதும் சரியான பாதையில் எம்மைப் பயணிக்கத் தூண்டுகிறார்.

அப்படியிருக்க நாம் வழிதப்பிப்போவது எப்படி? சத்திய ஆவியாகிய அவர் வரும்போது உங்களை சகல சத்தியத்துக்குள்ளும் வழிநடத்துவார் என்று இயேசு வாக்களித்துள்ளார். ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு எம்மை விட்டுக் கொடுப்போம். சரியான பாதையில் பயணத்தைத் தொடர்ந்திடுவோம். **'நான் உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன் உன்மேல் என் கண்ணைவைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.' (சங்கீதம் 32:8).**

சிந்தனைக்கு:

நாம் வழிதப்பிப்போன வேளைகளில் நமது தவறு என்ன என்பதை சிந்தித்திருக்கிறோமா? தேவாவியானவரின் வழிநடத்துதலை உணர்ந்திருக்கிறோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்கப்படுத்தாதிருங்கள்!

ஏப்ரல்

9

வியாழன்

வேதவாசிப்பு: எபேசியர் 4:25 - 32

**'அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்தாவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.' எபேசியர் 4:30**

ஒருவர் விரும்பாத அல்லது வெறுக்கின்ற காரியத்தை நாம் அவருக்குச் செய்யும்போது நாம் அவரைத் துக்கப்படுத்துகின்றோம். அது போலவே பரிசுத்தாவியானவரின் குரலுக்கு நாம் செவிகொடுக்க மறுக்கும்போது அவரைத் துக்கப்படுத்துகிறோம். அலாரம் அடிக்கும்போது அதை நிறுத்தி எழும்பினால் சரி; மாறாக, சத்தத்தை அழுத்திவிட்டுப் படுத்தால் ஒருபோதும் எழும்பவும் முடியாது; சமயத்துக்கு அந்த அலாரச் சத்தமே ஒரு தாலாட்டுப்போலாகியும்விடும். அதுபோலவே, ஆவியானவரின் சத்தத்துக்கும் கீழ்ப்படியாதவனாய் அசட்டைபண்ணுபவனுக்கு அவரின் சத்தமும் நாளடைவில் பழகிப்போன அலாரச் சத்தம் போலாகிவிடும் அபாயம் உண்டு.

பல காரியங்களைச் செய்யவேண்டாம் என்று எபேசியருக்கு வலியுறுத்திய பவுல், ஆவியானவரைத் துக்கப்படுத்தவேண்டாம் என்பதையும் வலியுறுத்திக் கூறியுள்ளார். நாம் மீட்கப்பட்ட நாளிலேயே ஆவியாவனவர் நம்மைப் பொறுப்பெடுத்து, நமது மீட்பின் அடையாள முத்திரையானார். நமக்குத் துணையாக நம்மை வழிநடத்தும்படிக்குக் கொடுக்கப்பட்ட ஆவியானவரை நாம் ஒதுக்கி அவரது வழிநடத்துதலை அசட்டைபண்ணும்போது அவர் துக்கமடைகிறார். தேவவார்த்தைக்கு நாம் செவிகொடுக்க மறுக்கும்போதும் அவரைத் துக்கப்படுத்துகிறோம். ஆறுதலின் தேவனாக நமக்குள் வாசம்பண்ணும் ஆவியானவரே துக்கமடைந்தால், நாம் ஆறுதல் பெறுவது எப்படி?

நாம் பாவம் செய்யும்போது நமக்கு அது மகிழ்ச்சி. அதனாலேயே அதனை மீண்டும் மீண்டும் செய்யத் துடிக்கிறோம். அதேநேரம் அதனால் ஒருவரைத் துக்கப்படுத்துகிறோம் என்பதை நாம் சிந்திப்பது கிடையாது. நமக்காக, நமது மீட்புக்காக சகலவற்றையும் செய்து முடித்த ஆண்டவர் உயிர்த்தெழுந்த ஆண்டவராய் பரத்துக்கு ஏறிப் போனபோது, நம்மைத் தனியே விடாமல் எம்மோடு எப்போதும் இருக்கும்படிக்கு தேவாவியானவராய் நம் மத்தியில் இறங்கி வந்தார். நம்மில் அன்புகூர்ந்து இத்தனையையும் நமக்காகச் செய்த ஆண்டவருக்காய் நாம் எதையுமே செய்யாமல், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல், அவரைத் துக்கப்படுத்துவது தகுமா? தேவாவியனவரை நாம் துக்கப்படுத்திய சந்தர்ப்பங்களை நினைவுகூர்ந்து அதிலிருந்து மனந்திரும்புவோம். அவரோடு இணைந்து இசைந்து வாழுவோம். "எங்களுக்குள்ளே வாசம்செய்யும் ஆவியானவரே, இந்நாளில் உம் சித்தம்போல் நடத்திச் செல்லுமையா" என்று சொல்லி அவர் கரத்தில் நம்மை ஒப்புவித்து, அவரை நாம் மகிழ்விப்போமா!

சிந்தனைக்கு:.

நமது இன்பங்களா? நமது நிமித்தம் தேவாவியானவரின் மகிழ்ச்சியா? எதற்கு நம் வாழ்வில் முதலிடம் கொடுக்கப்போகிறோம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவியின் கனி

ஏப்ரல்
**10**
வெள்ளி

வேதவாசிப்பு: கலாத்தியர் 5:13-26

**'அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.' மத்தேயு 7:16**

ஒரு பழமரத்தை நாட்டி அது கனிகொடுக்கும் நாளில் அதன் கனியைப் புசித்துவிட்டு, அது புளிப்பாக அல்லது கசப்பாக இருந்தால் மரம் சரியில்லை என்று சொல்லுவோம். அதுபோலவே நாம் ஆவிக் குரியவர்களாய் தேவபிள்ளைகளாய் வாழும்போதும் எம்மில் ஆவியின் கனி காணப்படுகிறதா என்பதையே பிறர் உற்றுப் பார்ப்பர். அது காணப்பாடாவிடில் இவரில் ஏதோ பிழை இருக்கிறது என்றே எண்ணுவர். இன்று நம்மைப் பார்க் கிறவர்களின் சிந்தனை என்னவாக இருக்கும்?

சிலர், ஆவியின் கனிகளில் எம்மிடம் இரண்டு உண்டு, நான்கு உண்டு என்று பெருமை பேசிக்கொள்வர். ஆவியின் கனிகள் ஒன்பது அல்ல. ஆவியின் கனி ஒன்றே. அதன் தன்மைகளே அன்பு சந்தோஷம் சமாதானம் நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். இவைகள் அனைத்துமே ஆவியானவர் எமக்குத்தந்தவை. ஆவியானவரின் நிறைவைப் பெற்றவன் அதன் கனியையும் வாழ்வில் காட்டுபவனாய் இருக்கவேண்டும். கள்ளத்தீர்க்கதரிசிகளைப்பற்றி ஆண்டவர் கூறும்போது, அவர்களுடைய கனிகளாலே அவர்களை அறிவீர்கள் என்றும் நல்லமரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது என்றும் அதேபோல் கெட்டமரம் நல்ல கனிகளைக் கொடுக் கமாட்டாது என்றும் சொன்னார்.

ஆவியானவரால் என் வாழ்வு ஆளப்பட்டிருக்குமேயாகில் என்னில் ஆவியின் கனி பிரத்தியட்சமாய்க் காணப்படவேண்டியது அவசியம். அதை விடுத்து மாம்சத்தின் கிரியைகளே என் வாழ்வில் முக்கியத்துவம் கொண்டிருந் தால் நான் ஆவிக்குரியவனாய் இராமல் மாம்சத்துக்குரியவனாவேன். ஆவியா னவரின் நிரப்புதலுக்கு அடையாளமாக இன்று அநேகரும் காட்டிக்கொள்ள விரும்புவது ஆவியின் வரங்களைத்தான். அந்நியபாஷை பேசுவதும், நோய் களைக் குணமாக்குவதும், இப்படியான காரியங்களைச் செய்து தம்மைப் பிரபல் யமாக்கவும், தமக்குப் பெருமைகளைத் தேடிக்கொள்ளவுமே அனைவரும் விரும்புகின்றனர். ஆனால் தேவனோ, ஆவியின் நிரப்புதலால் நம்மில் ஏற்படும் மாற்றங்களையும், வெளிப்படும் கனிகளையுமே விரும்புகிறார். அதுவே தேவ னுக்கு மகிமை கொண்டுவரும்.

சிலசமயங்களில் நாம் நல்ல கனிகொடுக்கும் மரங்களைப்போல மாய் மாலம் பண்ணலாம். ஆனால், வெளிப்படுகின்ற கனியின் தன்மையை நம்மால் மறைக்கமுடியாது. அப்பொழுது நாம் வெட்கமடைவது மாத்திரமல்ல, நாம் தேவனுடைய நாமத்தையும் வெட்கத்துள்ளாக்குவோம் என்பதுதான் உண்மை.

சிந்தனைக்கு:

ஆவியின் கனியை எதிர்பார்த்திருக்க, மாம்சத்தின் கிரியைகள் என்னில் வெளிப் பட்டு நான் வெட்கமடைந்த வேளைகள் உண்டா? சிந்தித்து மனந்திரும்புவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவியில் ஆராதனை

ஏப்ரல்
**11**
சனி

வேதவாசிப்பு: ரோமர் 11:33-12:2

**'...நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.'** ரோமர் 12:1

'ஏன் இப்போது ஆலயத்துக்கு வருவதில்லை' என்று கேட்டால், 'உங்கள் ஆராதனையில் ஆவி இல்லை. அதனால் நாங்கள் ஆவிக்குரிய சபைக்குப் போகிறோம்' எனக் கூறுகிறவர்கள் அநேகர். ஆனால், நாம் நின்று சிந்திக்க வேண்டிய காரியம் ஒன்றுண்டு. அதாவது, ஆராதனையில் ஆவி இல்லையா, அல்லது நமக்குள்ளேயே ஆவி இல்லையா? நாம் செத்துப்போயிருந்தால், அனலுமில்லாமல், குளிருமில்லாமல் இருந்தால் நாம் பார்ப்பவை, ஆராதிப்பவை எல்லாமே உயிரற்றதாகவே தெரியும். ஆகவே, உயிரில்லாத ஒரு வாழ்வை நாம் வாழ்ந்துகொண்டு, நமது சபை செத்துவிட்டது, ஆராதனைகள் உயிரற்று விட்டன எனக் கூறுவது பிரயோஜனமற்றது.

ஆவியானவரின் நிரப்புதல், அந்நிய பாஷையின் வரங்கள், அற்புத அடையாளங்கள் ஆகிய யாவும் உண்டு. இவற்றை ஆண்டவர் அந்தந்த நேரங்களில் தமது விருப்பப்படி கொடுக்கிறார், நடப்பிக்கிறார். சிலர் இவற்றால் தாங்கள் நிரப்பப்பட்டிருப்பதுபோல பாசாங்கு காட்டுவதும், நடிப்பதும் தேவன் அருவருக்கும் காரியங்களாகும். இவர்கள்தான் ஆவி இல்லை, உற்சாகம் இல்லை என்று ஆராதனைகளையும், சபைகளையும் குற்றஞ்சாட்டுகிறவர்களாக இருக்கிறார்கள். நமது சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பதுமே புத்தியுள்ள ஆராதனை என்கிறார் பவுல்.

முதலாவது, நாம் நம்மைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். அவ்வாறு நமது வாழ்வு ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்தால் மட்டுமே எம்மால் உண்மையாக தேவனை ஆராதிக்கவும், ஆலய ஆராதனையில் தேவபிரசன்னத்தை உணரவும் முடியும். இல்லையேல் நாம் செய்யும் ஆராதனை மொத்தத்தில் வீணாகிவிடும். நாம் ஆலயத்துக்கு வரும்போது நம்மை ஆயத்தப்படுத்தியவர்களாக, ஜெபத்தோடுகூட வரவேண்டியது மிக அவசியம். அப்போதுதான் நம்மால் தேவனை விடுதலையோடு ஆராதிக்க முடியும். "அதிகாலமே உமது சமுகத்தில் வந்து ஆயத்தமாகிக் காத்திருப்பேன்" என்பது சங்கீதக்காரரின் அனுபவரீதியான ஜெபம். ஆயத்தத்தோடு வருகின்ற உள்ளத்திலேயே தேவாவியின் பிரசன்னத்தையும், வழிநடத்துதலையும் உணர்ந்திட முடியும். நம்மை நாமே ஆராய்ந்து மனந்திரும்புவதை விட்டுவிட்டு, சபையில் ஆவி இல்லை, ஆராதனையில் ஆவி இல்லை என்று முறுமுறுக்காதபடி எச்சரிக்கையாக இருப்போமாக. ஏனெனில், ஆராதனை நமக்கல்ல! அது தேவனுக்கே!

சிந்தனைக்கு:

எந்த உள்ளத்துடன் சபை ஆராதனைக்கு நான் செல்லுகிறேன்? தேவாவியானவரின் கரத்தில் என்னையும், எல்லோரையும் ஒப்புவித்துச் செல்லுகிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவியில் நிதானம்

ஏப்ரல்

# 12

ஞாயிறு

வேதவாசிப்பு: 1கொரிந்தியர் 2:6-16

**'ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும், அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப் படான்.'** 1கொரிந்தியர் 2:15

குடிபோதையில் பேசுகிறவனுடைய பேச்சில் நிதானம் இருக்காது. அதை எவரும் கருத்திற்கொள்வதில்லை. நித்திரை மயக்கத்தில் புலம்புவோரும் உள்ளனர். அதையும் யாரும் பெரிதுபடுத்திக்கொள்வதில்லை. உறங்கி எழுந்து காலையில் பேசு என்பர். அதுபோலவே இன்று ஆவியின் நிறைவு என்று கூறிக்கொண்டு நிதானம் இழந்து பேசுகிறவர்களையும், பலவித காரியங்களில் ஈடுபடுகிறவர்களையும் காண்கிறோம்.

**'ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்'** (வச.15) என்று பவுல் கொரிந்து சபைக்கு எழுதுகிறார். ஆவிக்குரியவன் தன்னைத் தானே நிதானித்து அறிகிறவனாக இருக்கிறான். நாம் எம்மை நிதானித்து, எம்மிலுள்ள தப்பிதங்களை உணர்ந்து அறிக்கைசெய்து, நம்மைத் திருத்திக் கொள்ளும்போது, நாம் மற்றவர்களால் குற்றம் சாட்டப்பட வாய்ப்பில்லை. **'நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்.'** (1கொரி.11:31) நிதானம் தவறி வாழும் வாழ்வு ஆவிக்குள்ளான வாழ்வல்ல.

தேவனுக்கு முன்பாக நம்மை நிறுத்தி, நமது வாழ்வை ஆராய்ந்து பார்த்து, வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்றறிந்து, அவற்றை அறிக்கைசெய்து திருந்திக்கொள்வதும், எம் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்துவதுமே ஒரு உண்மையான ஆவிக்குரிய வழியாகும். அதுவே ஆவியானவரின் வழிநடத்துதலாகவும் அமையும். அதைவிடுத்து சத்தமிட்டு ஜெபித்தலும், நிதானமின்றித் துதித்தலும், பிழையான வார்த்தைகளை தீர்க்கதரிசனங்களாக உரைத்தலும் தேவனுக்குப் பிரியமல்ல. வாழ்க்கை உண்மையாக இருந்தால்தான் ஆவியானவரின் வழிநடத்துதலும் நமக்கிருக்கும். அதேபோல உண்மையற்ற வாழ்வில் ஆவியானவரின் வழிநடத்துதலும் இருக்காது.

அவர் சத்திய ஆவியாக இருக்கிறார். அவர் சகல சத்தியத்துக்குள்ளும் நம்மை வழிநடத்தும்படிக்கு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறார். **'அவர் வந்து பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்** (யோவா.16:8). சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு, கீழ்ப்படிந்து நடக்கவே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். அந்த அழைப்பிலே நாம் உறுதியாக இருப்போமானால் நிதானத்தை இழக்கமாட்டோம். அங்கே பிறருடைய குற்றஞ்சாட்டுதலுக்கும், நியாயத்தீர்ப்புக்கும் இடமிராது. தேவன் நம் வாழ்வில் மகிமைப்படுவார்.

சிந்தனைக்கு:

நாம் வழிதப்பிப்போன நேரங்களை சிந்திப்போம். தேவாவியானவரின் நடத்துதலை உணராமல், நிதானம் இழந்த வேளைகளை அறிக்கை செய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமையாய் இருங்கள்!

ஏப்ரல்
**13**
திங்கள்

வேதவாசிப்பு: யாக்கோபு 5:7-11

**'நீங்களும் நீடியபொறுமையோடிருந்து உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்...' யாக்கோபு 5:8**

முன்னர் தொலைபேசியில் ஒருவருடன் தொடர்புகொள்ள வேண்டுமெனில் தபால் அலுவலகத்திற்கு, அல்லது தொலைபேசி வசதியிருக்கும் வீடுகளுக்குத்தான் செல்லவேண்டும். இன்றோ, பேச நினைக்கிற மறுநிமிடமே பேசக்கூடியதாக ஒவ்வொருவர் கையிலும் கையடக்கத் தொலை பேசி உண்டு. என்றாலும், தொடர்புகொள்ளவேண்டியவர் உடனடியாக அந்த அழைப்பை ஏற்காவிடில் நாம் பொறுமையை இழந்துவிடுவதுமுண்டு. பிறகு பேசலாமே என்று நினைப்பதற்கு முன்னரே, அந்த நபரைத் திட்டித் தீர்த்து விடுகிறோம். அந்தளவுக்கு நாம் பொறுமையை இழந்துவருகிறோம். இவ்வித மாக நேரத்தை மீதப்படுத்தும் தொழில்நுட்ப சாதனங்கள் மலிந்துவருகின்ற இக் காலகட்டத்தில் வாழுகின்ற நாம், பொறுமை இழந்தவர்களாக, எமது அவசரத்துக்கு ஆண்டவரும் ஆமாம் போடவேண்டும் என்றும் நினைப்பதுண்டு.

எம்மைப்போலவே ஆண்டவரும் எம்மைக் குறித்து அவசரப்படுவாரா னால் எமது நிலையென்னவென்று சிந்தித்திருக்கிறோமா? அவரோ நீடிய பொறு மையுள்ளவர் என்று வாசிக்கிறோம். எனவே, நீடிய பொறுமையுள்ளவரிடத்தில் நாம் பொறுமையைக் கடைப்பிடிக்க ஏன் தயங்கி நிற்கிறோம். யோபுவின் பொறு மையைக் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள் என்று யாக்கோபு எழுதுகிறார். அவன் எவ்வளவோ உபத்திரவங்களிலும், இழப்புக்களிலும், வியாதிகளிலும், நண்பர் களின் குத்தலான பேச்சுக்களின் மத்தியிலும், சொந்த மனைவியின் திட்டுதலி லும்கூட பொறுமையாய் இருந்தான். அதன் பலனை தேவனிடத்திலிருந்தும் பெற்றுக்கொண்டான்.

**'ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவரு டைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்'** (1பேதுரு 5:6) என்று பேதுரு எழுதுகிறார். தேவன் நம்மை உயர்த்தும்வரைக்கும் அவரது பலத்த கைக்குள் பொறுமையாய் இருக்க, ஏன் நம்மால் முடிவதில்லை? தேவனுடைய பிள்ளை களாகிய நாம் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். தேவன் தம்முடைய நேரத்தில், தகுந்த வேளையில் எம்மைச் சரியாக வழிநடத்துவார். எமது அவசரத்துக்கு தேவன் செயற்படவில்லையே என்று பொறுமையிழந்தவர்களாய் மாறிவிடக்கூடாது. நாம் அவருடைய கைகளுக்குள் இருக்கிறோமா? அல்லது, அவரை நமது கைகளுக்குள் அடக்கிவைக்க முயலுகிறோமா? அவருக்குள் நாம் அடங்கியிருப்பதே நமக்கு நித்திய பாதுகாப்பு. ஆகையினால் பொறுமை யைக் கற்றுக்கொண்டு, பொறுமையாய் வாழுவோமாக.

சிந்தனைக்கு:

நான் பொறுமையிழந்து சுயபுத்தியில் சாய்ந்து, வழிதப்பிப்போய், அதனால் ஏற் பட்ட பாதகமான விளைவுகள் ஏதேனும் உண்டா? தேவனுடைய வேளைக்குக் காத்திருக்க முடியாதபடிக்கு நேரிடுகிற சோதனைகளுக்கு இனியும் இடமளிக் காமல் பொறுமையாய் இருப்பேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்

14

செவ்வாய்

## தேவபார்வையா? மனிதபார்வையா?

வேதவாசிப்பு: ஆதியாகமம் 39:13-23

**'...அந்தச் சிறைச்சாலையில் அவன் இருந்தான். கர்த்தரோ யோசேப்போடே இருந்து, அவன்மேல் கிருபைவைத்து, சிறைச் சாலைத் தலைவனுடைய தயவு அவனுக்குக் கிடைக்கும்படி செய்தார்.' ஆதியாகமம் 39:20-21**

நாம் கர்த்தரையா அல்லது, மனிதரையா பிரியப்படுத்தும்படி வாழுகிறோம்? நமது வாழ்க்கையை மனிதரும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்; தேவனும் பார்த்துக்கொண்டிருக்கிறார். ஆனால், நாம் யாருக்கு உண்மையுள்ளவர்களாய் இருக்கிறோம் என்பதே கேள்வி.

அன்று யோசேப்பு நினைத்திருந்தால் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, போர்த்திப்பாரின் மனைவியையும் திருப்திப்படுத்தி, தானும் அனுபவித்து, தனது வேலையையும் தக்கவைத்து, சந்தோஷமான ஒரு வாழ்வை வாழ்ந்திருக்கலாம். இவை யாவும் அவன் தேடிப்போகாமல் அவனைத்தேடித் வந்த காரியங்கள். அப்படியிருந்தும் அவை தேவனுக்கு விரோதமானவை என்று உணர்ந்த அவன், ஒரு நொடிப்பொழுதில் அவற்றையெல்லாம் தூக்கி எறிந்துவிட ஆயத்தமாய் இருந்தான். தனது இன்பம், சுகபோகம் எல்லாவற்றையும்விட தேவனுக்குக் கீழ்ப்படிவதையும், அவரைப் பிரியப்படுத்துவதையுமே உன்னதமானதாய் எண்ணினான். அதனால் வரும் விளைவைக் எண்ணாமல் அந்த இடத்தைவிட்டே ஓடிவிட்டான் யோசேப்பு.

இன்று பாவமான கவர்ச்சிகளும், உலக இன்பங்களும் எம்மைத் தேடி வரும்போது, இவற்றை தேவன்தான் தருகிறார் என்று எண்ணி இருகரம் நீட்டி பிடித்துக்கொள்ள முன்நிற்கிறோமா என்று எண்ணத்தோன்றுகிறது. இதை தேவன் விரும்புகிறாரா, இது அவர் கொடுத்ததா, அல்லது இது பாவச் சோதனையா என்றுகூட நாம் சிந்திப்பது கிடையாது. எமக்கு இன்பமாய் காண்பவைகள் தேவனுக்கு விரோதமானதென்றாலும் அவற்றை நாம் பற்றிக்கொள்வதுண்டு. நாம் யாரைப் பிரியப்படுத்தப் பார்க்கிறோம், நம்மையா? சக மனிதரையா? அல்லது தேவனையா? தேவனுக்கு உண்மையாயிருந்ததற்காக யோசேப்பிற்குக் கிடைத்தது குற்றவாளி என்ற பட்டமும் சிறைவாசமும்தான். மனிதபார்வையில் அவன் குற்றவாளியாயிருப்பினும் சிறையிலும்கூட கர்த்தர் அவனோடிருந்தார். இவ்வாறான ஒருவனுடன் கர்த்தர் இருப்பாரா? இருந்தார்! காரணம், அவன் கர்த்தருக்கு முன்பாக குற்றமற்றவனாகக் காணப்பட்டான். அவன் மனிதரைப் பிரியப்படுத்தாமல், சுயநன்மையைக் கணக்கிடாமல், தேவனுக்கு மாத்திரமே உண்மையாய் இருந்தான். அதனால் சிறைவாசம்கூட அவனுக்குப் பெறுமதி வாய்ந்ததாகவே இருந்தது. இல்லையானால் சிறைச் சாலைத் தலைவன் சிறைக் கைதிகளை யோசேப்பிடத்தில் ஒப்புவித்திருப்பானா?

சிந்தனைக்கு:

நான் மனிதரைப் பிரியப்படுத்த எண்ணிய தருணங்கள் எத்தனை? என்ன இழப்பு நேர்ந்தாலும், இன்றிலிருந்து தேவனை மாத்திரம் பிரியப்படுத்தி வாழுவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு குறையுண்டு!

ஏப்ரல்
15
புதன்

வேதவாசிப்பு: மாற்கு 10:17-22

**'அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய்விட் டான்.' மாற்கு 10:22**

நாம் அனைவருமே நமக்கு நல்லவர்கள்தான். எம்மைப் பற்றி யார் என்ன சொன்னாலும் நம்மைக் குறித்து நமக்குள்ளே ஒரு நல்ல எண்ணம் இருக்கத்தான் செய்யும். இன்றைய வேதப்பகுதியில் இவ் வாலிபனும் தன்னைக் குறித்து ஒரு நல்லெண்ணம் உள்ளவனாய் இருந்தான். தன்னிடத்தில் எந்தக் குறையும் கண்டுகொள்ளமுடியாது என்று நம்பினான் ஆகவே, தைரிய மாய் இயேசுவண்டை வந்தான். தனக்கு நித்திய ஜீவன் நிச்சயம் என்று நம்பினான். நிச்சயமாக தன்னிடத்தில் எந்தக் குறையையும் இயேசுவால் கண்டுகொள்ளமுடியாது என்றும் அவன் எண்ணினான்.

தன்னை நல்லவன் என்று எண்ணிவந்த அவன், இயேசுவை, 'நல்ல போதகரே' என்று அழைத்தபோது, இயேசுவோ, 'தேவன் ஒருவரைத்தவிர எவரும் நல்லவர் கிடையாது' என்பதை அவனுக்குப் புரியவைத்தார். அதாவது மனிதனாய்ப் பிறந்தவனிடத்தில் ஏதாவது குறையிருக்கும் என்பதையே அவனுக்குச் சுட்டிக்காட்டினார். அவன் என்ன நோக்கத்துடன் வந்தான் என்பதை ஆண்டவர் அறிந்திருந்தார் என்று ஊகிக்கத் தோன்றுகிறது.

கற்பனைகளையெல்லாம் தனது சிறுவயதுமுதல் கற்றுத் தேறினவனா கக் காணப்பட்ட அவனிடம், ஆண்டவர், "உன்னிடத்தில் ஒரு குறையுண்டு" என்றதும், அவனுக்கு அதை ஏற்றுக்கொள்ளக் கடினமாக இருந்திருக்கும். அது அவனுக்கு நகைப்புக்கிடமாகவும் இருந்திருக்கலாம். அவன் எல்லாக் கற்பனைக ளையும் கைக்கொண்டவனாக இருந்தாலும், அவனுடைய உள்ளத்தில் அவை இருக்கவில்லை. அவனுடைய ஐசுவரியமும் அதன் நினைவுகளுமே அவனு டைய உள்ளத்தை நிறைத்திருந்தது. அவனுடைய ஐசுவரியத்தை விற்றுத் தரித்திரருக்குக் கொடுத்து, பின்னர் தம்மைப் பின்பற்றிவரும்படி இயேசு சொன்ன போது, அதை அவனால் செய்ய முடியவில்லை எனவே, அவன் மனமுடைந்து துக்கத்தோடே போய்விட்டான் என்று வாசிக்கிறோம்.

எமது வாழ்விலும் நாம் எம்மைக் குறித்துத் தேறினவர்களாக, எம்மில் ஒரு குறைவுமேயில்லை, நாம் அனைத்திலும் சரியாக தேவனுக்குப் பிரியமா னவர்களாக வாழுகிறோம் என்று எண்ணுவதுண்டு. ஆனால், தேவன் நம் வாழ்வைப் பார்க்கும்போதுதான் எம்மில் உள்ள குறை என்ன என்பதை அவ ரால் காணக்கூடியதாக உள்ளது. குறையைச் சுட்டிக்காட்டி வெட்கப்படுத்த ஆண்டவர் அந்த வாலிபனிடம் அப்படிச் சொல்லவில்லை. மாறாக, நித்தி ஜீவனுக்குப் போகும் வழியைத்தான் சொன்னார். அவன் திரும்பியே போய் விட்டான். இன்று நாம் என்ன செய்யப்போகிறோம்?

சிந்தனைக்கு:

நான் திருந்தவேண்டிய பகுதிகள் எனக்குச் சுட்டிக்காட்டப்படும்போது எனது மாறுத்தரம் என்ன? திருத்திக்கொள்வேனா? தேவனைவிட்டே போய்விடுவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சரிப்பை அசட்டைபண்ணாதே!

ஏப்ரல்
16
வியாழன்

வேதவாசிப்பு: மத்தேயு 3:1-12

**'இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது. ஆகையால், நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்.' மத்தேயு 3:10**

அதியுயர் சக்திவாய்ந்த மின்சாரம் பொருத்தப்பட்டிருந்த இடத்தில் 'எச்சரிப்பு' என்று பெரிதாக தெளிவாக எழுதப்பட்டிருந்தது. அவ் வழியாகச் சென்ற ஒரு சிறுவன் ஏன் இதில் இப்படியாக எழுதப்பட்டுள்ளது என்று அதற்கருகில் இருந்த ஒரு பெட்டியைத் தொட்டுப் பார்த்தான். எதுவும் நடக்கவில்லை. இது ஒரு தேவையில்லாத எச்சரிப்புத்தான் என்று எண்ணியவனாகக் கடந்து சென்றான். தினமும் அவ்வழியாக வரும்போதெல்லாம் அப் பெட்டியில் ஒரு தட்டு தட்டிச்செல்வதை தன் வழக்கமாக்கிக்கொண்டான். ஒரு நாள் அதில் மின்சாரக்கசிவு இருந்தமையால் அதைத் தொட்ட சிறுவன் மின்சாரம் தாக்கி வீசியெறியப்பட்டு மரணமானான்.

'பாவத்தின் சம்பளம் மரணம்' என்பதுவும் இப்படியானதொரு எச்சரிப்பே. பாவம் செய்யும்போது அது இனிக்கும்; மனதுக்கும் மகிழ்ச்சியைத் தரும். ஆனால், ஒருநாள் அதன் விளைவை அனுபவிக்கும்போதுதான் அதன் அகோரம் நமக்குப் புரியும். அது நம்மில் உண்டாக்கும் கனி நல்லதல்ல; அது கசக்கும், மரண ஆபத்தையே விளைவிக்கும். அப்படிப்பட்ட மரங்கள் வெட்டுண்டு அக்கினியிலே வீசப்படும் நாள் அதி தூரத்தில் இல்லை. கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைக்கப்பட்டுள்ளது. கனிகொடாத மரங்கள் அல்ல; நல்ல கனிகொடாத மரங்களெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்று எழுதப்பட்டதை இன்று வாசித்தோம். நாம் பாவத்திலிருந்து முற்றாக விடுதலைபெற்று தேவனுக்குள் நல்ல கனிகொடுக்கும் மரங்களாய் வாழ வேண்டும். இல்லாவிடில் நாம் ஒருநாள் வெட்டுண்டு வீழ்த்தப்படுவோம்.

பாவத்தைக் குறித்து எத்தனை எச்சரிப்புக்கள்! எத்தனை அறிவுறுத்தல்கள்! எத்தனை உபதேசங்கள்! எத்தனை ஆலோசனைகள்! இவைகளையும் மீறி நாம் கேட்கமாட்டோம் என்றால், அடுத்து வருவது அழிவுதான். எச்சரிப்புப் பலகை தெளிவாக நமது பாஷையிலேயே எழுதப்பட்டு நமது கரங்களில் தரப்பட்டுள்ளது. அப்படியிருக்க அதனை அலட்சியப்படுத்தி, பாவத்தோடு விளையாடும்போது அதன் விளைவையும் சந்தித்துத்தான் ஆகவேண்டும். தேவன் மன்னிப்பவராக இருந்தாலும், அவர் நீதியுள்ள நியாயாதிபதியாக வரும் காலம் தூரத்திலில்லை. அதை நாம் உணர்ந்துகொள்வோம். மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுக்க பிரயாசப்படுவோம். எமக்காக ஒரு மீட்பின் பணியினைத் தேவன் செய்து முடித்தார். அதை ஏற்று மன்னிப்புப் பெற்று பாவத்திலிருந்து விடுதலைபெற்று கர்த்தருக்காய் கனிகொடுக்கும் வாழ்வு வாழ நம்மை ஒப்புக்கொடுப்போம்.

சிந்தனைக்கு:

தேவ எச்சரிப்பை துச்சமாக எண்ணி, பாவத்துக்குள் விருப்பத்தோடு பிரவேசித்த தருணங்கள் எத்தனை? அவற்றை இப்போது நினைக்கும்போது நமது உணர்வு எப்படியிருக்கிறது? இனி நான் என்ன செய்யப்போகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர் பேசட்டும்!

ஏப்ரல்
**17**
வெள்ளி

வேதவாசிப்பு: அப்போஸ்தலர் 22:1-11

**'...சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று என்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன்.' அப்போஸ்தலர் 22:7**

இருவர் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் அதிகமாகப் பேசிக்கொண்டிருந்தார். மற்றவர் இடையில் பேசுவதற்காக வாயைத் திறந்தாலும், அவர் இவருக்கு இடமளிக்காமல் தானே தொடர்ந்தும் பேசிக் கொண்டே இருந்தார். இதுபோலவே தேவனோடு பேசும் போதும் பலர் தேவன் பேசுவதற்கு இடமளிக்காமல் தாங்கள் மாத்திரமே பேசிக்கொண்டிருப்பதற்குப் பிரியப்படுவர். தாங்கள் நினைப்பதைக் கூறுவதற்கும், தங்கள் தேவைகளை நிறைவேற்றும் படியும் தொடர்ந்தும் தேவனோடு பேசிக்கொண்டேயிருப்பர். ஆனால், தேவன் நம்மிடம் எதை எதிர்பார்க்கிறார்? எதற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்? என தேவனுடைய வார்த்தை நமக்குப் போதிக்கிறது; நாம் மட்டும் பேசிக்கொண்டேயிருந்தால் தேவ சித்தத்தை அறிந்துக்கொள்வதெப்படி?

சவுல் என்பவன் ஒரு நீதிமானைப்போல யூதமார்க்கத்தின் சட்டதிட்டங்களைக் கைக்கொண்டு வாழ்ந்து, தனது மதத்தில் வைராக்கியம் கொண்டவனாய் கிறிஸ்தவர்களைக் கொலைசெய்து, அவர்களை அழித்து வந்தான். அவனோடு இயேசு ஒருநாள் இடைப்பட்டுப் பேசி, "சவுலே, சவுலே, நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்" என்று கேட்டதால்தான் அன்று சவுலின் வாழ்க்கை தலை கீழாய் மாறியது. பெயர்கூட பவுல் ஆகியது. தேவன் பேசியிராவிட்டால், அவர் பேசியதைக் கேட்டு சவுல் கீழ்ப்படிந்திருக்காவிட்டால் இன்று எமக்குப் பவுலும் இல்லை; அவர் எழுதிய நிருபங்களும் இல்லை.

சிறுவனாகிய சாமுவேலை தேவன் கூப்பிட்டபோது, ஆசாரியனாகிய ஏலி, சாமுவேலுக்குச் சொல்லிக்கொடுத்த ஜெபம், "கர்த்தாவே, சொல்லும்; அடியேன் கேட்கிறேன்" என்பதாகும்.

தேவன் பேச நாம் இடங்கொடுப்போம். அதற்கு கீழ்ப்படிந்து நடப்போம். சிலர் ஜெபிக்கும்போது, "ஆண்டவரே, நீர் இப்படிச் செய்யும்; செய்தால் இப்படியெல்லாம் நடக்கும்; இப்படி நடந்தால் எல்லாருக்கும் நல்லது" என்று தேவனுக்கே ஆலோசனை வழங்கி, திட்டங்களையும் வகுத்துக் கொடுத்து ஜெபிக்கின்றனர். "நான் ஜெபித்திருக்கிறேன்; தேவன் சித்தப்படி நடக்கட்டும்" என்று சிலர் சொல்லுவார்கள். ஆனால், தேவசித்தம் இன்னது என்று அறியும்படிக்கு வார்த்தைகள்மூலமோ, செய்திகள்மூலமோ, அல்லது வேறு விதங்களிலோ கர்த்தர் பேசுவதற்கு இடமளிப்பதில்லை. தேவன் பேசுவதும், அதை நாம் கேட்டு நடப்பதும் இரு கால்கள் போன்றவை. இரண்டும் இருந்தால்தான் நமது கிறிஸ்தவ வாழ்வில் முன்னே நடக்கமுடியும்.

சிந்தனைக்கு:

வார்த்தைமூலமோ, பிறவழிகளிலோ கர்த்தர் நம்முடன் பேசிய அல்லது நமக்கு உணர்த்திய அனுபவங்கள் உண்டா? அவர் பேசட்டும், நான் கேட்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனந்திரும்புதலின் துக்கம்

ஏப்ரல்

# 18

சனி

வேதவாசிப்பு: 2கொரிந்தியர் 7:1-10

**'தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது.' 2கொரிந்தியர் 7:10**

ஆலயத்தை இடித்துப் பெரிதாகக் கட்டவேண்டும்; வருமானம் போதவில்லை; இன்னும் அதிகளவு காணிக்கை சேர்த்தாகவேண்டும்; காலாண்டுக் கூட்டங்களை இன்னமும் சிறப்பாக நடாத்தவேண்டும் போன்ற கவலைகளே இன்று சபைகளிலே அதிகமாகத் தலைதூக்கி நிற்கின்றன. ஆனால், சபை மக்களின் மனமாற்றத்தைக் குறித்தோ, சபையின் ஐக்கியத்தைக் குறித்தோ எவ்வித கவலையும் யாருக்குமே இல்லை. சபைகளுக்குள்ளும் நாம் லௌகீக துக்கத்தைக் குறித்து பேசுகிறோமே தவிர மனந்திரும்புதலுக்கேற்ற துக்கம் கொள்வதில்லை.

பவுல் கொரிந்தியருக்கு எழுதும்போது, **'நீங்கள் மனந்திரும்புதலுக்கேற்ற துக்கம் கொண்டபடியினால் சந்தோஷப்படுகிறேன்'** என்கிறார். அந்த துக்கம் பின்பு இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தும். ஆதித்திருச்சபையை நோக்குமிடத்து, அவர்களுக்குள் ஒற்றுமை, ஐக்கியம் என்பவை இருந்தது. தங்கள் சொத்துக்கள், காணியாட்சிகள் எல்லாவற்றையும் தமக்கென்றில்லாமல் பொதுவாக சகலவற்றையும் அனுபவித்தார்கள். ஒருவரோடொருவர் ஐக்கியமாய் இருந்தார்களே தவிர, ஒருவரையொருவர் குறை சொல்லவில்லை. அவர்களுக்குள்ளே ஒரே ஆவியிருந்தது. ஒரே அன்பு, தேவ அன்பு நிறைந்திருந்தது. குறைச்சலில் ஒருவரையொருவர் தாங்கும் பண்பு இருந்தது. ஆனால் இன்றோ, எல்லாமே உடைபட்டுப்போயிற்று.

ஐக்கியமும் ஒருமைப்பாடும் ஆதித்திருச்சபைகளில் இருந்தமையால் அநேகர் இரட்சிக்கப்படவும், சபைகளில் சேர்க்கப்படவும் வாய்ப்பிருந்தது. இன்று சண்டைகளும், பிரிவினைகளும், பதவிப்போட்டிகளும், மலிந்துகிடப்பதால் மனமாற்றத்துக்கோ, இரட்சிப்புக்கோ இடமற்றுப்போய்விட்டது. இன்று நாம் ஒருவரையொருவர் குறைசொல்லி, விரோதமாய்ப் பேசி, அதனால் பிரச்சனைகள் உருவாகி, சபைக்கூட்டங்களெல்லாம் பிரச்சனை தீர்க்கும் நீதிமன்றங்களாகிவிட்டன. இது துக்கத்துக்குரிய விடயம்.

சபைகளிலே மனமாற்றத்துக்கும் இடமில்லை, ஐக்கியத்துக்கும் இடமில்லை, அன்புக்கும் இடமில்லை. அப்படியானால் அவிசுவாசிகளை சபைகளுக்குள் கொண்டுவருவது எப்படி? எமது சபைக்குள்ளும், நமது வாழ்விலும் துக்கங்கள் ஏராளமாக உண்டு. ஆனால் அத் துக்கம் மனமாற்றத்திற்கேற்றதா என்று கேட்டுப்பார்ப்போம். அதுவே எம்மை செம்மையான வழியில் நடத்தும். சபை வளர்ச்சிக்கும் அதுவே சிறந்தது. மாறாக, உலகரீதியான, அல்லது நமது தவறுகளாலான பிரச்சனைகளால் ஏற்படும் துக்கம் நாளடைவில் நம்மைக் கொன்றுபோடும். நமது உள்ளத்தை சற்று நிதானித்துப் பார்ப்போமாக.

சிந்தனைக்கு:

நமது சபைகளில் உள்ள குறைகளுக்கு நான் என்னவிதத்தில் காரணமாயுள்ளேன்? எனக்குள் மனமாற்றத்துக்கேதுவான துக்கம் உண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடினமான உபதேசம்

ஏப்ரல்
**19**
ஞாயிறு

வேதவாசிப்பு: 2தீமோத்தேயு 4:1-8

**'...எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு.' 2தீமோத்தேயு 4:2**

ஆயுள்வேத மருந்துகள், சில நாட்டுவைத்திய மருந்துகள் மிகவும் கசப்பானவையாக இருக்கும். அவற்றைச் சிறு சரைகளாகச் சுற்றி, தேனுடன் சேர்த்துச் சாப்பிடும்படிக்குத் தருவார்கள். அதனை தேனுடன் சேர்த்து உண்ணும்போது அதன் கசப்பு மட்டுப்படுத்தப்பட்டு, விழுங்கக் கூடியதாக இருக்கும். ஆனால், கசக்குமே என்று அதை உண்ணாமல் விட்டால் வியாதி குணப்படாது. கடினமான உபதேசமும் இதைப்போன்றதே. நீடிய சாந்தத் தோடும், உபதேசத்தோடும் மாத்திரமல்ல. கண்டனம்பண்ணி கடிந்துகொண்டு உபதேசிக்கவேண்டும் என்று பவுல் அறிவுரை கூறுகிறார்.

கடிந்துகொண்டு உபதேசிக்கும் ஊழியர்களை சிலர் விரும்புவது கிடையாது. எப்போதும் மனதுக்கு இதமாக முதுகில் தட்டிக்கொடுத்து ஆண்டவர் நல்லவர், உன்னோடு இருக்கிறார் என்பதான உபதேசங்களைக் கேட்கவே பெரும்பாலானோர் விரும்புவர். ஆனால் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது "நீ கண்டனத்தோடு கடிந்துகொண்டு, நீடியபொறுமையோடும், சாந்தத்தோடும் உபதேசம்பண்ணு" என்கிறார். அதாவது, சொல்லவேண்டியதைச் சொல்லவும் வேண்டும்; அதேசமயம் எப்படிச் சொல்லுகிறோம் என்பதுவும் அவசியம். சிலர் சொல்லவேண்டியதைச் சொன்னால் போதும் என்று நிறுத்திவிடுவர். அதனால் ஏற்படும் மனமடிவையும், ஐக்கியக் குலைவையும் அவர்கள் எண்ணமாட்டார்கள். சிலர் சொல்லவேண்டியதைச் சொல்லாமல், மேற்பூச்சாகப் பேசுவார்கள். அது பிரயோஜனமற்ற செய்தியாகும். இவையிரண்டும் இல்லாமல் சாந்தத்தோடு, அதேசமயம் கடிந்துகொண்டும் பொறுமையோடும் கண்டனம்பண்ணும் உபதேசமே ஆரோக்கியமான உபதேசம் என்கிறார் பவுல்.

இந்த ஆரோக்கியமான உபதேசத்தைக் கேட்க மனதில்லாமல் சிலர் தங்களுக்கு இசைந்த போதகர்களைத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்கு விலகி, கட்டுக்கதைகளுக்குச் செவிசாய்ப்பர்கள் என்ற எச்சரிப்பையும் வேதம் நமக்குத் தந்திருக்கிறது(வச.4). ஒருமுறை ஒருவரோடு பேசியபோது, குறிப்பிட்ட ஒரு ஊழியரின் செய்திகள் தனது வாழ்வுக்குச் சவாலாக அமைந்தது எனவும், இப்போது தான் வழிபடும் சபையில் அவருக்கு அவ்வளவாக அழைப்புக் கொடுப்பதில்லை என்றும், அதற்குக் காரணம் அவர் கொடுக்கும் செய்திகள் கடினமானதும் கண்டிப்பானதுமாம் என்று சொன்னார். ஆம், இன்று முதுகில் தட்டிக்கொடுக்கும் செய்திகளையே மக்கள் விரும்புகின்றனர். அன்று இயேசுவின் உபதேசம்கூட கடினம் என்று அநேக சீஷர்கள் முறுமுறுத்தார்கள் (யோவான் 6:60). நாம் எப்படி?

சிந்தனைக்கு:

சுகமான செய்திகளா, கடினமான உபதேசங்களா, எது என் வாழ்வை இதுவரை நல்வழிப்படுத்தியிருக்கிறது? கடினமாயினும் நல் உபதேசத்திற்குச் செவி கொடுக்க நான் ஆயத்தமா? அல்லது, அப்படி உபதேசிக்கிறவர்களைத் தூற்றுவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவனுடைய ஆலயம்

ஏப்ரல்
**20**
திங்கள்

வேதவாசிப்பு: 1கொரிந்தியர் 3:16-23

**'நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?'** 1கொரிந்தியர் 3:16

ஞாயிறுதோறும் ஆராதனைக்காக நாம் செல்லுகின்ற ஆலயத்துக்கென்று ஒரு தனி மரியாதையும் மதிப்பும் நமக்குண்டு. அதற்குள் அமைதியாயிருப்போம்; உணவுப் பண்டங்களை உண்ணமாட்டோம், சுத்தமாக வைத்திருப்போம், பிள்ளைகளை அங்குமிங்கும் ஓடிவிளையாட விடமாட்டோம். அது தேவனுடைய ஆலயம் என்பதால் அதை இப்படியாகப் பாதுகாக்கிறோம். அதுபோலவே எமது சரீரம், அதாவது நாங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம் என்று வேதம் சொல்லுகிறது; அதை நாம் எப்படியாகக் காத்துக்கொள்ளுகிறோம் என்று கேட்டால் அதற்கு அநேகரிடத்தில் விடையில்லை.

நாம் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறோம். நம்மில் தேவன் வாசம் செய்ய விரும்புகிறார். நாம் எமது சரீரங்களைத் தேவனுக்குப் பிரியமானதாயும், பரிசுத்தமானதாயும் காத்துக்கொள்ளவேண்டியது அவசியம். **'ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்.'** (1கொரி.3:17) என்று தேவனுடைய வார்த்தை நம்மை எச்சரிக்கிறது. எமது சரீரத்தைப் பாதிகின்ற எந்தக் காரியமாயிருப்பினும் அதைக் குறித்து நாம் ஜாக்கிரதையாய் இருக்கக் கடமைப்பட்டுள்ளோம். அது நம்மிடமிருக்கும் தீய பழக்கவழக்கங்களாய் இருக்கலாம், மறைமுகமான பாவமாய் இருக்கலாம், பிறரை வேதனைப் படுத்துகின்ற வார்த்தைப் பிரயோகங்களாக இருக்கலாம், தேவன் வெறுக்கின்ற குணங்களாகக்கூட இருக்கலாம். எதுவாயினும் அது தேவனுடைய ஆலயமாகிய நமது சரீரத்துக்குப் பங்கம் விளைவிக்கிறதாய் இருந்தால் அதனைத் தேவன் அருவருக்கிறார்.

'என் சரீரம், என் வாழ்வு' என்று சொல்லிக்கொண்டு நம் இஷ்டம் போல வாழலாம் என்ற எண்ணத்தைஅகற்றுவோம். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாய் இருக்கிறது; நாமே அந்த ஆலயம் என்ற எண்ணத்தினை ஆழமாக எம்முள் பதித்துக்கொள்வோம். **'நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று... வேண்டிக்கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.'** (ரோமர் 12:1) என்கிறார் பவுல். எமது சரீரம் ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கப்படுவதால் நாம் தேவனை ஆராதிக்கிறோம். அந்த எண்ணத்துடன் ஆலயம் செல்லும்போது அங்கு நாம் செய்யும் ஆராதனையும் தேவனுக்கு மகிமையானதாய் இருக்கும். அதைவிடுத்து எல்லா அசுத்தங்களோடும் ஆராதனைக்குச் சென்று, தேவனை ஆராதிக்கும் ஆராதனை எப்படி தேவனுக்குப் பிரியமானதாய் அமையும் என்று சிந்தித்துப் பார்ப்போம்.

சிந்தனைக்கு:

இஷ்டப்படி நடந்து என் சரீரத்தைக் கெடுத்து, தேவனைத் துக்கப்படுத்திய காரியங்களை விட்டுவிலகி தேவனுக்கு மகிமை செலுத்துவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவத்தை உணர்ந்திடு!

ஏப்ரல்
21
செவ்வாய்

வேதவாசிப்பு: ஏசாயா 6:1-10

**'....நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்...'** (ஏசா. 6:5)

நாகரீகமும், விஞ்ஞானமும் வேகமாகப் பெருகிவரும் இக்காலகட்டத்தில், 'பாவம்' என்ற சொல் மறைந்து, பாவஉணர்வும் அற்றுப்போய், மக்கள் தங்கள் வாழ்வில் பாவத்தையே அப்பியாசப்படுத்திக் கொண்டிருக்கிறார்களோ என்று எண்ணத்தோன்றுகிறது. எதற்கும் ஒரு தர்க்கத்தை உண்டாக்கி, பாவத்தை, பாவம் அல்ல என்று சாதிக்குமளவுக்கு மனுக்குலம் எங்கேயோ போய்விட்டது. தேவசமுகத்தில்கூட பாவஉணர்வு அற்றவர்களாய் துணிகரமாய் மாய்மாலம்பண்ணி வாழ பலர் துணிந்துவிட்டார்கள்.

இன்றைய தியானப்பகுதியில் ஏசாயா, தேவனுடைய மகிமையின் தரிசனத்தின் முன்பாக, தான் பாவியென்பதை உணர்ந்து அலறுவதைக் காண்கிறோம். பாவியான மனுஷர் மத்தியில் வாழும் பாவி தான் என்பதை உணர்ந்தவராய் அவர் அறிக்கையிட்டபோது, தேவனுடைய பரிசுத்தமாக்குதல் அவருக்குக் கிடைத்தது. எவனொருவன் தன் பாவநிலையையும், தான் பாவியென்பதையும் உணருகிறானோ அவனே தேவனுடைய பரிசுத்தமாக்குதலையும் வாழ்வில் உணர்ந்துகொள்ளமுடியும். பாவத்தை உணராதவனுக்கும், பாவமன்னிப்பு தேவையென்பதை நினைக்காதவனுக்கும் அந்த விடுதலை கிடைக்காது.

ஜெபநேரங்களில், ஆராதனைவேளைகளில், மற்றும் ஆவிக்குரிய கூட்டங்களில் மாத்திரம்தானா இன்று நாம் தேவசமுகத்திற்கு வருகிறோம்? தேவனுடைய கண்கள் பூமியெங்கும் உலாவருகிறது என்பதை நாம் மறந்துவிடுவதுண்டு. அந்தக் கண்களுக்கு முன்பாக நமது நிலையென்ன? நாம் செய்வதை யாரும் காணமாட்டார்கள், நாம் பேசுவதை எவரும் கேட்கமாட்டார்கள் என்ற துணிகரம் நமக்கு. ஆனால் எல்லாவற்றையும் தேவன் பார்த்துக்கொண்டிருக்கிறார். தேவாலயத்துக்கு வரும்போதுகூட தேவசமுகத்திற்கு வருகிறோம் என்ற பயபக்தி நம் மத்தியில் குறைந்து வருகிறது என்பதை மறுக்கமுடியாது. ஏதோ நாங்கள் கிறிஸ்தவர்கள் என்றால் ஞாயிறு ஆலயத்திற்குப் போகவேண்டும், திருவிருந்து எடுக்கவேண்டும் என்று ஒருவித கடமை தீர்க்கும் மனஉணர்வு பலருக்கு; வேறு சிலருக்கு, அது ஒருவித சந்தோஷம், அவ்வளவும்தான். ஆராதனை முடிந்ததும் நடைபெறும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதும் சிலருக்கு இன்பம். அல்லது, வாரத்தில் ஒருநாள் தேவனிடம் சென்று, சுகங்கேட்டு வருவது போலவும் நடப்பதுண்டு. இந்த அலட்சிய மனோபாவம் மாறவேண்டும்.

பரிசுத்த தேவனுக்கு முன்நிற்க பாவிகளாகிய நமக்கு ஏது துணிவு? தேவபிரசன்னத்தை உண்மையாய் உணர்ந்தால், நமது பாவநிலைமையை நம்மால் உணரமுடியும். அங்கேதான் பரிசுத்தமாகுதலும் நிகழும். நம்மை நாம் உண்மையாய் அறிக்கை செய்யும்வரைக்கும் தேவபிரசன்னத்தையும் நம்மால் உணரமுடியாது. அதுவரை நமது அழைப்பையும் புரிந்துகொள்வது கடினம்.

சிந்தனைக்கு:

தேவன் என்னைக் காண்கிறபடி நானும் என்னைக் காண என்னை இந்த நாளில் முழுமனதோடு ஒப்புவிப்பேனா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பினால் கூடும்!

ஏப்ரல்

# 22

புதன்

வேதவாசிப்பு: யோவான் 14:21 - 31

**'என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக் கொள்ளமாட்டான்...' (யோவான் 14:24)**

புதிதாக திருமணமான தம்பதியினர், உறவில் வளர வளர காலப்போக்கில் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, ஒருவருக் காக ஒருவர் விட்டுக்கொடுத்து, மற்றவருக்காகத் தங்களையே மாற்றிக்கொள் வார்கள். 'இது அவருக்குப் பிடிக்கும், பிடிக்காது; இப்படிச் செய்தால் மிகவும் சந்தோஷமடைவார். அவருக்குப் பிடிக்காதது, எனக்கும் வேண்டாம்' என்று இப்படியாக தம்மையும் அறியாமலேயே காலப்போக்கில் மாறிவிடுகிறார்கள். இவர்களுக்கிடையில் வருகின்ற இந்த மாற்றங்கள் எல்லாம் யாரும் சொல்லிக் கொடுத்தோ அல்லது கட்டாயத்தின் பேரிலோ வருவதில்லை; மாறாக, உறவின் அடிப்படையிலும், அன்பின் வெளிப்பாடாகவுமே வருகிறது.

அதுபோலவே, "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வச னத்தைக் கைக்கொள்ளுவான்"(வச.21) என்றார் ஆண்டவர். ஆகவே, ஆண்டவ ரின் வசனத்துக்குக் கீழ்ப்படிவதற்கும், அதை ஏற்றுக்கொண்டு கைக்கொள்ளுவ தற்கும் அடிப்படைத் தேவை, நாம் தேவன்மீது கொண்டுள்ள அன்பு ஒன்றேயல் லாமல் வேறேதும் இல்லை. அன்பில்லாதவனால் வசனத்தைக் கடைப்பிடிப்பதும், கைக்கொள்ளுவதும் கடினமான காரியமாகவே இருக்கும். தேவன்மீது உண்மை யான அன்புள்ளவன், எவரும் சொல்லாமலே அவரது வசனங்களைக் கைக் கொள்ளுவான். தேவனுக்குப் பிடிக்காதவற்றை அவன் செய்யமாட்டான். காரணம், அவன் உண்மையாகவே ஆண்டவரை நேசிக்கிறான். அவனை எவரும் கட்டாயப்படுத்தவேண்டிய அவசியம் கிடையாது. அவன் சரியாக காரியங்களைக் கடைப்பிடிக்கிறானா என்று எவரும் சோதித்துப்பார்க்கவேண்டி இராது. ஏனெனில், அனைத்தையும் ஆண்டவர்மீதுள்ள அன்பின் அடிப்படையி லேயே அவன் செய்கிறான். அன்பு எதையும் விட்டுக்கொடுத்துச் செய்யும். இன்று, கீழ்ப்படிவைக் குறித்து, அல்லது விட்டுவிடவேண்டிய காரியங்களைக் குறித்து கிறிஸ்தவர்களோடுதன்னும் பேசும்போது, 'வேதத்தில் எங்கே சொல்லி யிருக்கிறது, எடுத்துக் காட்டுங்கள் பார்ப்போம்' என்றும், 'இதனால் என்ன நஷ்டம்' என்றும் கேள்விக்குமேல் கேள்விகளாகக் கேட்டு, கேட்கிறவர்கள் எல்லோரையும் தடுமாறவைக்கிறார்கள்.

பிரியமானவனே, அன்பினால் எல்லாம் கூடும். முதலாவது தேவனை நேசிக்கப் பழகிக்கொள்வோம். அப்பொழுது அவரது கற்பனைகளைக் கைக் கொள்வது நமக்குக் கடினமாயிராது. ஆண்டவரின் மரணத்துக்குப் பின்பாக மீண்டும் மீன்பிடிக்கச் சென்ற பேதுருவைப் பார்த்து, 'என்னை ஏன் மறுதலித்தாய்' என்று கேட்காமல், 'என்னை நேசிக்கிறாயா' என்றுதான் இயேசு கேட்டார். அந்த அன்பினால் உந்தப்பட்டுத்தான் பேதுரு பெலனடைந்து எழுந்தான்.

சிந்தனைக்கு:

தேவ அன்பை உதாசீனம் செய்த தருணங்களை நினைத்துப்பார்ப்போம். தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படிய மறுத்த சந்தர்ப்பங்கள் எவை? அப்படியிருந்தும் இன்றும் என்னை நேசிக்கும் ஆண்டவரை இன்னமும் துக்கப்படுத்துவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் வெறும் சாட்சிகள் மட்டுமே!

ஏப்ரல்

**23**

வியாழன்

வேதவாசிப்பு: அப்போஸ்தலர் 3:1 - 15

**'....நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியி னாலாவது, இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங் களை நோக்கிப்பார்க்கிறதென்ன?' அப்போஸ்தலர் 3:12**

தனக்குத் தானே பெருமை தேடி மனிதன் அலைந்து திரிகிறான். கடவுளுக்குச் சேரவேண்டிய பெருமையையும், புகழையும்கூட தனக் கென தட்டிப்பறிக்கிறான் மனிதன். தேவநாமத்தில் நடக்கும் அற்புத அடையா ளங்கள்கூட இன்று மனிதருக்குப் பெருமையும், செல்வாக்கும், செல்வத்தையும் கூட பெருக்குவதாய் அமைந்துவிடுகிறது.

தேவாலயத்தின் வாசலில் இருந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்த அந்த சப்பாணி, வழமைபோல பேதுரு யோவானிடத்திலும் ஏதாவது கிடைக்கும் என்ற எண்ணத்தில் அவர்களிடமும் பிச்சை கேட்டான். அவன் எதிர்பார்த்ததோ அன் றைய பொழுதைக் கழிக்க ஒரு சில சில்லறைகள்தான். ஆனால், அவனுக்குக் கிடைத்ததோ, நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் கால்களுக்குப் பெலமும், சந்தோஷமும். அவன் குதித்தெழுந்து நின்று நடந்து குதித்து தேவ னைத் துதித்து, தேவாலயத்து வாசலைவிட்டு ஆலயத்தினுள் பிரவேசித்ததிலி ருந்து, அவன் அடைந்த உள்ளான விடுதலை தெரிகிறது. இந்த விடுதலையும் சந்தோஷமும் அவனுக்குத் தேவனாலேயே கிடைத்தது. அதற்குப் பேதுருவும் யோவானும் ஒரு பாலமாய் அமைந்தனர். இந்த அற்புதத்தைக் கண்ட ஜனங்கள் பேதுருவையும் யோவானையும் பெருமிதத்துடன் நோக்கிப் பார்த்தனர். ஆனால், அவர்களோ 'நாங்கள் இதை எங்கள் பக்தியினாலும் சக்தியினாலும் செய்ய வில்லை. இது முழுக்க முழுக்க தேவசெயலே' என்று சொல்லி, உயிரோடு எழுந்த இயேசுவுக்குத் தாங்கள் சாட்சிகள் மட்டுமே என்று கூறி, எந்தப் பெருமை யையும் தங்களுக்கென்று எடுக்காமல், அத்தனை ஜனத்தின் முன்பாகவும் தேவ நாமத்தை மகிமைப்படுத்தினார்கள். "தாங்கள் கிறிஸ்துவுக்குச் சாட்சிகள்' என்பதே பேதுருவினதும் யோவானினதும் மனதில் இருந்த ஆழமான எண்ணம். எந்தக் காலத்திலும் தாங்கள் இயேசுவாக மாறவோ, அல்லது, அவரைப்போல பாசாங்குபண்ணவோ அவர்கள் துணியவில்லை. தங்களுக்கு ஆண்டவர் கொடுத்த பொறுப்பாகிய, 'உலகமெங்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்' என்ற வாக்குக்கு அவர்கள் உண்மையுள்ளவர்களாய் இருந்தார்கள்.

ஆம், நாங்களும் கிறிஸ்துவுக்குச் சாட்சிகள் மட்டுமே. ஆண்டவர் நம் மைப் பயன்படுத்தும்போது உண்டாகும் எல்லா மகிமையும் புகழும் கிறிஸ்து வுக்கு மட்டுமே சேரவேண்டும். எதையும் எமக்கென்று எடுத்துக்கொள்ளவோ, கிறிஸ்துவின் நாமத்தைப் பயன்படுத்தி எமக்குப் பெருமை சேர்க்கவோ முடி யாது. தமக்குச் சாட்சிகளாய் எம்மை எடுத்துப் பாவிக்கும்படி தேவகரத்தில் இன்றே நம்மை விட்டுவிடுவோமாக.

சிந்தனைக்கு:

நான் வெறும் சாட்சி என்பதை மறந்து, ஆவிக்குரிய பெருமையைத் தேடிக் கொண்ட சந்தர்ப்பங்கள் என் வாழ்வில் உண்டா என்பதை உண்மை உள்ளத் துடன் ஆராய்ந்து அறிக்கைசெய்வேனாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதயத்தைக் காண்கிற தேவன்!

ஏப்ரல்

24

வெள்ளி

வேதவாசிப்பு: 1சாமுவேல் 16:5-12

**'மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன். மனுஷன் முகத்தைப் பார்ப்பான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்.' 1சாமுவேல் 16:7**

ஒரு அம்மா எங்கேபோனாலும் வேதப்புத்தகத்தைத் தவறாமல் கொண்டுசெல்வார்கள். அவர் தனது கைப்பையை எடுக்க மறந்தாலும், வேதாகமத்தை எடுக்க மறக்கவேமாட்டார்கள். அதைப் பார்த்து நான் ஆச்சரியப்பட்டதுண்டு. ஒருமுறை அவர்கள் வாகனத்தைவிட்டு இறங்கியபோது கைப்பையை வைத்துவிட்டு வேதாகமத்தைக்கொண்டு இறங்கினார்கள். அதைக் கண்ட நான், "கைப்பையையே வைத்துவிட்டு வருகிறீர்கள், வேதாகமத்தையும் வைத்துவிட்டு வரலாமே. இன்றைய காலத்தில் வேதாகமத்தை யார் எடுக்கப் போகிறார்கள்" என்றேன். அதற்கு அவர், "வேதாகமத்தின் கவருக்குள்தான் நான் பணத்தை வைத்திருக்கிறேன்" என்றார். அவர் ஏன் எப்போதும் வேதாகமத்தைக் கவனமாக எடுத்துச்சென்றார் என்பது அப்போதுதான் புரிந்தது.

இப்படியாக மனிதரின் வெளித்தோற்றம், பேச்சுக்கள், செயல்கள், என்பவற்றைப் பார்த்து நாமே நமக்குள் ஒரு அபிப்பிராயம் கொள்வதுண்டு. அது எல்லா வேளைகளிலும் சரியானதாக அமைந்துவிடாது. ஆனால், தேவனோ ஒருவரின் இருதயத்தையும், அதன் நினைவுகளையுமே அறிகிறவராய் இருக்கிறார். ராஜாவை அபிஷேகம்பண்ணுவதற்காக ஈசாயின் வீட்டிற்குச் சென்ற சாமுவேல், ஈசாயின் மூத்த குமாரரின் கெம்பீரத் தோற்றத்தைக் கண்டு, 'இவன்தான் அபிஷேகம்பண்ணப்படவேண்டியவன்' என்று ஒவ்வொருவரைக் குறித்தும் எண்ணி எண்ணி ஏமாந்துபோனார். ஆனால், தேவனோ, வயலில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த பையன் தாவீதையே தமக்கென்று தெரிந்தெடுத்திருந்தார். ஆம், தேவன், மனுஷன் பார்க்கிறவிதமாகப் பார்ப்பவர் கிடையாது. மனுஷன் வெளித்தோற்றத்தைப் பார்த்து ஒவ்வொருவரைப்பற்றியும் ஒவ்வொரு கருத்து எடுத்துக்கொள்வான். ஆனால் கர்த்தரோ, இருதயத்தைப் பார்க்கிறார். இருதயத்தின் எண்ணங்களை வகையறுத்துப் பார்க்கிறார்.

மனுஷர் காணும்படி வேஷதாரிகளாக நாம் தேவனை மகிமைப்படுத்தப் பார்க்கிறோமா? அல்லது, உண்மையுள்ள இருதயத்தோடு தேவனை மகிமைப்படுத்துகிறோமா? தேவன் நமது இருதயத்தைப் பார்க்கிறார்; எண்ணங்களையும் நோக்கங்களையும் அவர் சீர்தூக்கிப்பார்க்கிறார். அப்போது அது எப்படிக் காட்சியளிக்கும்? தேவன் வெறுக்கும் அருவருப்புக்கள் நிறைந்ததாய் நமது இருதயம் காட்சியளிக்குமா? அல்லது, தேவனுக்கு முன்பாக செம்மையானதாகக் காட்சியளிக்குமா? தன் பாவத்தை உணர்ந்து மனந்திரும்பிய தாவீது, "சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்; நிலைவரமான ஆவியை என்னுள்ளத்திலே புதுப்பியும்"(சங்.51:10) என்றுதான் ஜெபித்தார். நாம் என்ன சொல்லுவோம்?

சிந்தனைக்கு:

**என் இருதயத்தை தேவனுக்கு முன்பாகப் பரிசுத்தமாய்க் காத்துக்கொள்ள நான் ஆசிக்கிறேனா? தவறிப்போன நேரங்களுக்காக மன்னிப்புக் கேட்பேனாக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாக்கிரதையாயிரு!

ஏப்ரல்

25

சனி

வேதவாசிப்பு: உபாகமம் 8:6-18

**'....அவருடைய கற்பனைகளையும் நியாயங்களையும் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற் போகாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு.' உபாகமம் 8:11**

யுத்த சூழலில் கர்த்தரைத் தேடிய பலர் இன்று கர்த்தரை மறந்து வாழும் நிலை இருக்கத்தான் செய்கிறது. ஆபத்து துன்பம் வரும்போது, "ஆண்டவரே! ஆண்டவரே!" என்று கதறி அழுகின்ற பலர், ஆபத்துக்கள் கடந்து சென்றதும் தம் இஷ்டம்போல வாழ்வைத் தொடர்ந்து செல்கின்றனர். வசதிகளும், செல்வச் செழிப்புக்களும், தேவைகள் பூர்த்தியடைந்த நிலையும் ஏற்படும் போது, தேவனை மறந்து, அவரைவிட்டுத் தூரம்போகும் அபாயம் ஏற்படக்கூடும். சமீபத்தில் வெளியூரில் இருந்து வந்த ஒருவருடன் பேசியபோது, 'வெளியூரில் அநேக மக்கள் கடவுளை மறந்து வாழுவதற்கு, அங்கே தேவனைத் தேடுவதற்கான எந்தக் காரணமும் இல்லாததே முக்கிய காரணமாய் இருக்கலாம்' என்றார். இங்கே கஷ்டங்களும், துன்பங்களும் இருப்பதால் மக்கள் முறையிடுவதற்கு தேவன் தேவையாயிருக்கிறார் என்றும் அவர் கூறினார்.

இன்றைய தியானப்பகுதியும் இதைத்தான் வலியுறுத்துகிறது. தேவன் இஸ்ரவேலருக்குச் சொன்னது, 'நீ போகும் தேசத்தில் சுகமாய் வாழும்போதும், செல்வச் செழிப்பை திரளாய் அனுபவிக்கும்போதும், உன்னை இம்மட்டுமாய் நடத்தி வந்த ஆண்டவரை மறவாதே; இவையெல்லாவற்றையும் உனக்குத் தந்தவர் உன் தேவனாகிய கர்த்தரே என்பதை மறவாதே' என்பதாகும். புசித்துக் குடித்துத் திருப்தியாக இருக்கும்போதும் உன் தேவனை ஸ்தோத்திரம்பண்ணுவாயாக; அதாவது, இன்புற்றிருக்கும்போதும் தேவனின் கட்டளைகளைப் பின்பற்ற மறவாதே என்று இஸ்ரவேலருக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

நமது நிலைமை என்ன? நாம் இன்று தேவனைத் தேடுகிறோம் என்றால், அதற்கு என்ன காரணம்? நாம் சுகித்திருப்பதற்கும், எமது தேவைகள் நிறைவடைவதற்கும், எமக்கு எல்லாமே நன்றாக அமைந்திருப்பதற்குமாக நாம் தேவனைத் தேடுகிறோமா? அல்லது, தேவனில் உண்மையாக அன்புகூர்ந்து அவரை ஆராதிப்பதற்காகவும், அவருக்குரிய கனத்தைக் கொடுப்பதற்காகவும் நாம் தேவனைத் தேடுகிறோமா? நமது மனநோக்கு சரியாக இல்லாவிட்டால், அது நம்மைத் தவறாக வழிநடத்திவிடும். எல்லாக் கனத்துக்கும் பாத்திரரான உன்னதமான தேவன் அவர் ஒருவரே என்பதாக நாம் தேவனை அறிந்திருக்க வேண்டும். அல்லது, கேட்டதும் கொடுக்கின்ற ஒரு கொடைவள்ளல்போல எமது தேவைகளுக்காகப் பாவிக்கும் ஒருவராக நினைத்தால், பாவித்துவிட்டு சுழற்றி வீசியெறியும் நவீனகாலத்துப் பேப்பர் கோப்பைகள்போல தேவைக்குப் பாவித்துவிட்டு ஆண்டவரையும் வீசியெறிந்துவிடுவோம். ஜாக்கிரதையாக மனந்திரும்புவோமாக. கர்த்தருடைய வார்த்தையின்படி நடக்க விழிப்பாயிருப்போமாக.

சிந்தனைக்கு:

ஆண்டவருக்கும் எனக்கும் இடையிலுள்ள உறவு எப்படிப்பட்டது? அவர் எனக்குக் கனத்துக்குரியவராக இருக்கிறாரா? அல்லது, நான் அவரை என் செய்கைகளாலும், சிந்தனைகளாலும், கனவீனப்படுத்துகிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவனை அறிந்திருக்கிறேனா!

ஏப்ரல்

26

ஞாயிறு

வேதவாசிப்பு: 1யோவான் 2:1-10

**'அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை.' 1யோவான் 2:4**

தெரிந்திருப்பதற்கும் அறிந்திருப்பதற்கும் நிறையவே வித்தியாசமுண்டு. முதலாவது அறிவுபூர்வமானது என்றால், மற்றது உணர்வுபூர்வமானது. எமக்குப் பலரைத் தெரியும்; ஆனால், சிலரைத்தான் அறிந்திருப்போம். 'இவரைத் தெரியுமா' என்று யாரைக் குறித்தாவது கேட்டால், 'ஆம், தெரியும்; ஆனால், பெரிதாக அவரை அறிந்துகொள்ளவில்லை' என்போம். எனவே, தெரிந்திருப்பதைவிட, அறிந்திருப்பதென்பது இன்னமும் ஆழமானது. நாம் தேவனைத் தெரிந்திருக்கிறோமா அல்லது அறிந்திருக்கிறோமா?

தேவனை அறிந்திருக்கிறேன் என்று சொல்லுகிறவனுக்கு ஒரு அடையாளம் உண்டென்று யோவான் எழுதுகிறார். அதாவது தேவனுடைய கற்பனைகளை அவன் கைக்கொள்ளுகிறவனாக இருக்கவேண்டும். எனவே, தேவனைத் தெரிந்து வைத்திருப்பவன், 'இயேசுவைத் தெரியும், தெரியும்' என்று அறிக்கை செய்கிறவனாய் மாத்திரமே இருப்பான். ஆனால், அவரை அறிந்திருக்கிறவனோ, அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, அவருக்குப் பிரியமானவனாகவும், அவருக்கு நெருக்கமானவனாகவும் இருப்பான்.

அதுபோலவே, கிறிஸ்து எனக்காகப் பாடுபட்டார்; சிலுவையில் மரித்தார், உயிர்த்தார் என்பதை தெரிந்தவர்களாக அநேகர் இருக்கலாம். ஆனால், அவரது பாடுகளில் பங்குபற்றுபவர்களாக இருப்பவரோ வெகு சிலரே. நாம் அவர் பாடுகளை தெரிந்திருக்கிறோமா? அல்லது, அதற்கும் மேலாக அவரது பாடுகளில் பங்குகொள்ள ஆயத்தமாயிருக்கும் அளவுக்கு நாம் அவரை அறிந்திருக்கிறோமா! அவருக்காய் நொறுக்கப்பட, சிலுவை சுமக்க நாம் ஆயத்தமா? அவர் நமக்கு வகுத்துள்ள ஜீவபாதையைத் தெரிந்துகொண்டதுடன் மாத்திரம் இருக்கிறோமா? அல்லது, அதில் பயணித்துக்கொண்டிருக்கிறோமா?

நாம் சிந்தித்துப் பார்ப்போம். எத்தனை வருடங்களாக நாம் கிறிஸ்தவர்களாய் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்? நாம் வாழ்ந்த கிறிஸ்தவ வாழ்வால் என்ன பயன்? தேவனோடுள்ள உறவில் நாம் வளர்ந்திருக்கிறோமா அவரை மற்றையோருக்கு அறிமுகம் செய்திருக்கிறோமா? நாம் வாழ்ந்து கழித்த காலங்களில் எதனைச் சாதித்திருக்கிறோம்? பரம்பரை பரம்பரையாக நாம் கிறிஸ்தவர்கள் என்று மார்தட்டிப் பேசுவோரும் உண்டு. ஆனால் அதில் எப்பிரயோஜனமும் கிடையாது. தேவனை அறிந்து அவர் பாடுகளில் பங்குகொண்டு அவருக்காய்ப் பணிசெய்ய தேவன் எம்மை அழைத்திருக்கிறார். அவரது அழைப்புக்கு அடிபணிய நாம் ஆயத்தமா என்பதே கேள்வி.

சிந்தனைக்கு:

நான் பொய்யனா? உண்மையானவனா? இயேசுவை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும், இன்னமும் யார் யாருடன் நான் பகைமையை வைத்திருக்கிறேன்? தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதில் உள்ள பிரச்சனை என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவுக்காய் மணம்வீசு!

வேதவாசிப்பு: 2கொரிந்தியர் 2:12-17

**'...நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்.'**
**2கொரிந்தியர் 2:15**

உலகில் நறுமணம் வீசுகின்ற பலவிதமான வாசனைத் தைலங்களும், அவற்றின் வேறுபட்ட உற்பத்திகளும் உண்டு. அவைகள் பெரும்பாலும் துர்நாற்றத்தை அகற்றுவதற்காகவே பாவிக்கப்படுகின்றன. மனிதர் பொதுவாக தங்களில் உள்ள வியர்வை நாற்றத்தைப் போக்க வாசனைப் பூச்சுக்களைப் பாவிப்பர். அதுபோலவே, வீடுகளில் சமையல் மணங்கள், மற்றும், தூசிமணங்கள் போன்றவற்றை அகற்ற சந்தனக்குச்சிகளையும், காற்றில் கரைந்து மணம் வீசும் உற்பத்திகளையும் உபயோகிப்பர்.

ஆனால், கிறிஸ்துவுக்காய் மணம்வீசும்போது அது அழுக்கை மூடி மறைக்கும் வாசனையாய் இல்லாமல், கிறிஸ்துவின் இரத்தத்தால் முற்றாய் கழுவப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட பரிசுத்தமான சுகந்தமாய் இருக்கும். அந்த மணமே கிறிஸ்துவின்பால் அனைவரையும் இழுக்கும் மணமாயும் இருக்கும். பவுல் கொரிந்தியருக்கு எழுதியபோதும் இதனையே குறிப்பிடுகிறார். **'....எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். ....நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாய் இருக்கிறோம்.'** (1கொரி.2:14-15) கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு அவருக்காய் நற்கந்தமாய் வாழும்போது அந்த வாசனையால் அநேகர் தேவனண்டைக்கு வர வாய்ப்புண்டு.

ஆனால், இன்று உலகத்தின் நறுமணங்கள்போலவே, அழுக்குகளையும், தேவன் வெறுக்கும் காரியங்களையும் உள்ளுக்குள் தாராளமாய் வைத்துக்கொண்டு, வெளியில் நறுமணம் வீச நாம் நினைக்கிறோம். அது தேவனுடைய பார்வையில் வெறும் மாய்மாலமே. தேவன் அதை விரும்புகிறவரல்ல. உண்மையான நறுமணம் தேவனுடைய பரிசுத்தமாக்குதலினின்றும், நமது உள்ளத் தூய்மையினின்றும் புறப்படவேண்டும். அப்போ, அது துர்நாற்றத்தை மறைப்பதாக இருக்காது; அதை நீக்கி, நமக்கும் பிறருக்கும் மெய்யான சுகந்த வாசனையை வழங்கும். அதுவே கிறிஸ்துவுக்காய் மணம் வீசுதலாகும்.

இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படல், பரிசுத்தமாக்கப்படுதல், மணம் வீசுதல் இவை எதுவும் இலகுவான காரியம் அல்ல. நம்முடையது என்றிருப்பவைகளை அகற்றி, கிறிஸ்துவையும், நான் சுமக்கவேண்டிய சிலுவையையும் என் வாழ்வில் சுமந்து, உடைத்து நொருக்கப்பட்டு நசுக்கப்படும்போதுதான் இந்த நறுமணம் வெளிவீச ஆரம்பிக்கும். இதற்கு நாம் ஆயத்தமா? பாடு, துன்பம், நிந்தை நேரிட்டாலும், கிறிஸ்துவுக்காய் இறுதிவரை மணம்வீசி அநேகரை அவரண்டைக்கு இழுத்துவர நம்மை அர்ப்பணிக்க முடியுமா?

சிந்தனைக்கு:

போகும் இடமெல்லாம் போலியான வாசனை அல்ல; கிறிஸ்துவின் நற்கந்தம் என்னில் வீசும்படிக்கு இந்த நாளிலேயே என்னை உடைத்து நொருக்கி உருவாக்க என்னை நானே அர்ப்பணிக்க முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை குன்றிப்போகிறதா?

ஏப்ரல்
28
செவ்வாய்

வேதவாசிப்பு: யாத்திராகமம் 4:10-17

**'அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும் என்றான்.' யாத்திராகமம் 4:13**

நாம் ஆண்டவரிடம் ஒரு காரியத்தைக் கேட்கும்போது, 'ஆண்டவரே, எனக்கு ஒரு உறுதிப்பாட்டைத் தாரும். அல்லது ஒரு அடையாளத்தைக் காண்பியும், ஒரு அற்புதத்தை நிகழ்த்தும்' என்றெல்லாம் கேட்பதுண்டு. ஆண்டவரில் நாம் கொண்டுள்ள நம்பிக்கை குன்றிப்போவதே இதற்குக் காரணம் எனலாம். அவரிடம் ஒரு காரியத்தைச் சொன்னால் அவர் செய்வார்; தமது சித்தப்படி நடத்துவார் என்ற நம்பிக்கையோடு பொறுமையோடு இருக்க நாம் ஆயத்தமில்லை. நாம் தேவன்மீது முழு நம்பிக்கை வைத்திருப் போமானால், செய்யும், காட்டும், நடத்தும் என்ற வார்த்தைகள் நமது ஜெபங் களில் அரிதாகிவிடும்.

இஸ்ரவேலரை அடிமைத்தனத்தினின்றும், பார்வோனின் கையினின்றும் மீட்பதற்காக கர்த்தர் மோசேயை அழைத்தார். அவனோ தான் வாக்குவல்லவன் அல்ல என்று அறிக்கை செய்தான். தேவன் அதற்கு ஒரு உறுதிப்பாட்டைக் கொடுக்கிறார். 'நீ போ; நான் உன் வாயோடே இருந்து நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன்' என்றார். ஆனால், தேவன் சொன்ன இந்தக் காரியத்தை மோசே நம்ப மறுக்கிறான். அவனுக்குத் தேவன் சொன்ன வார்த்தையை நம்பிப் போக மனமில்லை. அவனோ, 'நீர் வேறு யாரையாவது அனுப்பும்' என்று தேவனுக்கே ஆலோசனை சொல்லி, தேவனுடைய கோபத்தைச் சம்பாதித்தான். கடைசியில் தேவன் ஆரோனை மோசேக்காக பேசும்படிக்குக் கொடுத்தார்.

கண்ணுக்குத் தெரியாத தேவபெலனை நம்பமறுத்த மோசே இப்போது கண்ணுக்குத் தெரிந்த, தன் அருகில் இருந்த ஆரோனை நம்பிப் புறப்படுகிறார். ஆனால், இருவரும் பேசுவதற்கு அவர்கள் வாயில் வார்த்தைகளைப் போடுவது தேவனே என்பதை அவர்கள் எண்ணிப்பார்க்கவில்லை. 'நான் உன் வாயிலும் அவன் வாயிலும் இருந்து நீங்கள் செய்யவேண்டியதை உங்களுக்கு உணர்த்து வேன்(வச 15) என்றார் கர்த்தர். அப்படியே நடந்தது.

இதுபோலவே நாமும் தேவனை நம்ப மறுப்பதுண்டு. அவர்மீதுள்ள நம்பிக்கை குன்றிப்போய் எமது சுயபுத்தியில் காரியங்களைச் சாதிக்க நினைப்ப துமுண்டு. நாம் நினைத்தது, ஜெபித்தது நாம் நினைத்த நேரத்தில் நினைத்தபடி நடக்காவிட்டால், மனுஷரை நம்புவதற்குத் தாமதிக்கமாட்டோம். அன்று மோசே அடியோடே மறுத்ததால்தான் கர்த்தர் ஆரோனை அவருக்கு வாயாகக் கொடுத் தார். ஆனால், ஆரோன் செய்தது என்ன? மக்களை வழிவிலகிப்போகச் செய்து விட்டான். சங்கீதக்காரர் இவ்விதமாய் எழுதுகிறார்: **'மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம். பிரபுக்களை நம்புவ தைப்பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்(சங்.118:8-9).**

சிந்தனைக்கு:

எமது நம்பிக்கையை நாம் யார்மேலே, அல்லது எதன்மேலே வைத்திருக்கி றோம்? தேவன்மீது நம்பிக்கை வைத்ததற்கும், மனுஷரை நம்பியதற்கும் கிடைத்த பலன் என்ன? தேவனே, என் நம்பிக்கை என்று இன்று கூறமுடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை மோசம்பண்ணும்!

ஏப்ரல்

**29**

புதன்

வேதவாசிப்பு: 1தீமோத்தேயு 6:6-14

'...பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது...' 1தீமோத்தேயு 6:10

தேவை வேறு; ஆசை வேறு. உடுத்திக்கொள்ள உடையில்லாதவன் தனக்காக ஒரு ஆடையை வாங்குவது என்பது அவனது தேவை. அலுமாரி நிறைய ஆடைகள் இருக்கும்போதும் ஒரு அழகான சேலையைக் கண்டு, அதையும் வாங்கிக்கொள்வது ஆசை. பசிக்கு உண்பது தேவை; ஆனால், திருப்திக்கு உண்பது ஆசை. மனிதனாய்ப் பிறந்த எவனுக்குமே தேவையும் ஆசையும் இருக்கத்தான் செய்கிறது. தேவையை நாம் நிறைவேற்றலாம். ஆனால் ஆசையையோ நாம் கட்டுப்பாட்டுக்குள் வைக்காவிடில் அது நம்மை அடிமைப்படுத்திவிடும்.

அதுபோலவே பணம், அது அனைவருக்கும் மிகவும் தேவையானது. ஆனால், பண ஆசையோ எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். பணத்தை எமது கட்டுப்பாட்டுக்குள் வைக்க வேண்டும். தவறினால், பணம் எம்மைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துவிடும். பணம் தேவையானது; ஆனால், பணஆசை எம்மைப் படுகுழிக்குள்ளும், பாவத்திற்குள்ளும் விழுத்தி, தேவனைவிட்டுத் தூரமாக்கியும்விடும். பணத்தை சிலர் இச்சித்து விசுவாசத்தைவிட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள் என்றும் பவுல் எச்சரிக்கிறார்.

பணத்தை நாம் சரிவர கையாளவேண்டுமாயின், அதை நாம் எப்படிச் சம்பாதிக்கிறோம்; எப்படியாக செலவு செய்கிறோம் என்பதைக் குறித்து எச்சரிக்கையாய் இருத்தல் அவசியம். பணஆசைக்கு உட்பட்டோர் பிழையான வழிகளில் பணத்தைச் சம்பாதிக்கத் துணிகின்றனர். ஆசைப்பட்டுச் சேர்த்த பணத்தைச் செலவுசெய்யத் தெரியாமல் பிழையான வழிகளில் செலவு செய்கிறார்கள். எத்தனை வீடுகளில் சாப்பாட்டுப் பொருட்கள் வீணாக வீசியெறியப்படுகின்றன. அதேவேளை, ஒருவேளை உணவுக்கு வழியில்லாமல் எத்தனைபேர் சாகிறார்கள். இதனை நாம் சிந்தித்துப் பார்த்ததுண்டா?

பணத்துக்கு ஆசைப்பட்டு ஊழல் செய்து, பொய்க்குத் துணைபோவோரும், விதிமுறைகளை மீறுவோரும் அநேகர். இதனால் வீதி விபத்துக்களும், மரணங்களும், அழிவுகளும்தான் அதிகரிக்கின்றன. இதனால்தான் பண ஆசை எல்லாத் தீமைக்குமே வேராயிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. நம்மைப் பணம் அல்ல; பணத்தை நாமே ஆளவேண்டும். நம்மையும் பணத்தையும் கர்த்தரே ஆளவேண்டும். பண விடயத்தில் நாம் எங்கே நிற்கிறோம் என்பதைக் குறித்து அடிக்கடி நம்மை நாமே ஆராய்ந்துபார்ப்பது நல்லது. சிலசமயங்களில் வாழ்வில் ஏற்படுகின்ற பணக்கஷ்டமே, பணம் சம்பாதித்தே ஆகவேண்டும் என்ற வெறியை ஏற்படுத்திவிடுகிறது. இதற்கும் நாம் அடிமையாகக்கூடாது.

சிந்தனைக்கு:

நான் பணம் சம்பாதிக்கும் வழிகள் எவை? பணம் என் தேவையா, ஆசையா? தன்மேல் ஆசைகொள்ளும்படி பணம் என்னை அடிமைப்படுத்தியிருக்கிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறுமுறுப்புக்கள்

ஏப்ரல்

**30**

வியாழன்

வேதவாசிப்பு: யாத்திராகமம் 16:1-8

**'...உங்கள் முறுமுறுப்புகள் எங்களுக்கு அல்ல, கர்த்தருக்கே விரோதமாய் இருக்கிறது என்றான்.' யாத்திராகமம் 16:8**

முறுமுறுப்புகளில் பலரகம் உண்டு. தமக்குப் பிடிக்காத விஷயங்களை வாய்விட்டுச் சொல்லமுடியாதோர் முறுமுறுப்பர். தாம் நினைத்ததுபோல காரியங்கள் நடைபெறாவிட்டால் மனவிரக்தியில் முறு முறுப்பர். சிலர் முறுமுறுத்துப் பழகிவிட்ட பழக்கதோஷத்திலும் எதையோ சொல் லிச் சொல்லி முறுமுறுத்தவண்ணமே இருப்பர். இதில் நாம் எந்தரகம்?

இஸ்ரவேலரின் வாழ்விலும் இந்த முறுமுறுப்புகள் இருந்தன. கர்த்தர் செய்த அதிசயங்களைக் கண்டு, அவரது அதிசயமான வழிநடத்துதலை அனு பவித்து, விடுவிக்கப்பட்டு, வாக்குப்படியே கானானை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இஸ்ரவேல் ஜனங்கள், பசி வந்ததும், எகிப்தின் வெங்காயத்தை யும் உள்ளியையும் எண்ணி முறுமுறுக்க ஆரம்பித்தனர். இம்மட்டும் வழிநடத் திய தேவன் இந்த நிலையிலும் வழிநடத்துவார் என்பதை உணராத மக்களாய் நடந்துகொண்டனர். கர்த்தரும் கிருபையாய் அவர்களுடைய பசியைப் போக்க மன்னாவைப் பொழிந்தருளினார். இத்தோடு அவர்களது முறுமுறுப்பு நின்றுவிட வில்லை; அது தொடர்ந்துகொண்டே சென்றது. தொடர்ந்து வரும் அதிகாரங் களைப் படித்தீர்கள் என்றால் எத்தனை தடவைகள் அவர்களது முறுமுறுப்புகள் தொடர்ந்தன என்பதை நாம் அறியலாம்.

கர்த்தருடைய வழிநடத்துதலை இஸ்ரவேலர் ஒரு நிமிடத்தில் மறந்து போனார்கள். எமது வாழ்விலும் நாமும்கூட இப்படியாக தேவனையும், அவரது வழிநடத்துதலையும் மறந்து எமது இஷ்டத்துக்கு, நாம் நினைத்தபடியெல்லாம் தேவனுக்கு எதிராக முறுமுறுத்து, எமது இஷ்டம்போல நடப்பதுண்டு. தேவனும் எம்மீது கிருபையாக இன்னமும் இருக்கிறார். முறுமுறுப்புகள் எம்மிடமிருந்து நீங்கவேண்டுமானால், தேவனுடைய வழிநடத்துதலை ஒருபோதும் மறந்து போகாமல், அவருக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்கவேண்டும். அவர் எமக்குத் தந்த ஆசீர்வாதங்கள் ஈவுகளை மறவாத உள்ளம் எமக்கு வேண்டும். அப்போது தான் நாம் தேவனை மறந்துவிடாமல் எப்போதும் துதியுடன் வாழமுடியும்.

நாம் முறுமுறுக்கும் ஒவ்வொரு தடவையும், நாம் தேவனை மாத்தி ரமல்ல, அவருடைய வல்லமையையும் சந்தேகிக்கிறோம்; நமது முறுமுறுப்பு களை நீடிய பொறுமையுடன் பொறுத்துக்கொண்டு, கர்த்தர் நம்மீது கிருபை யாய் இருப்பதை நாம் நமக்குச் சாதகமாக்கிக்கொள்கிறோம். திருப்தியற்ற உள் ளங்களும், ஆசையும் இச்சையும் உள்ள உள்ளங்களுமே முறுமுறுக்க ஆரம் பிக்கிறது. இது, நாம் தேவனை மறக்கவும், அவரைவிட்டுப் பின்வாங்கிப் போகவும் நம்மை இட்டுச் செல்லாது என்று சொல்வதற்கில்லை. முறுமுறுக்கும் நாவை அகற்றி, நன்றியுள்ள இருதயத்தைத் தரும்படிக்குக் கேட்போமா!


சிந்தனைக்கு:

நன்றி இருக்கும் வாயில் முறுமுறுப்புக்களுக்கு இடமிருக்காது. எல்லாவற்றிலும் திருப்தியற்று முறுமுறுத்துக்கொண்டு, நான் தேவனுக்கு நன்றியாயிருக்கிறேன் என்று சொல்லுவது சுத்த பொய். இக் காரியம் என்னிடம் உண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நினைவுபடுத்துகிறோம்*




எமது வெளியீடுகளை
புதிதாக பெற
விரும்புகிறவர்கள் மற்றும்
எமது வெளியீடுகளை
தொடர்ந்து பெற்றுவரும்
சந்தாதாரர்களுக்காக எமது
சந்தா கட்டண விபரங்கள்
கீழே தரப்பட்டுள்ளன.

*ஒரு வருடத்திற்கான சந்தா*

| | |
|---|---|
| இலங்கையில் உள்ளவர்களுக்கு | - ரூ. 800.00 |
| இந்தியாவில் உள்ளவர்களுக்கு | - ரூ. 2,000.00 |
| தென்னாசிய நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 2,500.00 |
| மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 2,500.00 |
| ஐரோப்பிய நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 3,500.00 |
| அமெரிக்க நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 3,500.00 |

*உங்கள் சந்தா பணத்தை*

**மணியோடர் மூலம் பணம் அனுப்புவதாயின்:** "கொடுபட வேண்டிய இடம்" என்ற இடத்தில் சினமன் கார்டின்ஸ் (CINNAMON GARDENS POST OFFICE) என்றும், பணம் பெறுபவரின் பெயர் என்ற இடத்தில் (BACK TO THE BIBLE) என்றும் குறிப்பிட்டு அனுப்பவும்.

**காசோலை மூலம் அனுப்புவதாயின்:** (BACK TO THE BIBLE) என்ற பெயருக்கு காசோலை எழுதவும்.

*மேலே குறிப்பிடப்பட்ட விதங்களில் பணம் அனுப்புவதில் உங்களுக்கு சிரமம் அல்லது சிக்கல்கள் ஏதும் இருக்குமானால் எம்மோடு தொடர்புகொள்ளுங்கள்.*

*இங்கிலாந்து மற்றும் கனடாவில் உள்ளவர்களுக்கு*
பணம் அனுப்பிவைக்க விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விபரங்களுக்கு எம்மோடு தொடர்புகொண்டு விசாரிக்கவும்.

*(சந்தாதாரருக்கான படிவம் மறுபக்கத்தில் உள்ளது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தா படிவம்



எமது வெளியீடுகளை புதிதாக பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள், அல்லது உங்களுக்குத் தெரிந்த புதியவர்களுக்கு இப்புத்தகத்தை அறிமுகப்படுத்த விரும்பினால் இந்த படிவத்தை தெளிவாக நிரப்பி அனுப்பவும்.

நீங்கள் ஏற்கனவே எமது வெளியீடுகளைப் பெற்றுவரும் சந்தாதாரராயின் உங்கள் பெயர், முகவரியுடன் உங்கள் கணனி இலக்கத்தையும் குறிப்பிட்டு எழுதியனுப்புங்கள். உங்கள் முகவரியில் மாற்றம் ஏதும் இருக்குமானால் உங்கள் புதிய முகவரியுடன் உங்கள் பழைய முகவரியையும் குறிப்பிட மறவாதீர்கள்.

(முடிந்தால் ஆங்கிலத்தில் நிரப்பவும்)

பெயர் :............................................... கணனி இல.: ..................

முகவரி :..........................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

எந்த மாதத்திலிருந்து எமது வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள்?

நீங்கள் புதிய சந்தாதாரரா, பழைய சந்தாதாரரா?

இப் படிவத்துடன் ரூபா.............................ஐ காசோலை / மணி ஓடர் மூலம் அனுப்பி வைத்துள்ளேன்.

அனுப்பியவர் பெயர்: ..................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுத்த வேதாகமத்தை ஓராண்டிற்குள் வாசித்து முடிப்பதற்கான கால அட்டவணை

| மார்ச் | | | | | ஏப்ரல் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| காலை | | மாலை | | | காலை | | மாலை | |
| எண். | 16,17 | மாற் | 08:01-21 | 01 | யோசு. | 14,15 | லூக் | 7:19-35 |
| எண். | 18,19 | மாற் | 08:22-38 | 02 | யோசு. | 16,17,18 | லூக் | 7:36-50 |
| எண். | 20,21 | மாற் | 09:01-29 | 03 | யோசு. | 19,20 | லூக் | 8:01-15 |
| எண். | 22,23 | மாற் | 09:30-50 | 04 | யோசு. | 21,22 | லூக் | 8:16-39 |
| எண். | 24,25 | மாற் | 10:01-22 | 05 | யோசு. | 23,24 | லூக் | 8:40-56 |
| எண். | 26,27 | மாற் | 10:23-52 | 06 | நியா. | 1,2 | லூக் | 9:01-21 |
| எண். | 28,29 | மாற் | 11:01-33 | 07 | நியா. | 3,4 | லூக் | 9:22-43 |
| எண். | 30,31 | மாற் | 12:01-17 | 08 | நியா. | 5,6 | லூக் | 9:44-62 |
| எண். | 32,33 | மாற் | 12:18-44 | 09 | நியா. | 7,8 | லூக் | 10:01-24 |
| எண். | 34,35,36, | மாற் | 13:01-13 | 10 | நியா. | 9 | லூக் | 10:25-42 |
| உபா. | 1,2, | மாற் | 13:14-37 | 11 | நியா. | 10,11 | லூக் | 11:01-23 |
| உபா. | 3,4 | மாற் | 14:01-25 | 12 | நியா. | 12,13,14 | லூக் | 11:24-38 |
| உபா. | 5,6 | மாற் | 14:26-52 | 13 | நியா. | 15,16 | லூக் | 11:39-54 |
| உபா. | 7,8,9 | மாற் | 14:53-72 | 14 | நியா. | 17,18 | லூக் | 12:01-15 |
| உபா. | 10,11 | மாற் | 15:01-23 | 15 | நியா. | 19 | லூக் | 12:16-41 |
| உபா. | 12,13 | மாற் | 15:24-47 | 16 | நியா. | 20,21 | லூக் | 12:42-59 |
| உபா. | 14,15,16 | மாற் | 16:01-20 | 17 | ரூத் | 1,2 | லூக் | 13:01-35 |
| உபா. | 17,18,19 | லூக் | 01:01-25 | 18 | ரூத் | 3,4 | லூக் | 14:01-35 |
| உபா. | 20,21 | லூக் | 01:26-56 | 19 | 1சாமு. | 1,2 | லூக் | 15:01-32 |
| உபா. | 22,23 | லூக் | 01:57-80 | 20 | 1சாமு. | 3,4,5 | லூக் | 16:01-31 |
| உபா. | 24,25,26 | லூக் | 02:01-35 | 21 | 1சாமு. | 6,7,8 | லூக் | 17:01-19 |
| உபா. | 27,28 | லூக் | 02:36-52 | 22 | 1சாமு. | 9,10 | லூக் | 17:20-37 |
| உபா. | 29,30 | லூக் | 03:01-20 | 23 | 1சாமு. | 11,12,13 | லூக் | 18:01-17 |
| உபா. | 31,32 | லூக் | 03:21-38 | 24 | 1சாமு. | 14 | லூக் | 18:18-43 |
| உபா. | 33,34 | லூக் | 04:01-30 | 25 | 1சாமு. | 15,16 | லூக் | 19:01-27 |
| யோசு. | 1,2 | லூக் | 04:31-44 | 26 | 1சாமு. | 17 | லூக் | 19:28-48 |
| யோசு. | 3,4,5 | லூக் | 05:01-16 | 27 | 1சாமு. | 18,19 | லூக் | 20:01-26 |
| யோசு. | 6,7 | லூக் | 05:17-39 | 28 | 1சாமு. | 20,21,22 | லூக் | 20:27-47 |
| யோசு. | 8,9 | லூக் | 06:01-19 | 29 | 1சாமு. | 23,24,25 | லூக் | 21:01-19 |
| யோசு. | 10,11 | லூக் | 06:20-49 | 30 | 1சாமு. | 26,27,28 | லூக் | 21:20-38 |
| யோசு. | 12,13 | லூக் | 07:01-18 | 31 | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "Sathiyavasanam" - Supplimentary

Registered in the Department of Post of Sri Lanka under
No. QD/133/News/2014

இந்நூலை புதிதாக வாசிப்பவர்கள் தொடர்ந்தும் இந்நூலைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

நீங்கள் எமது வெளியீடுகளை பெற்றுவரும் சந்தாதாரரானால் நீங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு முறையும் உங்கள் கணனி (கம்யூட்டர்) பதிவு இலக்கத்தையும் குறிப்பிட்டுத் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். உங்கள் கணனி பதிவு இலக்கம், உங்களுக்கு எமது வெளியீடுகள் அனுப்பப்படும் உறையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எமது வெளியீடுகள் ஏதாவது தவறுதலாக இரண்டு பிரதிகள் உங்களுக்கு கிடைத்தால் தயவுசெய்து உங்களுடைய கணனி பதிவு இலக்கத்துடன் எமக்கு அறியத்தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

நீங்கள் வீடு மாறும்போது உங்கள் புதிய முகவரியுடன் உங்கள் பழைய முகவரியையும் குறிப்பிட்டு அறியத்தாருங்கள்.

எமது வெளியீடுகள் உரிய காலத்தில் உங்களுக்கு வந்து சேராவிடில் அது குறித்து உடனடியாக அறியத்தாருங்கள்.

BACK TO THE BIBLE
சத்தியவசனம்
த பெ 1012, கொழும்பு, இலங்கை

நேரில் எமது முகவரி
*120A ,Dharmapala Mawatha,*
*Colombo 7,*
*Sri Lanka.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org